தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்
ஆதரவில் பதிப்பிக்கப்பெற்றது

விலை ரூ. 2-85



# குடியாட்சியும் சமுதாயமும்

# குடியாட்சியும்
# சமுதாயமும்

# குடியாட்சியும் சமுதாயமும்

ஆசிரியர் :

**பேராசிரியர் ஏ. ஆர். வாடியா, M. P.**

தமிழாக்கம் :

"செல்வம்"


**கலைவாணி புத்தகாலயம்**

தி. நகர் : : சென்னை-17

Tamil
First Edition—3,000 Copies
December 1966

KUDIYATCHIUM SAMUTHAYAMUM

Tamil translation of English original
" Democracy & Society "

By Prof. A. R. Wadia, M. P.

Copyright : Author

Translator : " Selvam "

Price Rs. 2-85

Published under the auspices of the Southern Languages Book Trust, Madras. The Trust is helped by the Government of India, the South Indian State Governments and Universities and the Ford Foundation.

Fourth Programme—Tamil—Number Five

Translation right into Tamil for this edition is assigned to : KALAIVAANI PUTHAKALAYAM, MADRAS-17.

Printed at Mullai Printers, Madras-14.

# அணிந்துரை

**எம். சி. சக்ளா**

*மத்திய கல்வித்துறை அமைச்சர்,*
*இந்திய அரசாங்கம்.*

இலக்கிய நூல்களை வெளியிடுவது சம்பந்தமான தென்மொழிகள் புத்தக டிரஸ்டின் செயல்திட்ட நடவடிக்கைகள் உண்மையிலேயே உள்ளத்தைக் கவர்வ தாக உள்ளன. டிரஸ்ட், மேற்கொண்டு ஐம்பது நூல்களை வெளியிடும் புதிய செயல் திட்ட முயற்சியில் தற்போது ஈடுபடுவது நம் அனைவருக்கும் பெருமகிழ்வூட்டும் செய்தியாகும். புத்தக உருவரைப் படம் வரைதல் மற்றும் மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளைப் பற்றிய பயிற்சி வகுப்புகளையும் நடத்தவிருக்கிறது. டிரஸ்டின் இப்புதிய நடவடிக்கைகளுக்கென கல்வித்துறை அமைச்சரகம் தகுந்த அளவு மானியம் அளித்திருப்பதற்கு நான் மகிழ்ச்சியடை கிறேன். புத்தக வெளியீட்டுத் துறையில், டிரஸ்ட் தனக்குள்ள பரந்த அனுபவத்தின் பயனாக இந்திய மொழிகளின் வளர்ச்சிக் கான மாபெரும் முயற்சியில் பெரும்பங்கு கொண்டுதவ இயலும் எனப் பெரிதும் நம்புகிறேன். டிரஸ்டிற்கு எல்லாவித வெற்றிகளும் கிடைக்க வாழ்த்துகிறேன்.

| | |
|---|---|
| புதுதில்லி<br>20' டிசம்பர் 1965 | ஒப்பம்,<br>**எம், சி. சக்ளா** |

# முன்னுரை

1964ல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலும், விஸ்வ பாரதி பல்கலைக் கழகத்திலும் தொடர் சொற்பொழிவு ஆற்ற அழைக்கப்படும் கௌரவம் எனக்குக் கிடைத்தது. அந்த அழைப்புக்களை நான் ஏற்றுக்கொண்டேன். அண்ணு மலைப் பல்கலைக் கழகத்தில் 'ஜனநாயகம்' என்பது பற்றியும், விஸ்வபாரதி பல்கலைக் கழகத்தில் "சமுதாயமும் அரசும்" என்ற பொருள் பற்றியும் பேசுவது என்று முடிவு செய்தேன்' அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் 1965 ஜனவரி 25, 26 தேதிகளில் சொற்பொழிவாற்ற முடியவில்லை. ஏனெனில் இந்தியை தேசிய மொழியாக்குவது பற்றிய பிரச்சினை சம்மந்தமாக மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். பிறகு விஸ்வபாரதி பல்கலைக் கழகத்தில் 1965 ஜனவரி 30, 31 தேதிகளிலும் பிப்ரவரி 1ம் தேதியிலும் எனது சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

எனது சொற்பொழிவுகளை எழுதுவதற்குப் பல மாதங்களாக எனக்கு நேரம் கிடைக்கவில்லை. 1965 அக்டோபர், செப்டம்பர் மாதங்களில்தான் அவ்வாறு செய்ய முடிந்தது. 1965 ஜனவரிக்குப்பின் ஏற்பட்ட சம்பவங்களையும், அறிக்கைகளையும் ஆங்காங்கு குறிப்பிட்டிருப்பதற்கு இதுதான் காரணம். ஒவ்வொரு தொடரும் மூன்று சொற்பொழிவுகளைக் கொண்டது. ஏறக்குறைய ஒரு எல்லைக்குட்பட்டு பூரணத்துவமானது. ஒவ்வொன்றும் பிரச்சினைகளை அணுகுவதில் திட்டவட்டமான நோக்கைக் கொண்டது. இருந்தாலும் ஓரளவுக்குக் கூறியன கூறல் என்பது தவிர்க்கமுடியாததாயிற்று. இப்பொழுது இரண்டு தொடரும் ஒன்ருகப் பிரசுரம் செய்யப்படுகின்றது. வசதியைக் கருதியும் சிக்கனம் கருதியும் இவ்வாறு செய்யப்படுகின்றது. இந்த கூறியன கூறல் குற்றத்தை நான் தவிர்த்திருக்கலாம். ஆனுல், ஒவ்வொரு தொடரிலும் உள்ள சிந்தனைக் கோர்வை ஒருமைப்பாட்டைப் பாதித்திருக்கும். எனவே, இந்தக் கூறியன கூறல் புறக்கணிக்கப்படலாம் என்று நான் நம்புகிறேன். குறிப்பாக சமுதாய ஒப்பந்தத்தின் தத்துவாசிரியர்

களைப் பற்றிய எனது விளக்கம், சமுதாயமும் அரசும் என்ற தலைப்பில் ஆற்றப்பட்ட மூன்று சொற்பொழிவுகள் ஐந்து பாகங்களாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் குறிப்பிட்ட தலைப்பையும் விஷயத்தையும் கொண்டதாகும்.

ஜனநயாகம் என்ற சொற்பொழிவில், பலவகைப்பட்ட ஜனநாயக அரசுகளின் உருவங்கள் பற்றி விவாதிப்பதே என் நோக்கம். இரண்டாவது தொகுதியில், இந்த ஜனநாயக அரசுகளின் அமைப்புக் காரணமாக-மேற்கத்தியப் பார்வை யானாலும் சரி, ரஷ்யப் பார்வையானாலும் சரி, பரிணமிக்கும் புதிய சமுதாய அமைப்புப்பற்றிக் கவனம் செலுத்தி யுள்ளேன். இந்தச் சொற்பொழிவுகளில் மேற்கத்திய நாடுகளில் உள்ள ஜனநாயகத்தையும், பொதுவுடமை நாடுகளில் உள்ள ஜனநாயகம் பற்றியும் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்ய முயன்றுள்ளேன். இந்திய ஜனநாயகம் பற்றிய விவாதம் இந்தியர்களுக்கு விசேஷ அக்கரை ஏற்ப டுத்துவதாக இருக்கும்.

நன்றி நவிலாமல் எந்த ஒரு முன்னுரையும் முழுமை அடையாது. அண்ணுமலை பல்கலைக் கழகத் துணை வேந்த ருக்கும், ஆட்சிக் குழுவினருக்கும் நன்றி கூறுகிறேன். குறிப் பாக அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஆர். இராமானுஜாச்சாரியாருக்கும், விஸ்வபாரதி பல்கலைக் கழக துணைவேந்தர் திரு. சி. ஆர். தாஸுக்கும், பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினருக்கும், இந்தியர்களின் கவனத்தை ஈர்த் துள்ள விஷயங்கள் பற்றி ஒரு சில எண்ணங்களை ஒன்று சேர்த்துக் கூறச் சந்தர்ப்பம் அளித்ததற்காக நான் நன்றி கூறுகின்றேன்.

முடிவாக, இதில் பிரசுரமாகியுள்ள சொற்பொழிவுகள் பொதுவாக இந்தியாவில் உள்ள மக்களுக்கும், குறிப்பாக மாணவர்களுக்கும் பயன்படக் கூடியதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

பம்பாய்,
18, டிசம்பர், 1965.

ஏ. ஆர். வாடியா.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | ஜனநாயகத் தத்துவம் | ... | 1 |
| 2. | நடைமுறையில் குடியாட்சி : பிரிட்டன், அமெரிக்கா | ... | 28 |
| 3. | நடைமுறையில் குடியாட்சி : இந்தியா, ரஷ்யா | ... | 69 |
| 4. | சமுதாயமும் மாநிலமும் | ... | 118 |
| 5. | ஐரோப்பிய இந்தியச் சரித்திரங்களின் வேறுபாடுகள் | ... | 151 |
| 6. | பொதுவுடமை சமுதாயம் | ... | 160 |
| 7. | இன்றைய மேற்கத்திய சமுதாயம் | ... | 186 |
| 8. | இந்தியாவுக்கு எந்த வழி | ... | 208 |

# 1. ஜனநாயகத் தத்துவம்

இன்றைய உலக அரசியல் கட்டுக்கோப்பில் ஜனநாயகம் என்பது எல்லா அரசியல் எண்ணங்களையும் ஆட்கொண்டுள்ளது. ஜனநாயகம் என்ற வார்த்தை நமக்கு மிகவும் பழக்கப்பட்டுப் போய் விட்டதால், இவ்வார்த்தையின் அர்த்தம் இன்னது தான், அது இதற்காகத்தான் நிற்கிறது என்று எடுத்துக்கொள்ளும் அளவுக்கு நமக்கு உரிமையுண்டு. உண்மையில் இந்தக் கோட்பாடு மிகவும் குழப்பமான ஒன்ருகவே உள்ளது. ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பொருள் படுகின்றது. மேற்கத்திய நாடுகளின் ஜனநாயகங்கள் சோவியத் ரஷ்யாவிலும், சீனுவிலும் உள்ள பொதுவுடமைத் தத்துவத்திற்கு எதிரானவை என்று பேசும் அளவுக்கு நாம் பழக்கப்பட்டுப் போய்விட்டோம். எனினும், பொதுவுடமை வாதிகளும்கூட தங்களது அரசியல் அமைப்பானது ஜனநாயகமே என்று கூறுகின்றனர். இதைப் பார்லிமெண்டரி ஜனநாயகம் என்று நாம் பொருள் கொள்வதானுல், எந்த ஒரு பொதுவுடமை நாடும் தன்னை ஒரு ஜனநாயக நாடு என்று சொல்லிக்கொள்ள

முடியாது. மக்கள் சார்பாகப் பேசும்வரையில் பொதுவுடமைவாதிகள் தாங்கள் ஜனநாயக வாதிகள் என்று உரிமை கொண்டாடுவதில் சற்று நியாயமுண்டு. இது ஜனநாயகம் என்ருல் என்ன என்று விளக்கவேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்துகின்றது. ஜனநாயகம் என்ற கோட்பாடுபற்றிய சரித்திரப் பூர்வமான சிறியதோர் விமர்சனமானது, இன்று இதுபற்றி நிலவும் முரண்பட்ட விளக்கங்களை நாம் புரிந்து கொள்ள உதவிகரமாக இருக்கும்.

அரசியல் அமைப்புக்களை மூன்று தனித்த வேறுபட்ட வகைகளாகப் பிரிக்கலாம். முடியாட்சி அல்லது தனிமனிதனின் ஆட்சி, பிரபுத்துவ ஆட்சி அல்லது அதிகார வர்க்கத்தின் ஆட்சி. எல்லோராலும் இல்லாவிட்டாலும், பெரும் பாலோராலான ஜனநாயக ஆட்சி. பூர்வகுடி மக்களின் அமைப்புக்களில் ஜனநாயகத்தின் ஒரு சிறிய சாயல் இருந்தது. ஆனுல், அவை பழக்க வழக்கங்களுக்கு கட்டுண்டிருந்தன. எனவே, அவை மிகுதியும் பிற்போக்குத் தன்மை கொண்டவையாக விளங்கின. குடித்தலைவனின் ஆட்சி பழக்கவழக்கங்களை இறுக்கமடையச் செய்வதாக இருந்தது. பழங்குடி மக்கள் நிச்சய மான ஒரு இடத்தில் நிலையாகத் தங்கத் தொடங்கிய பின்னர்தான் அரசாங்கம் உருவானது. அது முடியாட்சியாயிற்று. பழம்பெரும் கிரேக்க நாட்டின் நகர அரசுகள் அவற்றின் அரசியல் பற்றிய விளக்கமான சரித்திரத்தை உடையவை. மக்கள், அரசர்களின் கொடுங்கோன்மையையும், அதிகார வர்க்கத்தின் சுயநலத்தையும் உணர்ந்து தங்கள் கையிலேயே அரசியல் அதிகாரத்தை எடுத்துக் கொள்ள முடியும் என்று எண்ணுவதற்குச் சில

நூற்றுண்டுகள் பிடித்தன. எனவே ‘டெமோஸ்’ அல்லது பாமர மக்கள் அரசர்களையும், பிரபுக்களையும் தூக்கியெறிந்த பின்னரே ஜனநாயகம் மக்கள் ஆட்சியாக மலர்ந்தது. இங்கேயும் மீண்டும் ஒரு விஷயத்தை மனதில் கொள்வது அவசியமாகும். கிரேக்க ‘டெமோஸ்கள்’ சுதந்திர மக்களைக் கொண்டதாகவே இருந்தன. எண்ணிக்கையில் மிகுந்திருந்த அடிமைகள் அரசியல் உரிமைகளோ அல்லது இதர உரிமைகளோ அற்றவர்களாக இருந்தார்கள். நமது கொள்கைப்படி அடிமைத்துவம் மிகவும் கேவலமானதோர் அமைப்பாகும். ஆயினும், மனிதகுல வளர்ச்சியின் சரித்திரத்தில் அதற்கு ஒரு இடமுண்டு. இந்த அமைப்புப் போர்களினின்றும் உருவெடுத்தது. எதிரிகளை யுத்தக் கைதிகளாகப் பிடித்து அவர்களை உயிரோடு வைத்திருப்பதானது, அவர்களைப் பிடித்துக் கொன்று சாப்பிடும் காட்டுமிராண்டித்தனமான பழக்கத்தை விட மிகவும் மனிதத் தன்மை வாய்ந்ததாகும். எல்லாவிதமான வீட்டு வேலைகட்கும் அடிமைகள் பயன்படுத்தப் பட்டார்கள். நிலத்தைப் பண்படுத்துவதற்கும், வீட்டு வேலைகட்கும், மற்றும் அவர்கள் கல்வியறிவுற்றவர்களாகவோ, அல்லது அவர்களைக் கல்வியறிவு பெற்றவர்களாகவோ செய்ய இயலும் பட்சத்தில் எழுத்தர்களாகவும், காரியதரிசிகளாகவும் பயன்படுத்தப் பட்டார்கள். எஜமானர்கள்—அடிமைகள் ஆகியவர்களுக்கிடையிலான உறவு முறைகள் மாறுபட்டிருந்திருக்க வேண்டும். நியாயமாக இந்த உறவு பெரும்பாலும் சுமுகமாகவே இருந்தது என்பதையும் குறிப்பிடத்தான் வேண்டும். அடிமைகள் குடும்பத்தில் ஒரு அங்கமாகப்

பாவிக்கப்பட்டார்கள். உண்மையான உழைப் பிற்குப் பரிசாக அடிக்கடி அவர்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. இந்த உறவு இயற்கையானது. காரணம், அடிமைகள் கிரேக்கர்களாகவே இருக்கக் கூடும். ஏனெனில் கிரேக்க நகர அரசாங்கங்கட்கு இடையில், குறிப்பாக அதீனியர்களுக்கும், 'ஸ்பார்ட்டானியர்'களுக்கு மிடையில் யுத்தங்கள் சர்வ சாதாரணமாக நடைபெற்றன. கிரேக்க நாகரிகம், கலாச்சாரம் ஆகியவற்றின் வெற்றிக்கு ஓரளவு அடிமைகளும் காரணமாக இருந்தார்கள். ஏனெனில், அவர்களது உழைப்பு அவர்களுடைய எஜமானர்கள் இலக்கியம், கலை, தத்துவம், விஞ்ஞானம்—கடைசியாக 'பெரிக்கிள்ஸ்' காலத்தில் அரசியல் ஆகியவற்றில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்பளித்தது. பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற மாபெரும் தத்துவ மேதைகளால்கூட அடிமைத்துவம் ஒரு இயற்கை யான அமைப்பாகவே கருதப்பட்டது. கிரேக்க மக்கள் அடிமைகள் ஆக்கப்படுவதைத்தான் அவர்கள் எதிர்த்தார்கள். ஏனெனில், காட்டு மிராண்டிகள் எனக் கருதப்படும் இதர மக்களை ஆட்சிபுரியும் தகுதிவாய்ந்தவர்கள் கிரேக்கர்கள் என்று அவர்கள் கருதினர்கள். எகிப்தியர்களும், இரானியர்களும் காட்டு மிராண்டிகளாகவே கருதப் பட்டனர். ஏனெனில், கிரேக்கர்களைப் போன்று அவர்கள் ஜனநாயகக் கோட்பாட்டை வளர்த் திருக்கவில்லை. அடிமைகளின் உழைப்பின் மூலமாகவே சீன, இந்திய, எகிப்திய, பாபிலோனிய பழம்பெரும் நாகரிகங்கள் அனைத்தும் தங்கள் வெற்றிகளை அடைந்தன. கிரேக்க ஜனநாயகம் மட்டுமே இந்தப் பாரம்பரியத்தை நீடித்து வந்தது. இந்த ஒரு காரணத்தை முன்னிட்டே அவர்களது

ஜனநாயகம் அடிப்படையில் பிரபுத்துவ ஆட்சி யாகவே இருந்தது.

ரோமானியர்களும் முடியாட்சியில்தான் தொடங்கினுர்கள். ஆனுல், ஜனநாயகத்திற்குமாறிக் கொண்டார்கள். இந்த ஜனநாயகமும் பரம்பரை ரோமானியர்களிடையே மட்டுமே நிலவியிருந்தது. பாமரமக்கள் மரம் வெட்டுவதற்கும், தண்ணீர் இறைப்பதற்கும் விடப்பட்டார்கள். ரோமானியர் சதாகாலமும் யுத்தங்களில் ஈடுபட்டிருந்ததால் எண்ணற்ற அடிமைகள் இருந்தனர். இயற்கை யாகவே ரோமானியர் போர்க்குணம் படைத்தவர் களாகவும், கடுமையானவர்களாகவும் இருந்த காரணத்தால் அடிமைகளின் நிலை போற்றத்தக்க தாக இருக்கவில்லை. இது அடிமை மக்களின் புரட்சியில் கொண்டுபோய் விட்டது. இருந்தா லும், அடிமைகளைப் பெருந் தன்மையுடன் நடத்திய ரோமர்களும் இருக்கத்தான் செய்தார்கள். 'எப்பிக்டயிட்டஸ்' என்ற பிரசித்திபெற்ற தத்துவ ஞானி முதலில் ஒரு அடிமையாகத்தானிருந்தார். ரோமக் குடியரசு விரிவடைந்து தலைவர்களுக் கிடையில் ஏற்பட்ட பூசல்கள் உள்நாட்டு யுத்தங் களாகப் உருவெடுத்தபோது, 'அகஸ்டஸின்' தலைமையில் ஒரு ரோமானியப் பேரரசாக அது உருவெடுப்பது தவிர்க்க முடியாததாயிற்று. அடிமைத்துவம் மேலும் உறுதிப் படுத்தப்பட்ட அமைப்பாக உருவாயிற்று. பெருமளவில் வியாபாரப் பூர்வமான உருவம் பெற்றது. பேரரசின் எல்லைகளினின்றும் அவற்றிற்கு அப்பாலிருந்தும், சந்தைகளில் அடிமைகளாக வாங்கப்படுவதற்கும், விற்கப்படுவதற்கும் மனிதர்கள் கொண்டுவரப்பட்டார்கள். ஆண்களின்

உடல்வலிமையும், பெண்களின் உடலழகும் அவர் களின் விலைமதிப்பை நிர்ணயித்தன.

ஒரு பேரரசில் சுதந்திரம் என்பதே இருக்க முடியாது. ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும் எழுந்த அரசுகள் முடியாட்சி–நிலப் பிரபுத்துவ அமைப்புகளைக் கொண்டவையாகவே விளங்கின. முடியாட்சியோ, அல்லது நிலப் பிரபுத்துவமோ ஜனநாயகத்துடன் எந்தவிதமான சம்பந்தமும் கொண்டிருக்கவில்லை. கிறித்துவ மதமும்கூட மதத்தின் அடிப்படையில் ஜனநாயகத்தைக் கொண்டிருந்தாலும், எந்தவித மான அரசியல் ஜனநாயகத்திற்கும் அப்பாற்பட்ட தாகவே இருந்தது. ஆனால், 'ஜான்பால்' என்ற மத குருவே ஒரு ஜனநாயக கோஷத்தை வெளி யிட்டார். கீழ்க்கண்ட புகழ்பெற்ற வரிகளை அவர் எழுதினார்.

ஆதாம் உழுதபோதும் ஏவாள் நூற்ற போதும்
யார் அப்போது கனவான் ?

எதேச்சாதிகார ஆட்சியில் பழக்கப்பட்டுவிட்ட சுதந்திர ஆர்வமில்லாத மக்களுக்கு ஜனநாயகம் என்பது அர்த்தமற்ற ஒன்றாகும். கிரேக்க ஜன நாயகத்தைத் தெரிந்துகொண்டு அதில் ஆர்வம் காட்டிய ஒரு சிலருக்கு அது நியாயமானது என்று எவ்வாறு எடுத்துக் கூறுவது, அந்த அமைப்புக்கு எப்படி மாறுவது என்பது ஒரு பிரச்சினையாகப் போயிற்று. அரசியலுக்கு முற்பட்ட இயற்கை யோடியைந்த ஆதி நிலை, அவர்களுக்குச் சமூக உரிமைகளின் அடிப்படையாக இருக்கக்கூடிய சமுதாய உடன்பாட்டைக் கொள்ளும் சாத்தியக் கூறுகளை அளித்தது. இயற்கையோடியைந்த அமைப்பு முறையைக் கற்பனை செய்த பெருமை

இங்கிலாந்தைச் சேர்ந்த 'தாமஸ் ஹாப்ஸ்' என்பவரைச் சாரும். அந்த அமைப்பில், மனிதர்கள் எந்த விதமான சட்டமும் ஒழுங்கும் இல்லாமல் மிருகங்களைப்போல வாழ்ந்தார்கள். அதன் விளைவாக "மனிதனின் வாழ்க்கை தனிமைப் பட்டதாகவும், ஏழ்மையானதாகவும், அருவெறுக்கத் தக்கதாகவும், மிருகத்தனமானதாகவும் குறுகியதாகவும் இருந்தது." மக்கள் ஒன்றுகூடி ஒரு சமுதாய உடன்படிக்கையைச் செய்துகொண்டதன் விளைவாக இந்தத் தற்கொலைப் போக்கு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் மூலம் அவர்கள் தங்கள் விருப்பம்போல் வாழும் உரிமையைக் கைவிட்டுவிட்டுத் தங்களை ஆட்சிபுரிய ஒரு மன்னனைத் தேர்ந்தெடுத்தார்கள். 'ஹாப்ஸ்' இயற்கையாகவே ஒரு கோழை. சுதந்திரத்தைப் பலி கொடுத்தாவது பாதுகாப்பை நிலைநாட்டுவதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தான். சமுதாய உடன்படிக்கை எண்ணத்தை மேலும் வளர்ப்பதற்கான வழியை வகுத்திருந்தான். அதனை "ஜான்லீக்ஸ்" பூர்த்தி செய்தான். ஆங்கிலப் புரட்சிக்குத் தத்துவப் பூர்வமான நியாயத்தை கற்பிப்பது பயன் தரத்தக்கது என்று அவன் எண்ணினான். ஆங்கிலப் புரட்சி ஏற்கனவே ஒரு மன்னனைக் கழுவிலேற்றி யிருந்தது. 'லாக்ஸ்' காலத்தில் 'இரண்டாம் ஜேம்சை' விரட்டி விட்டு அவன் இடத்தில் அவனது மகளான 'மேரியையும்', அவள் கணவன் 'வில்லியத்தை'யும் அமர்த்தியிருந்தான். 'லாக்ஸ்' சமுதாய உடன்படிக்கையை இவ்வாறு உருவாக்கியிருந்தான். மன்னன் மக்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் காப்பாற்றத் தவறினால், அவனை பதவியிழக்கச்செய்து வேறு ஒருவனை அவன் இடத்தில் இருத்தும் உரிமையை அவர்கள் பெறுகிறார்கள் என்ற நிபந்

தயின் மூலம், மக்கள் தங்களது உரிமைகளை விட்டுக்கொடுத்த அதே நேரத்தில் அவற்றைப் பாதுகாத்துக் கொள்ளவும் செய்தார்கள். இவ்வாறு நவீன காலத்தில் ஆங்கில பார்லிமெண்டின் மேலதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டதுபோலவே நவீன காலத்தில் ஜனநாயகமும் தத்துவ ரீதியாக மறு பிறவி எடுத்தது. இவ்வாறு ஆங்கில பார்லிமெண்ட் உலகத்தின் எல்லா பார்லிமெண்டுகளுக்கும் தாயாக அமைந்தது. உயிர்வாழும் உரிமை, சுதந்திரம், சொத்துரிமை ஆகியவையே மக்களின் இயற்கையான உரிமைகள் என்று 'லாக்' துல்லியமாக எடுத்துச் சொன்னான். உயிர்வாழும் உரிமையும், சுதந்திரமும் அடிப்படையானவை. ஆனால், சொத்துரிமை நிலைநாட்டப்பட வேண்டிய ஒன்றாயிற்று. இயற்கையோடியைந்த அமைப்பில் அவரவர் இஷ்டம்போல் சொத்தைச் சேர்த்துக்கொள்ளலாம். எதிராளியிடமிருந்து அதைக் காப்பாற்றிக் கொள்ளும் அவனது பலத்தைப் பொறுத்திருந்தது அது. சமூக அமைப்புக்கள் தோன்றிய பின்பு உழைப்பை நிலத்தில் ஈடுபடுத்துவதன் மூலம்தான் சொத்தைச் சம்பாதிக்க முடிந்தது. இதைச் செய்த பின்புதான் சொத்தின் மீதான அவனது நிலை உறுதிப்பட்டது. இவ்வாறு தன்னை அறியாமலேயே லாக் உழைப்பைப் பற்றி மதிப்புத் தத்துவத்தை உருவாக்கினான். அதை காரல்மார்க்ஸ் மிகவும் சாதுரியமாகப் பயன்படுத்தித் தமது சோஷலிஸ தத்துவத்தின் அடித்தளமாக உருமாற்றிக்கொண்டார். அது நம் தலைமுறையில் பொதுவுடமைத் தத்துவம் அல்லது போல்ஷிவிஸம் என்று வழங்கப்படுகிறது.

விரைவில் 'லாக்ஸின்' கருத்துக்கள் இங்கிலீஷ் கால்வாயைக் கடந்துசென்றன. அதிருப்தியினால்

சீறிக்கொண்டிருக்கும் நாட்டிலே 'ரூஸோவின்' சமுதாய உடன்பாடு புதியதோர் திருப்பத்தை ஏற்படுத்திற்று. "மனிதன் சுதந்திரமுடையவ ஞகவே பிறக்கிருன். ஆனுல், அவன் எங்கும் தலை களால் பிணைக்கப்பட்டிருக்கிருன்" என்ற புரட்சி கரமான தொடக்க வாசகத்தைக் கொண்ட 'ரூஸோ வின்' நூல் ஒரு புதிய பாதையைத் தொடங்கியது. பாரீஸ் மாநகரத்தில், பாஸ்டிலி சிறையைக் கைப் பற்றுவதிலும், பதினுரும் லூயி மன்னனையும் அவனது அழகு ராணி மேரி அந்தோனிட்டியையும், சிரச்சேதம் செய்வதிலும் அது முடிந்தது. அந்தக் குழப்பமே பிரெஞ்சுப் புரட்சி. இத்தகைய பயங்கர விளைவுகளைக் கொண்டிருந்தபோதும் அது மனித சரித்திரத்தில் மிகப் பெரிய மைல்கல்லாக விளங் கியது. இந்தக் குழப்பத்தில்தான் மாபெரும் வீரனும், மேதையுமான 'நெப்போலியன் போனப் பார்ட்' உருவாஞன். அவன் ஒரு ராணுவ நிபுண ஞகவும், ராஜதந்திரியாகவும், பெண்கள் மத்தியில் காதல் மன்னஞகவும் விளங்கினுன். யுத்தத்திலும், காதலிலும் தோல்வியுற்ற அவன் நாடு கடத்தப் பட்டவனுய்த் தொலை தூரத்தில் உள்ள ஒரு தீவில் உயிர் துறந்தான். அவன் ஒரு புராண நாயகனைப் போல் விளங்கினுன். தனது உரிமைகளை நிலை நாட்டினுன். ஒரு பேரரசனைப்போல உயர்ந்தான். ஐரோப்பாவில் உள்ள அரசபீடங்களில் எல்லாம்தன் உறவினர்களை அமர்த்தினுன். இது ஒரு புதிராகத் தானிருந்தது. ஆனுல், அவனது வளர்ச்சியானது நிலப் பிரபுத்துவத்திற்கு முடிவு கட்டியது. அவனது, 'நெப்போலியச் சட்டங்கள்' ஒரு புதிய சமூக அமைப்பை உருவாக்கின. அவன் வெற்றி கண்ட இத்தாலியிலும், ஜெர்மனியிலும் வியக்கத் தக்கவகையில் தேசிய உணர்வு எழுந்தது. அதே

நேரத்தில் அவனது ஆளுநகைக்கு உட்படாத ரஷ்யாவும், ஸ்பெயினும் மேலும் ஒரு நூற்றாண்டு காலத்திற்குப் பிற்போக்கான நிலையிலேயேதா னிருந்தன. நெப்போலியனது பேரரசு ஏற்பட்ட போதும், பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைகள், 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஜனநாயக அரசுகள் ஏற்படுவதில் கொண்டுபோய் விட்டன.

இன்றுள்ள பெரிய நாடுகளில் கிரேக்க ஜன நாயகம்போன்ற பழைய நகர அரசுகளை அமைப்பது என்பது முடியாததாகும். மக்கள் ஆட்சியை ஏற்படுத்துவதற்குப் புதியதோர் உருவத்தைக் கண்டுபிடிக்கவேண்டியதாயிற்று. பிரதிநிதித்துவ அரசுகளை அமைப்பதன் மூலம் இது சாத்திய மாயிற்று. நவீன காலத்தில் இது ஒரு மாபெரும் அரசியல் கண்டுபிடிப்பு என்று 'ஜான்ஸ் டுவர்ட்மில்' புகழ்ந்து கூறியதில் வியப்பொன்றுமில்லை. இது நிலைபெற்றுவிட்டது. எல்லாத் தேசங்களிலும் ஜன நாயகத்தின் மாதிரியாகவும் அமைந்துவிட்டது. ஜனநாயகம், தேசீயம் என்ற புதிய உத்வேக உணர்வில் ஆசியாவும் ஆப்பிரிக்காவும் துடித்துக் கொண்டிருக்கின்றன.

காலத்திற்கும் மக்களின் அரசியல் திற மைக்கும் ஏற்ப ஜனநாயகத்தின் உள்ளடக்கமும் மாறுபட்டதாக இருக்கிறது. வயது வந்தோருக்கு வாக்குரிமைகொண்ட ஜனநாயகமானது மேற் கத்திய நாடுகளில் மெதுவாகத்தான் வளர்ச்சி யடைந்தது. இங்கிலாந்து காமன்ஸ் சபையின் சரித்திரம்–மெதுவாகவும், உறுதியாகவும் வளர்ந்த, ஜனநாயக வளர்ச்சியின் ஒளிமிக்க சரித்திரத்தின் உதாரணமாக உள்ளது. ஆங்கிலப் புரட்சி ஏற் பட்டு ஒன்றரை நூற்றாண்டு காலம்வரையில் நிலப்

பிரபுத்துவ வர்க்கமே மேலாதிக்கம் வகித்தது. பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதி ஆண்டு களில் ஏற்பட்ட தொழிற்புரட்சியானது புதிய சக்தி களைக் கட்டவிழ்த்து விட்டது. புதிய தொழில் நகரகங்கள் வளர்ந்தோங்கின. முதலாளிகள் என்ற புதிய செல்வந்தர் வர்க்கத்தினர் உருவாயினர். இறுதியாக, வருங்காலத்துக்கான பிரம்மாண்ட மான சாத்தியக் கூறுகள் நிறைந்த தொழிலாளி வர்க்கமும் உருவாயிற்று. புதிய நகரங்களும், புதிய முதலாளித்துவ வர்க்கமும், பார்லிமெண்டில் பிரதி நிதித்துவம் கோருவது வெறும் காலக்கெடுவாக மட்டும் இருந்தது. புதிய கோரிக்கைகளுக்கு உடனடியாகவும் சுலபமாகவும் இணங்கிவிடக் கூடாது என்பதே சனுதனுப் போக்குக்கொண்ட இங்கிலாந்தின் இயற்கைக் குணமாக இருந்தது. 1932ம் ஆண்டு ஏற்பட்ட சீர்திருத்தச் சட்டம் நிறை வேற்றப்படுவதற்கு முன்னுல் பெரும் அளவுக்கு இயக்கங்கள் நடைபெறவேண்டியதாயிற்று. குழப் பங்கள்கூட நடைபெற்றன. இதன்பின், காமன்ஸ் சபையானது இதற்குமுன்னுல் இருந்ததைவிட பிரதிநிதித்துவம் வாய்ந்த சபையாக மாறியது. வாக்குரிமை விரிவுப்படுத்தப்பட்டதும் மேலும் பல கோரிக்கைகள் எழுந்தன. 1868ம் ஆண்டில் நிறை வேற்றப்பட்ட சீர்திருத்தச் சட்டமும், 1884–85ம் ஆண்டுச் சட்டமும் மேலும் வாக்காளர் எண்ணிக் கையை அதிகப்படுத்தின. வாக்குரிமையினின்றும் பெண்கள் ஒதுக்கப்பட்டிருந்தார்கள். பெண்கள் மத்தியில் கல்வியறிவு வளரவே அவர்களுக்கும் வாக்குரிமை வேண்டும் என்ற கோரிக்கை இயற்கை யாகவே எழலாயிற்று. இந்த உரிமையானது ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னுல், பெண் களுக்கு வாக்குரிமை வேண்டும் என்று கோரிய

வர்கள் பெரிய போராட்டங்களை நடத்தவேண்டி யிருந்தது. அமெரிக்க நாட்டில் பிறந்திருந்தபோதி லும் திருவாட்டி 'ஆஸ்டர்' தான் காமன்ஸ் சபையில் அங்கம் வகித்த முதல் பெண்மணி. வயது வந் தோருக்கு வாக்குரிமை என்பது முதல் உலக மகா யுத்தத்திற்குப் பிறகுதான் ஏற்பட்டது. வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட பின்னர் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றனர். ஆங்கில அரசியர் வாழ்வில் தொழிற்கட்சியானது ஆரம்பிக்கப்பட்டு, தொழிற்கட்சி அரசு ஏற்பட்டதும் இதனுல் ஏற்பட்ட இயற்கையான விளைவுகளே. ஜனநாயகம் என்பது மக்கள் அரசு, மக்களுக்கான அரசு, மக்க ளால் ஆன அரசு என்பது ஆபிரகாம் லிங்கனின் புகழ்பெற்ற விளக்கம் ஆகும். அமெரிக்காவானது ஜனநாயகத்தின் கோட்டை எனக் கருதப்படுகின் றது. இந்த நாட்டில்கூட லட்சக்கணக்கான நீக்ரோ மக்கள் தங்கள் சமூக உரிமைக்காக வேண்டி இன்னும் போராட்டங்கள் நடத்த வேண்டியிருக் கிறது. இரண்டாம் உலகமகாயுத்தத்திற்குப் பிறகு காலனி ஆதிக்கத்தினின்றும் ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள் விடுதலை பெற்றுள்ளன. இந்த நாடுகளில் கூட சந்தேகத்திற்கிடமான வாய்ப்புக்களோடு தான் வயது வந்தோருக்கு வாக்குரிமை என்பது தொடங்கப்பட்டுள்ளது. ஏனெனில் பெரும்பா லானவை சர்வாதிகார ஆட்சிக்கும், பொதுவுடமை ஆட்சிக்கும் மாறிப் போய்விட்டன.

பிரதிநிதித்துவ அரசு என்றுல் 'பார்லிமெண்டரி ஜனநாயகம்' என்று பெருமளவுக்கு நடைமுறை யிலும், தத்துவார்த்த ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. இதையும் விமர்சனம் செய்பவர்கள் உண்டு. ஜனநாயகம் கிரேக்க பிரஜைகளுக்கு

மட்டுமே இருந்தபோதும் பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. முட்டாள்கள் அரசாங்கம் என்று பிளேட்டோ இதை வர்ணித்தார். 'வால்டேர்' தனக்கே உரித்தான கிண்டல் மொழியில் "நூறு எலிகளால் ஆட்சி செய்யப்படுவதைவிட ஒரு சிங்கத்தினுல் ஆட்சி செய்யப்படுவது மேல்" என்று சொல்லத் தயங்கவில்லை.

முடியாட்சியோ, அதிகாரவர்க்க ஆட்சியோ இன்று விரும்பத் தக்கதாக இல்லை. ஆனுல், ஒரு விருப்பு வெறுப்பற்ற சரித்திர மாணவனுல், மனித நாகரிக வளர்ச்சிக்கு மன்னர்களும், பிரபுக்களும் செய்த தொண்டினைப் பார்க்காமல் இருக்கமுடியாது. பாமரர்களின் ஆட்சியைத் தவிர வேறு எங்கும் பூரண ஜனநாயக ஆட்சி சாத்தியமில்லை. பழைய ஏதன்ஸின் 'அரிஸ்டைடைஸசு'ப் பற்றி ஒரு சம்பவம் உண்டு. அவன் மிக்க புகழ்பெற்றவனுகவும், மதிக்கத் தக்கவனுகவும் இருந்ததால் எப்போதும் நீதிமான் அரிஸ்டைடஸ் என்றே அழைக்கப்பட்டான். ஒரு நாள் வாக்குப் பதிவு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு மனிதன் தனக்கு எதிராக வாக்குப்பதிவு செய்து கொண்டிருப்பதை அவன் கண்டான். அதன் காரணத்தை அறிந்து கொள்ள அரிஸ்டைடஸ் அவனை அணுகினுன். "ஓ! எல்லோரும் அரிஸ்டைடைஸப் பற்றியே பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு எனக்குச் சலித்து விட்டது" என்று பதில் கிடைத்தது. இரண்டாம் தர மக்கள் எப்போதும் பணக்காரர்கள்மீதும், அறிவாளிகள்மீதும் பொருமை கொண்டவர்களாகவே இருக்கின்றனர். ஆனுல், அவர்கள் இல்லாமல் இவர்களால் எதையுமே செய்யமுடியாது.

பாவனை செய்யப்பட்டதோர் சமத்துவத்தின் அடிப்படையில்தான் ஜனநாயக நடைமுறை சாத்தியமாகின்றது. ஒரு மனிதனுக்கு ஒரு வாக்கு என்பதுவும், வயது வந்தோருக்கு வாக்குரிமை என்பதுவும் எல்லா ஜனநாயகங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், அடிப்படையில் சமத்துவம் கிடையாது. சாத்தியப்பாடான எல்லா கோணங்களிலிருந்தும் சமத்துவம் என்ற கோட்பாட்டை ஆராய்வோம். உயிர்களின்படி இரண்டு நபர்கள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இரட்டையர்கள்கூட ஒரே மாதிரி இருப்பதில்லை. இரண்டு கைரேகைகள்கூட இந்தக் காரணத்தினால்தான் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. கைரேகை சாஸ்திரம் ஒரு விஞ்ஞானமாக வளர ஏதுவாயிற்று. குண நலத்திலும், புத்திக் கூர்மையிலும் எண்ணற்ற பேதங்கள் உண்டு. சிலருடைய அறிவாற்றல் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இப்படிப்பட்ட மனிதர்கள் எல்லா சமுதாயத்திலும் உண்டு. எந்த ஒரு இந்தியன்தான், தான் மகாத்மா காந்திக்குச் சமதையானவன் என்று உரிமை கொண்டாட முடியும்? சேக்ஸ்பியருக்கும், வின்ஸெண்ட் சர்ச்சிலுக்குச் சமமானவன் என்று எந்த ஒரு ஆங்கிலேயனால் உரிமை கொண்டாட முடியும்? மனோதத்துவ ரீதியாகத் தனி நபர் தனி நபர்தான். உவமையாக வேண்டுமானால் ஒரு மனிதன் வேறு ஒருவனுடைய பிரதிமையாக இருக்கலாம். இதனால் தான் மனிதவர்க்கம் மிகவும் வளப்பமுள்ளதாகவும், சிக்கல் வாய்ந்ததாகவும் இருக்கிறது. மனிதர்கள் வெறும் யந்திரங்களாக இருக்க முடியாது. ஹிட்லர் கூட தன்னையே விலையாகத் தந்து இந்த உண்மையைத்தான் கண்டுபிடித்தான். அவன் கோடிக் கணக்கான யூதர்களைக் கொன்று குவித்தான்.

இருந்தாலும் யூதர்களின் திறமை இன்றும் உயிரோடு மிளிரத்தான் செய்கிறது. நவீன கால ஆச்சரியங்களில் ஒன்ருன இஸ்ரேலில் மட்டு மல்லாமல், முன்னேற்றமடைந்த ஒவ்வொரு நாட்டி னுடைய பிரச்சினைகளில் முன் நிற்கின்ற யூதர்க ளின்வாயிலாகவும் அவர்களின் திறமை மிளிர்கின் றது. பொருளாதாரசமத்துவம்கூட ஒருகனவுதான் இதை எய்துவதில் பொதுவுடமை தோல்வி கண்டு விட்டது. அதனுல், பணக்காரர்களை ஏழைகளாக்க முடியும். ஆனுல், செல்வத்தைச் சமனப்படுத்த முடி யாது. ஏனெனில், சோம்பேறிகளாகவும், நேரத்தை வீணடிப்பவர்களாகவும் உள்ள தனி நபர்கள் இருக்கிருர்கள். அவர்களின் முட்டாள்தனங்களின் மூலம் தந்திரசாலிகளான புத்திசாலிகள் பரிமளிக்க முடியும்.

மனித சரித்திரத்தில் இனத்துவம் ஒரு முக்கிய மான பங்கை வகித்துள்ளது. கிரேக்கர்கள் மற்ற வர்களையெல்லாம் காட்டு மிராண்டிகள் என்று கருதினுர்கள். தாங்கள்தான் அவர்களை எல்லாம் விட உயர்ந்தவர்கள் என்று உரிமை கொண்டா டினுர்கள். தாங்கள்தான் ஆண்டவனுல் தேர்ந் தெடுக்கப்பட்ட மக்கள். எனவே இதர மக்களைவிட தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற உள்ளுணர்வு யூதர் களுக்கும் உண்டு. இந்தியாவில், ஆரியர்களுக்கு மிலேச்சர்கள்மீது எந்தவிதமான கருணையும் கிடை யாது. உலகம் கண்டிராத அளவுக்கான மிகவும் இறுக்கமான அதிகாரவர்க்க சமூக அமைப்பை ஜாதித்துவத்தின் மூலம் உருவாக்கினுர்கள். ஹிட் லரின் ஜெர்மானிய உயர்வகங்காரம் வீழ்த்தப்பட்டு விட்டது. கருப்பு இன மக்கள் தங்கள் தாழ்வை ஒப்புக்கொள்ளும் அளவுக்கு வெள்ளையர்கள் தங்கள் உயர்வை எல்லாப் பகுதிகளிலும் ஸ்தா

பித்து விட்டார்கள். இது தற்காலிகமானதே. ஜப்பான் ரஷ்யாவைத் தோற்கடித்தபோதும் அரை வேட்டியுடன் அலைந்த இந்தியப் பரதேசி (மகாத்மா காந்தி) பிரிட்டீஷ் பேரரசின் அடித்தளத்தையே ஆட்டம் காண வைத்தபோதும் வெள்ளையர்கள் தான் உயர்ந்தவர்கள் என்ற புதிர் உடைபட்டுப் போயிற்று. இதனுல், வெள்ளையர்களோ கருப்பு நிற மக்களோ, மங்கல் நிற மக்களோ எதிர் பார்த்ததைவிட வெகு சீக்கிரம் அதன் உடைப்பு தொடங்குகிறது. இனங்களின் உயிரியல் தன்மை உறவுகளை ஆராய்வதற்கு யுனெஸ்கோவின் ஆதரவில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இந்த மாநாடு மாஸ்கோவில் நடைபெற்றது. அதில் உலகத்தில் உள்ள உயிர் இயல் விஞ்ஞானிகள், பரிணும விஞ்ஞானிகள், மானிட இயல் வரலாற்றுப் போறிஞர்கள் ஆகியவர்கள் கலந்துகொண் டார்கள். மனித இனத்தில் ஒரே மாதிரி சுத்தமான இனம் என்பது ஒன்று கிடையாது என்ற மாபெரும் உண்மையை அவர்கள் ஒத்துக் கொள்ள வேண்டியதாயிற்று, ஆசிய. ஆப்பிரிக்க நாடுகளில் ஏற்பட்டு வரும் புதிய எழுச்சிகளின் கண்ணேட்டத்தில் பார்த்தால் "எந்தவிதமான நாகரிக மட்டத்தையும் அடைவதற்கு உலக மக்களுக்குச் சமமான உயிரியல் பூர்வமான சாத்தியப் பாடுகள் உண்டு" என்ற உண்மையினையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டியதாயிற்று. எனவே, இன மேம்பாடு என்பது இறந்து படும் ஏற்றத் தாழ்வுகள் வெறும் கற்பனைகளாகிப் போகும். இருந்தாலும் இனக் குழுக்களுக்குள் இருக்கும் மனித ஏற்றத் தாழ்வுகள் இருக்கத்தான் செய்கிறது.

இந்த நிலையில் ஜனநாயகத்துக்காக வாதாடுவது என்பது எப்படி? எதிர்மறையாக முடியாட்சியோ, பிரபுத்துவ ஆட்சியோ, கலப்பட மற்ற ஆசீர்வாதங்களாக ருசுபிக்கப்படவில்லை. இவை, பொதுமக்களையும், ஏழைகளையும், படிப்பு வாசனையற்றவர்களையும், ஆதரவற்றவர்களையும் கருணையற்ற முறையில் சுரண்டுவதில்தான் கொண்டுபோய் விட்டன. புழுக்கூடத் திருப்பித் தாக்கக் கூடிய ஒரு காலம் வருகிறது. மக்கள் அதிகாரத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொள்வதற்காகப் போராடினார்கள். அதன் மூலம் தங்கள் நிலையை அபிவிருத்தி செய்துகொள்ள முடியும். அவர்கள் இதில் வெற்றி பெற்றார்கள். ஏனெனில் புரட்சிகள் புதிய தலைவர்களை உருவாக்குகின்றன. இன்றைய பிரதிநிதித்துவ அரசுகள் ஒரு பக்கம் முட்டாள்களும் நிர்ணயமற்றவர்களும், மறுபக்கம் நல்லவர்களும் அறிவாளிகளும் கொண்டதோர் கலவையின் உதாரணமாகத் திகழ்கின்றது. முட்டாள்களும் நிர்ணயமற்றவர்களும் வாக்குப் பதிவில் கலந்து கொள்ளலாம். ஆனால், அதிகாரமோ தலைமை தாங்கக் கூடியவர்கள் கைக்கு நழுவக் கூடிய வகையில் திரும்புகின்றது. அசந்தர்ப்பவசமாக முட்டாள்கள் கையிலோ நாணயமற்றவர்கள் கையிலோ அதிகாரம் மாறி விட்டதென்றால் ஜனநாயம் அற்பாயுசுடையதாகப் போய்விடும். தனி நபருடையவோ, அல்லது ஒரு சிலருடையவோ சர்வதிகார ஆட்சி ஏற்பட்டு ஐரோப்பாவிலும் சமீப காலத்தில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலும் ஏற்பட்டது போன்று ஜனநாயகத்தைக் கொன்று விடுவார்கள். ஜனநாயகம் பரீட்சார்த்த நிலையில் உள்ள இந்த நாடுகளில் ஜனநாயம் பெரும்பாலும் வெற்றிகரமாக

உருவெடுக்கவில்லை. இவ்வளவு இருந்தபோதும் ஜனநாயகத்தில் நான் நம்பிக்கை இழந்து விடவில்லை. நமக்கு வேண்டிய சிறந்த அரசியல் அமைப்பு இதுதான்.

நான் இதில் நம்பிக்கை வைக்கிறேன். ஏனெனில் இது மனிதனின் மேம்பாட்டை அப்படியே ஏற்றுக்கொள்கிறது. தனது திறமைக் கேற்ப தன்னை வளர்த்துக் கொள்ளும் உரிமை யையும் அங்கீகரிக்கிறது. ஆங்கிலேயன் வாக் களிக்கும் போதுதான் சுதந்திரமுடையவனாக இருக் கிறான் என்று மாண்டஸ்கியூ கூறலாம். அதுவும் ஐந்தாண்டுக்கு ஒரு முறையோ ஏழு ஆண்டுக்கு ஒரு முறையோ நடை பெறலாம். வாக்குரிமையின் தார்மீக மகத்துவத்தைப் பாராட்ட அவர் மறந்து விட்டார். இந்த வாக்குரிமையினால் ஒரு அரசாங் கத்தை தூக்கியெறித்துவிட்டுத் தனக்கு நம்பிக்கை உள்ள ஒரு அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்த முடியும். இதன் பொருள் என்னவென்றால் அரசியல் அனுபவம், அரசியல் பொறுப்பை வளர்ப்பதாகும். அரசாங்கத்தை மெல்லிய கொக்கிகளில் தொங்க விடக்கூடிய அளவுக்கான எதிர் கட்சியின் பலத்தைக் கண்டு அரசாங்கம் தவறான நடவடிக் கையைக் கைக்கொள்வதற்கோ, தவறான கொள் கையைக் கடைப் பிடிக்கவோ அஞ்சும். ஐந்தாண்டுக்கு ஒரு முறையோ ஏழு ஆண்டுக்கு ஒரு முறையோநடைபெற்றபோதும், வாக்குப் பதிவின் போக்கையே மாற்றிவிடக் கூடிய பொதுஜன அபிப்பிராயம் பற்றி அரசு எப்போதுமே உணர் வுடன் இருக்கும். 'ஸ்டான்லி பால்ட்வின்' இங்கிலாந்தின் பிரதமராக இருந்த காலத்தில், காமன்ஸ் சபையில் 1936ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ம் தேதி சொன்ன வார்த்தைகள் ஜனநாய

கத்துக்குக் கொடுத்த சரியான பாராட்டாகும். "'சர்வாதிகார ஆட்சியுடன் சம்மந்தப்பட்ட ஊழல்கள் பொதுவாக மறைக்கப்பட்டே இருக்கின்றன. ஜனநாயகத்தில் புகுகின்ற ஊழல்கள் உடனடியாக வெளியாகி விடுகின்றன. தயவு தாட்சணியமின்றி நடவடிக்கைகள் கைக்கொள்ளப் படுகின்றன. ஒரு ஜனநாயக சட்டமன்றமாய் இருப்பதால் ஏதாவது யோசனைகள் கூறப்பட்டால் உடனடி நடவடிக்கைகள் நிச்சயம் கைக்கொள்ள வேண்டியுள்ளது. இதன் காரணமாக மேல் மட்டத்தில் ஏற்படுகின்ற தவறையோ, குற்றத்தையோ, குறைந்த பொறுப்புக்கள் வகிப்போர் மத்தியில் ஏற்படும் தவறுதல்களைவிட கடுமைக் குறைவானவை என்று நாம் பாவிப்பதில்லை. நாம் நமது அரசாங்க ஊழியர்கள் பற்றிப் பெருமைப் படுகிறோம். அந்த நாணயம் உயர்ந்த தரமுடையதாக இருக்கிறது. பிரதிநிதித்துவ சபையில் அங்கம் வகிப்பவர்களிடமும் அரசாங்கத்தில் பதவியில் இருப்பவர்களிடமும் இதை விடக் குறைந்த தகுதியை நாம் எதிர்பார்க்கவில்லை."

இவை எல்லாம் ஜனநாயகத்துக்கு மதிப்புத் தரக்கூடிய பகுதிகள். நாம் லட்சியங்கள் பற்றி வானளாவப் பேசுகிறோம். அதே நேரத்தில் அதன் படி நடப்பதில்லை. இது மனித குலத்திற்கோர் சாபக் கேடாக இருக்கிறது. ஒரு வாக்கு (ஓட்டு) என்பது புனிதமான பொறுப்பாகும். ஆனால், இது விலைக்கோ ஒரு முத்தத்திற்கே வாங்கவும், விலை கூறவும் செய்யப்படுகிறது. அமைதியும், கட்டுப்பாடும் நிறைந்த இங்கிலாந்து போன்ற நாட்டிலும், 'சாரல்ஸ் ஃபாக்ஸ்' போன்ற திறமைமிக்க ஒரு அபேட்சகருக்கு ஒரு ஓட்டைப் பெறவேண்டி ராணி ஒருத்தி கசாப்புக் கடைகாரனுல் முத்தம் கொடுக்கப்

படச் சம்மதித்தாள். தனது புகழ் மூலமே அம்மனி தனுல் வாக்கைப் பெற்றிருக்க முடியும். நமது நாட்டிலும்கூட வாக்குப்பதிவின் போக்கை மாற்று வதில் ஏற்பட்ட திரைப்பட நடிகர்களின் பங்கை பற்றி நாம் பாராமுகமாக இருந்துவிட முடியாது.

நமது காலத்தில் ஜனநாயகத்தின் வெற்றிகர மான உதாரணமாக இங்கிலாந்து திகழ்வதை நாம் பார்க்கிருேம். அது அபிவிருத்தியடைந்த நிலேமை களேப் பார்ப்பதும் சிரமமானதாக இருக்காது. முதலில் முக்கியமானது கல்வியறிவு. ஆங்கில ஜனநாயகம் மெதுவாகவே தான் வளர்ச்சி யடைந்தது. அது வளர்ச்சியடைவதற்குப் பல நூற்ருண்டுகள் பிடித்தன. இங்கிலாந்தின் பார்லி மெண்டரி ஜனநாயகம் முன்னூறு ஆண்டுகட்குக் குறைவானது. வாக்கு உரிமையும் கல்வி வளர்ச்சிக் கேற்பவே விரிவடைந்தது. எல்லோருக்கும் கல்வி யறிவு புகட்டுதல் என்ற நிலே ஏற்பட்டு எண்பது ஆண்டுகள்தான் ஆகின்றன. வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற நிலே ஏற்பட்டு சுமார் நாற்பது ஆண்டுகள்தான் ஆயிற்று.

இரண்டாவது உயர்ந்த ஜனநாயகப் பண்பு களேக் காப்பாற்றுவதில் இங்கிலாந்தில் உள்ள பத்திரிகைகள் பெரும்பங்காற்றின. இன்றுகூட இங்கிலாந்துதான் முதலில் நிற்கின்றது. பத்திரிகை விநியோகத்தைப் பொறுத்தமட்டில் அமெரிக்கப் பத்திரிகைகள் வானளாவ உயர்ந்துள்ளன. ‘டைம்ஸ்’ பத்திரிகையானது வாசகர் எண்ணிக்கை யளவில் முன்னணியில் நிற்க என்றுமே ஆசைப் பட்டதில்லே. தான் வெளியிடும் செய்திகளில் துல்லியத்தன்மையைக் கடைப்பிடிப்பதிலும், ஆதாரப் பூர்வமான செய்திகளே வெளியிடுவதிலும்,

மற்றும் நிதானத் தன்மையைக் கடைப்பிடிப் பதிலும், பாரபட்சமற்ற முறையில் செய்திகள் வெளியிடுவதிலும் முன்னணியில் நிற்க விரும்பு கின்றது அப்பத்திரிகை. இயற்கையாகவே இங்கி லாந்தின் படித்த மக்கள் மத்தியில் இதற்கு விரிவானதோர் விநியோகம் இருக்கிறது. முசோலினி 'டைம்ஸ்' பத்திரிகையைப் படிப்பதற் காகவாவது ஆங்கிலம் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுவதாகத் தெரிவித்தார். இது இப் பத்திரிகையின் பெருந்தன்மைக்குக் கொடுக்கப் படும் மதிப்பாகும். அமெரிக்காவின் மிகப் பெரிய ஜனாதிபதியான 'உட்ரோ வில்ஸன்' முதல் உலகயுத் தத்தின் போது தபால் வந்த உடன் டைம்ஸ் பத்திரிகையைத்தான் முந்திக்கொண்டு படிப்பார். இதுவும் அப்பத்திரிகைக்குக் கிடைத்த பாராட் டாகும். ஆங்கிலப் பத்திரிகைகள் தொடர்ச்சியான உயர்ந்த தரம் வாய்ந்த தன்மையையும், சுதந்திரத் தன்மையையும், பயமற்ற தன்மையையும் கடைப் பிடித்து வந்துள்ளன. மாறிக் கொண்டிருக்கும் பொதுஜன அபிப்பிராயத்தின் உண்மையான பிரதி பலிப்பாகத் திகழ்ந்தன அவை.

மூன்றாவதாக, பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதில் உதவி புரிந்ததால், அந்த அபிப் பிராயத்தை வெளியிடக்கூடிய வகையில் பத்திரி கைகள் பொதுஜன அபிப்பிராயத்தின் கருவிகளாக வும் இருந்தன. 'டீலேனே' டைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த காலத்தில் அவருடன் விவாதிக் கப்படாமல் எந்த ஒரு பிரச்சினையும் சர்க்காரால் கொண்டுவரப்பட மாட்டாது. விருந்தின்போதோ, சிற்றுண்டியின்போதோ அவை அவருடன் விவாதிக்கப்பட்டன. இவ்வாறு பொதுஜனப்பிரச் சனைகள் பற்றி பலதரப்பட்ட அபிப்பிராயங்களை

வெளியிடும் நல்ல பத்திரிகை ஒரு விவாத மன்றமாகத் திகழ்கின்றது. நாம் ஒவ்வொருவரும் அவரவருக்குப் பிடித்தமான பத்திரிகை ஒன்று இருக்கலாம். அந்தப் பத்திரிகையில் நம் கொள்கைகள் இடம்பெறுவதையும் அநுமதிக்கிறோம். ஆனால், தன்னுடைய கொள்கைகளையும், அபிப்பிராயங்களையும் ஒரு பத்திரிகை வெளியிடுமானால், அது பாராட்டப்படக்கூடிய ஒன்றுதான். தனக்கே உரிய புத்திக் கூர்மையுடன் நெப்போலியன் "ஆயிரம் துப்பாக்கிகளைவிட விரோதிகளான நான்கு பத்திரிகைகளைக் கண்டு மிகவும் அஞ்சுவதாக"க் கூறினான்.

நான்காவது, ஜனநாகம் வளர்வதற்குச் சகிப்புத் தன்மை தேவை. பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் தன்மையும் ஒரு சமுதாயத்தின் சத்தான வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாகும். உண்மை என்பது ஒரு தனி நபருடையவோ, ஒரு கட்சியினுடையவோ ஏகபோகமன்று. அபிப்பிராயங்களின் மோதுதல்களினின்றுதான் இது பிறக்கின்றது. உலகத்தின் எல்லா பாகங்களினின்றும் அரசியல் அகதிகள் இங்கிலாந்தில் வரவேற்கப்பட்டனர். பிரிட்டிஷ் ஜனநாயகத்திற்கு இது பாராட்டாகும். இந்தச் சகிப்புத்தன்மையின் பிரசித்தமான உதாரணம்தான் 'காரல் மார்க்ஸ்,' அவ்வளவு தூரம் புரட்சித்தன்மை வாய்ந்த புத்தகமான 'மூலதனம்' பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையின் அமைதியான சுவர்களுக்கு மத்தியில் இருந்துதான் எழுதப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்க்கின்ற கிருஷ்ணமேனன் போன்றவர்கள் லண்டன் மாநகரத்தில் உபசரிக்கப்பட்டார்கள். அவர், இந்தியாவுக்குச் சாதகமான மக்கள் கூட்டத்தை உருவாக்கும் வகையில் சொற்பொழிவுகள்

நிகழ்த்தவும், எழுதவும் இதைப் பயன்படுத்தினர். அபிப்பிராயங்களில் சகிப்புத்தன்மை பாசிஸ்ட் ஜெர்மனியிலோ இத்தாலியிலோ, சாத்தியமன்று. பொதுவுடமை நாடுகளிலும் இது சாத்தியமில்லை.

இத்தகைய அளவுக்கதிகமான சகிப்புத்தன்மையிலும் ஆபத்து இருக்கிறது. எண்ணங்களில் குழப்பத்தை ஏற்படுத்தவும், போட்டிக் கட்சிகளிடையே மோதல்கள் ஏற்படவும் வழிவகுக்கும். இந்த ஆபத்துக்கு எதிராக இரண்டு பாதுகாப்புக்கள் இருக்கின்றன. எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும்கூட ஒரு அடிப்படை விசுவாசம் தேவை. ஆங்கிலேயனின் பரிசுத்தமான தேசபக்தியில் எப்போதுமே சுதந்தர பிரிட்டனின் பிம்பத்தைக் காண்கிருன். அரசன் அல்லது அரசி என்ற உருவத்தில் அது காட்சி வடிவமெடுக்கின்றது. அரசன் பிரிட்டீஷ் சரித்திரத்தின் தொடரினையும், எல்லா ஆங்கிலேய மக்களேயும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ருன். பிரிட்டீஷ் பேரரசு என்று அதுஅழைக்கப்பட்டது. இப்போது பிரிட்டீஷ் காமன் வெல்த் என்று அழைக்கப்படுகின்றது. இது வெள்ளை இன மேம்பாட்டுணர்வினை இழந்து, பிரிட்டீஷ் பேரரசின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி, அவர்களின் சுதந்திரத்திற்கு இப்பேரரசினை இணங்கவைத்த தேசபக்தர்களையும் அதில் சேர்த்துக்கொண்டுள்ளது. இது கௌரவமான முறையிலும், சமாதான வழிமுறைகள் வாயிலாகவும் செய்து முடிக்கப்பட்டது. இது ஜனநாயகத்தின் பிரம்மாண்டமான மனப்பூர்வமான வெற்றி என்று கருத இடமுண்டு. ஜனநாயக அமெரிக்காவில் ஜனுதிபதிகளும், பிரதி நிதித்துவ சபைகளும் வரலாம். போகலாம். ஆனுல், அரசியல் சட்டத்தில் புனிதத்தன்மை மட்டும் நிலைத்து நிற்கும். எந்த ஒரு

லட்சியத்திற்காகச் சக்தி வாய்ந்த பிரிட்டிஷ் பேரரசை எதிர்த்து வாஷிங்டன் போராடினரோ, சமாதானத்தின் காவலனாக இருந்தபோதும் ஆபிரகாம் லிங்கன் உள் நாட்டுப்போரை நடத்தினரோ அந்த லட்சியங்கள்பாதுகாக்கப்பட்டுள்ளன. ஜனநாயகமானது விவாதிப்பதற்கு முழுச் சுதந்திரம் கொடுத்திருக்கின்றது. ஆனல், சொற்களால் அல்லாமல் இதர வகையில் போராட்டங்கள் நடத்துவதற்கு அது அனுமதிப்பதில்லை. சுதந்திரமானது கீழ்த்தரமான முறையில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கோ, தாக்கிக்கொள்ளும் அளவுக்குச் சீரழிந்துவிடாமலோ பார்த்துக்கொள்ள வேண்டியது ஜனநாயக நிர்வாகத்தின் கடமையாகும். வாழ்வது, வாழ அனுமதிப்பது என்பது ஜனநாயகப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும்.

இவ்வாறு, ஜனநாயகம் என்பது வெறும் அரசியல் மட்டுமன்று. அதற்கென ஒரு தத்துவமும் உண்டு. அது ஒரு வாழ்க்கை முறையுமாகின்றது. இதற்காக மக்கள் தேவைப்பட்டால் வாழ்ந்து மடியவும் தயாராக இருக்கின்றனர். சுருக்கமாகச் சொன்னல் எல்லா ஜனநாயகமும் சுதந்திரம், சகிப்புத்தன்மை, கொள்கைகளுக்கு விசுவாசம் என்ற மூலமந்திரங்களை உடையனவாய் இருக்கின்றன. ஒரு ஜனநாயகவாதி மனிதவர்க்கத்தில் மனிதனுக உருவாக முற்படுகின்ருன்.

இருந்தபோதிலும் ஜனநாயகம் தத்துவார்த்த ரீதியில் இருக்கலாம். உண்மையில் அது எவ்வாறு செயல்படுகின்றது என்பதைப் பார்ப்பது நல்லது. இவ்வாறு ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய ஜனநாயகங்கள் பிரிட்டன், அமெரிக்கா போன்ற மிகச் சிலதான். நமது ஜனநாயகத்திலும் அக்கரை கொள்

வோம். ரஷ்யா, வேறு விதமான ஜனநாயக அமைப்பை நல்குகிறது. பிரான்ஸ், சுவிட்சர் லாந்து, நார்டிக் நாடுகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டிய இதர ஜனநாயகங்கள். சுவிட்சர்லாந்து தனிப்பட்டதோர் வர்க்கமாக இருக்கிறது. அதன் வாக்கெடுப்பு அமைப்புப்படி சட்டங்கள் மக்களால் நேரடியாகவே இயற்றப்படுகின்றன. இது நவீன அரசுகளில் கிட்டத்தட்ட கிரேக்க ஜனநாயகத்தை ஒத்திருக்கின்றது. அங்கு அது சாத்தியமா கின்றது. ஏனெனில், அதுஒரு சின்னஞ்சிறிய நாடு. எந்தவிதமான காலனியாதிக்க ஏகாதிபத்திய பேராசைகளும் இல்லாமல் சுயதிருப்தி கொண்ட தாக இருக்கிறது. பிரான்ஸ், பிரெஞ்சுப் புரட்சியின் தாயகமாக இருப்பதால் ஒரு ஜனநாயக நாடாகப் பெயர் பெற்றிருக்க முடியும். ஆனல், அங்குள்ள பல் வேறு கட்சி முறைகளின் காரணமாக பிரபலமாகத் தெரியக்கூடிய அளவுக்கு வெற்றி பெறவில்லே. மூன்று கடுமையான தோல்விகளுக்குப் பிறகும் அது நிலேத்து நிற்கின்றது. அந்த நாட்டின் நிலே யான நிர்வாக யந்திரமும், அசாதாரணமான தேச பக்த பெருமை உணர்வும்தான் இதற்குக் காரணம். இன்று நெப்போலியனே உருவாக்கிய அந்த உணர்வு ஜனுதிபதி ‘டிகாலில்’ காணப்படுகின்றது. அவர் அமைதியாக பிரெஞ்சு ஜனநாயகத்தைக் கருணேயுள்ள சர்வாதிகார ஆட்சியாக மாற்றி விட்டார். பிரெஞ்சு ஜனநாயக உணர்விண ‘காமிலி’ யின் வார்த்தைகளில் காணலாம். அவர் வலது சாரித் தன்மையையா அல்லது இடதுசாரித் தன் மையையா விரும்புகிருர் என்று அவரிடம் ஒரு சமயம் கேள்வி கேட்கப்பட்டது.

அவர்கள் பிரெஞ்சுக்காரர்களாக இருக்கும் வரையில் “இந்த இரண்டு தன்மைகளே மட்டு

மல்லாது, நடுநிலைமைத் தன்மையையும்” விரும்புவதாகக் கூறினர்.

நலம் பேணும் சேமநல அரசின் உதாரணமாக நார்வே, ஸ்வீடன் டென்மார்க் போன்ற ஸ்காண்டி நேவியன் பிரதேச அரசுகள் சாதாரணமாகக் குறிப் பிடப்படுகின்றன. அவை சிறியனவாகவும், அடக்க மானவையுமாக இருக்கின்றன. எப்போதுமே தங்க ளுடைய நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்குப் பலம் வாய்ந்தவையாக இருந்தபோதிலும் அவற்றிற்கு யுத்தப் பேராசை கிடையாது. இங்கிலாந்தைப் போன்றே அவை அனைத்தும் முடியாட்சிகள்தான். இருந்தாலும் பலம் வாய்ந்த பார்லிமெண்டுகள் உள்ளன. ‘ஆல்ஃப்ரட் ஸானுர்ட் நோபல்’ போன்ற கோடீஸ்வரர்களும் அங்கு உண்டு. யுத்த யந்திரங்களை அழிப்பதன் மூலம் பணம் சம்பாதித்தார். ஆனுல், தனது செல்வ மனைத்தும் நோபல் பரிசு நிறுவனத்திற்கு வழங்கி விட்டார். பௌதீகம், ரசாயனம், உடற்கூறு விஞ் ஞானம், அல்லது மருத்துவம், இலக்கியம் சம் பந்தப்பட்டவைகளுக்கு மட்டுமல்லாது, ஒவ்வொரு ஆண்டும் உலக சமாதானத்திற்காகச் செய்கின்ற மகத்தான சேவை போன்றவற்றிற்கும் பரிசுகள் வழங்குவதற்காக அந்த நிதி கொடுக்கப் பட்டுள்ளது. இந்தப் பரிசுகள் உண்மையில் சர்வ தேசத் தன்மை வாய்ந்தவை. ஏனெனில் இந்தியா விலும், ஜப்பானிலும், ரஷ்யாவிலும் கூட நோபல் பரிசு பெற்றவர்கள் இருக்கிறுர்கள். இவர்கள் எண்ணிக்கை பிரிட்டனிலும், அமெரிக்காவிலும், ஜெர்மனியிலும் நோபல் பரிசு பெற்றவர்களின் எண்ணிக்கையைவிடக் குறைவானதே.

நடைமுறையில் ஜனநாயகத்தைப் பயிலுகை யில் பிளேட்டோவின் உதாரணத்தைப் பின்பற்று

வதே நல்லது. அவர் தனிமனிதனிடம் உள்ள நீதி யின் அடிப்படைகள் போன்ற தார்மீக உயர் குணங்கள் பற்றி ஆராய விரும்பினர். ராஜ்யம் என்ற விரிவான வட்டத்தில் அதை ஆராய்ச்சி செய்ய விரும்பினர். எனவே, இந்தச் சிறிய சொற் பொழிவில் பார்லிமெண்டரி ஜனநாயகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா போன்ற ஜனநாயகங்கள் மீதும், பொதுவுடமை ஜனநாயகத்தைப் பிரதி நிதித்துவப் படுத்துகின்ற ரஷ்யாவின் மீதும் நமது கவனத்தை ஈடுபடுத்துவதானது பயனுள்ளதாக இருக்கும்.

## 2. நடைமுறையில் குடியாட்சி : பிரிட்டன், அமெரிக்கா

வெளிப்படையாகச் சில குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், சித்தாந்த ரீதியில் உருவாக்கப்படக்கூடிய சிறந்த அரசியல் அமைப்பு ஜனநாயகம் மட்டும்தான் என்பதை மறுக்க முடியாது. நடைமுறையில் இது எவ்வாறு செயல்படுகின்றது என்று பார்ப்போம். மேற்கத்திய பார்லிமெண்டரி ஜனநாயக அமைப்புக்களின் மாதிரிகளாகப் பிரிட்டனும் அமெரிக்காவும் திகழ்கின்றன. இந்தியாவையும் கணக்கில் எடுத்துக் கொள்ளுவோம். உலகத்தில் உள்ள மிகப்பெரிய ஜனநாயகங்களில் ஒன்ருகவும், ஜப்பான் நீங்கலாக ஆசியாவில் உள்ள ஒரே ஒரு ஜனநாயகமாகவும் அது திகழ்கின்றது. வெற்றிகரமான ஒரு ஜனநாயகம் தவிர்க்க வேண்டிய குறைபாடுகளேப் புரிந்து கொள்வதற்குப் பொதுவான சிலபார்வைகள் உதவிகரமாக இருக்கும். உன்னதமான நிலேயிலும்கூட, ஜனநாயகம் பெரும்பான்மையோரின் ஆட்சியாகத்தான் திகழ முடியும். ஜனநாயகத்தின் லட்சிய

வீரரான 'ஜான் ஸ்டுவர்ட்மில்' கூட பெரும்பான்மை யோரின் ஆபத்துக்களைப் பற்றிக் கூருது கண்ணை மூடிக்கொண்டிருக்கவில்லை. இத்தகைய கொடுங் கோன்மையானது ஒரு அரசனுடையவோ, ஒரு சில அதிகாரிகளுடையவோ கொடுங்கோன்மையை விடக் கொடியதாக இருக்கும். பக்குவமடையாத ஜனநாயகங்கள், பெரும்பான்மையை நிலையான பெரும்பான்மை என்று கூற வாய்ப்பிருக்கிறது. அவை மதம் சம்மந்தப்பட்டவையாகவோ, இனம் சம்மந்தப்பட்டவையாகவோ இருக்கலாம். அப்படிப் பட்ட நிலையான பெருமபான்மை என்பது உண்மையில் ஜனநாயகத்தை மறுதளிப்பவை யாகும். ஏனெனில், சமூகத்தின் ஒரு சாரார் மட்டும் ஆதிக்க அனுகூலங்களைப் பெறும் நிலையைத்தான் உருவாக்கும். அவர்கள் பெரும்பான்மை என்ற போர்வையில் இந்த நிலையை நிலைநாட்டுகின்றனர். உண்மையான ஜனநாயகமோ இப்படிப்பட்ட ஒரு சாராரின் ஆதிக்கத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க முயலும். ஒரு உண்மையான ஜனநாய கத்தில் பெரும்பான்மைக் கட்சியானது ஒரு சில குறிப்பிட்ட நோக்கங்களையும், கொள்கைகளையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. இவை, காலத்தின் தேவைக்கேற்ப மாற்றமடையக் கூடி யவை. வேறு வகையில் சொல்லப்போனுல், அப் படிப்பட்ட பெரும்பான்மையானது மாறும் தன்மை வாய்ந்தது. ஒரு மனிதன் இன்று ஒரு கட்சியில் இருப்பதற்கும், நாளை கட்சி மாறிக் கொள்வதற்கும் அதில் வாய்ப்புண்டு. ஜனநாயகத்தில் ஒரு கட்சி யானது வெற்றிகரமாகச் செயலாற்ற வேண்டு மெனில் சில நிலையான தன்மைகள் தேவை. இந்த நிலையான தன்மை என்னவெனில் கட்சி உறுப் பினர்கள் விசுவாசம் உடையவர்களாக இருக்க

வேண்டும் என்பதையே குறிப்பிடுகின்றது. ஆனால், இந்த விசுவாசத்திற்கும் ஒரு எல்லையுண்டு. இது தேசத்திற்கும் அப்பாற்பட்ட ஒன்றாக இருக்கக்கூடாது. சுருக்கமாகச் சொன்னால், வெற்றிகர மானதோர் ஜனநாயகம், மாறும் தன்மை வாய்ந்த ஜனநாயகம் என்ற அடிப்படையில்தான் வெற்றிகர மாகச் செயலாற்ற முடியும். பிரிட்டிஷ் அமெரிக்க ஜனநாயகங்கள் செயலாற்றும் முறைகளில் இது தெள்ளத் தெளிவாகப் புலப்படுகின்றது.

## பிரிட்டன்

குழப்பங்களுக்கிடையே முன்னேறுவது என்பதுதான் பிரிட்டீஷ் மக்களிடையே பரம்பரை யாக இருந்து வந்திருக்கின்றது. முறைப்படுத்து வதில் அவர்கள் தயக்கம் காட்டுகின்றனர். பிரபல கேம்பிரிட்ஜ் தத்துவப் பேராசிரியர் 'ஹென்றி சிட்ஜ்விக்' இதற்கோர் உதாரணமாகத் திகழ் கின்றார். ஜெர்மனியர் எல்லோருமே எண்ணங்களை ஒரே முறையாக உருவாக்குவதில் தீவிரமுள்ளவர் களாக இருக்கின்றனர். 'சிட்ஜ்விக்' தத்துவம் பற்றி ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை தயாரித்துக் கொண் டிருந்தான் ஒரு ஜெர்மன் மாணவன். இயற்கையாக அதை ஒரு முறையுடனேயே வெளியிடவேண்டும் என்று விரும்பினான். ஆனால், ஒரு முறையை அவனால் உருவாக்க முடியவில்லை. எனவே, அந்தத் தத்துவத்தை உருவாக்கியவரிடமே தெரிந்து கொள்ளலாம் என்று தீர்மானித்து அவருடைய உலக நோக்குத்தான் என்னவென்று சிட்ஜ்விக் குக்கு எழுதினான். அதற்குக் கல்வியிற் சிறந்த அந்தப் பேராசிரியர் "எனக்கு அது பற்றி யாதொரு அபிப்பிராயமும் கிடையாது" என்று ஒரு அஞ்சல் அட்டையில் பதில் அனுப்பினார். ஒழுங்கு முறை

யற்ற பிரிட்டிஷ் தத்துவஞானம், அடிப்படையில் சாஸ்திரீயமற்ற அனுபவப்பூர்வமானதாகவே இருக்கின்றது. பிரிட்டிஷ் அரசியலைப் பற்றியும் இவ்வாறே கொள்ளலாம். பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தைக்கூட இது அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. ஏதோ அது வளர்ந்துவிட்டது. அது அந்நியனைக் குழப்பத்திலாழ்த்தக் கூடிய ஒழுங்கற்ற தன்மை நிறைந்ததாகவே இருக்கிறது. ஆனால், பிரிட்டிஷ் மக்கள் உள்ளூற பகுத்தறிவு உள்ளவர்களாகத் திகழ்கின்றனர். ஆச்சரியகரமான கடமையுணர்ச்சியும், சமரச விருப்பமும் உடையவர்களாக இருக்கின்றனர். திட்டவட்டமாகச் சொல்லப்போனால், குழப்பங்களுக்கிடையிலேயே அவர்களால் வெற்றிகரமாக முன்னேற முடியும். அவர்கள் சிறு சண்டைகளில் தோல்வி அடைகின்றனர். பெரும் யுத்தங்களிலோ வெற்றியடைகின்றனர். ஒரு சில சட்டங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, ஆனால் பெரிதும் பழக்க வழக்கங்கள் மூலமே பிரிட்டிஷ் அரசியல் சட்டம் உருவாக்கப்படடுள்ளது. இதை உருவாக்குவதில் பிரிட்டிஷ் பண்புகள் எந்த அளவுக்குப் பங்காற்றின என்பதற்குப் பிரிட்டனின் அரசியல் சட்டம் சிறந்ததோர் உதாரணமாகும்.

பிரிட்டிஷ் அரசியல் முறை மூன்று அமைப்புகளைச் சார்ந்திருக்கிறது. மணிமுடி, பார்லிமெண்ட், நீதிமன்றம் ஆகியவை. புராதன ரோமானியர்களைப் போன்றே பிரிட்டிஷ்காரர்களும் அடிப்படையில் மாறுதல்களை விரும்பாதவர்கள். சரித்திரத்தின் தொடர்ச்சிதான் இது என்ற உணர்வில் புரட்சிகரமான சீர்திருத்தங்களைக்கூட அவர்களால் நிறைவேற்றிவிட முடியும். அரசன் அதிகாரத்தை

இழந்துவிட்டான். ஆனால், கௌரவத்தை மட்டும் இழக்கவில்லை. பிரபுக்கள் சபையானது அதிகாரத்தையும், மதிப்பையும் இழந்து பழைய பிரிட்டிஷ் பிரபுத்துவத்தின் நினைவுச் சின்னமாக மட்டும் திகழ்கின்றது. பழைய பிரபுத்துவக் குடும்பங்களின் வாரிசுகள் தங்களுடைய தனிப்பட்ட தகுதிகள் காரணமாக பிரிட்டிஷ் அரசியலில் பணிபுரிவதைத் தவிற வேறு எதுவும் கிடையாது. 'வின்ஸெண்ட் சர்ச்சில்' ஒரு பிரபுவாக இருக்க மறுத்தார். ஒரு சாதாரண குடிமகனாகவே இருக்க விரும்பினார். பிரிட்டிஷ் சரித்திரத்தில் இப்படிப்பட்டதோர் ஆங்கிலேயனின் உன்னத உதாரணமாகத் திகழ்கிறார் அவர். பிரிட்டிஷ் அரசியலின் கேந்திரமாக காமன்ஸ் சபை பரிணமித்து விட்டது. 'ஜான்' அரசனை மாக்னா கார்ட்டா உரிமை சாசனத்தில் கையெழுத்திட நிற்பந்தப் படுத்துவதிலும், 'டியூட்டர்' அரசர்கள் காலத்தில் வளர்ந்து வந்த எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடுவதிலும், கடைசியாக 'ஸ்டுவர்ட்' அரச வம்சத்தினரை அவமானப்படுத்தி அரசனின் அதிகாரத்துக்கு வரம்பு கட்டுவதிலும் 'பேரன்ஸ்' என்ற பிரபுக்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். இவர்களும், வளர்ந்து வரும் பிரிட்டிஷ் மக்களின் சக்திக்கு முன்னால் காலக்கிரமத்தில் பணியவேண்டியதாயிற்று. இதனால், பிரபுக்கள் சபை வெறும் சேர்க்கையாக மட்டும் ஆயிற்று. அரசன் உண்மையான அதிகாரம் எதுவும் இல்லாமல் இணைப்புச் சக்தியாக மட்டும் மாற வேண்டியதாயிற்று. காமன்ஸ் சபை மட்டும் எல்லாவற்றிற்கும் மேலானதோர் அவையாகப் பரிணமித்தது. எனவே, வரையறைக்குட்பட்ட ஜனநாயகம் என்ற முடிவுக்கு நாம் வருகிறோம். காமன்ஸ் சபை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை

தான் தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பிரதிநிதி என்ற முறையில்தான் தேர்வு நடைபெறுகின்றது. ஜனத்தொகைக்கேற்ப பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் மாறுபடுகின்றது. இப்போது பிரதிநிதிகளின் எண்ணிக்கை 630. பிரிட்டிஷ் அரசியலில் பொதுவாக இரண்டு கட்சிகள் ஆதிக்கம் வகிக்கின்றன. 18ம் நூற்றாண்டில் 'விக்ஸ் கட்சியும் (முற்போக்குக் கட்சி) டோரிக் கட்சியும் (மாறுதல் வேண்டாக் கட்சி) ஆதிக்கம் வகித்தன. 19ம் நூற்றாண்டில் அவை லிபரல் கட்சி என்றும், கன்ஸர்வேட்டிவ் கட்சி என்றும் பொதுவாக அமைக்கப்பட்டன. அயர்லாந்து சுயாட்சிக் கட்சி சில காலம் தலையெடுத்தது. அயர்லாந்து சுதந்திரம் அடைந்ததும் அது மறைந்துவிட்டது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் தொழிற்கட்சி தோன்றியது. 20ம் நூற்றாண்டில் இது லிபரல் கட்சியின் இடத்தைப் பிடித்துக்கொண்டது. லிபரல் கட்சி இன்றும் இருந்தபோதிலும் அதன் உறுப்பினர் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது. தொழிற்கட்சி அரசு இன்று இருப்பதுபோல், ஆளும் கட்சிக்குக் குறைவான பெரும்பான்மை இருக்கும்போது மட்டும் அதற்கு மதிப்பேற்படுகின்றது. தேர்தலில் கிடைக்கும் வாக்குகளின் எண்ணிக்கையை மேலெழுந்த வாரியான அரசியல் அபிப்பிராயத்தின் குறிப்பு என்று மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். நியாயமாகப் பார்க்கப் போனால், தேர்தல்கள் எவ்வளவு தூரம் நம்பத்தகாதவையாக இருக்கின்றன என்பதைக் காட்டுவதற்கு ஓரிரு உதாரணங்கள் போதும். 1900-ல் நடைபெற்ற தேர்தலில் 'யூனியனிஸ்ட்'கள், 402 இடங்கள் வெற்றி பெற்றார்கள். 'ஹோம்ரூல்' கட்சியினர் 268 இடங்கள்

வெற்றிபெற்றனர். ஆனால், வாக்குப்பதிவின் விகிதாச்சாரப்படிப் பார்த்தால் 'யூனியனிஸ்ட்' களுக்கு 343 இடங்கள் மட்டுமே கிடைத்திருக்க வேண்டும். 'ஹோம்ரூல்' கட்சியினருக்கு 327 இடங்கள் கிடைத்திருக்கவேண்டும். எனவே வாக்கு விகிதாச்சாரப்படிப் பார்த்தால் அதிகப்படியாகக் கிடைத்த 134 இடங்களுக்குப் பதில் 16 இடங்கள் மட்டுமே கிடைத்திருக்கவேண்டும். அதேபோல் 1906 ஆண்டைய பொதுத்தேர்தலில் 'மினிஸ்டிரிய லிஸ்ட்' கட்சி 513 இடங்களில் வெற்றிபெற்றது. யூனியனிஸ்ட் கட்சி 157 இடங்களில் வெற்றி பெற்றது. வாக்காளர்களின் விகிதாச்சாரப்படிப் பார்த்தால் 'மினிஸ்டிரியலிஸ்ட்' கட்சிக்கு 387 இடங்கள்தான் கிடைத்திருக்க வேண்டும். 'யூனியனிஸ்ட்' கட்சிக்கு 283 இடங்கள் கிடைத் திருக்க வேண்டும். இவ்வாறு 356 ஸ்தானங்கள் பெரும்பான்மையாக இருந்தன. ஆனால், வாக்கு விகிதாச்சாரப்படிப் பார்த்தால் அவர்களுடைய பெரும்பான்மை 104 ஸ்தானங்களாகத்தான் இருக்கவேண்டும். இதற்கு முன்னால் 1886-ல் நடைபெற்ற தேர்தலில் 'கன்சர்வேட்டிவ்' கட்சி யினருக்கு 'காமன்ஸ்' சபையில் 104 இடங்கள் பெரும்பான்மையாக இருந்தன. ஆனால், ஒட்டு மொத்தமாக லிபரல் கட்சியினருக்கு நாடு முழு வதும் உள்ள வாக்குப்பதிவில் 54,817 வாக்குகள் அதிகமாகக் கிடைத்திருந்தன. 1964-ல் நடை பெற்ற கடந்த தேர்தலில் 'லிபரல்' கட்சிக்குச் சாதகமாக 40 லட்சம் வாக்குகள் பதிவு செய்யப் பட்டிருந்தன. ஆனால், அவர்கள் ஒன்பது இடங் களில்தான வெற்றி பெற முடிந்தது. பதிவான வாக்குகளில், அவர்கள் சார்பில் பதிவு செய்யப் பட்ட வாக்குகள் 11.2 சதவீதமாகும். இந்த அடிப்

படையில் பார்த்தால் லிபரல் கட்சியினர் காமன்ஸ் சபையில் 70 இடங்களைப் பெற்றிருக்க வேண்டும். தேர்தல்கள் அரசியல் அபிப்பிராயத்தின் குத்து மதிப்பே என்பதைக் காட்ட இந்த உதாரணங்கள் போதும். இந்தக் குறைபாட்டைப் போக்க விகிதாச் சார பிரதிநிதித்துவ முறை சிபார்சு செய்யப் பட்டுள்ளது. ஆனால், ஆட்சி செய்யப்போகும் அரசாங்கத்திற்கு இருக்கும் பெரும்பான்மை மிகக் குறைவானதாகவே இருக்கும். இதனால், அரசாங் கத்தின் நிலையான தன்மை பாதிக்கப்பட்டுவிடும். ஆகவேதான், 'சர்வின்ஸெண்ட் சர்ச்சில்' போன்ற சட்டமன்ற வல்லுநர்கள் இந்த முறைக்கு எதிரா கவே இருந்து வந்திருக்கின்றனர். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய போலித்தனமான மேலெழுந்த வாரியான பெரும்பான்மையை வைத்துக் கொண்டே குழப்பங்களுக் கிடையில் முன்னேற விரும்புகின்றனர்.

காமன்ஸ் சபையானது பல வழிகளில் தனது மேலாண்மையை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. 1911ம் ஆண்டின் பார்லிமெண்ட் சட்டப்படி நிதியின் மேல் உள்ள மேலாண்மையை ஏகபோக மாக்கிக் கொண்டது. எனவே, நிதி மசோதாக்கள் காமன்ஸ் சபையில்தான் முதலில் தாக்கல் செய்யப் படவேண்டும். காமன்ஸ் சபையில் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களில் அது நிறைவேற்றப்பட்டு விட்டால் பிரபுக்கள் சபை அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். காமன்ஸ் சபையில் நிறைவேற்றப் பட்ட ஒவ்வொரு மசோதாவும் பிரபுக்கள் சபைக்குச் செல்கின்றது. பிரபுக்கள் தன் முன்னால் வைக்கப் படும் மசோதாக்களை நிறைவேற்றி விடலாம்; தள்ளிவிடலாம்; அல்லது திருத்தவும் செய்யலாம். பிரபுக்கள் சபையில் உள்ள பிரபுக்களின் எண்

ணிக்கை மாறுதலுக்கு உட்பட்டது. ஏனெனில் அரசாங்கம் தன் இஷ்டப்படி பிரபுக்களை ஏற்படுத்தலாம். எந்த மசோதாவையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான அதிகப்படியான அங்கத்தினர்களை அரசு உண்டாக்கலாம். இந்தப் பயமுறுத்தல் காரணமாக அரசாங்கம் பிரபுக்களிடையே ஒரு பிடிப்பு வைத்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் லிபரல் கட்சி அரசாங்கம் இத்தகைய பயமுறுத்தலைக் காட்டியது. பகுத்தறிவு மிக்க பிரபுக்களும் அதற்குப் பணிந்து தங்கள் உடன் பிறப்பான கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டார்கள். பல பகுதிகளில் பிரபுக்கள் சபை வெறும் அலங்கார அமைப்பாகக் கருதப்பட்டு வந்துள்ளது. ஆனால், இங்கிலாந்தில் சரித்திரப் பூர்வமான கௌரவம் அதற்குண்டு. சனாதனப் போக்குக் கொண்ட இங்கிலாந்தில் இது கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுகின்றது. பரம்பரை உரிமையாகப் பெற்ற சாமர்த்தியமும் அதற்குண்டு. இன்று, அநேக பிரபுக்கள் வியாபார ரீதியிலும், தொழில் துறையிலும் அளவிலா செல்வாக்குப் பெற்றுள்ளனர். சமீப காலத்தில் 'வாழ்நாள்' பிரபுக்கள் முறை உருவாக்கப் பட்டுள்ளது. பெண்களுக்கும் இது வழங்கப் பட்டுள்ளது. ஆகவே, பிரபுக்கள் சபை தன் சக்தியை உணரச் செய்யும் அளவுக்கான சாத்தியக்கூறுகள் உடையதாக உள்ளது. 'கன்சர் வேட்டிவ்' கட்சியின் கோட்டையாக இருந்தபோதும், லிபரல் கட்சி அல்லது தொழிற்கட்சி அரசாங்கத்தில்கூட, தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ளக்கூடிய ஞானம் அதற்குண்டு. இதனால்தான், தொடர்ந்து நிலைத்து நிற்கும் நிலையை உறுதிப் படுத்தியுள்ளது. குறிப்பிட்ட ஒரு வரம்பிற்குட்பட்டு உபயோககரமான

பங்கையும் ஆற்றுகின்றது. ஏனெனில், அரசப் பிரதிநிதிகளாகவும், கவர்னர் ஜெனரல்களாகவும், பெரும் வியாபார நிறுவனங்களின் தலைவர்களாகவும் இருக்கும், அந்த அங்கத்தினர்களின் அனுபவங்கள் நிச்சயம் ஒரு மதிப்பை ஏற்படுத்தக் கூடியவை. அயர்லாந்து சுயாட்சி இயக்க காலத்தில் விக்டோரியா மகாராணி மக்கள் சபை கலைக்கப்படுவதை பலவந்தப்படுத்தினர். வாக்காளர்களும், ராணிக்கும் பிரபுக்கள் சபைக்கும் சாதகமாகத் தீர்ப்பளித்தனர். இது தனித்த ஒரு சம்பவம் மட்டும்தான். இதுவும் போன நூற்றாண்டில் வெகு காலத்திற்கு முன்னால் நடந்த சம்பவமாகும். அதுவும், பிரிட்டீஷ் அரசியல் சட்டத்தின் வளைந்து கொடுக்கும் தன்மையைத்தான் காட்டுகின்றது.

சித்தாந்த ரீதியில் காமன்ஸ் சபை சர்வாதிகாரம் கொண்டதாக இருந்த போதிலும், உண்மையில் அதிகாரம் அமைச்சரவையின் கையில்தான் இருக்கிறது. இது காமன்ஸ் சபையில் பெரும்பான்மையோரைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. விக்டோரியா மகாராணி காலத்தில் காமன்ஸ் சபை அதன் ஆதிக்கத்திலும், புகழிலும் உச்ச நிலையை அடைந்திருந்தது. கிளாஸ்டனுக்கும் டிஸ்ரேலிக்கும் இடையே நடைபெற்ற தீவிர விவாதங்கள் காமன்ஸ் சபைக்கே ஒரு கவர்ச்சித் தன்மையைத் தந்தன. ஆனால், கட்சி முறை சக்தி வாய்ந்ததானதும், கட்சி 'விப்புகள்' தங்கள் உத்தரவுகளை அதிகாரப் பூர்வமாகக் கட்டளைகளாகப் பிறப்பித்தனர். அந்த நாள் முதல் காமன்ஸ் சபையின் சாதாரண அங்கத்தினர்கள் தங்கள் முக்கியத்துவத்தை இழந்துவிட்டனர். கட்சித் தலைவர்களின் கைப் பொம்மைகளாகி விட்டனர். சமீப ஆண்டுகளில் புதியதோர் வழக்கம் நிலைத்துவிட்டது. இது பிரபுக்கள் சபை அங்கத்

தினர் பிரதமர் பதவி வகிப்பதினின்றும் தடை செய்கின்றது. பிரிட்டீஷ் அரசியலில் பெரிதும் விரும்பக் கூடியதோர் பதவியாகும். அது 'கர்ஸான்' பிரபு போன்ற மிக்க அறிவு படைத்த விவேகிகளைக் கூட அப்பதவிக்கு வரவொட்டாமல் தடுத்து விட்டது இந்தப் பழக்கம். அவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலிருந்த காலத்தில் "மகோன்னதமான மனிதர்" என்ற கவிதை மூலம் போற்றப் பட்டார். அப்பேர்பட்ட மனிதனைக்கூட கண்ணீர் வடிக்கச் செய்து விட்டது இந்தப் பழக்கம். சமீப காலத்தில் இங்கிலாந்தின் பிரதமராவதற்குவேண்டி 'ஹோம் பிரபு' தனது பிரபுத்துவத்தை உதறிவிட முடிவு செய்தார்.

இங்கிலாந்தின் நீதிமன்றம் புகழ் பெற்ற நீண்ட வரலாற்றை உடையது. நேர்மையும், அறிவாற்றலும் மிக்க பாரம்பரியத்தை உடையது. மகாத்மா காந்தி போன்றவர்கள் அதனை வியந்து பாராட்டியுள்ளனர். இந்தியாவிற்குப் பிரிட்டீஷ் காரர்கள் அளித்த விலையுயர்ந்த சன்மானம் என்று அதனை விவரித்தார். இவ்வாறு புகழ்ந்தபோது அவரது பாரிஸ்டர் உள்ளம் வெளிப்பட்டது. இங்கிலாந்தின் நீதிமன்றம் ஆங்கிலேய மக்களின் சுதந்திரங்களைப் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகித்துள்ளது. அரசர்களின் எதேச்சாதிகாரத்திற் கெதிரானதோர் தடையாக நின்றது போலவே, அரசாங்கத்தின் எதேச்சாதிகாரத்திற்கும் தடையாகச் செயல்பட்டது. இருந்தாலும், அமெரிக்க அரசியல் சட்டத்திலும். இந்திய அரசியல் சட்டத்திலும் இருப்பதுபோல பிரிட்டீஷ் அரசியல் சட்டத்தில் அவ்வளவு உன்னத ஸ்தானம் கொடுக்கப் படவில்லை. பார்லிமெண்ட் தான் உயர்மட்ட சட்ட சபையாக இருக்கிறது. ஆனல், ஆக்க முறையில்

எந்தச் சட்டமும் பூரணத்துவம் வாய்ந்ததாக இருக்க முடியாது. அதை வியாக்கியானம் செய்வதற்கு எப்போதும் இடமிருக்கிறது. இவ்வாறு விரிவாக விளக்கம் செய்வதில் பிரிட்டீஷ் நீதி மன்றம் பெரும் பங்காற்றியுள்ளது. அதன் நடை முறையிலிருந்து பிரிட்டீஷ் நீதிமன்றங்களின் தீர்ப்புச் சட்டங்கள் (Case law) தோன்றியுள்ளன. உயர் நீதிமன்றத்திலிருந்து ஒரு நீதிபதியை விலக்கி விடுவதற்குச் சட்டம் இடம் கொடுக்கின்றது. சுமார் மூன்று நூற்றுண்டுகளுக்கு முன்பு நடை பெற்ற இச்சட்டம் பிரயோகிக்கப் படுவதற்கான சந்தர்ப்பமே ஏற்படவில்லை. இது பிரிட்டீஷ் நீதிபதிகளின் பெருங்குணத்திற்கு ஒரு பாராட்டாகும்.

பிரிட்டீஷ் அரசியல் சட்டத்தில் முக்கியத்துவமில்லாத அங்கம் அரசன் தான். 'டியூடர்' அரசர்கள் அனுபவித்த அதிகாரத்தோடும், 'ஸ்டுவர்ட்' வம்ச அரசர்கள் அனுபவிக்க ஆசை கொண்ட அதிகாரங்களோடும் ஒப்பிட்டுப் பார்த்தால், இன்றைய அரசர் அதிகாரமே அற்றவர். இரு சட்டமன்றங்களிலும், நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு மசோதாவும் அரசருடைய கையொப்பமில்லாமல் சட்டமாக முடியாது என்ற காரணத்தினுல், தத்துவார்த்த ரீதியாக, அரசர் காமன்ஸ் சபை, பிரபுக்கள் சபை ஆகியவற்ருேடு சம அந்தஸ்து கொண்டவருகக் கருதப்படுகின்ருர். கடற்படை, தரைப்படை, விமானப்படை, ஆகியவற்றிற்கு அரசர் தலைமை தாங்குகிருர். அவை, அரசரின் கடற்படை, அரசரின் தரைப்படை, அரசரின் விமானப்படை என்று வழங்கப்படுகின்றன. காமன்ஸ் சபையில் பெரும்பாலோரின் ஆதரவோடுகூடிய அரசரின் அரசாங்கம்தான் ஆட்சி புரிகின்றது. எதிர்க் கட்சிகூட அரசரின் எதிர்க்

கட்சி என்றுதான் அழைக்கப்படுகின்றது. அமைச்சரவையில் இருக்கும் பிரதம மந்திரிக்கும், அவரது சகாக்களுக்கும் கொடுக்கப்படும் சம்பளத்தைப் போன்றே எதிர்க் கட்சித் தலைவருக்கும் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. ஆங்கிலேயர்களின் புரட்சிக்குப்பின் எந்த ஒரு அரசரும் நிறைவேற்றப் பட்ட சட்டங்களை எதிர்ப்பதில்லை. இது ஒரு சம்பிரதாயமாகவே இருந்துவந்திருக்கிறது. பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்ட எல்லாச் சட்டங்களையும் மன்னர் ஏற்றுக்கொள்கிறார். தன் பேரால் மந்திரிசபை ஆட்சி புரிவதற்குச் சம்மதிக்கிறார். பூரணத்துவம் வாய்ந்த முடியாட்சி குறைந்த பட்ச முடியாட்சியாவதற்குச் சரித்திரமும், சூழ்நிலைகளும் சாதகமாக இருந்தன.

ஆங்கிலப் புரட்சிக்குப் பின்னரும்கூட மன்னருக்குப் போதுமான அளவுக்கு அதிகாரங்கள் இருந்தன. மந்திரிசபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கலாம். இவ்வாறு தனது முடிவுகளையும் ஏற்றுக்கொள்ளச் செய்திருக்கலாம். ஆனால், முதலாம் ஜார்ஜ் மன்னர் அந்நியராக சிம்மாசனத்தில் ஏறினார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது. அவர் தன் செல்வாக்கை உணர்த்தும் வகையில் இல்லை. தவிர்க்க முடியாதபடி பிரதம மந்திரியின் கைகளில் அதிகாரம் நழுவிப் போயிற்று "சர் ராபர்ட் வால்போல்" தனக்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை எல்லாவிதத்திலும் பயன்படுத்திக்கொண்டார். அது முதல், பிரதமர் இங்கிலாந்தில் மிக முக்கியமான அரசியல் பிரமுகரானார். ஆனால், கௌரவத்தின் பிரமை அரசர் என்ற நபரைச் சுற்றித்தான் இன்னும் சுழல்கின்றது. ஆரம்பகால 'ஜார்ஜ்' மன்னர்கள் குறிப்பாக வசீகரத்தன்மை கொண்டவர்களாக இருக்கவில்லை. சொல்லப்

போனால், அவர்கள் செல்வாக்கற்றவர்களாக இருந்ததற்குப் போதிய காரணங்கள் இருந்தன. விக்டோரியா மகா ராணியின் புகழும், கௌரவமும் மிக்க நீண்ட ஆட்சி மக்களின் உள்ளங்களின் அரச சின்னத்தை நிலைநிறுத்தப் பெரிதும் உதவிற்று. அவர் பரிசுத்தக் கொள்கைகளை உடையவராக இருந்தபோதும், பொதுமக்களிடத்தில் பெரிதும் செல்வாக்குப் பெற்றிருந்தார். பெண்ணாக இருந்த தால் நிறையக் குழந்தைகளையும் பெற்றெடுத்தார். அன்னாரது பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும் ஐரோப்பாவில் உள்ள ஒவ்வொரு அரச குடும்பத்தி லும் மணம் செய்விக்கப்பட்டனர். இதனால் ஐரோப் பாவில் உள்ள இதர அரசாங்கங்களிடையே தனிப் பட்ட முறையில் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டன. ஆங்கில அரசர்கள் பொதுவாக யாதொரு அதிகாரமும் இல்லாதவர்கள் என்று கருதப்பட்டது. முக்கியமாக இந்தியாவில் இந்த எண்ணம் நிலவியது. தத்துவார்த்த ரீதியில் இது உண்மையாக இருக்கலாம். விவகாரங்களைத் தெரிந்துகொள்ளவும், கலந்தாலோசிக்கப்படவும், எச்சரிக்கவுமான உரிமைதான் அரசிக்கு உண்டு. இவ்வாறு பிரிட்டீஷ் அரசியலில் ஆழ்ந்த ஞானம் உள்ள 'போஜ்ஹட்' குறிப்பிட்டார். மேலும், பிரதம மந்திரிகள் வரலாம், போகலாம். ஆனால், அரசரு டையவோ, அரசியினுடையவோ தனி மகத்துவம் நிலைத்து நிற்கும் ஒரு அம்சமாகும். நீண்ட அனுப வமும், புத்திக் கூர்மையும், உடைய விக்டோரியா மகாராணியார் தனது முக்கியத்வத்தை நன்கு உணர்ந்தவராவார். இப்படிப்பட்ட ஒரு அரசி தனது முக்கியத்துவத்தை உணரச் செய்யாமல் இருந் திருக்க முடியாது. குறிப்பாக, பண்பட்ட, வினயம் மிகுந்த 'டிஸ்ரேலி' போன்ற பிரதமர்கள் இருந்த

காலத்தில் அன்னாரது காலத்தில், பிரிட்டிஷ் பேரரசு அதன் புகழின் உச்ச நிலையை அடைந்திருந்தது. விக்டோரியா மகாராணியை இந்தியாவின் பேரரசியாக முடிசூட்டியதன் மூலம் அன்னாரின் பெருமையை அவர் மேலும் உயர்த்தினார்.

'ஏழாவது எட்வர்ட்' பாரீஸ் நகர வாழ்வில் பெரிதும் விருப்புக் கொண்ட உல்லாச மனிதராக இருந்தார். தன் சொந்த நாட்டைவிட பிரான்சில் ஒருவேளை அவர் அதிகப் பிரசித்தி பெற்றிருக்கலாம். இங்கிலாந்துக்கும், பிரான்சுக்கும் இடையே ஏற்பட்ட உறவு உடன்படிக்கை அவரது சாதனையாகும். பிரான்சும், இங்கிலாந்தும் பல நூற்றாண்டு காலமாகப் பரம்பரை விரோதிகளாகவே இருந்து வந்திருக்கின்றன. ஆனால், இந்தப் புதிய உறவு உடன்படிக்கை, இரண்டாம் கெய்சர் மன்னரின் பேராசைக் கெதிரானதோர் பாதுகாவலாக அமைந்தது. இந்தப் பேராசை இரண்டாம் உலக மகாயுத்தத்தில் முடிவடைந்தது. பேராசை பிடித்த 'ஹோஹென் சோலெர்ன்ஸ்' வம்சத்தின் முடிவில் கொண்டுபோய் விட்டது. அரசியல் சட்டத்தில், எதுவும் செய்வதற்கு அதிகாரம் இல்லாமல் இருக்கும் ஒரு அரசரின் இந்தச் சாதனையைக் குறைத்து மதிப்பிட முடியாது. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் தன் தந்தையைக் காட்டிலும் நிலையான பழக்க வழக்கங்கள் உடையவராக இருந்தார். 'அயர்லாந்துக்குச் சுதந்திரம் வழங்கப் படுவதைத் துரிதப்படுத்தினார். வங்காளப் பிரிவினையைத் தடுத்து நிறுத்தினார். இந்திய அரசின் தலைமை பீடத்தை கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றினார். இவ்வாறு, பெரும் பணி புரிந்தார் என்று வெகுவாகப் பாராட்டப்பட்டார். தான் தேர்ந்தெடுத்த

ஒரு பெண்மணியைத் திருமணம் செய்துகொள் வதற்குச் சுதந்திரம் வேண்டும் என்று இங்கிலாந்தின் அரசபதவியையே துறந்து ஒரு வரலாற்றையே உண்டு பண்ணினுர் எட்டாவது எட்வர்ட். அவர் அப்பெண்ணை மணந்து கொள்வதை, அக்காலத்தில் பிரதம மந்திரியாக இருந்த 'ஸ்டேன்லி பால்ட்வினும்' கான்ட்ரிபரி ஆர்ச்சு பிஷப்பும், அரசு குடும்பத்தினரும் விரும்பவில்லை. விவாகரத்துச் செய்யப்பட்டவளாக இருந்தாலும், சாதாரண அமெரிக்கப் பிரஜையான ஒருத்தியை இளவரசன் மணம் புரிந்து கொள்வதில் தவறு ஒன்றுமில்லை என்ருர். 'வின்ஸெண்ட் சர்ச்சில்'. அமெரிக்கக்காரியான அவரது அன்னையின் நினைவு அவரை இவ்வாறு சொல்ல வைத்திருக்க வேண்டும். இந்த அரச காதல் சம்பவம் நடந்து ஒரு தலைமுறையாகி விட்டது. இருந்தாலும் இது மானிட சரித்திரத்தில் உன்னதமானதோர் காதற்கதையாகத் திகழும். குறிப்பிடப்பட வேண்டிய அம்சம் என்னவெனில், எட்டாம் எட்வர்ட் மன்னர் சோஷலிஸ அறிவு மிக்கவர். அதனுல், தனது குடும்பத்தினருடைய வற்புறுத்தலையும், அரசியல் ஆலோசகர்களுடைய நிர்பந்தங்களை நிராகரித்து ஒரு நெருக்கடியான நிலைமையை உண்டுபண்ணியிருக்கலாம், ஆனுல், தேசப்பற்று மிக்கதோர் ஆங்கிலேயனைப் போன்று தனது திருமணப் பிரச்சனையில் நாடு இரண்டு படுவதை விரும்பவில்லை. தான் விரும்பும் ஒருபெண்ணை மணம்செய்துகொள்ளும் உரிமையை விட்டுக் கொடுப்பதைவிட, அரசபதவியைத் துறப்பதே மேல் என்று கொண்டார். இருதரப்பிலும் எவ்வளவோ கூறலாம். இந்த நிகழ்ச்சி பற்றி வருங்கால் சரித்திராசிரியர்கள்தான் முடிவான தீர்ப்புக் கூற வேண்டும்.

பிரிட்டிஷ் அரசியல் சட்டம் கட்டுப்பாடுகளையும் சமநிலைகளையும் கொண்ட சிறந்ததோர் அமைப்பாகும். மந்திரிசபையின் வலிமை காமன்ஸ் சபையில் உள்ள பெரும்பான்மைக் கட்சியினிடமிருந்து கிடைக்கும் உண்மையான ஆதரவின் தன்மையைப் பொருத்திருக்கிறது மந்திரி சபைக்குப் பெரும்பாலான அங்கத்தினர்கள் எதிர்ப்புத் தெரிவித்து விட்டார்கள் என்றால், காமன்ஸ் சபையைக் கலைத்து விடலாம் என்று அரசருக்குப் பிரதமர் ஆலோசனை கூறலாம். இதன் பொருள் வேறு ஒரு தேர்தல் நடக்கவேண்டும் என்பதாகும். தேர்தல் என்றால் அதிகப்படியாகச் செலவாகும். சாதாரணமாக உறுப்பினர்கள் இதை நேரிட விரும்ப மாட்டார்கள். எல்லா அதிகாரங்களையும் இழந்திருந்த போதிலும் பிரபுக்கள் சபை சட்டங்கள் நிறைவேற்றப்படுவதை தாமதப்படுத்த முடியும். போதிய அவகாசம் கொடுக்கப்பட்டால் பிரபுக்கள் சபை செய்த முடிவு சரி என்னும் அளவுக்குப் பொதுஜன அபிப்பிராயத்தைத் திருப்பவும் செய்யலாம். அல்லது, சட்டம் சுலபமாக நிறைவேற்றப்படக் கூடிய அளவுக்கு அரசாங்கமே சட்டத்தின் கடுமையைக் குறைக்கலாம். எது எப்படியானாலும், பிரபுக்கள் அதை நிறைவேற்றா விட்டாலும், அது சட்டமாக்கப்படக் கூடிய வகையில் காமன்ஸ் சபை தன் முதல் அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தி விடலாம். அரசர் தனித்தன்மை வாய்ந்த ஒரு இடத்தை வகிக்கிறார். அரசியல் ரீதியாக அவர் ஆலோசனைகள் மட்டும் கூறலாம். கூடிய மட்டும் மறைமுகமாகத் தன் செல்வாக்கைப் பிரயோகிக்கலாம். ஆனால், பிரிட்டிஸ் சரித்திரத்தின் உருவகமாகத் திகழ்கிறார். சமீப காலம்வரை இருந்து வந்திருக்கும் பேரரசின் ஒற்றுமையின் உருவ

மாகவும் அவர் காட்சி அளித்துள்ளார். இப்போது ஏற்பட்டுள்ள காமன்வெல்த் கூட்டில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளும் இடம் பெற்றுள்ளன. இங்கிலாந்தின் அரசர் இதற்குத் தலைமை தாங்குகிறார். பிரிட்டனிலும், அதன் காலனி நாடுகளிலும் உள்ள மக்களின் சமூக வாழ்வில் பிரிட்டீஷ் அரசர் மட்டுமல்ல, அவர் குடும்பத்தினரும் மதிப்பும் அன்பும் பெறுகின்றனர். இந்த அன்பும் மதிப்பும் உலகமே ஆச்சரியப்படும் வகையில் இருக்கிறது. உலக யுத்தத்தின் முடிவின்போது எத்தனை மன்னர்கள் எஞ்சியிருப்பார்கள் என்று எகிப்திய அரசனை 'பரூக்கை' ஒரு நிருபர் கேட்டார். இரண்டாம் உலக யுத்தத்தின்போது இவ்வாறு கேட்கப் பட்டது. "ஐந்து பேர்கள் ஆடுதன் ராஜா, டைமன் ராஜா, கிளாவர் ராஜா, இஸ்பேட் ராஜா, இங்கிலாந்தின் அரசர்" என்று வினயத்துடன் பதில் சொன்னார். தனக்கென கீர்த்தியும், அதிகாரமும் பெற்றிருந்த தன் நாட்டிலிருந்தே விரட்டப்பட்டு உயிர் நீக்க வேண்டிவரும் என்று தன் முடிவையும் அவர் உணர்ந்திருந்தார் போலும். இங்கிலாந்து சோஷலிஸத்தை ஏற்றுக் கொண்டாலும்கூட மன்னரைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கும் என்று தனக்கே உரித்தான கிண்டல் மொழியில் சொன்னார். அனத்தோல் பிரான்ஸ். ராணி எலிஸபெத் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது பிரம்மாண்டமான முறையில் வரவேற்கப்பட்டார். சில ஆண்டுகளுக்கு முன்னால் பிரிட்டீஷ் அரசாங்கத்தை எதிர்த்துச் சுதந்திரத்திற்காகப் போராடிய மக்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாத அளவு உள்ளன்போடும் உற்சாகத்தோடும் அவர் வரவேற்கப்பட்டார்.

இக்கால ஐரோப்பாவில், அதன் சட்டங்கள், நிர்வாகம் ஆகியவற்றின் வாயிலாக புராதன ரோமாபுரி வாழ்கிறது என்றால், ஜனநாயகம், நீதி முறை, நிர்வாகத்திறமை—இந்திய வாழ்வில் எல்லாத் துறைகளிலும் தன் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள ஆங்கில மொழி, ஆகியவற்றின் வாயிலாக இங்கிலாந்து இந்தியாவில் வாழும். இவை எல்லாம், இரண்டு நூற்றாண்டுகாலம் இந்தியாவில் அதிகாரம் செலுத்திய பிரிட்டிஷ் ஆட்சி விட்டுச் சென்ற சொத்துக்கள் என்று கூறலாம்.

### அமெரிக்கா

அமெரிக்கா பிரிட்டனின் குழந்தை. ஆனால், அது கிளர்ச்சியில் பிறந்தது. சுதந்திரமான வழியில் வளர்ந்திருக்கிறது. அதன் அரசியல் சட்டம் பிரிட்டிஷ் அரசியல் சட்டத்தைப் பின்பற்ற முயற்சி செய்துள்ளது. அதில், புதிய நிலைமைகளுக்கேற்ப பல்வேறு மாறுதல்களைச் செய்யவேண்டியிருந்தது. எனவே, மூலத்தினின்றும் புரட்சிகரமான மாறுதல்களைக் கொண்டிருக்கிறது. அங்கே பரம்பரை முடியாட்சி கிடையாது. எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட 'ஜனாதிபதியை ஏற்படுத்த வேண்டியிருந்தது. அந்த நாட்டில் பிரபுக்கள் கிடையாது. ஆகவே, புதிய முறையில் இரண்டாவது சபையை (மேல் சபையை) நிறுவ வேண்டியிருந்தது. ஆங்கில அரசியல் சட்டமானது, கட்டுப்பாடுகளும், சம நோக்குகளையும் கொண்ட சிறந்ததோர் அமைப்பாகும் என்று லாக் வருணித்திருக்கிறார். இந்த விளக்கத்தினின்றும் புலப்படுவது போல், தனித் தனியே வேறுபட்ட பிரிவுகளாக இருக்கவில்லை அது. அமெரிக்க அரசியல் சட்டத்தை வகுத்தவர்கள் லாக்கின் விளக்கத்தை அப்படியே

எடுத்துக் கொண்டார்கள். சட்ட மன்றங்களி னின்றும் தனித்து இயங்கும் நிர்வாக அமைப்பை யும், இவை இரண்டினின்றும் வேறுபட்டு நிற்கும் நீதிமன்றத்தையும் கொண்டதோர் அரசியல் சட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். அடிப்படை வித்தியாசம் என்னவென்ருல் பிரிட்டிஷ் அரசியல் சட்டம் தாஞகவே வளர்ந்தது. இன்னும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஆனுல், அமெரிக்க அரசியல் சட்டமானது உருவாக்கப்பட்ட ஒன்று. முன்னையது, வளைந்து கொடுக்கும் தன்மை வாய்ந்தது. பின்னையது ஏறக்குறைய இறுக்க மானது. ஏனெனில் ஒவ்வொரு சட்டமன்றத்திலும் உள்ள உறுப்பினரில் மூன்றில் இரண்டு பகுதி யினர் (அரசியல் சட்ட) மாறுதலுக்கு வாக்களிக்க வேண்டும். அல்லது, மாநிலங்களில் உள்ள சட்ட மன்றங்களில் மூன்றில் இரண்டு பகுதி மாறுதலைக் கோரவேண்டும். இந்த இாண்டு முறைகளில் எது வாக இருந்தபோதிலும் மாநில அரசுகளில் நான்கில் மூன்று பகுதி இந்த மாற்றத்தை ஏற்றுக்கொண் டாலொழிய அரசியல் சட்டத்தில் மாறுதல் எதுவும் செய்ய முடியாது. அவசியம் ஏற்பட்டாலொழிய சுலபத்தில் இவ் வழிமுறைகளைக் கடைப்பிடிக்க முடியாது. அவ்வளவு தூரம் தொல்லை தரக்கூடிய முறையாக இருக்கிறது. ஆகவேதான், 180 ஆண்டு களில் இந்த அரசியல் சட்டம் 24 தடவைகள் மட்டுமே திருத்தப்பட்டிருக்கிறது. இதில், மிகவும் குறிப்பிடப்பட வேண்டியது, உள்நாட்டுப் போரில் ஆபிரகாம் லிங்கன் தலைமையில் வடக்கு மாநிலங் கள் வெற்றி பெற்று அடிமை முறையை ஒழித்த போது ஏற்பட்ட திருத்தம் தான். முடிவாக ஒரு பிரச்சினை பற்றி மாநில அரசுகள் தீர்மானம் செய்வ தற்கு முன்னுல் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குப் சம

மான காங்கிரஸ், அப்பிரச்சினை பற்றித் தீர்மானம் செய்ய மாநில சட்ட மன்றங்களைப் பணிக்கலாம். அல்லது, இப்பிரச்சினை பற்றி வாக்களிக்க மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய விசேஷக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு உத்தரவிடலாம்.

இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து, வடக்கு அயர்லாந்து ஆகிய பிரதேசங்களுக்கான சட்டமியற்ற பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு முழு அதிகாரமுண்டு. அமெரிக்க அரசியல் சட்டம் ஒரு சமஷ்டி அரசியல் சட்டமாக இருப்பதால் மாநிலங்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. எனவே சட்டமியற்றும் அதிகாரம், மத்திய அல்லது சமஷ்டி அரசின் காங்கிரசுக்கும், மாநிலச் சட்ட மன்றங்களுக்குமிடையில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியுள்ளது. மிக்க திறமையுடன் சட்ட வரம்பு மண்டலங்கள் வகுக்கப்பட்டிருந்தபோதும் ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றிச் சட்டமியற்றும் உரிமை மத்திய அரசைச் சேர்ந்ததா, அல்லது மாநில அரசைச் சேர்ந்ததா என்ற பிரச்சினைக்கு ஒரு இடமுண்டு. அப்படிப்பட்ட அபிப்பிராய பேதங்கள் நீதி மன்றங்களால் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளன. ஆகவே, அமெரிக்காவின் உயர் நீதிமன்றம் (சுப்ரீம் கோர்ட்) அதைப் போலுள்ள பிரிட்டிஷ் உயர் நீதிமன்றத்தைவிட மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. அமெரிக்காவில் மத்திய அரசு அடிமை முறையை ஒழித்தது. தெற்கு மாநிலங்கள் இதை எதிர்த்தன. தங்களது பிரிந்துபோகும் உரிமையை நிலைநாட்ட போராடவும் தயாராயின. மத்திய அரசுக்கு அடிமை முறையை ஒழிக்க அதிகாரம் இருந்ததா? இதன் விளைவு உள்நாட்டுப் போர்; என்றாலும், லிங்களின்

புத்திக் கூர்மை ஒருமைப்பாட்டைக் காப்பாற்றியது. மாநில அரசுகள் பிரியப்படாத நடவடிக்கைகளை ஜனுதிபதிகள் அடிக்கடி கைக்கொள்ள வேண்டியிருந்தது. உதாரணமாக 1930ல் ஏற்பட்ட நெருக்கடியின்போது சம்பள முறைகளை ஒழுங்குபடுத்தியது. இன்ஸுயூரென்ஸ் விலைகள் மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டது என்று உரிமை கொண்டாடியது. நமது காலத்தில்கூட நீக்ரோக் குழந்தைகளை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், எல்லாச் சிற்றுண்டிச் சாலைகளிலும், எல்லா உணவு விடுதிகளிலும் அனுமதிக்கும் பிரச்சினை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு வந்தது. காலஞ் சென்ற ஜனுதிபதி ஜே. எப். கென்னடி போன்ற தலைவர்களின் சீர்திருத்தக் கொள்கைகளை ஆதரிக்கும் பிரதம நீதிபதி வாரன் நீக்ரோ மக்களுக்குச் சாதகமான தீர்ப்பை வழங்கினுர். ஒரு சரித்திரத்தை உருவாக்கினுர். கென்னடியும், லிங்கனைப் போன்றே பெருந்தன்மைக்குப் பரிசாக அக்கிரமமாகப் படுகொலை செய்யப்பட்டார்.

அமெரிக்க அரசியல் சட்டத்தை வகுத்தவர்கள் 'ஜான் லாக்கை'த் தங்களின் முக்கிய வழிகாட்டியாகக் கொள்ளுகின்றனர். அவருடைய வழிகாட்டுதலைப் பின்பற்றுகையில் அவரைவிட அதிக தூரம் சென்று விட்டார்கள். அரசாங்கத்தின் மூன்று அங்கங்களும் பிரிந்திருக்கவேண்டும் என்று லாக் வற்புறுத்தினுர். அமெரிக்க அரசியல் சட்டத்தை வகுத்தவர்களால் இது முக்கியமானதாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் பயனுக, பிரிட்டிஷ் அரசியல் சட்டத்தினின்றும் குறிப்பிடக் கூடிய அளவுக்கு மாறுபட்ட ஒரு அரசியல் சட்டத்தை வகுத்தார்கள். பிரிட்டிஷ் பார்லிமெண்டைப்

போன்றே, அமெரிக்கக் காங்கிரசும் இரு சபைகளைக் கொண்டது. அவை பிரதிநிதிகள் சபை, 435 பிரதிநிதிகளைக் கொண்டது. இவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தெடுக்கப் படுகின்றனர். 50 மாநிலங்களுலிருந்து இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 30,000 மக்களுக்கு ஒரு பிரதிநிதி என்று அரசியல் சட்டம் கூறுகின்றது. மிகப் பெரிய சபையாக இருப்பதைத் தடுப்பதற்கு வேண்டி 3,50,000 ஜனத்தொகையைக் கொண்ட ஒற்றை அங்கத்தினர் தொகுதிகளாகத் தொகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளன. உறுப்பினர் குறைந்தபட்சம் 25 வயது உள்ளவராக இருக்க வேண்டும். ஏழு ஆண்டு காலத்திற்கு அமெரிக்கப் பிரஜையாகவும் இருந்திருக்கவேண்டும். தேர்தல் காலத்தில் தேர்ந் தெடுக்கப்படும் மாநிலத்தில் குடியிருப்பவராகவும் இருக்கவேண்டும். ஒரு பிரதிநிதியின் சம்பளம் ஆண்டுக்கு 22,500 டாலர்கள். இதில் 3,000 டாலருக்கு வரி விதிப்பினின்றும் விதிவிலக்கு. இந்திய நாணயப்படிப் பார்த்தால் மாதத்திற்கு ரூ. 9,300 ஆகும். நிதி மசோதா மீதான பூரண அதிகாரம் உட்பட, பிரிட்டிஷ் சட்ட மன்றத்தைப் போன்று, எல்லா அதிகாரங்களும் இந்தச் சபைக்கு உண்டு.

சட்டமன்றத்தின் இரண்டாவது சபை செனட் சபை. ஒவ்வொரு மாநிலத்தினின்றும் இரண்டு பிரதிநிதிகள் வீதம் தேர்தெடுக்கப்படுகின்றனர். ஆறு ஆண்டுகளுக் கொருமுறை இத்தேர்வு நடக்கும். இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மூன்றில் ஒரு பகுதி அங்கத்தினர்கள் விலகுவார்கள். எனவே, இச்சபை தொடர்ந்து இருக்கும். மாநிலத்தின், பரப்பளவு, ஜனத்தொகை எவ்வளவு

இருந்த போதிலும் ஒரு மாநிலத்துக்கு இரண்டு பிரதிநிதிகள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சட்டமியற்றும் பணி காங்கிரஸால் மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டுள்ளது. உலகத்தின் எந்தப் பகுதியிலும் இல்லாத அளவுக்கு மிகவும் முக்கியமானதாக இது கருதப்பட்டுள்ளது எனலாம். காங்கிரஸின் ஏதாவது ஒரு சபைக்கு விஜயம் செய்பவர்கள், சபையில் அங்கத்தினர்கள் மிகவும் குறைவாகவே ஆஜராகி இருப்பதைப் பார்க்கலாம். இது காங்கிரஸ் ஒரு ஓய்வான அமைப்பு என்ற அபிப்பிராயத்தைக்கூட உண்டுபண்ணலாம். உண்மை என்னவெனில் பெரும்பாலான வேலைகள் கமிட்டிகள் வாயிலாகவே செய்யப்படுகின்றன. ஒவ்வொரு மசோதாவையும், உறுப்பினர் தன் சொந்த ஹோதாவிலேயோ, அல்லது தனது தொகுதியின் மனுவின் பேரிலேயோ பிரேரேபிக்கின்றார். ஜனாதிபதியின் மந்திரி சபையின் உறுப்பினர்களோ, ஜனாதிபதியோ மசோதாக்களைப் பிரேரேபிக்கலாம். அப்படிப்பட்ட நிர்வாக அறிவிப்புக்களில் மிகவும் முக்கியமானது உத்தேசிக்கப்பட்ட வருடாந்தர வரவு செலவுத் திட்டம். ஜனாதிபதியால் காங்கிரஸ் முன்பு சமர்ப்பிக்கப்படும் வருடாந்தர அறிக்கையாகும். இது ஒவ்வொரு மசோதாவும் ஏதாவது ஒரு கமிட்டிக்கு அனுப்பப்படும். பிரதிநிதி சபையிலிருந்து 20 அங்கத்தினர்களையும், செனட் சபையின்ன்று 16 அங்கத்தினர்களையும் கொண்ட கமிட்டிகளுக்கு மசோதாக்கள் பாகுபடுத்தி அனுப்பப்படுகின்றன. ஒவ்வொரு கமிட்டியிலும் இரண்டு கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் இருப்பார்கள். சபையில் கட்சிகளின் பலத்திற்கேற்ப அங்கத்தினர்கள் இடம் பெறுவார்கள். கமிட்டிகள் மேலும் உப கமிட்டிகளாகப் பிரிக்கப்

படும். இதனுல், ஒவ்வொரு மசோதாமீதும் ஆழ்ந்த கவனம் செலுத்தப்படுகின்றது. சாட்சிகளை அழைப்பதற்கும் இந்தக் கமிட்டிகளுக்கு உரிமை உண்டு. மசோதாவின் ஒவ்வொரு பிரிவும் முழுமையாக விவாதிக்கப்பட்டு, உடன்பாடு ஏற்ற பின்புதான் சம்பிரதாயப் பூர்வமாக ஏற்றுக் கொள்வதற்குச் சபை முன்பு சமர்ப்பிக்கப்படுகிறது. ஏனெனில் மசோதா ஏற்கனவே விவரமாக விவாதிக்கப்பட்டுள்ளது. ஒரு கமிட்டி ஒரு மசோதாவைத் தகுதியானதாகக் கருதவில்லையெனில் காங்கிரஸ் முன்னுல் சமர்ப்பிக்கப்படுவதை நிறுத்திவிடலாம். இம்முறையானது, மசோதாவைச் சமர்ப்பிப்பது (Taling) என்று அழைக்கப்படுகின்றது.

மசோதாக்கள் தவிர காங்கிரஸானது தீர்மானங்களையும் அதாவது, அவையும் சட்டத்தின் ஒரு பகுதியே. அவை தனித்தனியே ஒவ்வொரு சபையிலும் நிறைவேற்றப்பட்ட போதிலும், கூட்டுத் தீர்மானங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. ஒரு சில சந்தர்ப்பங்களைத் தவிர சபை நடவடிக்கையின்போது-விசேஷ அனுமதியில்லாமல் கமிட்டிகள் கூட்டப்படக் கூடாது என்பது குறிப்பிடத் தக்க ஒரு அம்சம். சபையின் கோரம் சாதாரணமாக 218. அது 100ஆகக் குறைந்துவிட்டால் சபையே தன்னை ஒரு கமிட்டியாக ஏற்படுத்திக் கொள்ளலாம். சபையில் கோரம் இருந்தால், ஐந்தில் ஒரு பகுதியினரின் கோரிக்கைக்கிணங்க வாய்மொழி மூலமாகவோ, நிற்பதன் மூலமாகவோ வாக்கெடுப்பு நடத்தப்படும். ஒவ்வொரு சபைக்கும் நடைமுறை விதிகள் உண்டு. வலுவான அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டால் மாநாடுகள் (Comferences) நடத்துவதற்கான ஏற்பாடுகள் உண்டு. "மானேஜர்கள்" ஒவ்வொரு சபையினின்றும் பிரதிநிதிகளாகக்

கலந்துகொள்வார்கள். பெரும்பாலும் எல்லாக் கமிட்டிகளிலும் சிறுபான்மைக் கட்சியினருக்குப் போதிய மதிப்புக் கொடுக்கப்படுகின்றது. இருந்தாலும் அவர்கள் ஒரே கட்சியைச் சார்ந்தவர்களாகக்கூட இருக்கலாம்.

இச்சிக்கலான நடைமுறை சட்டமியற்றும் வேலையைத் தாமதப்படுத்துகின்றது. ஆனால், சாதக பாதகங்களைப் பற்றி ஆராய்வதை உறுதிப்படுத்துகின்றது. இது சட்டம் அரைகுறையாக இருப்பதைத் தவிர்க்கின்றது. பிரிட்டிஷ், அல்லது இந்திய முறைகளைவிட மேம்பட்டதாக இருக்கிறது அமெரிக்க முறை. ஏனெனில், இவ்விரண்டு நாடுகளிலும் ஒரு சில முக்கிய மசோதாக்கள் மட்டும் இரு சபைகளாலான கூட்டுப் பொறுக்குக் கமிட்டிகளுக்கு அனுப்பப்படுகின்றன.

செனட்டர் குறைந்தபட்சம் 30 வயது உடையவராக இருக்கவேண்டும். ஒன்பது ஆண்டுகள் அமெரிக்காவில் வசிப்பவராகவும் இருக்கவேண்டும். ஒரு செனட்டர் பதவியை ராஜினமாச் செய்துவிட்டாலோ, அல்லது மரணமடைந்து விட்டாலோ அடுத்த பொதுத்தேர்தல் வரையில் அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிக்கும் அதிகாரம் மாநில கவர்னருக்கு உண்டு. பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையைப் போல் அல்லாமல் செனட் சபை மிகவும் வலிமை வாய்ந்த சபையாகும். நிதிநிலைமை சம்மந்தப்பட்டவை தவிர, மற்றபடி பிரதிநிதிகள் சபைக்கு இருக்கும் சகல அதிகாரங்களும் இதற்குண்டு. கீழ்க்கண்ட சலுகைகளையும் இது அனுபவிக்கின்றது.

1. ஜனதிபதி தேர்ந்தெடுக்கும் அதிகாரிகளுக்கு அனுமதி தர மறுத்து அவர்களைத் தடை செய்யலாம.

2. மூன்றில் இரண்டு பகுதி பெரும்பான்மையின் மூலம் அமெரிக்காவின் எந்த உடன்படிக்கையையும் அங்கீகரிக்கலாம்.

3. பிரதிநிதித்துவ சபைக்கு மட்டுமே குற்றம் சாட்டும் (Impeachments) உரிமை இருந்த போதிலும், குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் உரிமை செனட் சபைக்கு மட்டுமே உண்டு.

பிரிட்டனில் இருப்பது போன்றே அங்கும் இரண்டு முக்கிய கட்சிகள்தான் இருக்கின்றன. ரிபப்பிளிக்கன் கட்சி, டெமாக்கிராட் கட்சி. கூச்சல்கள் கிளப்பப்பட்ட போதிலும், கட்சிகள் இறுக்கமான முறையில் அமைக்கப் படவில்லை. அநேகமாக அமெரிக்கர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் கட்சி சார்பற்றவர்கள், எந்தவிதமான கட்சி இணைப்புமற்றவர்கள். பத்து சதவீதம் முதல் ஐம்பது சதவீதம் வரையுள்ள வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வதில் அக்கறை காட்டுவதில்லை. மேலும், பிரிட்டனில் உள்ள கன்ஸர்வேட்டிவ் கட்சியும், தொழிற்கட்சியும் குறிப்பிடத்தக்க மாறுபட்ட கொள்கைகளை உடையவையாக இருக்கின்றன. ஆனால், அமெரிக்காவில் ரிப்ப்ளிக்கன் கட்சிக்கும் டெமாக்கிராட் கட்சிக்கும் இடையில் அவ்வளவு கடுமையான மாறுபட்ட கொள்கைகள் கிடையாது. அமெரிக்க அரசாங்க முறை என்ற புத்தகத்தில் இ. எஸ். கிரிபித்ஸ் முறையான, பொறுப்பான, தெளிவான பிரிட்டீஷ் பார்லிமெண்டரி முறையில் பழக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்க முறை, குழப்பம், ஒழுங்கின்மை, பொறுப்பின்மை, ஏமாற்றம், தனிப்பட்ட நலன்களின் வற்புறுத்தலுக்கு இணங்குதல் ஆகிய குணங்கள் இருப்பதைப் போன்ற உணர்வை உண்டுபண்ணுகிறது. இவற்றிலெல்லாம் ஓரளவு

உண்மை இருப்பதாக ஒத்துக் கொள்ளலாம். ஆனால், பலாபலன், முடிவு, முடிவின் பலன்கள் எப்படியோ இந்த உணர்வைப் பொய்யாக்குவது போல் தோன்றுகிறது'' என்று கூறுகின்றார். வேறு ஒரு இடத்தில் “பிரிட்டீஷ் கட்சி அமைப்பின் உயர்ந்த முறையின் காரணமாக, அதன் மறுபதிப்பான அமெரிக்கக் கட்சி முறையைப் புரிந்து கொள்ளக் கஷ்டமாக இருக்கிறது'' என்பதையும் ஒத்துக் கொள்கிறார். அதே போன்று அமெரிக்க ஜனநாயகம் என்ற புத்தகத்தில் அலன் நெவின் “இந்த மாதிரி அமைப்பாளர்களை மறுதலித்த போதும், ஒரு புத்தகத்திற்குள் அடக்கிவிடுவதற்கு உலகத்திலேயே மிகச் சிரமம் தரும் ஜனநாயகம்'' என்று எழுதுகிறார். அமெரிக்கப் பல்கலைக் கழகத்தின் தலைவர் ஒருவர் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். தான் ஒரு ஜனநாயகவாதி என்று ஒப்புக் கொண்டார். அட்லாஸ் ஸ்டீவன்சன் குடியரசுக் கட்சியின் சார்பாக ஜனாதிபதி பதவிக்கு நிற்கப் போவதை அறிந்ததும் மனதை மாற்றிக் கொண்டு, ஸ்டீவன்சன் சிறந்த அபேட்சகர் என்று தனது வாக்கை அவருக்களித்தார். அப்போதுதான் இதன் (அலன் நீவின் சொன்னதன்) உண்மையை நான் புரிந்து கொண்டேன். ஆகவே, அமெரிக்காவில் அமெரிக்கர்களைப் பொறுத்தமட்டில் கட்சி முறை மிகவும் தளர்ச்சியானது. கட்சி விசுவாசத்தை பக்தியாக அவர்கள் பாராட்டுவதில்லை.

ஜனாதிபதி பதவி அமெரிக்க அரசியல் சட்டத்தின் தனித்துவமானதோர் பாகமாகும். எல்லா அதிகாரங்களும் நீக்கப்பட்ட இங்கிலாந்தின் மன்னரைப் போல் அல்லாமல், உலகத்திலேயே மிகவும் அதிகாரம் வாய்ந்த மனிதராக இருக்கும் அளவுக்கான அதிகாரங்கள் அமெரிக்க ஜனாதி

பதிக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. அவர் குறைந்த பட்சம் 35 வயதுடையவராக இருக்க வேண்டும். அமெரிக்க பிரஜையாக 14 ஆண்டுகள் இருந்திருக்க வேண்டும். அவர் பதவிக் காலம் நான்கு ஆண்டுகள் ஒரு தடவை மட்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். பதவிக் காலத்தில் அவரைப் பதவியினின்றும் நீக்கிவிட முடியாது. குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டாலொழிய பதவியினின்றும் நீக்க முடியாது. இதுவரை அவ்வாறு நடைபெறவில்லை. அவர் இறந்துவிட்டால் உப-ஜனுதிபதி உடனே அப்பதவியை ஏற்கிருர். இதனுல், அந்த நாடு எப்போதுமே ஒரு ஜனுதிபதி இல்லாமல் இருக்க முடியாது. இது "அரசர் இறந்து விட்டார். அரசர் நீடூழி வாழ்க" என்ற பிரிட்டிஷ் கொள்கையின் வேற்றுரு. சில ஜனுதிபதிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களில் மிக முக்கியமானவர்கள் ஆபிரகாம் லிங்கனும், ஜான் பிட்ஜ் ஹெரால்ட் கென்னடியுமாவர். ஜனுதிபதி தேர்தலில் சிறந்த நபர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது உறுதிப் படுத்தப்பட வேண்டும். இதுதான் அரசியல் சட்டத்தை வகுத்தவர்களின் நோக்கம். ஜனுதிபதியைத் தேர்ந்தெடுக்க அதற்கென்றே தேர்ந்தெடுக்கப்படும் குழுவினுல் இத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. காங்கிரஸின் இரு சபைகளிலும் உள்ள செனட்டர்கள், பிரதிநிதிகள் ஆகியவர்கள் எண்ணிக்கைக் கேற்ப ஒவ்வொரு மாநிலத்திலும், வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்டதாக இருக்கும். சிறந்த நபரை ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கச் சிறந்த பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது என்பதே இதன் நோக்கம். ஆனுல், நடைமுறையில் இந்த நோக்கம் முற்றிலு

மாகக் கைவிடப்பட்டு விட்டது. ஜனதிபதிப் பதவி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பதவியாகையால் அமெரிக்க பிரஜைகள் அனைவருமே அதில் அக்கறை கொண்டுள்ளனர். ஆகவே, தேர்தலில் நேரடியான அபிப்பிராயம் இருக்கவேண்டும் என்று விரும்பினர்கள். ஜனதிபதி தேர்தல் குழு ஒழிக்கப் படவில்லை. சாமர்த்தியமாக இது தவிர்க்கப்பட்டது. முற்றிலும் மாறுபட்ட முறையில் செயல்படுத்தப் படுகின்றது. டெமாக்கிராட் கட்சி, ரிபப்ளிக்கன் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும் ஜனதிபதி பதவிக்கான தங்கள் அபேட்சகரைத் தேர்தலுக்கு நிறுத்தி வைக்கின்றனர். இது உறுதிப்படுத்தப் பட்ட நடை முறையாகி விட்டது. டெமாக்கிராட் கட்சி அல்லது ரிபப்ளிக்கன் கட்சிக்கு வாக்களிப் போர் என்ற அடிப்படையில் தேர்தல் குழுவின் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். வேறுவிதமாகச் சொல்லப்போனல், அமெரிக்க மக்களே யார் தங்களது ஜனதிபதியாக இருக்க வேண்டும் என்பதை முடிவு கட்டுகின்றனர். தேர்தல் குழு வாக்காளரின் அபிப்பிராயத்தின் பிரதிபலிப்பாக ஆகிவிட்டது. தேர்தல் குழுவின் ஞானம் எல்லாம் பொதுஜன அபிப்பிராயத்தின் வற்புறுத்தலின் முன்னல் மாய்ந்து போயிற்று. முதல் தரமான மனிதர்கள்தான் ஜனதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள். அமெரிக்க மக்கள் இதற்காகப் பாராட்டப்பட வேண்டிய வர்கள். சில சமயங்களில் வாஷிங்டன், ஜாக்ஸன், ஆப்ரகாம் லிங்கன், உட்ரோ வில்சன், பிராங்களின் ரூஸ்வெல்ட், ஜான் பிட்ஜெரால்ட், கென்னடி போன்ற முறையான அரசியல் மேதைகளே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

ஜனுதிபதியின் அதிகாரங்கள் அளவற்றவை. காங்கிரஸார் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு தீர்மானமும் ஜனுதிபதியின் ஒப்புதல் பெற வேண்டும். இங்கிலாந்தின் அரசரைப் போலல்லாமல் ஒரு மசோதாவை நிராகரிக்கும் உரிமை அவருக் குண்டு. ஆனுல், 10 நாட்களுக்குள் அவ்வாறு செய்யவேண்டும். இல்லையெனில் அவருடைய ஒப்புதல் இல்லாமலேயே அது சட்டமாகிவிடும். பத்து நாட்களுக்குள் நிராகரிக்கும் உரிமையை அவர் பிரயோகித்தால் காங்கிரஸுக்குத் திரும்பவும் அந்த மசோதா அனுப்பப்படும், சபையின் மூன்றில் இரண்டு பகுதியினரின் பெரும்பான்மையின் பேரில் அம்மசோதா மீண்டும் நிறைவேற்றப்பட வேண்டும். இது காங்கிரஸ் மீதான போதுமான கட்டுப் பாடாகும். ஜனுதிபதியின் நிராகரிப்பு அதிகாரத்தையும் மீறி எழுபத்தேழு மசோதாக்கள் மட்டுமே நிறைவேற்றப் பட்டுள்ளன. தொடர்ச்சி யாகப் பதவியில் இருந்த ஜனுதிபதிகளுக்கும், காங்கிரசுக்கும் இது பெருமை தரக்கூடிய ஒன்ருகும்.

ஜனுதிபதிக்கு மேலும் முக்கியமான அதிகாரங்கள் உள. அவர் கொள்கையின் முக்கிய மான அம்சங்கள் பற்றி காங்கிரசுக்குச் செய்திகள் அனுப்பலாம். மசோதாக்களையும் பிரேரேபிக்கலாம். ஆனுல், அதை அவர் சபையில் நேரடியாகச் சமர்ப் பித்து விவாதத்தைத் தொடங்க முடியாது. ஏனெனில், அவர் நிர்வாகத்தில் ஒரு அங்கமாக இருப்பதால் காங்கிரசின் சட்டமியற்றும் உரிமையில் தலையிட முடியாது. உயர் நீதிமன்ற நீதிபதிகளை அவர் நியமிக்கலாம். அவர் தரைப் படை, கப்பற்படை, விமானப் படை ஆகியவற்றின் பிரதம தளகர்த்தராகப் பணியாற்றுகிருர்.

உலகத்திலேயே மிகவும் சக்தி வாய்ந்த அளவுக்கு அதிகாரங்களைக் கொண்டவர். நூறாயிரம் டாலர்கள் சம்பளமாகக் கொடுக்கப்படுகின்றது. அது மாதத்திற்கு ரூ, 46,000த்திற்குச் சமம். இச்சம்பளம், அமெரிக்காவில் நிலவும் வாழ்க்கைச் செலவின் உயர்வைப் பார்த்தால் அவ்வளவு அதிகமானதாக இல்லை. காங்கிரஸ் உறுப்பினர்களுக்குப் உயர்ந்த அளவு சம்பளம் கொடுக்கப்படுகிறது. அத்துடன் ஒரு அறையும், ஒரு காரியதரிசியும் கொடுக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் அரசியல் சட்டத்திற்கும், அமெரிக்க அரசியல் சட்டத்திற்கும் உள்ள முக்கிய வேறுபாட்டை நிர்வாக யந்திர அமைப்பில் காணலாம். பிரிட்டனில் பார்லிமெண்டின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் மந்திரிசபையை அமைக்க அரசரால் அழைக்கப்படுகின்றார். அவர் பிரதமராகிறார். பல்வேறு இலாகாக்களுக்கும் தன் சகாக்களை அமைச்சர்களாக நியமிப்பதற்கு அவருக்குப் பூரண அதிகாரம் உண்டு. காமன்ஸ் சபைக்கும், காமன்ஸ் சபை மூலம் மக்களுக்கும் அவர் பொறுப்பாளியாகிறார். அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்தின் மீது மக்கள் சபை நம்பிக்கையில்லாத தீர்மானம் நிறைவேற்றி விட்டதென்றால், அரசாங்கம் ராஜினமாச் செய்ய வேண்டும். வேறு ஒரு அரசாங்கத்தை அமைக்க எதிர்க்கட்சித் தலைவர் அழைக்கப்படலாம். அல்லது காமன்ஸ் சபையைக் கலைத்துவிடும்படி அரசருக்குப் பிரதமர் யோசனை கூறலாம். இவ்வாறு நிர்பந்தமாக வாக்காளர்களின் அபிப்பிராயத்தைக் கோரலாம். ஒரு அரசாங்கத்தை அமைக்க எதிர்க்கட்சித் தலைவர் ஒத்துக்கொண்ட போதிலும், அரசாங்கத்தை நடத்துவதற்கான போதிய பெரும்

பான்மை இல்லாமல் இருக்கலாம். அவரும் காமன்ஸ் சபையைக் கலைத்து விடும்படி அரசருக்கு யோசனை கூற நிர்பந்திக்கப்படலாம். இந்த விதமான சிக்கல்கள் எல்லாம் அமெரிக்க அரசியல் சட்டத்தில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஏனெனில் தனது காரிய தரிசிகளை நியமிக்கும் உரிமை ஜனாதிபதிக்கு இருக்கிறது. அந்தக் காரியதரிசிகள் ஜனாதிபதிக்கே பொறுப்பாளிகள், காங்கிரசுக்கு அல்ல. இம்முறைப்படி ஜனாதிபதியின் மந்திரி சபையில் 9 காரியதரிசிகள் இருப்பார்கள். இதில் இராஜாங்கக் காரியதரிசி (secretary of state) பிரதானமானவர். இதர காரியதரிசிகள் நிதி, தற்காப்பு, நீதித்துறை, தபால் நிலையம், விவசாயம், வியாபாரம், தொழிலும் உள்நாட்டு விவகாரமும், ஆகிய இலாகாக்களைக் கவனித்துக் கொள்கின்றனர். சட்டமன்றத்திற்கும் நிர்வாகத்திற்கும் உள்ள தெளிவான இந்தப் பிரிவினையின் காரணமாக, காரியதரிசிகள் காங்கிரசின் எந்தச் சபையிலும் அங்கத்தினர்கள் அல்ல என்று கூறத் தேவையில்லை. நிர்வாகத்தின் பணியில் சட்டமன்றம் அதிருப்தி கொண்டால் தாக்குதலின் வேகத்தை ஜனாதிபதிதான் ஏற்றுக் கொள்ள வேண்டும். எந்த ஒரு ஜனாதிபதியும் தன் பதவியை இன்பமூட்டும் ரோஜா மெத்தையாகக் கருதவில்லை. இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஜான் ஆடம்ஸ், தன் வாழ்க்கையில் துக்கரகமான நான்கு ஆண்டுகள் என்று இதைக் கூறினார். "கடவுளே, ஒரு மனிதன் இப்பதவிக்கு வரவேண்டும் என்று ஆசைப்படுவதற்கு என்ன இருக்கிறது?" என்றார் கார்பீல்ட். சிலர் தங்களது பெருந்தன்மையின் காரணமாகத் தங்கள் இன்னுயிரையே இழந்திருக்கிறார்கள். மற்றவர்கள் விடுபட்ட உணர்வுடன் பதவியின் பாரத்தை

இறக்கி வைத்தார்கள். ஆனால், நல்லது செய்வதற்கும், உலகத்தையே தலைமை தாங்குவதற்குமான பெரும் வாய்ப்புக்கள் இருப்பதையும் எல்லோரும் உணர்ந்திருந்தார்கள்.

அமெரிக்க அரசியல் சட்டத்தின் மூன்றாவது அங்கம் நீதி மன்றம். அதுவும் இணையற்றதோர் இடத்தைப் பெற்றுள்ளது. ஒருவேளை உலகத்திலேயே மிகவும் சக்தி வாய்ந்த நீதி மன்றமாக இருக்கலாம். அரசியல் சட்டத்தில், மத்திய அரசும், மாநில அரசும் சட்டமியற்றும் மண்டலங்களாக வரையறுத்து எழுதப்பட்டுள்ளது. நீதிமன்றம் மத்திய அரசையும், மாநில அரசையும் சமமாய்க் கட்டுப்படுத்தும் நிலையில் இருக்கின்றது. சட்டங்களுக்கு விளக்கம் தரும் அதிகாரம் அதற்கிருக்கிறது. அதுவே சட்டமியற்றும் ஒரு அமைப்பாகி விட்டது. வாஷிங்டன் நகரில் 'காப்பிட்டல் முன் அமெரிக்காவின் பெருமை வாய்ந்த முதல் ஜனாதிபதி ஜான் மார்ஷலின் சிலை நிற்கின்றது. சட்ட மன்றத்தின் சட்டமியற்றும் உரிமையைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தின் உருவமாக அது நிற்கின்றது. உயர் நீதிமன்ற நீதிபதிகள் தங்களின் தீர்ப்புக்களின் மூலம் நீதி சாஸ்திரத்தை வளர்த்துள்ளார்கள். உள்நாட்டு அரசியலில் நீக்ரோவர் பிரச்சனையைப் போன்று சங்கடமான பிரச்சனை வேறு எதுவும் கிடையாது. ஆபிரகாம் லிங்கன் அவர்களுக்கு விடுதலை வழங்கினார். சிற்றுண்டிச் சாலைகளிலும், உணவு விடுதிகளிலும், பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் காட்டப்பட்ட இனத் தடைகளை நீக்கி, அதன் மூலம் அவ்விடுதலைக்கு விளக்கம் தர முற்பட்டார் கென்னடி. அவர்களின் மனிதாபிமானம் மிக்க முற்போக்கான கொள்கைகளுக்காக வேண்டி

தங்களின் இன்னுயிரை அர்ப்பணம் செய்ய வேண்டிய தாயிற்று. சரியானதோர் காயத்தைச் செய்தோம் என்ற உணர்வுடன் கென்னடி உயிர் நீத்தார் என்றால், காரணம் அவரது கொள்கைகளுக்கு தாராளமான விளக்கம் தர பிரதம நீதிபதி வாரன் அங்கிருந்தார்.

இரண்டு உலக மகா யுத்தங்களுக்குப் பின் அமெரிக்கா ஜனநாயகத்தின் அரணாக உலகத்தில் ஆதிக்கம் வகிக்கத் தொடங்கியுள்ளது. முதல் உலக மகா யுத்தத்துக்குப் பின் அமெரிக்கா உட்ரோ வில்சனின் உலக நாடுகளின் கூட்டமைப்புக்கு (league of nations) ஆதரவுதரத் தவறியது. இதனால் தட்டுத் தடுமாறியது. மன்றோ கொள்கை அமெரிக்கக் கண்டத்திற்கு ஒரு வேளை நன்மை பயப்பதாக இருந்திருக்கலாம். ஆனால், இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்காவை தனிமைப்படுத்த பிரயத்தனப்பட்டது ஒரு துக்ககரமான தவறாகும். இது இரண்டாம் உலக யுத்தத்தை அநேகமாக தவிர்க்க முடியாததாக்கிற்று. மடத்தனமான முறையில் ஜப்பான் பேர்ல் துறைமுகத்தைத் தாக்கியதானது அமெரிக்காவை மீண்டும் உலக அரசியல் அரங்கத்தில் கொணர்ந்தது. வெற்றியோடு அமெரிக்கா வெளிவந்ததானது, அமெரிக்கர்களை இன்றைய உலக ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாக்கிற்று. அவர்களின் இந்தப் பங்கை ஒத்துக்கொள்ளச் செய்தது.

'சுதந்திரத்தின் தூதனாக' ஆபிரகாம் லிங்கன் கருதப்படுகின்றார். எல்லாக் கண்டங்களிலும் திரும்பத் திரும்பச் சொல்லப்படுகின்ற சொற்றொடரை உருவாக்கிய ராஜதந்திரி லிங்கனைப் போல் யாரும் இல்லை. உண்மையில் சுதந்திரத்துக்கானதோர் வேத புத்தகத்தையே அவர் உருவாக்கி

விட்டார். "பாதி அடிமைத்துவமும் பாதி சுதந்திரமும் கொண்டு இந்த அரசாங்கம் நீராதரவாக நிலைத்து நிற்க முடியாது." "நான் எவ்வாறு அடிமையாக இருக்க மாட்டேனே அதே போன்று நான் ஒரு எஜமானனாகவும் இருக்கமாட்டேன்." "தேவைப் பட்டவனுக்குக் கொடுத்துவிடு என்பது கிறிஸ்தவ தர்மத்தின் நீதி. ஆனால், தேவைப்பட்டவனிட மிருந்து அதையும் பறித்துக்கொள் என்பதே அடிமைத்துவத்தின் தர்மம்". "நியாயம் வலிமையை உண்டு பண்ணும் என்ற பரிபூரண நம்பிக்கை யோடு இருப்போமாக". இவ்வாறு அந்தத் தலைவனின் பொன் மொழிகளைக் கூறிக்கொண்டே போகலாம். வாஷிங்டனில் உள்ள லிங்கனின் சிலை எளிமையானது. அவரது கெட்டிஸ்பர்க் சொற் பொழிவு சக்தி வாய்ந்தது. இப்படி உள்ளத்தை ஈர்க்கக்கூடிய நினைவுச் சின்னம் வேறு எங்கும் கிடையாது. அரசியல் வாதிகளுக்குப் பலியாகி மனம் உடைந்தவராய் உயிர் நீத்தார் உட்ரோ வில்சன். ஆனால், லிங்கனைத் திறம்படப் பின் பற்றினார். ஐக்கிய நாடுகள் சபை சமாதானப் பாதையைக் காட்டும் கலங்கரை விளக்கம். இந்த அமைப்பின் வெற்றிகளின் பலனைக் கண்டனுப விக்க வெற்றி வீரனாக உயிரோடிருந்தார் பிராங்ளின் ரூஸ்வெல்ட். "நாகரிகம் முன்னேற்றப் பாதையில் செல்லுகையில், நம்மைத் தடுத்து நிறுத்துகின்ற பழமை மதில்களுக்கு அமெரிக்கா ஒரு நாடு என்ற நிலையில் எப்போதுமே எதிர்ப்புத் தெரிவித்து வந்திருக்கிறது. இந்த சரித்திரப் பூர்வமான உண்மையைத்தான் உங்களுக்குச் சொல்ல நினைக்கிறேன். இன்று நாம் நமது குழந்தைகளையும், அவர்கள் குழந்தைகளையும் நினைவில் கொள்ளுவோம். நமக்கு மட்டுமல்ல, அமெரிக்

காவில் இருக்கும் எந்த மனிதனுக்கும் ஏற்படும் நிர்பந்தமான தன்மைப் படுத்தலை நாம் எதிர்க் கிறோம்'' இவ்வாறு 1941ம் ஆண்டு ஜனவரி 6ம் தேதி காங்கிரசுக்கு விடுத்த செய்தியில் அவர் கூறு கிறார். இது காங்கிரசுக்கு மட்டுமல்ல உலகத் திற்கே விடுத்த செய்தியாகும்.

அமெரிக்காவானது உலகமெங்கும் ஜனநாய கத்தைப் பராமரிக்கும் பொறுப்பை தன் மேல் ஏற்றுக் கொண்டது. கொரியாவிலேயோ, அல்லது வியட்நாமிலோ யுத்தம் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் சரிதான். இந்தக் கொள்கையின் விசேஷத் தன்மைபற்றியும், இதன் நியாயத்தன்மை பற்றியும் உலக அபிப்பிராயம் கடுமையாக இரண்டு பட்டிருக்கிறது. எதிர்காலம்தான் தீர்ப்புச் சொல்லவேண்டும். ஏனெனில் அமெரிக்கா வெற்றி அடைந்தாலும், அதன் தீரமிக்க எதிரிகள் வெற்றி பெற்றாலும் வெற்றியைப் போன்று நிர்ணயம் செய்வது வேறு எதுவும் கிடையாது.

என்னவாக இருந்த போதிலும், ஜனாதிபதி பிராங்களின் ரூஸ்வெல்ட் உலகுக்களித்த வாக் குறுதிக் கேற்ப வாழ அமெரிக்கா முயற்சிக் கின்றது. எதிர்காலத்தின் அமைதியை உறுதிப் படுத்துவதற்கும், யுத்தத்தைத் தவிர்ப்பதற்கும் ஐ. ந. சபை நிறுவப்பட்டது. இதன் பூர்வாங்கமான அட்லாண்டிக் சாசனத்தின் கொள்கைகளை நான்கு சுதந்திரங்கள் என்ற அடிப்படையில் அமைத்தனர்.

பேச்சுச் சுதந்திரம்.

உலகத்தில் எங்கணும் தனக்கு இஷ்டப்பட்ட வகையில் ஆண்டவனை வழிபடும் சுதந்திரம்.

வறுமையினின்றும் விடுதலை.

பயத்தினின்றும் விடுதலை.

இவைகளில் வறுமையை ஒழிப்பதில்தான் ரஷ்யா மட்டும் உண்மையாக அக்கறை கொண்டிருக்கின்றது. இதர மூன்று சுதந்திரங்களும் அதற்கு உபயோகமற்றவை. இதுதான் உலகத்தை இன்று எதிரான அணிகளாகப் பிரித்து வைத்திருக்கின்றது. இருசாராருக்கும் அவர்களுக்கே உரித்தான தத்துவங்கள் இருக்கின்றன. இருசாராரும் விஞ்ஞானத்திலும், பொறியியலிலும் மிகவும் முன்னேறியுள்ளனர். கடந்த இரண்டு உலகயுத்தங்களும் ஏற்படுத்தியதைவிட அதிகக் கொடூரமான கேடுகளை விளைவிக்கக் கூடிய மற்றொரு யுத்தத்தைத் தொடங்கப் பயந்த போதிலும் போதிய ராணுவ தளவாடங்களை வைத்திருக்கின்றனர். போராடத் தயாராகவும் இருக்கின்றனர்.

விடுதலையைப் பற்றியும், ஜனநாயகத்தைப் பற்றியும் அமெரிக்கா பிரமாதமாகப் பேசுகின்றது. இருந்தாலும் நீக்ரோ மக்கள் அரசியல் சமத்துவமில்லாமலும், சமூகக் குறைபாடுகளாலும் வருந்திக் கொண்டிருக்கின்றனர். இந்தக் களங்கம் அமெரிக்க ஜனநாயகத்தில் இன்னும் இருக்கிறது என்பதை வருத்தத்துடன் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இனப் பாகுபாட்டு உணர்வு தென் மாநிலங்களில் வேரூன்றியிருக்கிறது. ஆனால், அமெரிக்க அரசு, அரசாங்கம் என்ற முறையில் தன்னால் இயன்றதை செய்கின்றது என்பதையும் சொல்ல வேண்டும். நீக்ரோ மக்களுக்குச் சாதகமான சரித்திரப் பிரசித்தி பெற்ற தீர்ப்பின் மூலம் நீதிபதி வாரன் ஒரு பெரும் சேவையை ஆற்றியுள்ளார். சமூக சுதந்திர மசோதாவை (Civil liberties bill) சட்டமாக்கும் வரையில் கென்னடி உயிர் வாழ அனுமதிக்கப்படவில்லை. தென்பகுதியில் பிறந்து வளர்ந்திருந்த போதும், தனக்கு முந்திய மதிப்பிற்குரிய ஜனாதிபதி

செய்த வேலையைப் பூர்த்தி செய்ய தன்னலானதைச் செய்கிறார் ஜனாதிபதி ஜான்சன். இது ஜான்சனுக்குப் பெருமைதரும் ஒன்றாகும். 1965 மார்ச் மாதம் 15ம் தேதி கூடிய அமெரிக்க காங் கிரஸின் இருசபைகளின் கூட்டுக் கூட்டத்திற்கு விடுத்த "சமூக சுதந்திரங்கள்" செய்தியில்,

"தென் பிராந்திய மண்ணில் ஆழமான வேர் ஊன்றிய மனிதன் என்ற முறையில் இன உணர்வுகள் எவ்வளவு வேதனையைத் தருகின்றன என்பதை நான் அறிவேன். போக்குகளையும், சமூகக் கட்டுக்கோப்பையும் மாற்றுவது எவ்வளவு கடினமானது என்பதையும் நான் அறிவேன்.

ஆனால், நீக்ரோ மகன் விடுதலையடைந்து ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிறது. ஆனால், அவன் இன்னும் பூரணமாக விடுதலை பெற வில்லை.

சமத்துவ வாக்குறுதி கொடுக்கப்பட்டு ஒரு நூற்றாண்டுக்கு மேலாகின்றது. ஆனால், அவனுக்கோ சமத்துவம் கிடையாது.

வாக்குறுதியளிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு நூற்றாண்டும் கடந்து விட்டது. அந்த வாக்குறுதியோ இன்னும் காப்பாற்றப்பட வில்லை.

நியாயம் வழங்க வேண்டிய காலம் வந்து விட்டது. எந்த ஒரு சக்தியும் அதைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. அது வந்துதான் ஆகவேண்டும் என்பது மனிதனின் நோக் கிலும், கடவுள் பார்வையிலும் நியாயமானது. அது செய்யப்பட்டால், அந்த நாள் ஒவ்வொரு

அமெரிக்கனுடையவும் வாழ்வைப் பிரகாசிக்கச் செய்யும் நாளாகும்'' என்று கூறியபோது அவர் எதையுமே கூட்டிக் குறைத்துச் சொல்லவில்லை.

அதே செய்தியில் முதலில்,

“தங்கள் சமூகங்களில், தங்கள் தேசிய அரசு நடவடிக்கை கைக்கொள்வதைத் தடுக்கப் பிரயாசைப் படுபவர்களுக்கு–தேர்தலில் அந்தப் பிரதேச ஆதிக்கத்தை மட்டும் நிலைநாட்ட விரும்புபவர்களுக்குச்–சொல்லவேண்டிய பதில் மிகவும் எளிமையானது.

உங்கள் மக்கள் எல்லோருக்கும் வாக்குச் சாவடிகளைத் திறந்து வையுங்கள்.

அவர்களுடைய தோலின் நிறம் என்னவாக இருந்த போதிலும்—எல்லா ஆண்களும் பெண்களும் தங்களைப் பதிவு செய்து கொள்வதற்கும், வாக்குப் போடுவதற்கும் அனுமதி யளியுங்கள்.

எல்லா பிரஜைகளுக்கும் குடியுரிமையை விஸ்தரியுங்கள். இங்கே எந்த விதமான அரசியல் சட்ட பிரச்சினை கிடையாது. அரசியல் சட்டத்தின் கட்டளை தெளிவாக இருக்கிறது. தார்மீகப் பிரச்சினை எதுவுமில்லை. எந்த ஒரு அமெரிக்கருக்கும் வாக்களிக்கும் உரிமையை மறுப்பது தவறு.

மாநில உரிமைகள், தேசீய உரிமைகள் என்ற பிரச்சினையே இங்கு எழவில்லை. மானிட உரிமைக்கான போராட்டம் மட்டும்தான் இதில் அடங்கியுள்ளது'' என்று கூறியுள்ளார்.

அரசாங்கம் நியாயமான காரியத்தைச் செய்ய தன்னாலியன்ற அளவு முயற்சிக்கவில்லை என்று குறை கூற முடியாது. அமெரிக்காவை மிகவும் மோசமாகக் குறை கூறுபவர்கள் கூடச் சொல்ல முடியாது. தன் உள்ளத்தில் மகாத்மா காந்தியின் போதனைகளை ஏற்றுக் கொண்டவர் ரெவரண்ட் லூதர்கிங். அவர் தனது இனத்தவர்களின் உரிமைகளை நிலைநாட்ட அஹிம்ஸா முறையிலான போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். இப்படிப் பட்ட தலைவர்கள் இருக்கையில் இவர்களின் போராட்டத்தை மெச்சுகின்ற உலகத்தின் முன்னால், பிற்போக்காளர்களான அமரிக்கர்கள் அவமானத்திற்குள்ளாவார்கள். சுதந்திரம், சமத் துவம், மனித உரிமைகள் ஆகியவற்றின் வீரனாக, முழு மகத்துவத்துடன் அமெரிக்காவின் பிம்பம் பிரகாசிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

# 3. நடைமுறையில் குடியாட்சி:

## இந்தியா

உலகத்திலேயே மிகப் பெரிய ஜனநாயகம் என்ற தனிப் பெருமை இந்தியாவுக்கு உண்டு. உலகத்திலேயே மிக நீண்ட அரசியல் சட்டத்தை உடையது என்ற பெருமையும் உண்டு. காலத்தால் பிந்தியது சிறந்ததாக இருக்கும். இது பொதுவான அனுபவமாகும். ஏனெனில், முன்னோர்கள் செய்த தவறுகளைத் தவிர்த்து அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பு அதற்கிருக்கிறது. இந்தியாவுக்கென ஒரு அரசியல் சட்டத்தை வகுக்க அரசியல் நிர்ணயசபை அமைக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் நீண்ட ஆராய்ச்சிக்குப் பின் அந்தச் சபை ஒரு அரசியல் சட்டத்தை வகுத்தது. இந்தியத் தலைவர்கள் பிரிட்டிஷ் அரசியல் சட்டத்தின் கொள்கைகளில் பயிற்சி பெற்றவர்கள். கூடிய மட்டும் பிரிட்டிஷ் அரசியல் சட்டத்தினின்றும் விஷயங்களை எடுத்துக் கொள்வதற்கான மனப்போக்கு ஏற்பட்டது. ஆனால், பிரிட்டனுக்கு எழுதப்பட்டதோர் அரசியல் சட்டம் கிடையாது. இந்தியாவோ எழுத்து மூலமானதோர் அரசியல்

சட்டத்தை வகுத்துக் கொண்டது. பிரிட்டன் பரம்பரை பரம்பரையான முடியரசை ஏற்றுக் கொண்டுள்ளது. இந்தியாவோ, தேர்ந்தெடுக்கப் பட்ட ஜனாதிபதியைக் கொண்ட குடியரசை ஏற்றுக் கொண்டுள்ளது. இது அமெரிக்க முறையைப் பின் பற்றியதாகத்தானிருக்க வேண்டும். இந்த இரண்டு மூலங்களையும் இந்திய அரசியல் சட்டத்தில் இணைப்பதானது எளிதானதாக இருக்கவில்லை. எனவே, இது தடுமாற்றத்தில் முடிவடைந்திருக் கிறது. ரஷ்யப் பொதுவுடமையின் சில அம்சங்க ளாலும் இது மேலும் சிக்கலாகி விட்டது. இது அரசியல் சட்டத்தில் பல திருத்தங்கள் கொண்டு வரவேண்டிய நிலைமையை ஏற்படுத்திற்று. 170 ஆண்டுகளில் அமெரிக்க அரசியல் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட திருத்தங்களைவிட, அதிக மான திருத்தங்களை 15 ஆண்டுகளில் இந்திய அரசியல் சட்டத்திற்குக் கொண்டுவர வேண்டிய தாயிற்று. உயர்ந்த, உன்னதமான லட்சியங்களின் சூழ்நிலையில் உருவான போதிலும் சிக்கல்களை உண்டுபண்ணக் கூடிய ஷரத்துக்கள் இருந்தன. இவை அரசியல் சட்டப் பிரச்சினைகளைக் கிளப்பின. எனவே, இந்தியாவின் உயர் நீதிமன்றத்திற்கு (Supreme court) இங்கிலாந்தின் உயர் நீதிமன்றத் தைவிட முக்கியத்துவத்தை உண்டு பண்ணியது. எனவே, அது அமெரிக்க உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களின் வழிகாட்டுதலைப் பின்பற்றவேண் டியது தவிர்க்க முடியாததாகி விட்டது.

அரசியல் சட்டத்தின் முன்னுரை அமெரிக்க அரசியல் சட்டத்தின் முன்னுரையைப் பின்பற்று கின்றது. சமூக, அரசியல் பொருளாதார கொள் கைகளில் நீதி, எண்ணத்தில் சுதந்திரம், அபிப் பிராய சுதந்திரம், மத நம்பிக்கையிலும், வழிபாட்

டிலும் சுதந்திரம், சம அந்தஸ்திலும், சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதிலும் சமத்துவம், கடைசியாக சகோதரத்துவம்—தனி மனிதனின் கௌரவத்தை மதித்தல், தேசத்தின் ஒருமைப்பாடு ஆகிய கொள்கைகளை வற்புறுத்துகின்றது. இந்த முன்னுரை நல்ல முறையிலேயே உருவாகியுள்ளது. மேற்கத்திய ஜனநாயகங்களின் நல்ல பாரம்பரியத்தில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

அரசியல் சட்டத்தின் மூன்ருவது பகுதி அடிப்படை உரிமைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. சமத்துவத்தை உறுதிப் படுத்துகின்றது (இவ்வாறு தீண்டாமையை ஒழிக்கின்றது) தேசத்தின் எந்தப் பகுதிக்கும் சுதந்திரமாகச் செல்லும் உரிமை, இந்தியாவின் எந்தப் பாகத்திலும் சுதந்திரமாக வசிக்கவும், தங்கிவிடவுமான உரிமை, சொத்துச் சேகரித்துக் கொள்ளவும் அதை விற்றுக் கொள்வதற்குமான உரிமை, எந்தத் தொழிலையும் மேற்கொள்ளவும், எந்த வர்த்தகத் தொழிலையும் வாணிபத்தையும் கைக்கொள்ளும் உரிமை ஆகிய அடிப்படை உரிமைகளை உறுதிப் படுத்துகின்றது.

சொல்லப் போனல், இந்திய அரசியல் சட்டத்தின் மிகவும் தனித்தன்மை வாய்ந்தது அரசியல் சட்டத்தின் நான்காவது பாகமாகும். இது அரசின் கொள்கைகளின் வழிகாட்டும் விதிகள் பற்றிய பகுதி. இவற்றில் பெரும்பாலானவை தவறு எதுவுமில்லாதவை. ஆனல், போதுமான அளவு பொருளாதார சாத்தியக்கூறுகள் இல்லாமல், வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு இளம் ஜனநாயகத்தின் தோள்களில் கடினமான பளுவைச் சுமத்துபவையாக இருக்கின்றன. பதினன்கு வயது வரை கட்டாய இலவசக் கல்வி புகட்டப்பட வேண்டும் என்பது மிகவும் நியாயமான

வழிகாட்டிக் கொள்கையாகும். இந்த நியாயமான கொள்கைகூட சுதந்திரம் அடைந்து 17 ஆண்டுகட்குப் பின்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. "உடலுக்கு ஊறு விளைவிக்கின்றன போதைப் பொருட்கள். மருத்துவக் காரியங்களுக்கு அல்லாமல் இந்தப் போதை பொருட்கள் உபயோகப் படுத்தப் படுவதைத் தடுக்க அரசு முயற்சிக்க வேண்டும்'' என்று விதி 47 கூறுகின்றது. வாசகம் மிகவும் மிதமானது. 'முயற்சிக்க வேண்டும்' என்று மட்டும் வாசகம் குறிப்பிடுகின்றது. மேலும், அமெரிக்காவின் அனுபவத்திற்குப் பின்னும் இப்படிப்பட்ட வழிகாட்டுதலைப் புகுத்துவதில் எந்த விதமான நியாயமும் கிடையாது. இராணுவத்திற்கு இதினின்றும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. பல மாநிலங்களில் மதுவிலக்கு அமுலில் இல்லை. மதுவிலக்கு அமுல் செய்யப்பட்ட மாநிலங்களில்கூட அழிவைத் தரும் விளைவுகளுடன்தான் இதை அமுல் படுத்தியுள்ளன. கள்ளத்தனமான முறையில் மது காய்ச்சுவதைத்தான் உற்சாகப் படுத்தியுள்ளது. இதனால், இது மாநிலங்களில் வளர்ந்தோங்கும் குடிசைத் தொழிலாகிவிட்டது. கள்ளக்கடத்தல் வருவாய் தரும் தொழிலாகி விட்டது. போலீஸாரும் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ இதற்கு ஆதரவும் தருகின்றது. ஏனெனில், சம்பளம் என்ற பிரதம வருவாயைவிட அதிக வருவாய் தரக்கூடிய இரண்டாம்தர வருவாயாக இருக்கிறது. முன்னால் இருந்ததைவிட அதிகப் படியானவர்கள் குடிப் பழக்கத்திற்காளாகிவிட்டனர். சுங்கவரியில் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எல்லாவற்றையும்விட மோசமானது என்னவெனில், சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும் கொடுக்கப்படும் மதிப்பும், மரியாதையும்

குறைய வழிவகுத்து விட்டது. மந்திரிகளே குடிப் பழக்கத்திற்காளாகியுள்ளனர் என்றும் தெரிகின்றது. மதுவிலக்கு பாமர மக்களுக்கே யல்லாமல், பணக்காரர்களுக்கல்ல என்று ஒருவர் சொல்லியிருப்பதாகக் கேள்வி. அமெரிக்கா மதுவிலக்குக் கொள்கையை கடைப்பிடித்த இருபது ஆண்டுகளில் அனுபவித்த தீமைகளை இந்தியாவும் அனுபவிக்கின்றது. அமெரிக்காவில் பகுத்தறிவு வெற்றி பெற்றது. மதுவிலக்கு ரத்துச் செய்யப்பட்டது. ஆனுல், பயங்கர விளைவுகள் ஏற்படாமலும் இல்லை. ஆண், பெண் இளம் குற்றவாளிகள் அதிகப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்கப் பண்பாடு உடைந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்ருேம். பொது மதுக் கடைகளினின்றும் மக்கள் கவனத்தைத் திருப்புவதற்கு வேண்டி பால் கடைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை பொது சுகாதாரத்திற்குப் பெரும் நன்மையை உண்டுபண்ணியுள்ளன என்ற உண்மையையும் ஒத்துக் கொண்டாக வேண்டும். மதுவிலக்குக் கொள்கை தோற்றுப் போய்விட்டது என்று காங்கிரஸ்காரர்களே பொது மேடைகளில் ஒப்புக்கொள்ள ஆரம்பித்துள்ளனர். உதாரணமாக மகாராஷ்டிர முதல்வர் அவ்வாறு ஒப்புக்கொண்டுள்ளார். ஆனுல், மதுவிலக்கு அபரிமித வருவாய் தரும் ஊற்று என்று கண்டுகொண்ட காங்கிரஸ்காரர்களாலும், கொள்கையை உருவாக்கும் டெல்லித் தலைவர்களாலும் அவர் தடுக்கப்பட்டிருக்கிருர்.

சந்தேகத்திற்கிடமான வேறு ஒரு வழிகாட்டுதல் என்னவெனில் இந்தியை அரசாங்க மொழியாக ஆக்குவது பற்றியதாகும். அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த 15 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தி நிர்வாக மொழியாக வேண்டும் என்ப

தாகும். மொழிப் பிரச்சினையைப் போல் வேறு எந்தப் பிரச்சினையும் அவ்வளவு கடுமையாகவும், ஆவேசமாகவும் விவாதிக்கப்படவில்லை என்பது ஒத்துக்கொள்ளப் பட்டுள்ளது. பண்டித ஜவஹர்லால் நேருவும், மௌலானா அபுல்கலாம் ஆசாத்தும்கூட, இந்தி மொழிக்குச் சாதகமாக மொழி வெறி தலைவிரித்தாடியதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர் ; அதிர்ச்சியடைந்தனர். இப் பிரச்சினை வெளிப்படையான வாக்கெடுப்புக்கோ, மக்கள் முன்பு கொண்டுவரப்பட்டிருந்தாலோ இது நிறைவேற்றப்பட்டிருக்காது என்பது அநேகமாக நிச்சயம். தாங்கள் ஒரு சோதனைக்குட்பட்டிருப்ப தாகத் தலைவர்கள் உணர்ந்தார்கள். அதனால், சட்டசபை என்ற மேலான சபையினால் ஏகமனதாக் ஒப்புக்கொள்ளப்பட்டதோர் சட்டத்தை உலகத் தின் முன்னால் வைக்கவேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆதரவு தேடுவதில்—சாதாரண இந்திய வார்த்தைகளில் சொல்வதானால் கண் துடைப்புச் செய்வதில் வெற்றி பெற்றார்கள். இந்தி மொழியை இந்தியாவின் நிர்வாக மொழியாக ஆக்குவது என்ற சமரசத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. எழுத்துக்களைப் பொறுத்தமட்டில் தேவ நாகரி எழுத்துக்கள் பதினைந்து ஆண்டுகட்குப் பின்னும் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டும் எனும் அளவுக்கு விவேகம் நிலவியது. இந்தக் கால வரைக்கு முன்பே தென்னிந்தியாவிலும், வங்கத்தி லும் நடந்த கிளர்ச்சிகளுக்கு முன்பு அரசாங்கம் பணிய வேண்டியதாயிற்று. ஆங்கிலம் துணை— நிர்வாக மொழியாகத் தொடர அனுமதிக்கப் பட்டது. இது பண்டித நேரு வாய்மொழியாகக் கொடுத்த வாக்குறுதி. ஆனால் டில்லியில் உள்ள யாரோ ஒருவர் தவறு செய்தார். 1965 ஜனவரி

26ம் தேதி வாக்கில் செய்திகள் இந்தி மொழியில் மட்டுமே அனுப்பப்பட்டது. தென்னிந்தியர்களின் ஆயிரக்கணக்கானவர்களின் கோபத்தைஇது கிளரி விட்டது. அநேக அருமையான உயிர்கள் இழக்கப் பட்டன. அநேகர் காயமுற்றனர். லட்சக்கணக் கான ரூபாய் பெறுமானமுள்ள கட்டடங்களும், சொத்துக்களும் பாழாக்கப்பட்டன. இந்தியர்களின் அஹிம்ஸா தர்மத்தின் மீதான துக்ககரமான ஒரு குறிப்பாகும் இது. ஆனால் மறு பரிசீலனை செய்யும் அளவுக்கு நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. டில்லியில் உள்ள இரண்டு தென்னிந்திய மந்திரிகள் பதவியை ராஜினாமாச் செய்தார்கள். பண்டித நேரு வின் உறுதிமொழி சட்டப்பூர்வமாக உறுதிப் படுத்தப்படும் என்று உறுதி கொடுத்த பின்னர் தான் திரும்பவும் பதவியேற்றார்கள். இந்தப் பிரச்சினை இன்னும் எரிமலையாகவே இருக்கிறது. வட இந்தியாவில் இந்தி பேசும் மாநிலங்களில் இந்தி நிர்வாக மொழியாக இருக்க வேண்டும். இந்தி மொழி பேசாத மாநிலங்களில், அந்த மாநிலங்களே இந்தியை விரும்பி ஏற்றுக்கொள்ளும்வரை ஆங்கிலம் நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கை, இந்தி கட்டாய மொழியாக இருப்பதோடு எல்லா பிராந்திய மொழிகளும் நிர்வாக மொழியாக—ஒரு வேளை ஆங்கிலமும்கூட கட்டாய மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்று பரிணமித்துள்ளது. மேல்மட்டத்தில் பண்பாடாத தோர் சிந்தனைப் போக்கு நிலவுகின்றது. பிரிட்டிஷ் காரர்களை எதிர்த்து நாம் நடத்திய போராட்டம் இந்தியாவின் ஒற்றுமைக்காக அல்ல, பிராந்திய மொழியின் உயர்வுக்காக என்பது போல் அநேக மாகத் தோன்றுகின்றது. நமது அரசியல் சட்டத் தின் முன்னுரையில் வலியுறுத்தப்பட்ட தேச

ஒருமைப்பாட்டை இது சின்னுபின்னப் படுத்து கின்றது. மொழிப் பிரச்சினை தீர்வுபெருத ஒரு பிரச்சினையாக இருக்கிறது. முடிவான தீர்வு என்ன வென்று சொல்வது கடினமானதாகவே இருக் கிறது. இந்தியாவின் ஒருமைப்பாட்டை நம்மால் காப்பாற்ற முடியுமா அல்லது பதினெட்டாம் நூற் ருண்டில் இருந்ததைப் போன்று பிளவுண்டு வீழ்ந்து விடுவோமா என்று கூறுவது கடினமாக இருக்கிறது. எந்த ஒரு இந்தியனும் மொழிபெயர்ப் பாளனின் உதவியின்றி வேறு ஒரு இந்தியனுடன் பேச முடியவில்லே. இதுதான் இன்று நிலவும் அரசியல் சமூகக் குழப்பங்களுக்கு முன்னுேடி. அரசியல் சட்டத்தை வகுக்கும்போது சிறிதளவு தெளிவான, நேர்மையான சிந்தனை ஏற்பட்டிருக்கு மெனில் இந்தக் குழப்பங்களே எல்லாம் தவிர்த் திருக்க முடியும்.

அடிப்படைக் கொள்கைகளும், வழிகாட்டுதல் களும் (Directives) வழக்காடுவதற்கான—சில சமயங்களில் அற்ப விஷயங்களுக்காகக்கூட வழக் காடுவதற்கான லாபகரமான ஊற்றுக்களாக இருக் கின்றன.

அரசியல் சட்டம் பழைமைப் போக்குக் கொண்ட பிரிட்டீஷ் வழியிலேயே செல்கின்றது. சட்டமன்றம் இரு சபைகளேக் கொண்டது. லோக் சபை, ராஜ்ய சபை. ராஜ்ய சபை முதலில் ராஜ்யங் களின் கௌன்சில் (Council of states) என்று அழைக்கப்பட்டது. ஏனெனில் அதன் உறுப்பினர் கள் மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சாதாரணமாக அவசரம், அல்லது தவருக உருவாக்கப்பட்ட மசோதாக்களுக்கு நல்லதோர் தடையாக இருக்கும்

என்று எதிர்பார்க்கப்பட்டது. தத்துவார்த்த ரீதியாக இரு சபைகளும் சமமான அந்தஸ்தும், உரிமைகளும் கொண்டவை. ஆனால், காங்கிரஸ் கட்சிக்கு மாநிலச் சட்டமன்றங்களிலும், மத்திய சட்டமன்றத்திலும் ராட்சச பலம் வாய்ந்த பெரும் பான்மை இருக்கிறது. எனவே ராஜ்ய சபையில் ஒருவித தாழ்வு மனப்பான்மை உருவாகியுள்ளது. இதனல், ராஜ்ய சபையில் உள்ள பல முன்னணி அங்கத்தினர்கள் லோக் சபைக்கே தேர்ந்தெடுக்கப் படுவதை விரும்புகின்றனர். பிரிட்டனில் காமன்ஸ் சபைக்கும், பிரபுக்கள் சபைக்கும் நடந்த பழைய மோதுதல்களை தெளிவாய் ஞாபகப்படுத்தும் வகையில், ஒவ்வொரு சபையும் தனது அந்தஸ்தைப் பற்றியும், உரிமைகள் பற்றியும் அதீத—உணர்வு கொண்டதாய் இருக்கிறது. ஆனால், அப்படிப் பட்ட விரோதத்தை நியாயப்படுத்தக் கூடிய எந்த விதமான சரித்திரப் பின்னணியும் இந்திய சட்ட சபைகளுக்குக் கிடையாது. ராஜ்ய சபையானது தேவையற்ற சபை என்று அடிக்கடி விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. இப்போது உள்ள சபையின் அமைப்பைப் பார்த்தால் இந்த விமர்சனத்தில் ஓரளவு நியாயமிருக்கிறது. ஏனெனில் ராஜ்ய சபையிலும், லோக் சபையிலும் பெரும்பான்மை யான ஒரு கட்சியின் அபிப்பிராயமே பிரதிபலிக் கின்றது. அச்சபை தொழில், வியாபாரம், நிர்வாகம், கலாச்சாரக் கழகங்கள், தொழில்துறை, கிராமத்தொழில் ஆகிய துறைகளில் உள்ளவர்கள் போன்ற பல்வேறு நலன்களைப் பிரதிபலிக்கும் மக்களைக் கொண்டதாக இருந்தால் வேறுவிதமாக இருக்கும். அப்படிப்பட்ட சுதந்திரமான அபிப்பிராயங்களைக் கொண்டவர்களின் அமைப் பாக இருந்திருந்தால், அரசாங்கத்தால் கொண்டு

வரப்பட்டு லோக்சபையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஒரு தடையாக இருந்திருக்கும்.

பிரிட்டிஷ் காமன்ஸ் சபையினுல் உறுதிப் படுத்தப்பட்ட பழக்க வழக்கங்கள் ஏகதேசம் இந்தியாவில் உள்ள சட்ட மன்றத்திலுைம் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. இது சட்ட மன்றங்களின் தாயகத்துக்குப் பெருமைதரும் ஒன்ருகும். மே, அன்சன், டைசி போன்ற நிபுணர் களின் அபிப்பிராயங்கள் அடிக்கடி எடுத்துக் கூறப்படுகின்றன. அவற்றின் அடிப்படையிலான தீர்ப்புக்களும் சொல்லப்படுகின்றன. பார்லி மெண்டரி நடைமுறைகளும் பின்பற்றப்படு கின்றன. உதாரணமாக சட்ட சபைக்குள் வரும் போதும், வெளியே போகும்போதும் சபா நாயகர்களுக்கு தலை வணங்குவது. இது மிகவும் வசீகரமானதாக இருக்கிறது. சபாநாயகரின் கௌரவத்தையும், அதிகாரத்தையும் குறிக்கும் நாகரிகச் சின்னமாயமைந்த பிரிட்டிஷ் அரசியல் சட்டத்தைப் போன்ற இந்திய அரசியல் சட்டம் ஒன்றுபோல் இல்லையாயினும் மசோதாக்களை நிறைவேற்றுவதற்கான நடைமுறை பிரிட்டிஷ் நடைமுறையிலேயே அமைக்கப் பட்டுள்ளது. தத்துவார்த்தரீதியாக ராஜ்ய சபை பெரியவர்களின் சபை என்று அழைக்கப் படுகின்றது. ஆனுல், உண்மையில் இதை நியாயம் என்று சொல்ல முடியாதபடி அநேக இளைஞர்கள் இச்சபையில் இடம் பெற்றுள்ளனர். சில சமயம் ராஜ்ய சபை அங்கத்தினரின் சராசரி வயது, லோக் சபை அங்கத்தினரின் சராசரி வயதை விடக் குறைவான தாக இருந்தது என்று சொல்லப்பட்டது.

இளைஞர்களின் ஆர்வத்தோடு, ஆரோக்கிய மற்ற தன்மையில் சுரவேகத்தில் இந்தியப் பார்லி

மெண்ட் சட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. இது துரதிர்ஷ்டமானது. ஒரு சட்டத்தை நிறைவேற்றிவிடுவதன் மூலம் உலகத்திலுள்ள எல்லாத் தீமைகளும் அழித்தொழிக்கப் பட்டு விடுமென்று சிறுபிள்ளைத்தனமான முறையில் அது நம்புகின்றது. மதுவிலக்கும், தங்கக் கட்டுப்பாடும் அவை தீர்வு காணப்படுவதற்குப் பதில் மேலும் அநேக பிரச்சினைகளைத்தான் உண்டு பண்ணி விட்டிருக்கின்றன. முன்பு எல்லாம் இருந்ததைவிட தார்மீக ரீதியாக நாடு இன்று மிகவும் பின்னடைந்திருக்கிறது. ஒப்புக்கொள்ளக்கூடிய அளவுக்கு ஊழல் மலிந்துவிட்டது. 'லைசென்ஸ்' முறை மேலும் இதற்கு உற்சாகத்தை மூட்டியுள்ளது. சமூக சீர்திருத்தச் சட்டத்துறையில் நல்லதோர் ஆரம்பம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, விபச்சாரத்தடை சம்மந்தமான சட்டங்கள். குழந்தைகள் பாதுகாப்பு, பொதுவாகச் சமூகப் பாதுகாப்பு, இதற்கென முழு அந்தஸ்துப் பெற்ற மந்திராலயமும் இருக்கிறது. சட்டங்களின் எண்ணிக்கை ஒருபுறமிருக்க, அவை மிகவும் மோசமான முறையில் தயாரிக்கப்படுகின்றன என்பதும் பிரசித்தம். இவை அடிக்கடி எண்ணற்ற திருத்தங்கள் செய்யப்படுவதன் அவசியத்தையும் ஏற்படுத்தியுள்ளன. ஒரு காரணம் என்னவென்ருல் மந்திரிகள் மசோதாக்களை நிறைவேற்றுவதற்கு மிகவும் அவசரப்படுவதால், தொகுப்பாளருக்குப் போதிய அவகாசம் தரப்படுவதில்லை. மோசமான முறையில் தொகுக்கப்பட்ட சட்டங்கள் நீதி மன்றங்களின் வேலையை அதிகப்படுத்துகின்றன. சமீபத்தில மேற்கு இந்திய வழக்கறிஞர்கள் சங்கத்தில் பேசுகையில் அட்டர்னி ஜெனரல் திரு. சி. கே. டப்தாரியே "சட்டங்கள் இயற்றப்

படுகின்றன; மென்மேலும் இயற்றப்படுகின்றன; இயற்றப்பட்டுக் கொண்டே இருக்கின்றன" என்று கூறவேண்டியிருந்தது. இவற்றின் வளர்ச்சியை, டில்லி பம்பாய் போன்ற நகரங்களின் வளர்ச்சிக்கு ஒப்பிட்டார். இவற்றில் "பாதைகளோ இதர வசதிகளோ இல்லாமல் குடியிருப்பு இடங்கள் தோன்றுகின்றன. போதிய இடைவெளி இல்லாமல் இருபது அடுக்குவரை மாடிகள் எழுந்து கொண்டிருக்கின்றன". இந்திய சட்டக் குழுவின் மேற்கு சங்கக் கிளையின் நிர்வாகத் தலைவர், நீதிபதி டி. என். சின்ஹா இன்னும் வெளிப்படையாகவே கூறினர். "ஒரு மனிதன் தனது பொறுப்புக்கள் என்ன என்பதை முன்கூட்டியே தெரிந்துகொள்ளக் கூடிய நிலையில் இருக்க வேண்டும். உடனடியாக அவனது பொறுப்புக்கள் என்ன என்பதையும் தெரிந்துகொள்ளக் கூடிய நிலையில் இருக்க வேண்டும். இதனுல், அதனேடு ஒத்துப்போகக் கூடிய வகையில் தனது வரவு செலவுக் கணக்குக்களைத் தாயார் செய்துகொள்ள முடியும். இந்த விஷயத்தில் நமது சட்ட சபையினர் ஒரேயடியாக நம் காலை வாரிவிட்டு விட்டார்கள் என்பதைச் சொல்ல நான் வருத்தப் படுகிறேன். நமது வரிவிதிப்புச் சட்டங்கள் நீளமானவையாக வும், சிக்கல் வாய்ந்தவையாகவும், தேவையற்ற நடைமுறைகளைக கொண்டவையாகவும், வரி கொடுக்கும் சாதாரண மனிதனுல் புரிந்துகொள்ள முடியாதவையாகவும் இருக்கின்றன. நாளுக்கு நாள் மோசமடைந்துகொண்டே போகின்றன. எங்கேயாவது இதுபோய் நிற்கவேண்டும். நிர்ணய மற்ற விலைவாசி உயர்வையும், தாங்கமுடியாத வரிச் சுமையையும் எந்த ஒரு சமுதாயமும் பொறுத்துக் கொண்டே இருக்க முடியாது" என்று 1964ம்

ஆண்டு ஜூன் மாதம் 4ம் தேதி கல்கத்தாவில் கம்பெனிகளின் காரியதரிசிகள், நிர்வாகிகள் ஆகியவர்கள் கூட்டத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

உண்மையில் வருமான வரிச் சட்டத்தின் பழைய பிரிட்டிஷ் முறை கைவிடப்பட வேண்டும். பல வருடங்களுக்கு முன்பு நிறைவேற்றப்பட்ட அடிப்படைச் சட்டத்தின் அமைப்பில் எண்ணற்ற மாற்றங்களை—சில சமயம் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்துவது குழப்பத்தையே உண்டு பண்ணுகிறது. மொழியிலும், சட்டத்திலும் குழப்பத்தை உண்டு பண்ணுகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் புதிய புதிய வருமான வரிச் சட்டத்தை ஏற்படுத்துவது இதைவிடச் சாலச் சிறந்தது. பழைய அடிப்படைச் சட்டத்தில் எண்பது சதவீதத்தை அது தன்னுள் கொண்டிருக்கலாம். ஆனால், முன்னும் பின்னும் திருப்பிப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படாது. ஒருவேளை மிகவும் குழப்பம் தரக்கூடிய சட்டம், திருத்தங்களோடு கூடிய கம்பெனிச் சட்டமாகும். இச்சட்டம் நிறைவேற்றப்பட்டபோது அதைப் புரிந்துகொண்ட சட்டசபை உறுப்பினர்கள் மிகச் சிலரே என்று நான் நிச்சயமாகச் சொல்வேன். சட்ட நிபுணர்களும், வக்கீல்களும், இந்தக் குழப்பத்தின் காரணமாகப் பணம் சேர்த்துக்கொண்ட போதிலும், இச்சட்டம் மிகவும் குழப்பமானதாகவே இருக்கிறது என்பதை வெளிப்படையாக ஒத்துக் கொண்டுள்ளார்கள். இச்சட்டத்தை உருவாக்கியவர்களுக்கு அதன் பொருள் என்ன என்று தெரியும் என்று ஒருவர் எதிர்பார்க்கலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் அலெக்ஸாண்டர் ஹாமில்டன் 'பெடரலிஸ்ட்' என்ற பத்திரிகையில் எழுதியதைப் பொறுத்தமாக நீதிபதி சின்ஹா குறிப்பிடுகின்றார்.

"சட்டங்கள் தங்கள் இஷ்டப்படி தேர்ந்தெடுக்கப் பட்டவர்களால் உருவாக்கப் பட்டால் சட்டங்கள் புரிந்துகொள்ள முடியாத அளவுக்குப் பெரிதானவையாகவும், தொடர்பற்றவையாகவும் இருந்தால் மக்களுக்குப் பயன்படாது. சட்டங்கள பிரகடனப் படுத்தப் படுவதற்கு முன்பே ரத்துச் செய்யப்பட்டாலோ, திருத்தப்பட்டாலோ, அடிக்கடி மாற்றங்களுக்குள்ளாலுலோ இன்று சட்டம் என்னவாக இருக்கிறது என்று எந்த ஒரு மனிதனுலும் புரிந்துகொள்ள முடியாது. நாளை அது எப்படியிருக்கும் என்று ஊகிக்கவும் முடியாது."

"அமெரிக்க நிபுணரின் இந்த ஆழமான குறிப்பு இன்றைய கம்பெனிச் சட்டத்திற்கு முற்றிலும் பொருந்தும்" என்ற நீதிபதி சின்ஹாவின் அபிப்பிராயம் மிகுந்த தெளிவைத் தருகின்றது.

புதிதாக விடுதலை அடைந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் பிரிட்டனைப் போன்ற ஜனநாயகம் மிகுந்த விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனுல், இது எதேச்சாதிகாரத்தை நோக்கியோ அல்லது ஒரு கட்சி ஆட்சியையோ நோக்கிப்போய்க் கொண்டிருக்கிறது என்பது துக்ககரமான அனுபவமாக இருக்கிறது. மேற்கத்திய நாடுகளின் எண்ணப்படி ஜனநாயகம் என்பதையே நிராகரிப்பதாகும் இது. இந்தியாவில் ஜனநாயகக் கட்டுக்கோப்பு நிலைத்து நிற்கின்றது என்பது இந்தியாவுக்குப் பெருமை தரும் ஒன்று. இந்தப் பெருமை ஜவஹர்லால் நேருவையே சாரும். அவர் 1947 ஆகஸ்ட் 15ம் தேதி சுதந்திரம் கிடைத்த நாள் முதல், 1964 மே 27ல் அவர் இறக்கும் வரையில்

பிரதமராக இருந்திருக்கிறார். ஆனால், பண்டித நேருவின் ஆளுகைகூட நமது ஜனநாயகத்தின் அடிப்படை பலவீனங்களைப் புரிந்து கொள்ளாத படி குருடர்களாக்கி விடவில்லை. பிரிட்டனிலும், பழைய பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலும் அமெரிக்காவிலும் ஜனநாயகத்தை வெற்றிபெறச் செய்த இரு கட்சிமுறை இந்தியாவில் எப்போதும் அமுலில் இருந்ததே கிடையாது. பலமான எதிர்க் கட்சியாகச் செயல்பட முடியாத அளவுக்கு அதிகமான கட்சிகள் இருக்கின்றன. ஆனால், எதிர்க்கட்சிகளின் கூட்டு பலம் காங்கிரஸ் கட்சியின் பலத்தைவிட மிகவும் குறைவாக இருந்தால் நிலைமை இன்னும் மோசமாக இருக்கும். ஒரு சில நெருக்கடியான சந்தர்ப்பங்களைத் தவிர மற்ற சந்தர்ப்பங்களில் காங்கிரஸ் கட்சியானது நேருவின் எண்ணங்களுக்கும், கொள்கைகளுக்கும் பக்திப் பூர்வமாய் கீழ்ப் படிந்திருந்தது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் குழுக்களின் நிர்பந்தங்களுக்கு அவர் வளைந்து கொடுத்தார். உதாரணமாக மொழிவாரி மாநிலக் குழுவை அமைக்க அவர் சம்மதித்தார். இது மொழி வாரி மாநில அமைப்பில் முடிந்தது. பிரிட்டனுக்கு எதிரான போராட்டத்தை நடத்தியதன் மூலம் இந்தியாவை சுதந்திரத்திற்கு இட்டுச் செல்வதற்கான பொறுப்பு முழுவதையும் அது தாங்க வேண்டியிருந்தது. இந்தச் சரித்திரப் பூர்வமான உண்மையின் ஒளியில் காங்கிரஸ் கட்சியின் வலிமையைப் புரிந்துகொள்ள முடியும். இக்கட்சியின் மதிப்பு அளவிடற்கரியதாக இருக்கிறது. இன்றும்கூட காங்கிரஸ் அரசாங்கங்கள்மீது அதிருப்தி கொள்பவர்கள் கூட காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் அல்லது வாக்களிக்காமலேயே இருந்து விடவேண்டும் என்ற நிலைதான் இருக்கிறது.

ஏனெனில், அரசாங்கம் அமைக்கக் கூடிய அளவில் வேறு எந்தக் கட்சியும் தயாராக இல்லை.

ஒரு ஆரோக்கியமான கட்சி முறையை அபி விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்பு சுதந் திரம் அடைந்த ஆரம்பகால கட்டத்தில் இருந்தது. தனக்கே உரித்தான அரசியல் புத்திக் கூர்மையுடன் சுதந்திரம் அடைந்தவுடன் காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்று காந்திஜி ஆலோசனை கூறத் தயங்கவில்லை. அந்த யோசனை பொறுத்த மானதும், ஞானமுள்ளதுமாகும். ஏனெனில், இந்தி யாவில் அரசியல் முன்னேற்றம் அடைவதற்கு வேண்டித்தான் காங்கிரஸ் கட்சியானது நிறுவப் பட்டது. ஆரம்பத்தில் பிரிட்டீஷ் பேரரசின்கீழ் குடியேற்ற நாடுகளின் அந்தஸ்தை அடைய வேண்டும் என்று இந்தியத் தலைவர்கள் ஆசை கொண்டார்கள். இது விரும்பத் தகாததாக இருந்தது. எனவே, 'காந்திஜியின் தலைமையில் பூரண சுதந்திரத்திற்குக் குறைவானது எதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று காங்கிரஸ் கட்சி அறிவித்தது. தோற்கடிக்கப்பட்ட போதிலும் ஹிட்லர் பிரிட்டீஷ் பேரரசைப் பலவீனப் படுத்து வதில் வெற்றி கண்டான். நாட்டிற்கு எவ்வளவோ சேவை செய்திருந்தபோதும் பிரிட்டீஷ் வாக்காளர் களால் சர்ச்சில் நிராகரிக்கப்பட்டார். அனுதாப முள்ள தொழிற்கட்சிப் பிரத்மர் டௌனிங் தெருவில் உள்ள 10வது வீட்டில் குடியேறினர். இந்த எதிர்பாராத விஷயங்கள் காரணமாக 1947ம் ஆண்டு சுதந்திரம் அடைவதில் இந்தியா வெற்றி பெற்றது. நாடே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியது. காந்திக்கும், அவரது தளகர்த்தர்களான நேரு, பட்டேல் போன்றவர்களுக்கும் நன்றி செலுத்தி யது. பிரிட்டீஷ்காரர்கள் காலத்தில் எல்லா இந்தியர்

களுக்கும் ஒரே ஒரு குறிக்கோள் மட்டும் இருந்தது. பிரிட்டிஷ்காரர்களை இந்தியாவை விட்டு வெளி யேற்றுவது என்பதுதான் அது. கொள்கைப் பிரச்சினையே எழவில்லை. இந்தியர்கள் ஒன்ருகவே இணைந்திருந்தனர். காங்கிரஸ் கட்சியில் பயிற்சி பெருத எந்த ஒரு இந்திய அரசியல்வாதியும் கிடை யாது. பின்னர் வேண்டுமானுல் அவர்கள் தங்களது தாய்க் கட்சியிலிருந்து விலகிப் போயிருக்கலாம். காங்கிரஸ் கட்சியானது தனது பணியைச் செய்து விட்டது. எனவே அது கலைக்கப்பட வேண்டும் என்று உண்மையான அரசியல்வாதியான காந்திஜி அறிக்கை விடுமளவுக்குத் தைரியம் கொண்டிருந்தார். இது ஒரு ஞானமுள்ள ஆலோ சனை. ஏனெனில், பலதிறப்பட்ட சக்திகள் தாங்களா கவே பிரிந்து இணைந்திருக்கும் இந்திய ஜனநாயக மும் நிலையான கட்சி முறையோடு ஆரம்பித்திருக் கும். ஆனுல் அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்று ஆர்வம் கொண்ட தலைவர்கள் வாக்காளர் மத்தியில் ‘காங்கிரஸ்’ என்ற வார்த்தைக்கு இருக்கும் மந்திர சக்தியை உணர்ந்திருந்தனர். எனவே காங்கிரஸ் கோஷங்களுடன் தேர்தலில் குதிப்பதை விரும்பி ஞர்கள். இயற்கையாக மிருக பலம்கொண்ட பெரும்பான்மையைப் பெற்ருர்கள். பிற்காலத் திலும் அந்தப் பெரும்பான்மையோடு வெற்றி பெற்றனர். இன்னும் சில ஆண்டுகளுக்கும் இந்தப் பெரும்பான்மை இருக்கும். காங்கிரஸ் கொள்கை களில் அதிருப்தி கொண்ட மக்கள் காங்கிரஸ் கட்சி இல்லாவிட்டால் வேறு எந்தக் கட்சி இருக்கிறது என்று துக்கத்தோடு வினவுகின்றனர். உண்மை யிலேயே அதன் இடத்தை நிரப்ப வேறு எந்தக் கட்சியும் இல்லை. இருந்தாலும், காங்கிரஸ் கட்சி தனது பழம் பெருமையின் காரணமாக மட்டுமே

உயிரோடு இருக்கிறது. ஜனநாயகம் கோரும் உண்மையான நோக்கில் பார்த்தால் அதை ஒரு கட்சி என்றே கூற முடியாது. அதிகாரத்திற்கும், பதவிக்கும் மடைதிறந்து விடப்பட்டிருக்கிறது. எனவே, எல்லா ரக மக்களையும் கொண்ட கலப்படமாக இருக்கிறது. அதில் முதலாளிகள் இருக்கிறார்கள். சோஷலிஸ்டுகள் இருக்கிறார்கள். அதில் இந்து மகாசபைக்காரர்கள் இருக்கிறார்கள். பல ரகப்பட்ட சோஷலிஸ்ட்டுகளும், பொதுவுடமையாளர்களும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல தரப்பட்ட சக்திகளோடு, 'ஜனநாயக அமைப்பில் காங்கிரஸ் கட்சி எப்படிச் செயலாற்ற முடிகிறது?' இதற்கான பதில் மிகவும் சுலபமானது. பண்டித நேருவின் மாயசக்தி வாய்ந்த மகத்துவம் கட்சியை ஒன்றுபடுத்தியிருந்தது. அவருக்கு நிச்சயமாக சோஷலிஸத்தின்மீது அனுதாபம் உண்டு. அவருடைய உள்ளத்தின் அமைப்பில் பொதுவுடமையின் சாயலும் இருந்தது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஜனநாயகப் பிரியராக இருந்தார். அதுதான் பலாத்காரத்தை வலியுறுத்தும் பொதுவுடமைக் கெதிராக பார்லிமெண்டரி ஜனநாயகத்துக்காக நிற்பவராக அவரை ஆக்கியது. இதன் பலாபலன் என்னவெனில் இந்தியாவில் உள்ள ஜனநாயகம் ஜனநாயகக் கட்டுக்கோப்புடையதாய் இருக்கின்றது. ஆனால், நடைமுறையில் ஒரு மனிதனுக்குக் கீழ்ப்படிந்து அவர் எண்ணங்களை ஏற்றுகொள்ளும் ஒரு கட்சியும், அந்த மனிதனின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய வாக்காளர்களையும் கொண்ட ஒரு தனி மனிதனின் உதார குணம்கொண்ட சர்வாதிகாரமாக இருக்கிறது. பார்லிமெண்ட் கட்சிக் கட்டுப்பாடும், கட்சி விப்பு முறையும் புரட்சிகரமான திட்டங்

களைக்கூட பெருவாரியான பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுவதைச் சாத்தியமாக்கின. விமர்சனம் செய்வதற்கு எதிர்க்கட்சிகளுக்கு முழுமையான சுதந்திரமும் வழங்கப்பட்டது. ஆனல், எதிர்க் கட்சிகளும், சிதறிக் கிடக்கின்ற சுயேச்சையாளர்களும் ஒன்று சேர்ந்தாலும் கூட இவர்கள் எதிர்ப்பெல்லாம் வெறும் கொசுக்கடியைப் போன்றவைதான். எதிர்க்கட்சிகள் காங்கிரசை விமர்சனம் செய்வது போல் ஒன்றையொன்று விமர்சனம் செய்யலாம். ஒட்டு மொத்தமாக பொதுவுடமைக் கட்சியானது சிநேகப் பூர்வமான எதிர்க் கட்சியாகவே செயல்பட்டு வந்திருக்கிறது. சீன இந்தியாவை ஆக்கிரமித்த காலத்தில் மட்டும் இடதுசாரிக் கம்யூனிஸ்ட்கள் என்று சொல்லப்படுபவர்களில் பெரும்பாலோர் வெளிப்படையாகச் சீனத்தை ஆதரித்தனர். அவர்களில் பெரும்பாலோர் சிறைகளில் தள்ளப்பட்டனர். காங்கிரஸ் கட்சியானது 'சோஷலிஸ பாணி' சமுதாய அமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. அது எதைக் குறிக்கின்றது என்பது அவரவர் யூகத்தைப் பொறுத்தது. இதற்குப்பின் சோஷலிஸ்ட் கட்சியினர் தனித்த கட்சியாக இருப்பதற்கான காரணத்தையே இழந்து விட்டனர். உண்மையான எதிர்ப்பு வகுப்புவாதிகளிடமிருந்துதான் வருகின்றது. ஆனல், அழிந்து போன கோட்பாட்டை அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். உண்மையில் ஜனநாயக இந்தியாவில் அவர்களுக்கு இடமே இல்லை. இந்த உண்மைகளை எல்லாம் ஒன்றுபடுத்திப் பார்த்தால், பலன் என்னவெனில் நேருவின் உருவம் பேருருவாகப் பரிமளிக்கின்றது. நாம் ஒரு ஜனநாயகத்தைக் கொண்டிருக்கிறோமா அல்லது ஒரு கட்சி ஆட்சி செய்யும் 'பாஸிஸ' ஆட்சியைக் கொண்டிருக்

கிறேமா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. காந்திஜியின் யோசனைகளை ஏற்றுக்கொண் டிருப்போமே யானுல், ஜனநாயகம் தழைக்க ஒரு வாய்ப்பிருந்திருக்கும். அடிப்படைக் கொள்கையில் சரிசமமாகப் பிரிந்திருக்கும் கட்சிகளை உடையதாக இருந்திருக்கும்.

கிட்டத்தட்ட 75 சதவீதத்தினர் கல்வி வாசனை யற்றவர்கள். கல்வியறிவு பெற்றவர்கள் என்று கூறப்படும் 25 சதவீதத்தினரில் பெரும்பான்மை யானவர்கள் போதிய கல்வி அறிவு பெற்றவர்கள் என்று சொல்வதற்கில்லை. அரசியல் சட்டத்தின் வழிகாட்டுதல் அனுமதித்திருந்தாலும், வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கியது பெரும் தவறு என்று பலர் நினைக்கின்றனர். இது ஏற்றுக் கொள்ள முடியாத அபிப்பிராயமாகக் கூடப் படலாம். கல்வியறிவற்ற பெரும்பான்மையான வாக்காளர்கள் இருப்பது தேர்தலை அளவிற்கதிக மான செலவுடையதாக்குகின்றது. லோக் சபையில் ஒரு இடம் பெறுவதற்கு வேண்டி எனது நண்பர் ஒருவர் இருபதினுயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டியதாயிற்று. லோக் சபையில் ஒரு இடத் தைப் பெறுவதற்கு ஒரு லட்சம் ரூபாய் தேவை யாகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் சமீபத்தில் ஒத்துக் கொண்டிருக்கிறார். இந்தப் பணம் எங்கிருந்து வருகிறது? பெரும்பாலும் கட்சி நிதியே. ஆனுல், இந்தப் பணமும் போதாது. ஒரு அபேட்சகர் தனது தேர்தலுக்குப் பெரும் அளவு பணத்தைச் செலவு செய்ய வேண்டியிருந் தால், இந்தத் தொகையை எந்த வழியிலேனும் ஈடு செய்துவிட வேண்டும் என்ற ஆசை பிறக்கவும் செய்யும்.

இந்திய ஜனநாயகம் எழுதப்பட்ட அரசியல் சட்டத்தைச் சார்ந்து நிற்கின்றது. இந்த உண்மை அதற்கு ஒரு வகையான நிலையான தன்மையைக் கொடுத்திருக்கிறது. ஆனால், நாட்டின் உயர்மட்ட நீதிமன்றம் அரசாங்கத்திற் கெதிரான தீர்ப்பை வழங்கி விட்டால், தனக்கிருக்கும் பெரும்பான் மையை வைத்துக்கொண்டு சுலபமாக புதிய சட்டங்களைப் பிறப்பிக்கின்றது. நீதிமன்றத் தின் தீர்ப்பை கவைக்குதவாதாக்கி விடுகிறது. அரசியல் சட்டத்தில் மாறுதல் செய்வதற்கு மூன்றில் இரண்டு பகுதி பெரும்பான்மை தேவை. இதுகூட சுலபமாக மாற்றப்படுகிறது. இந்தப் பதினேழு ஆண்டு குறுகிய கால கட்டத்தில் அரசியல் சட்டத்தில் அடிக்கடி மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள நீதி மன்றம் அமெரிக்க நீதிமன்றத்தைப் போன்றே பலம் வாய்ந்தது. ஆனால், ஒரு கட்சி ஆட்சி காரணமாக அது பலவீனமானதாக இருக்கிறது.

குழந்தைப் பருவத்தில் இருக்கும் இந்திய ஜன நாயகத்தை ஆராயும்போது ஒரு நகைச்சுவை ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு பையன் தன் தந்தையிடம் அரசியல்வாதி என்றால் பொருள் என்ன என்று கேட்டான். “அது வெகு எளிதானது மகனே. நமக்கு இதுவரையில் இருந் திராத துன்பங்களிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள உதவி செய்யப் போவதாகச் சொல்லும் புத்திசாலியே அரசியல்வாதி” என்றாராம். இருந் தாலும், குறைகள் இருந்தபோதும், பார்லி மெண்டரி ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற காவலரி நாடு என்று பெருமையுடன் நாம் சொல்லிக் கொள்ளலாம். காலம் அதன் பக்கத்தில் இருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் மதிப்புக்

குறையும்போது, தனிப்பட்டவர்கள் மேல் கொள்ளும் பக்தியைவிட கொள்கைகள்தான் பெரியவை என்ற எண்ணம் மேலோங்கும். முழுப் புகழுடன் இந்திய ஜனநாயகம் மலரும் பிரிட்டனின் உண்மையான மாணவனுகத் திகழும்.

இந்திய அரசியல் சட்டத்தில் ஜனுதிபதியின் நிலை என்ன என்பதை ஆராய வேண்டும். இந்தப் பெயர் அமெரிக்க ஜனுதிபதியைத்தான் ஞாபக மூட்டுகின்றது. ஆனுல், அவருக்கு அளிக்கப் பட்டுள்ள நிலை அதிகாரமே அற்ற பிரிட்டிஷ் அரசரின் நிலைதான். இதன் விளைவு அவ்வளவு தூரம் திருப்திகரமானதாக இல்லை. நமது அரசியல் சட்டத்தை வகுத்தவர்கள் பிரிட்டிஷ் அரசியல் சட்டத்தால் கவரப்பட்டவர்களாக இருந்தார்கள். இந்தியாவின் நிலைமையைப் பொறுத்தமட்டில் இங்கே அரசருக்கு இடமே இல்லை. ஒரு தேர்ந் தெடுக்கப்பட்ட ஜனுதிபதியை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது. ஆனுல், பிரிட்டிஷ் அரசரைப் போன்றே அரசியல் சட்டத்தில் பெயரளவுக் கான தலைவர் என்ற முறையிலேயே பார்க்கப் படுகிருர். இந்தியா ஒரு பெரும் நாடு. இருந்தாலும் குழந்தைப் பருவத்தில் இருக்கும் இந்த நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனுதிபதிக்கு பிரிட்டிஷ் அரசரைச் சுற்றி இருக்கும் பெருமையும புகழும் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமும் கிடையாது. அமெரிக்க ஜனுதிபதிக்குக் கொடுக்கப்பட்டதைப் போன்ற மாபெரும் அதிகாரங்களும் இவருக்குக் கொடுக்கப்படவில்லை. ஜனுதிபதி இந்தியாவின் முதல் குடிமகனுக இருக்கிருர். இந்தியாவின் மதிப்பிற்குரிய பிரதிநிதியாகவும் இருக்கிருர். இந்த மதிப்புமிக்க பதவிக்கப்பால், அவருடைய தனித்தன்மையினுல் கிடைக்கும் கௌரவம்

மட்டுமே அவருக்கு கிடைக்கின்றது. இதனுல், நமது முதல் ஜனுதிபதி டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் இந்தியாவுக்கு வெளியே அதிகம் அறியப் படாதவராக இருந்தார். இருந்தும், சுதந்திரப் போராட்டத்தில் அவர் ஆற்றிய பணியின் காரண மாகவும், சட்டமன்றத்தின் தலேவராக இருந்த காரணத்தாலும் நாட்டுமக்கள் மத்தியில் அவருக்குப் பெரும் மதிப்பு இருந்தது. அன்னுரின் தன்னடக்கமான குணமும், பணிவும் அப்போ திருந்த அரசின் கொள்கைகளுக்கு மனப்பூர்வமாக ஒத்துப்போக வைத்தன. பத்து ஆண்டுகளில் இரண்டு தடவை மட்டுமே உறுதியுடன் தனது நிலேயை வற்புறுத்தியுள்ளார். ஒன்று இந்திச் சட்ட மசோதா. இதை நாட்டு மக்கள் முன்பு வைக்க வேண்டும் என்று விரும்பினுர். இரண்டாவது மத சம்மந்தமாக அவருக்கிருக்கும் உரிமை பற்றிய சிறியதோர் பிரச்சினேயாகும். இப்போதைய ஜனுதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகளிலிருந்து முற்றிலும் விலகி யிருந்தார். ஆனுல், ஒரு தத்துவஞானி என்ற உலகப் புகழ் அவருக்கிருந்தது. குறைந்தபட்சம் எல்லா நாடுகளிலும் உள்ள அறிவாளிகள் மத்தியில் அவர் புகழ் பெற்றிருந்தார். அவர் சிறந்த நாவன்மையுடையவர். அவருடைய தேச பக்தி யைப்பற்றி எல்லோரும் அறிந்ததே. இதனுல், அவர் ஜனுதிபதி ராஜேந்திரப் பிரசாத்துக்குப் பிறகு ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பண்டித நேரு பற்றி தாம் செய்த அறிவார்ந்த ஆராய்ச்சியில் திரு. பிராங் மொராய்ஸ் ஒரே ஒரு இடத்தில் மட்டும் அப்போது உப-ஜனுதிபதியாக இருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தனக்குத் தேவையான ஆலோசனே கிடைக்கும்

என்று உறுதிப்பட்டால்தான் பண்டித நேரு டாக்டர் இராதாகிருஷ்ணனைக் கலந்தாலோசிப்பார் என்று அதில் குறிப்பிட்டுள்ளது. எனவே, டாக்டர் இராதாகிருஷ்ணன் சுயேட்சையாகத் தனது அபிப்பிராயங்களை வெளியிடமாட்டார் என்பது புலனாகின்றது. தன்னிடம் கேட்கப்பட வில்லையெனில், தன் ஆலோசனைகளைக் கூறு வதற்கு எல்லை மீறிச் செல்லமாட்டார் என்ற உள்ளர்த்தமும் இதில் தொனிக்கின்றது. சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்ட நெருக்கடியான காலகட் டத்தில் மட்டும் தன் நிலையை வற்புறுத்தியுள்ளார் என்ற பெருமையுண்டு. இதனால், அநேக காங்கிரஸ் காரர்களும், பொதுமக்களும் மந்திரிசபையில் சில மாறுதல்கள் செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

அது எந்த நிலைக்கு வந்திருந்தபோதிலும், இந்திய அரசியல் சட்டம் யாதொரு அதிகாரமும், அந்தஸ் தும் இல்லாத ஜனாதிபதிக்கு மட்டும் இடம் கொடுக் கிறதா என்பது வெளிப்படையானதோர் கேள்வி யாக இருக்கிறது. டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் துக்கே இதில் சந்தேகங்கள் ஏற்பட்டன. பொது நிர்வாகக் கழகத்தில் பேசும்போது ஒரு தடவை, ஜனாதிபதியின் உண்மையான நிலை என்ன, அதிகா ரங்கள் எவை என்பது பற்றி ஒரு ஆராய்ச்சி நடத்த வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டார். ஆனால், அப்போதிருந்த பிரதமர் அப்படிப்பட்ட தோர் ஆராய்ச்சி நடைபெறுவதைத் தடுத்துவிட் டார். இது, பிரிட்டீஷ் அரசியல் சட்டத்தைவிட அமெரிக்க அரசியல் சட்டம் இந்தியாவுக்குப் பொருந்தி வராதா என்று பலர் விவாதிப்பதைத் தடுத்துவிட முடியவில்லை. மாறுபாடுகள் இருந்த போதும், பெருமதிப்பிற்குரிய ராஜாஜி போன்ற

தலைவர்கள் ஜனுதிபதிக்கு மேலும் அதிகப்படியான அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்குச் சாதகமாக அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். நாட்டின் நடவடிக்கைகளில் ஜனுதிபதிக்கு உண்மையாகவே ஒரு உரிமை இருக்கிறது. அரசியல் சட்டத்தின் வாசகங்கள் இதற்கு இடமளிக்கின்றன என்று சட்ட நிபுணர்கள் வாதிடலாம். இப்போது வேண்டுமானுல் ஏதும் இல்லாதது போல் தோன்றலாம். நெருக்கடியான சமயங்களில் இந்தப் பிரச்சினை முக்கியத்துவம் பெறலாம்.

மாநிலங்களில் இருக்கும் கவர்னர்கள் ஜனுதிபதியின் பிரதிநிதிகள். இவர்களுடைய அந்தஸ்தும், அதிகாரமும் ஜனுதிபதியின் அதிகாரமற்ற தன்மையையே பிரதிபலிக்கின்றன. பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் அதிகாரத்தின் நடுநாயகமாக இருக்கக் கூடிய அளவிலான அந்தஸ்தும், அதிகாரமும் இருந்தன. இப்போது அப்படியில்லை. ஆடம்பரமும், பகட்டும் கொண்ட பொம்மைகளாகத் தான் பெரும்பாலும் கவர்னர்கள் இருக்கிருர்கள். முக்கியமானதாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி கட்டடங்களுக்குக் கல் நாட்டு விழாக்களிலும், கட்டடத் திறப்பு விழாக்களிலும் பெரும்பாலும் அவர்கள் காணப்படுகின்றனர். மாநாடுகளைத் தொடங்கி வைக்கின்றனர். ஜனுதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்படும் போது தான் கவர்னர்களுக்கு உண்மையிலேயே அந்தஸ்தும் அதிகாரமும் இருக்கின்றன. உதாரணமாக ஒரிசா, அல்லது கேரளா இங்கு கூட மத்திய அரசின் கட்டளைக் கேற்பச் செயல்பட வேண்டியுள்ளது. எல்லா அதிகாரமும் அந்தஸ்தும் முதல் மந்திரியின் கைகளுக்குச் சென்று விட்டன. கவர்னர்கள் தொடர்ந்து இருக்கவேண்டுமா என்ற

கேள்வி எழுமானுல் ஆச்சரியப் படுவதற்கொன்று மில்லை. தங்களுடைய சொந்த மாநிலங்களில் தொல்லை தரும் அரசியல் வாதிகளை அடைக்கும் இடமாகவும், தேர்தலில் தோற்றுப் போனுல் அவர்களின் கடந்த காலச் சேவைக்குக் கொடுக்கப்படும் பரிசாகவும் இந்தப் பதவி பரிணமித்து விட்டதில் ஆச்சரியமில்லை. மேற்கத்திய ஜனநாயகங்களிலும், கம்யூனிஸ்ட் நாடுகளிலும் கவர்னர் பதவியாளர்கள் அரசியல் சட்டப்படி முக்கியமான பாத்திரம் வகிக்க வேண்டியிருக்கிறது. திறமை மிக்க கவர்னர்களால் ஆரோக்கியமான ஜனநாயகத்தை உருவாக்குவதிலும், தரமான நிர்வாக முறையை நிலைநிறுத்துவதிலும் ஆக்கப் பூர்வமான பணியைச் செய்ய முடியும்.

## ரஷ்யா

தங்கள் அரசியல் அமைப்பை ஜனநாயகமாகப் பார்ப்பதில் பொதுவுடமையாளர்கள் ஆசை கொண்டுள்ளனர். ஜனநாயகம் என்றுல் பார்லிமெண்டரி ஜனநாயகம் என்று நாம் பார்ப்போமேயானுல், பொதுவுடமையாளர் இவ்வாறு உரிமை கொண்டாடுவது முற்றிலும் நியாயமற்றதாகும். ஏனெனில் பொதுவுடமைக் கட்சியினர் ஒரே ஒரு கட்சியை அதுவும் தங்கள் கட்சியைத்தான் அங்கீகரிக்கின்றனர். இதர கட்சிகள் எல்லாம் தடை செய்யப் பட்டிருக்கின்றன. லிங்கனின் கருத்துப் படிப் பார்த்தால்கூட இதை ஜனநாயகம் என்று சொல்ல முடியாது. ஏனெனில் பொதுவுடமையாளர்கள் அல்லாதவர்கள் மக்கள் என்ற தகுதியில் சேர்க்கப் படுவதில்லை. என்னவானுலும், பொதுவுடமையாளர்கள் அல்லாதவர்கள் ஒழிக்கப் படுகின்றனர். ரஷ்யாவிலும், சீனுவிலும்

ஏற்பட்டது போல் லட்சக்கணக்கானவர்கள் ஒழிக்கப்படுகிறார்கள். எஞ்சி நிற்பவர்கள் பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான். இவ்வாறு, மக்களுடைய அரசாங்கம், மக்களுக்காக என்ற கோணத்தில் லிங்கனின் ஜனநாயக அமைப்பை அடைந்தவர்களாகிறார்கள். ஆனால் மக்களாலான அரசாங்கமாக எப்போதாவது இருக்குமா, என்பது சந்தேகம்தான். ஏனெனில் பொதுவுடமைக் கட்சி அமைப்பு தலைமை பீடத்தினின்றும் கடுமையாகக் கண்காணிக்கப்படும் ஒன்றாக இருக்கிறது. ஒருவகையான சர்வாதிகாரம் உருவாவது தவிர்க்க முடியாததாகிறது. அரசியல் ரீதியாக பொதுவுடமை ஜனநாயகம் எனப் பேச முடியுமோ என்னவோ, பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளது. அதன் முடிவான பண்பாட்டு பட்டியலில் 'சுதந்திரம்' என்பது காணப்படவில்லை. இருந்தாலும், சமத்துவமும், பாதுகாப்புமுள்ளதோர் நற்செய்தியாக மக்களைக் கவருகின்றது. பார்லிமெண்ட் என்பதைப் போன்றே 'சோவியத்' என்ற வார்த்தை கேந்திர இடத்தை வகிக்கின்றது. ஆரம்பத்தில் ரஷ்ய மொழியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த ஒரு சபையும் இவ்வாறுதான் அழைக்கப்பட்டது. பொதுவுடமை புகுத்தப்பட்ட பின்னர் உழைப்பாளி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை என்றாயிற்று. கிராமப்புற மக்கள் என்ற விவசாயிகளும், தொழிலாளர்களும்—கட்சியின் தலைமை பீடத்தை இயக்குகின்ற ஒரு சில அறிவாளிகள் அடங்கிய சபை என்றும் பொருள் கற்பிக்கப்பட்டது.

பொதுவுடமை அரசியல் தத்துவத்தில் சில அடிப்படைக் கொள்கைகள் உள்ளன. முதன்

முதலாக தேசீய இனங்களின் சுதந்திரமான அபி விருத்தியை அது வற்புறுத்துகின்றது. ரஷ்யாவின் அரசியல் நிலை காரணமாக இது தேவைப்பட்டது. ஜாரின் ரஷ்யா பரந்ததோர் பேரரசாக இருந்தது. தனிப்பட்ட பல்வேறு நாடுகளாகப் பிரிந்திருந்தது. பொதுவுடமைக்குள் அவர்கள் ஈர்க்கப்பட வேண்டு மெனில் அவைகளின் முக்கியத்துவத்தை அங்கீ கரிக்க வேண்டியதாயிற்று. பல்வேறு தேசீய இனங்களை ஒத்துக் கொள்ளும்போது பிரதேச மொழிகளையும் ஒத்துக்கொள்ள வேண்டி வந்தது. தத்துவார்த்த ரீதியில் தேசங்கள் தங்களுக்கேற்ற தேசீய அமைப்புக்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் ஒத்துக்கொள்ளப்பட்டது. ரஷ்யாவின் மூலை முடுக்கெல்லாம் பொதுவுடமைக் கட்சியின் அமைப்புக்கள் அமைக்கப்பட்டன. இதனுல், நடை முறையில் இந்தச் சுதந்திரம் பொதுவுடமைக் கட்சி யின் அமைப்புக்களுக்கு மட்டுமே என்ருயிற்று. மாஸ்கோவிலுள்ள சோவியத்துகளுக்கு மட்டுமே முக்கிய அதிகாரம் கொடுக்கக்கூடிய அளவில் இப் புதிய பொதுவுடமைப் பேரரசு அமைக்கப்பட்டது. இதனுல், தேசீய இன மொழிகளின் வளர்ச்சியோடு ரஷ்ய மொழியும் கட்டாய மொழியாக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் மார்க்ஸும் ஏங்கல்சும் லெனி னும் பொதுவுடமைக் கொள்கை சர்வதேசத் தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்று எண்ணினர். ஆனுல், நடைமுறை வளர்ச்சியில் ஸ்டாலின், மாசேதுங் ஆகியவர்களின்கீழ் சர்வ தேசக் கொள்கை என்பதற்குப் பதிலாக, பெரும் பாலும் தேசியத் தன்மை வாய்ந்ததாயிற்று. ஆனுல் பொதுவுடமை அகிலத்தை ஏற்படுத்துவது என்ற கொள்கை கைவிடப்படவில்லை. எனவே, பொது வுடமையின் பின்னணியில் தொழிலாளிவர்க்க சர்வ

தேசீயம் என்ற நோக்கம் எப்போதும் இருந்து கொண்டுதானிருக்கிறது. இதன் பொருள் என்ன வெனில் உலகத்திலுள்ள தொழிலாளிவர்க்க நலன் கருதி சிநேகபாவத்துடனும், சகோதரபாவத்துட னும் இருக்கவேண்டும் என்பதாகும். ரஷ்யப் புரட்சி யின்போது எல்லாப் பக்கங்களிலும் முதலாளித்துவ நாடுகளால் சூழப்பட்டிருந்தால் எந்த ஒரு பொது வுடமை நாடும் நிலைத்து நிற்க முடியாது என்ற அச்சம் ஏற்பட்டிருந்தது. எனவே, எல்லா நாடு களிலும் பொதுவுடமைக் கிளர்ச்சியை உண்டு பண்ண வேண்டுமென்று ஒரு ஆசை ஏற்பட்டது. எந்த ஒரு முதலாளித்துவ நாடும் இதற்குச் செவி சாய்க்காததால் ரஷ்யாவானது தேசீய பொதுவுட மையை விருத்தி செய்வதோடு திருப்தியடைந்தது. ஒவ்வொரு நாட்டிலும் பொதுவுடமைப் பகுதிகளை ஏற்படுத்துவது, தக்க சந்தர்ப்பத்தில் அவை புரட்சியின் கூர் முனைகளாகச் செயல்படும் என்றும் கருதப்பட்டது. இதைப் பொருத்தமட்டில் சீனு வானது மிகவும் சரியான மாணுக்கன் என்பதை நிரூபித்துவிட்டது. அதன் கொடுங்கரங்கள் கொரியா, வியத்நாம், இந்தோனேஷியா ஆகிய பிரதேசங்கள் மீது நீண்டது. எதிர்கால நோக் கோடு ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பொதுவுடமைக் கட்சிகளுக்கும் பொருளுதவி செய்கிறது. இதனுல் பொதுவுடமை நாடுகள் ஜனநாயக நாடுகளுள் போட்டியிடுகின்றன. தற்காலிகமாக சகவாழ்வுக் கொள்கையை மிகுந்த ஞானத்தோடு ஒரு அரசியல் தந்திரமாக சோவியத் ரஷ்யா ஏற்றுக்கொண் டுள்ளது. சீனுவோ புதிதாக மதம் மாறியவனின் வேகத்தோடு இன்றும் சக்திவாய்ந்த பொது வுடமைப் பேரரசாக இருக்க வேண்டும் என்பதற் காக முயற்சி செய்கிறது.

ஒவ்வொரு துறையிலும் ஆதிக்க உச்சியை அடைந்து உள்ளது ரஷ்யா. இந்தியாவுக்கு முக்கியமாகத் தேவைப்படும் கவர்ச்சிகரமான படிப்பினையாகும் இது. ஏனெனில், இந்தியாவில் இருப்பது போன்ற நிலைமைகள் இருந்தபோதுதான் ரஷ்யப் புரட்சி ஆரம்பமானது. விவசாயம் பிரதான தொழிலாகக் கொண்ட கிராமங்களையுடைய நாடுகள் தாம் இரண்டுமே. மூட நம்பிக்கையின் எல்லையில் நின்றவைகள். பெருமளவுக்கு தெய்வ பக்தியுள்ள நாடுகள் சுறுசுறுப்புள்ள அறிவாளிகள் மேல் மட்டத்தில் இருந்தபோதிலும் இரண்டு நாடுகளிலும் பெரும்பான்மை மக்கள் படிப்பு வாசனையற்றவர்கள். அறை நூற்றுண்டு காலத்திற்குள் உலகத்தின் உச்ச நிலைக்கு வந்துவிட்டது ரஷ்யா. இந்த நூற்ருண்டின் ஆரம்ப காலத்தில் முன்னணியில் நின்ற பிரிட்டிஷ் பேரரசையும் முந்திக்கொண்டு விட்டது. கல்லாமை முற்றிலுமாக துடைத் தெரியப்பட்டு விட்டது. தொழில்கள் பிரமிக்கத் தக்க அளவில் அபிவிருத்தியடைந்துள்ளன. தொழில் துறையில் அமெரிக்காவைத் தோற்கடித்து விடவில்லை. ஆனல், அதைவிட எந்த அளவுக்கும் குறைந்துவிடவில்லை. ராணுவத் துறையில் அமெரிக்கா எல்லாவற்றிற்கும் மேலான இடத்தில் இருப்பதுபோல் தோன்றுகிறது. ஆனல், தனது இரும்புத் திரைக்குப் பின்னுல் இருந்துகொண்டு என்ன என்ன ஆச்சரியமான காரியங்களை ரஷ்யா செய்யப் போகிறதோ என்று யாராலும் யூகிக்க முடியவில்லை. ரஷ்யாவின் வியத்தகு செயல்களைப் பார்க்கும்போது, எவ்வளவு சுருக்கமாக இருந்த போதிலும் அதன் அரசியல் அமைப்புப் பற்றிய ஆராய்ச்சி முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில், அதன் ராணுவ, பொரு

ளாதார, கலாச்சார அபிவிருத்திகள் எல்லாம் அதன் பாதுகாப்புப் போர்வையான அரசியல் அமைப்பின் காரணமாகவே சாத்தியமாகின்றது. இது மிகவும் சிக்கலான ஒன்ருகும். ரஷ்யாவுக்கு வெளியே உள்ள வெகு சிலரால்தான் இதைப் புரிந்துகொள்ள முடியும்.

பொதுவுடமையாளர்கள் ஜாரிஸ்ட் ரஷ்யாவி னின்றும் கிடைத்த பல்வேறு தேசீய இனங் களுடன் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டி யிருந்தது. அரசியல் சட்டம் நான்கு விதமான தேசீய அரசுகளை அங்கீகரிக்கின்றது.

1. யூனியன் குடியரசுகள்: ஒவ்வொரு யூனியன் குடியரசும், தொழிலாளர், விவசாயி களைக் கொண்ட ஒரு தேசீய சோவியத் சோஷலிஸ அரசாகும். தன்னிச்சையான முறையில் இணை கின்ற சோவித் யூனியனின் ஒரு பகுதியாகும். எல்லா யூனியன் குடியரசுகளுக்கும் சமமான அந் தஸ்து, உண்டு (கார்பின்ஸ்கி எழுதிய சோவியத் ரஷ்யாவின் சமூக, அரசு அமைப்பு என்ற புத்தகம். பக்கம் 71). அதற்கென தனியான அரசியல் சட்டம் உண்டு. தனியான மொழியும் உண்டு. அதற்கென தனியான சட்டங்களும் உண்டு. பிர தேசத்தின்மீதும் ராணுவத்தின் மீதும் ஆதிக்கம் வகிக்கின்றது. வெளி நாடுகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் முடியும். உக்ரேனியன் குடியரசும், பைலோ ரஷ்யன் குடியரசும், ஐக்கிய நாடுகள் சபையைத் தோற்றுவித்த சான்பிரான் ஸிஸ்கோ மாநாட்டுக்கு அழைக்கப்பட்டன என்று சொல்லப்படுகின்றது. இது எல்லா பிரிட்டீஷ் குடி யேற்ற நாடுகளுக்கும் விடுக்கப்பட்ட அழைப்புக்கு ஒப்பானதாகும். சுதந்திரமடைவதற்கு முன்ஞல் இந்தியாவுக்கும் இப்படிப்பட்ட அழைப்பு விடப்

பட்டது. சோவியத் ரஷ்யாவின் மொழியாக ரஷ்ய மொழியை எல்லோரும் படித்தாக வேண்டும் என்பதும், சோவியத் யூனியனுல் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு முதலிடம் கொடுக்கப் பட வேண்டும் என்பதுவும் குறிப்பிடப்பட வேண்டிய விஷயங்களாகும். ஒவ்வொரு குடியரசுக்கும் பிரிந்து போகும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளது என்பதுவும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். ஆனல், சர்வ வல்லமை கொண்ட கூட்டு அரசாங்கத்தின் முன் இந்த உரிமை அமுல் நடத்தப்படுமா என்பது கேள்விக்குரிய ஒன்ருகும்.

2. தன்னுட்சிப் பிராந்தியங்கள் சிறு பான்மையினரைக் கொண்டவை. இவை ஒரு குடியரசுக்குள் இருக்கும். உதாரணமாக கோமிஸ், இது போன்று பதினேழு குடியரசுகள் இருக்கின்றன.

3. தன்னுட்சிப் பிராந்தியங்கள், எண்ணிக்கையில் மிகக் குறைந்த தேசீய குழுக்களைக் கொண்டவை இவை. உதாரணமாக அடிஜேய் தன்னுட்சிப் பிராந்தியம். யூத தன்னுட்சிப் பிராந்தியம்.

4. தேசீய பிரதேசங்கள் இன்னும் சிறிய குழுக்களைக் கொண்டவை. அவைகளுக்கே உரித்தான தனித் தன்மை வாய்ந்த தேசீயத் தன்மை கொண்டவை.

இந்த விவரங்கள் வெளியுலகத்திற்கு தெரியவே தெரியாது. மாஸ்கோவில் உள்ள சமஷ்டி அரசின் வலிமை மிக்க கட்டுக் கோப்புக்குள் பெரிதும், சிறிதுமான பல்வேறுபட்ட குழுக்கள் இணைக்கப்பட்டுள்ளன. ரஷ்யாவின் இந்த முயற்சி, நாடுகளின் பல்வேறுபட்ட தன்மை வாய்ந்த அரசுகள், இதன் சிறந்த உதாரணமாகும்.

இந்த தேசீய அமைப்புக்கள் முக்கியமானவை. இருந்தாலும் கீழ்மட்டத்தில் குறுகிய தேசீய வரம்புக்குள் செயல்படுகின்றன. ரஷ்யாவை உலகத்தில் இன்று இவ்வளவு வல்லமை உடையதாக்கியது மாஸ்கோவில் உள்ள மத்திய அரசுதான். சோவியத்தின் அமைப்பு ஒரு பிரமிட் கோபுரம் போல் இருக்கிறது. அடிமட்டத்தில் கிராமப்புறங்களில் உள்ள சிறு சோவியத்துக்களாலும், மேல் மட்டத்தில் 'சோவியத் ரஷ்யாவின் சுப்ரீம் சோவியத்தும் இருக்கின்றது. சரியான ஜனநாயக மாதிரியிலான இரண்டு சபைகளைக் கொண்டது. முதல் சபை யூனியனின் சோவியத். 300,000 பேருக்கு ஒரு பிரதிநிதி வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டது. இரண்டாவது சபை தேசீய இனங்களின் சோவியத். ஒவ்வொரு யூனியன் குடியரசினின்றும் 25 பிரதிநிதிகள் இதில் இடம் பெறுகின்றனர். ஒவ்வொரு தன்னுட்சிக் குடியரசினின்றும் 11 பிரதிநிதிகளும், ஒவ்வொரு தன்னுட்சிப் பிராந்தியத்தினின்றும் 5 பிரதிநிதிகளும், தேசீயப் பிரதேசங்களிலிருந்து 1 பிரதிநிதியும் இதில் இடம் பெறுகின்றனர். ரஷ்யாவானது பல தேசீய இனங்களைக் கொண்டது என்பதை மனதில் கொண்டால்-இரண்டாவது சபையானது நாடுகளின் பிரதி நிதித்துவ சபையாக இருப்பது முற்றிலும் நியாயமானதே என்பது புலனுகும்.

எல்லா மட்டத்திலுமான பிரதிநிதிகள் சோவியத்துகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிருர்கள். ஆனுல், வாக்குப்பதிவு செய்யும் உரிமை மட்டும் எல்லா பொது அமைப்புக்களுக்கும், உழைக்கும் மக்களின் சங்கங்களுக்கும் தொழிற் சங்கங்களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும், வாலிபர் கழகங்களுக்கும், கலாச்சார கழகங்

களுக்கும் மட்டுமே கொடுக்கப்படுகிறது. தொழிலாளர்கள் தங்களது அமைப்புக்களின் மூலமே வாக்குப்பதிவு செய்கின்றனர். உதாரணத்துக்கு இராணுவப் பிரிவுகள், கூட்டுப் பண்ணையிலும் கிராமங்களிலும் உள்ள விவசாயிகள், அரசாங்கப் பண்ணை விவசாயிகள். ரஷ்யப் புரட்சி ஏற்பட்ட ஆரம்ப காலங்களில் பெரும் பகுதி மக்களுக்கு நடை முறையில் வாக்குரிமை இல்லாமல் இருந்தது. உதாரணமாக ஜார் ஆட்சியில் இருந்த பிரபுக்களின் குடும்பத்தினர், குலக்குகள் அல்லது நில உடமையாளர்கள், சுருக்கமாகச் சொல்லப் போனால் பொதுவுடமைக் கட்சியைச் சேராத எல்லோருமே இக்கால சட்டத்தில் இவ்வாறு வாக்குரிமை இல்லாமல் செய்யப்பட்ட மக்கள் அழிக்கப் பட்டார்கள். மக்களின் விரோதிகள் என்று கொல்லப்பட்டார்கள். அல்லது சைபீரியாவுக்கு நாடு கடத்தப் பட்டார்கள். லட்சக்கணக்கானவர்கள் ஒடுக்கப்பட்டார்கள். நாட்டைத் துறந்து அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் புது வாழ்வு தொடங்குவதே மேல் என்று கொண்டார்கள். பிரபுக்கள் வாடகைக் கார் ஓட்டிகளாக வேலை பார்க்கலாம். சீமாட்டிகள் ஹோட்டல்களில் வரவேற்புப் பெண் மணிகளாகப் பணிபுரியலாம். உண்மையில் உடம்பையும் உள்ளத்தையும் காப்பாற்றுவதற்கு எந்த வேலையும் நல்லதே. அரசியல் நம்பிக்கையைப் பொறுத்த மட்டில் அரை நூற்றாண்டுக்குப் பின்னும் ஏகதேசம் ஒரே கொள்கை உடையதாய் இருக்கிறது என்று ரஷ்யா உரிமை கொண்டாடலாம். எதிர்ப்பாளர்களும் இருக்கலாம். ஆனால் அவர்கள் அடக்கப்பட்டு விட்டார்கள். அவர்கள் தகப்பனே மகனை நம்பாத, சகோதரனை நம்பாத பயபீதியுள்ள சூழ்நிலையில் வாழுகின்றனர்.

தேர்தல்களும் சுதந்திரமாக நடைபெறவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும். எவ்வளவு இடங்கள் காலி விழுகின்றனவோ அதே அளவுக்கான பிரதிநிதிகள்தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எனவே, எல்லாத் தேர்தல்களும் ஏகமனதாகவே நடைபெறுகின்றன. அட்லி பிரபு நகைச் சுவையுடன் ரஷ்யாவின் தேர்தலை ஒரு குதிரை மட்டும் ஓடுவதற்கு அனுமதிக்கப்படும் குதிரைப் பந்தயத்துக்கு ஒப்பிட்டார்.

நிர்வாகத்துறையைப் பொறுத்தமட்டில் இரண்டு சபைகளுடையவும் கூட்டுக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் மந்திரி சபை இருக்கிறது. பொது அமைதியை நிலை நாட்டுவது, ராஜ்யங்களின் நலன்களைப் பாதுகாப்பது, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது, ராணுவச் சேவைக்கு அழைக்கப் படுவோரின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வது, சோவியத் யூனியனின் பொது ராணுவ அமைப்பைக் கண்கணிப்பது, அந்நிய நாட்டு உறவுத் துறையில் பொதுவான வழி காட்டுதலை நல்குவது ஆகிய பொறுப்புக்கள் அவர்களுக்குண்டு.

இந்த மந்திரி சபைக்கு மேல் சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத்தின் மத்திய செயற் குழு (பிரிசீடியம்) இருக்கிறது. அது ஒரு தலைவர், பதினாறு உப-தலைவர்கள், ஒரு காரியதரிசி, பதினைந்து உறுப்பினர்கள் ஆகியவர்களைக் கொண்டதாக இருக்கின்றது. அவர்களும், இரு சபைகளுடையவும் கூட்டுக் கூட்டத்திலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சோவியத் யூனியன் அரசு அதைத் தேர்ந்தெடுத்த சுப்ரீம் சோவியத்துக்கும் எல்லாவற்றிற்கும் பொறுப்பாளியாகவும், பதில் சொல்ல வேண்டியதாகவும் இருக்

கின்றது. சபைக் கூட்டங்கள் நடைபெருமல் இருக்கும் இடைக்காலங்களில் அரசாங்கம் பிரிசீடியத்துக்கு (மத்திய செயற்குழுவுக்கு) பொறுப்பாளியாக இருக்கிறது. இதினின்றும் இதன் முக்கியத்துவமும் புலப்படுகின்றது. சோவியத் யூனியன் அமைச்சரவை எடுக்கும் முடிவுகளேயும், யூனியன் குடியரசுகள் எடுக்கும் முடிவுகளேயும்—அவை சட்டத்துக்குப் புறம்பானவையாக இருந்தால், அவற்றை ரத்துச் செய்யும் அதிகாரமும் இதற்கிருக்கிறது என்ற நிலைமையிலிருந்து இது புலஞகின்றது.

நீதித்துறை அசாதாரணமான அமைப்பு. மேற்கத்திய ஜனநாயகங்களைப் போலல்லாமல் பெரும்பாலும் பழைய ஏதன்ஸ் முறையில் அமைந்திருக்கிறது. மேற்கத்திய நாடுகளில் நீதிபதிகள் நிரந்தரமாக நியமிக்கப் படுகின்றனர். திறமையற்றவர்கள் என்ருே, ஊழல் வாய்ந்தவர்கள் என்ருே ருசுப்பிக்கப்படாதவரையில் அவர்களை நீக்கிவிட முடியாது. ரஷ்யாவில் எல்லா நீதிபதிகளும் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். அடிப்படையில் மாறுகின்ற பொதுஜன அபிப்பிராயத்திற்கோ, அரசியல் வற்புறுத்தலுக்கோ உட்பட்டிருக்கின்றனர்.

ரஷ்யாவின் அரசியல் சட்டம் சிக்கல் வாய்ந்தது பொதுவாக அரசாங்கங்களின் அமைப்புக்குத் தக்கவாறு இருக்கும். நடைமுறையில் ஒரு தனிக் கட்சி குணம்சம் கொண்டதாக உருவாகுகிறது. லெனின் ஒரு மாமேதை. பொதுவுடமை ரஷ்யாவின் சிருஷ்டி கர்த்தாவும்கூட. அவருக்குப்பின் அரசியல் அதிகாரம் ஸ்டாலின் கைக்கு மாறியது. அவர் ஒரு திறமைவாய்ந்த ஆனுல், கடுமை நிறைந்தவர். தனக்கு எதிரியாக இருப்பவர்களை ஒழித்த பின்பு தான், முக்கியமாக மாபெரும் ராணுவ நிபுணரான

ட்ராட்ஸ்கியை ஒழித்த பின்புதான் ஸ்டாலின் ஆட்சி நீண்ட காலம் இருந்தது. ஆனால், குறிப்பிடத்தக்க அளவு கடுமையாகப் பலர் வெளியேற்றப்பட்டனர். தேர்தல்கள் நடைபெற்றன. ஆனால், தேர்தலுக்கு நிற்பவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஆனால், ஸ்டாலினுடைய கொள்கைகளினின்றும் சற்று மாறுபட்டு நிற்பவர்கள் ஆபத்தானவர்கள் என்று கருதப்பட்டனர். அப்படிப் பட்டவர்கள் ஒழிக்கப் படாவிட்டாலும் ஒதுக்கப் பட்டார்கள். ஜார் ரஷ்யா ஒரு பலம் வாய்ந்த போலீஸ் அமைப்பை உருவாக்கியிருந்தது. இரக்கமற்ற திறமை வாய்ந்த உளவாளிகள் அமைப்பையும் உருவாக்கியிருந்தது. பொதுவுடமை ரஷ்யா இந்த அமைப்புக்களை அப்படியே வைத்துக் கொண்டது. அவற்றை அபிவிருத்தியும் செய்தது. இளைஞர்களுக்குப் பொதுவுடமையைப் போதித்தது. அவர்களைத் தங்களது தாய் தந்தையர், சகோதரர்கள், சகோதரிகள், சிநேகிதர்கள் ஆகியவர்களுக் கெதிராக உபயோகப் படுத்திற்று. இப்படிப்பட்ட அமைப்பு மக்களை தொடர்ந்து தங்கள் உயிருக்கும், சுதந்திரத்திற்கும் பயந்து வாழவேண்டிய நிலைமையை உண்டு பண்ணிற்று என்பது பிரசித்தம். ஸ்டாலின் காலத்தில் எந்த ஒரு அன்னியனும் தன் விருப்பப்படி சுதந்திரமாக நடமாட முடியாது. கருங்கடல் துறை முகத்தில் ஒரு வழிகாட்டியால் கூட்டிச் செல்லப்பட்ட பிரயாணிகள் பற்றிய சுவையான கதை யொன்று உண்டு. கூட்டத்தில் ஒரு உறுப்பினர் கூட்டத்தை விட்டு அடிக்கடி விலகிப் போய்க்கொண்டே யிருந்தார் பல்வேறு விதமான அடக்கமான மரியாதையுடன் சாக்குப் போக்குச் சொல்லி விழிகாட்டி அவரை கூட்டத்துடன் வரும்படியாகச் செய்ய வேண்டி

யிருந்தது. கடைசியில் இது முடியாமல் போகவே, துக்கம் தோய்ந்த தொனியில் அந்த வழிகாட்டி அந்த உறுப்பினர் கூட்டத்தோடு வரவில்லையெனில், தான் தன் வேலையை இழக்க வேண்டியதுடன், தண்டிக்கப்படவும் செய்யப்படலாம் என்று கூறினனும். மாணவர் குழுவின் பிரதிநிதியாக இந்திய மாணவர் ஒருவர் ரஷ்யாவுக்குச் சென்றிருந்தார். அந்தச் சூழ்நிலை தன்னை திக்குமுக்காடச் செய்து விட்டதென்றும், பாரீசுக்கு வந்த பின்பு தான் சுதந்திரமாக மூச்சுவிட முடிந்தது என்றும் என்னிடம் அவர் கூறினர். ஒரு சமயம் மிகுந்த படிப்பினை தரக்கூடிய, குருஷ்சேவ் சொன்ன கதையென்று பிரபல மடைந்துள்ளது. ஸ்டாலினுடைய நல்ல தளகர்த்தராக அவர் இருந்திருக்கிருர். ஸ்டாலின் மரணமடைந்த பின் அவர் இடத்தில் அமர இது பெரிதும் உதவியிருக்கக் கூடும். இயற்கையாகவே அவர் களிப்புடையவர்; கருணையுடையவர்; சூழ்நிலையை நல்ல நிலமைக்கு மாற்றக் கூடியவர். ஸ்டாலினுடைப மேல் பூச்சான மதிப்பைக் குலைத்தது அவருடைய சிறப்பாகும். ஒரு சொற்பொழிவில் ஸ்டாலின் செய்த தவறுகளைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கும்போது கூட்டத்தில் அமர்ந்திருந்த ஒருவர் ஸ்டாலின் வாழ்ந்த காலத்தில் அவர் (குருஷ்சேவ், ஏன் இதனை பற்றி பேசவில்லை என்று கேட்டார். குருஷ்சேவ் இக்கேள்வியைக் கேட்டது யார் என்று பயங்கரமானத் தொனியில் கேட்டார். யாருக்குமே எழுந்து பதில் சொல்ல தைரியம் வரவில்லை. “இதுதான் காரணம்” என்று குருஷ்சேவ் சாவதானமாகப் பதில் சொன்னர். இப்படிப்பட்ட வேதனைதரும் பயபீதி சூழ்நிலையில் மக்கள் வாழப் பிரியப்படுகின்றனர் என்பது வியப்பானதொன்று. பெரும்பான்மையினர்கூட வல்லமையுள்ள சிறுபான்மையினரால்

அடக்கப்பட்டுவிட முடியும். பொதுவுடமைத் தத்துவத்தில் ஒரு சந்ததியை வளர்த்து அது பெரும்பான்மையான பிறகு எந்தச் சிறுபான்மை யினரையும்—அதிலும் பாஸ்டர்நாக் போன்ற மேதைகள் இருந்த போதிலும் அடக்கிவிடுவது சுலபமாகும். பல லட்சக்கணக்கான மக்களுக்குப் பொதுவுடமையின்பால் பெரும் விருப்பம் ஏற்பட் டுள்ளது என்பது உண்மை. அது ஒரு புதிய மதமாக உருவாகியுள்ளது. பல படித்த மக்கள்கூட அதை ஏற்றுக் கொண்டுள்ளனர். என்ன நேர்ந்த போதிலும் அதை ஆதரிக்கத் தயாராகியுள்ளனர். ஜனுதிபதி ரூஸ்வெல்ட், பொதுவுடமை நம்பிக்கை யினின்றும் தளபதி ஜுகோவை மாற்ற வேண்டும் என்று விவாதித்துத் தோல்வி கண்டார். இதை சர்ச்சில் தன்னுடைய கட்டுரை ஒன்றில் விவரித் துள்ளார். பல லட்சக்கணக்கான மக்களுக்குப் பொதுவுடமையானது ஒரு தத்துவமாகவும், வாழ்க்கை முறையாகவும் ஆகிவிட்டது. அது ஜனநாயகத்தைப் பற்றிய மேற்கத்திய நாடுகளின் அபிப்பிராயத்தை ஒத்ததாக இல்லை. இருந்தாலும் அவர்கள் அது ஜனநாயகம் என்றே பேசுகின்ற னர்; நினைக்கின்றனர். "ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களுமாகிய நாம் ஜனநாயகம் என்ற வார்த்தைக்குப் பொருள் கூறுவதில் குறிப் பிடப்படக் கூடிய அளவுக்கு கற்பனு சக்தியில்லா தவர்களாக இருக்கிறோம். நமது சமுதாய அமைப் புக்குள் நெருங்கிவராத எந்த விதமான சமூக அமைப்பையும் நமது விளக்கத்திற்குள் கொண்டு வர இயலாதவர்களாக இருக்கிறோம்'' என்று ஒயிட் ஹெட் எழுதியது சரியானதே. பொதுவுடமை என்றால் முடிவாக மக்களின் நல்வாழ்வு என்று கொள்ளப்படுமேயானால், அது ஜனநாயகம் என்று

அழைக்கப்பட உரிமையுண்டு. உழைக்க, இளேப் பாற, ஓய்ந்திருக்க வேண்டும் என்ற ஒவ்வொரு மனிதனினுடையவும் உரிமையை அங்கீகரிக் கின்றது. அவனுக்குக் கல்வி புகட்டப்படுகின்றது. அவன் தேவைகள் எல்லாம் பூர்த்தி செய்யப்படு கின்றன. இதில் அவனது மனேவி மக்களுடைய படிப்பும் உட்படுகின்றது. ஒரே ஒரு நிபந்தனே மட்டும் அதாவது உழைக்காது உண்ணக் கூடாது. அவன் விரும்பிய வேலே வேண்டுமானுல் கொடுக்கப்படாமலிருக்கலாம். ஆனுல், ஒரு பொது வுடமை சமுதாயம் தரக்கூடிய சகல சலுகைகளும் பெறத்தக்க உரிமையுடன் கூடிய வேலே கொடுக்கப்படும்.

பொதுவுடமை பட்டினியால் வாடுபவர்களேயே கவரும் என்று சொல்லும் தீர்க்கப் பார்வை ஐன்ஸ் டீனுக்கு இருந்தது. பெரும்பான்மையான மக்கள் சுதந்திரத்தைவிட பாதுகாப்பையே விரும்பு கின்றனர். ஏனெனில் வெறும் வயிற்ருேடு இருக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சுதந் திரம் என்பதில் அர்த்தமே இருக்க முடியாது. மனிதவர்க்கம் சாதித்துள்ள எல்லாப் பெரும் காரி யங்களுக்கும் சுதந்திரம்தான் அடிப்படையானது. இந்தத் தூரப்பார்வை உள்ளவர்களே இது கவர முடியாது. விஞ்ஞானத் துறையிலும், பொறியியல் துறையிலும் ரஷ்யா ஆச்சரியகரமான சாதனே களேச் செய்துள்ளது. இது மேற் சொன்னதைப் பொய்யாக்குவது போல் தோன்றும். ஆனுல், இதற்கும் காரணம் இருக்கிறது. விஞ்ஞானிகளுக்கு அரசியல் கிடையாது. தத்துவார்த்த ரீதியில் சம வருமானம் என்றிருந்த போதிலும் ரஷ்யா எஜமானர்களால் அவர்களுக்குத் தாராளமாக ஊதியம் தரப்படுகின்றது. முழு ஆர்வத்துடன்

தங்கள் தொழிலில் ஈடு படுவதற்கான மன நிறைவைப் பெறுகின்றனர். உலகம் முழுவதும் இவர்களால் நன்மை பெற்றிருப்பதைப் போன்று ரஷ்யாவும் நன்மைகளைப் பெற்றுள்ளது. விஞ்ஞானம் அரசியலுக்கு அப்பாற்பட்டது. எனவே சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்படலாம். ஆனால், இலக்கியத்தையும், தத்துவத்தையும் பொறுத்தமட்டில் அப்படியிருக்க முடியாது. வாழ்க்கையை அப்பட்டமாகத் தொடுகின்றது. அதன் போதனைகள் புரட்சியை ஏற்படுத்தி விடலாம். எனவே, தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட சுதந்திரம் கிடையாது என்பது இதினின்றும் புலப்படுகின்றது. பொதுவுடமைத் தத்துவத்தில் நான்கு சுவர்களுக்கு மத்தியிலிருந்து கொண்டு தான் அவர்கள் எழுத வேண்டும். எண்ண வேண்டும். ஆனால், மனிதனுகப்பட்டவன் தத்துவங்களைவிட உயர்ந்தவன். அதிகப்படியான, நிலையான நிலைமைகளில் மனித ஆன்மா தன் நிலையை உறுதிப்படுத்தும். ரஷ்யாவிலும் அப்படித்தான். குருஷ்சேவ் பொதுவுடமைத் தத்துவத்தை உறுதிப்படுத்துவதில் விடாப்பிடியாக இருந்தார். உலகில் உள்ள உழைப்பாளி மக்களுக்குக் கதிமோட்சம் அது ஒன்றுதான் என்றும் வலியுறுத்தினுர். ரஷ்ய அரசியலில் பெருமளவுக்கு மனிதத் தன்மையையும், பரந்த மனப்பான்மையையும், ஹாஸ்யத் தன்மையையும், அவர்கள் வெறுக்கின்ற அமெரிக்கர்களாக இருந்த போதிலும்—அவர்களின் அனுபவங்களினின்றும் பலவற்றைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற மனப்போக்கையும் உருவாக்கினுர். குருஷ்சேவ் வீழ்ந்துவிட்டார். இது வரையில் எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்கவில்லை. ஸ்டாலின் களையெடுத்த காலத்தைப் போல் அல்லாமல் குருஷ்

சேவ் இன்னும் வாழ்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார். ரஷ்யா சர்வாதிகாரிகளுக்கு பிடிக்காத காவியத்தையும் பாஸ்டர் நாக்கினால் எழுத முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். இவரது புதினமான 'டாக்டர் ஷிவாகோ' ரஷ்ய மொழியில் பிரசுரிக்கப்படவில்லை. பிரெஞ்சு, ஆங்கிலம், இத்தாலி ஆகிய மொழிகளில் இதன் மொழிபெயர்ப்பு வெளியாகியுள்ளது. இதற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்தப் பரிசை வாங்குவதற்கு அவர் அனுமதிக்கப் படவில்லையெனினும் அவர் வாழ அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது. கடுமை நிறைந்த ஸ்டாலின் காலத்தில் காண முடியாததோர் தன்மையாகும் இது. மேலும் குறிப்பிடத்தக்க விஷயம் மிஸ் இவ்ஜினியா போப்பவா சொன்ன கருத்தாகும். அமெரிக்காவில் உள்ள தொழிலாளர்கள் அடக்கி ஒடுக்கப்படவில்லை. எல்லாச் சட்டங்களும் 'வால் தெரு' சீமான்களால் பிறப்பிக்கப்படவில்லை என்று ரஷ்யர்களால் ஒத்துக்கொள்ள முடியாத ஒரு கருத்தை மிகுந்த தைரியத்துடன் வெளியிட்டார் அப் பெண்மணி. உண்மை வெளிவரத் தொடங்கியுள்ளது. இது நம்பிக்கை தருவதாக இருக்கிறது. அணு ஆயுத யுத்தம் என்னும் தார்மீக பீதியில் உலகம் உழன்று கொண்டிருக்கிறது. ஆனால், ரஷ்யாவும், அமெரிக்காவும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளக்கூடிய சாத்தியப்பாடுகள் நிறைந்த நம்பிக்கை தரும் சூழ்நிலை உருவாகியுள்ளது. ஏனெனில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதுதான் உலக சமாதானத்துக்கு வழி வகுக்கும்.

ரஷ்யாவில் நடைமுறையில் இருக்கும் சர்வாதிகார ஆட்சியின் வெளிச்சத்தில், ரஷ்யா

வில் ஜனநாயகம் வாழ்கின்றது என்று சொல்வது கடினம். பாட்டாளி மக்களின் நல்வாழ்வே லட்சிய மாக இருக்கலாம். இந்த லட்சியப்படியும் நடந் திருக்கலாம். ஆனுல், சுதந்திரம் தன் தலையைக் காட்டப் பயப்படும் நிலையும், மக்கள் தங்கள் உள்ளுணர்வுகளைக் முணுமுணுத்துக் கொள்ளும் நிலையும், அதிலும் ஒரு சிலரிடம் மட்டும் சொல்லிக் கொள்ளும் நிலையும் இருக்குமெனில், ரஷ்யாவில் ஜனநாயகம் உண்மையாக இருக்கிறது என்று சொல்ல முடியாது. எல்லா பொதுவுடமை நாடுகளி லும் இரண்டு கட்சிகள்தான் இருக்கின்றன. ஒரு கட்சி ஆதிக்கத்தில் இருக்கும். மறு கட்சி சிறையில் இருக்கும் என்ற ஒரு விமர்சகனின் நாசூக்கான வார்த்தைகளில் ஒரு உண்மை இருக்கின்றது.

## ஜனநாயகம் பற்றி விமர்சனம்

மேற்கத்திய ஜனநாயகங்கள் பற்றிய எனது பாரபட்சமான நிலையை மறைக்க முடியவில்லை. இருந்தாலும் பிரபலமான ஜனநாயகங்கள் பற்றி தெளிவாக விளக்கிக்கூற நான் முயன்றுள்ளேன். இந்த பாரபட்சத்தை நான் ஒத்துக் கொள் கின்றேன். பிளேட்டோவுடனும், அரிஸ்டாட்டி லுடனும் சேர்ந்து முடியரசே சிறந்த அரசு என்று கூறுமளவுக்கு நான் பழைய பாணியுடையவனுய் இருக்கிறேன் என்பதையும் ஒத்துக் கொள்கிறேன் என்பதை வெளிப்படையாகச் சொல்லுகிறேன். ஒவ்வொரு நாட்டிலும் நல்ல அரசன் இருந்திருக் கிருன். அவன் நன்றியுணர்வுடன் நினைவு கூறப் படுகிருன். துரதிர்ஷ்ட வசமாக பெரிய அரசர்களும், நல்ல அரசர்களும் மிகக் குறைவு. ஏனெனில் ஆக்டன் பிரபுவின் வார்த்தைகள் மற்றவர்களை விட அரசர்களுக்கு மிக எளிதாகப் பொருந்தும்.

அதாவது அதிகாரம் மனிதனைக் கெட்டவனாக்கி விடும். அதிகப்படியான அதிகாரம் அவனை முழுமையாகக் கெட்டவனாக்கிவிடும். எனவேதான், படித்த தன்னுணர்வுள்ள வாக்காளர்களைக் கொண்ட இன்றைய நிலைமையில்—எவ்வளவுதான் குறைபாடுகள் இருந்த போதிலும் ஜனநாயகமும் சாலச் சிறந்த அமைப்பாக இருக்கின்றது. தவறுகள் வெளிப்படையானவை. அவற்றைச் சுருக்கமாகச் சொல்லிவிடலாம்.

1. நல்ல நிலைமையிலும் கூட பெரும்பான்மையினர் உண்மையில் ஒரு குறிப்பிட்ட அரசாங்கத்தை விரும்புகின்றனர் என்பதை வாக்கெடுப்பு உறுதிப் படுத்தாது. வாக்காளர்களில் ஐம்பது சதவீதத்தினர் வாக்கெடுப்பில பங்கெடுத்துக் கொள்ள மாட்டார்கள். மீதியுள்ள ஐம்பது சதவீதத்தினரையோ அல்லது அதைவிட அதிகப்படியானவர்களையோ உண்மையான பெரும்பான்மையினர் என்று கொள்ள முடியாது. தனி உறுப்பினர் தொகுதிகளைப் பொறுத்த மட்டில், பார்லிமெண்டுக்கென வெற்றி பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை நாட்டில் ஒரு கட்சிக்குக் கிடைத்த மொத்தமான வாக்குகளின் சதமானத்துக்கு ஒத்ததாக இராது. தத்துவார்த்த ரீதியில் விகிதாச்சார பிரதிநிதித்துவம், பல்வேறு கட்சிகளின் வாக்குப்பதிவின் பலத்தைப் பற்றி கிட்டத்தட்ட ஒரு சரியான நிலையைக் காட்டும். மேலும் மிகவும் குறைவான பெரும்பான்மையை உண்டுபண்ணும். அதனால் நிலையான அரசாங்கத்தை அமைப்பது முடியாது என்றில்லாவிட்டாலும், சிரமம் ஏற்படும். எனவே தான், சர் வின்ஸெண்ட் சர்ச்சில் போன்ற ஒப்புக் கொள்ளப்பட்ட ஜனநாயகவாதிகள்கூட இங்கி

லாந்துக்கு அது தேவையில்லே என்று விட்டு விட்டார்கள்.

2. தேர்தல் செலவுகள் அதிகமாகிவிட்டன. நான் முன்பு சொன்னதையே திரும்பவும் கூறலாம். சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு எனது நண்பர் ஒருவர் லோக்சபை தொகுதியில் வெற்றி பெற்ருர். கட்சி நிதியினின்றும் கொடுப்பட்ட தொகைக்கும் மேலாக இருபதிஞயிரம் ரூபாய் வரையில் செலவு செய்ய வேண்டியிருந்தது என்று சொன்ஞர். லோக்சபை ஸ்தானத்திற்கு குறைந்தபட்சம் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்ய வேண்டியுள்ளது என்று சென்ற ஆண்டில் கட்சித் தலேவர் ஒருவர் என்னிடம் சொன்ஞர். இதன் பொருள் என்னவெனில் வருவாய் உள்ளவர்கள்தான் தேர்தலில் போட்டிபோட முடியும். அல்லது கட்சியின் நிதியை முழுக்க முழுக்க நம்பியிறங்க வேண்டும். இதுதான் இங்கிலாந்தில் தொழிற்கட்சி பலப்பட உதவிற்று. பின்னடைந்த நாடுகளில் தொழிற் சங்கங்கள் ஒன்றுபட்ட இணேப்பான மாதிரியில் கட்டப்பட வேண்டியுள்ளது. இங்கு ஏழைகளின் நிலே பணக்காரர்கள் கையில் பரிதாபத்திற்குரிய நிலேயில் இருக்கின்றது. பணக்காரர்கள் தங்களது அபேட்சகர்களுக்குத் தாராளமாய் பொருளுதவி செய்கின்றனர். இவ்வளவு அதிகமாகப் பணம் செலவு செய்யப்படும்போது அதைத் திரும்பப் பெற வேண்டும் என்ற எண்ணமும் தோன்றுகின்றது, சலுகைகள் தோன்றுகின்றன. இதன் பொருளாவது பொது வாழ்விலும் நிர்வாகத்திலும் ஊழல் என்பதே.

3. ஜனநாயகம் நல்ல முறையில் நிறுவப்பட்ட நாடுகளில் நல்லவர்களும் திறமை வாய்ந்தவர்களும் பங்கு பெறுகின்றனர். இங்கும்கூட அரசியல்வாதி

கள் அவசர வாதிகள் என்ற தப்பான அபிப் பிராயம் நிலவுகின்றது. ஒரு அரசியல்வாதியின் உறுதிமொழிகளே அப்படியே எடுத்துக்கொள்ள முடியாது. பலன் என்னவெனில் நல்லவர்கள் அரசியலே விட்டு விலகி இருந்து விடுகின்றனர். கடந்த நூற்ருண்டின் எண்பதுகளில் (எண் பதாவது வருடங்களில்) ஜனுதிபதி தேர்தலுக்கு நிற்பதற்கு நல்ல மனிதர் கிடைப்பது எளிதான தல்ல. இவ்வாறு அமெரிக்க அரசியலின் முக்கிய மான வரலாற்ருசிரியார் ஜேம்ஸ் பிரைஸ் குறிப் பிட்டுள்ளார். ஆனல், இந்த நூற்ருண்டில் அப்படிப்பட்ட புகாருக்கு இடமே இல்லே. நமது தலேமுறையில் மிகவும் முக்கிய மனிதர்கள் இந்தத் தேர்தலுக்கு நின்றிருக்கின்றனர். உட்ரோ வில்ஸன், பிராங்களின் ரூஸ்வெல்ட், கென்னடி போன்றவர்கள் அமெரிக்காவின் ஜனுதிபதி என்று பிரபலமடைந்தும் இருக்கின்றனர். இங்கிலாந்தில் நல்ல மனிதர்கள் எல்லாம் அரசியலில் பங்கு பெற்றுள்ளனர். சுதந்திரத்திற்காகப் போராடி வெற்றி பெற்று அபிவிருத்தியடைந்து வரும் நாடு களில் நிலேமை இன்னும் உறுதிப் படவில்லே. அரசியல்வாதிகளுக்கு அவர்களின் உண்மையான மதிப்பைவிட தனி கௌரவம் ஒன்றும் இருக்கிறது. நாணயமானவர்கள் அரசியலே விட்டு விலகி நிற்கின்றனர். அல்லது பொது வாழ்வினின்றும் வெளியே தள்ளப்படுகின்றனர்.

4. வாக்காளர்கள் தங்கள் உள்ளத்தை அறிவார்கள். அதற்குத் தக்கவாறு வாக்களிப் பார்கள் என்று யூகிக்கப்படுகிறது. ஆனல், வாக்குகள் வாங்கப்படவும் விற்கப்படவும் செய்யப் படுகின்றன என்பது பிரசித்தம். மக்களின் அரசியல் நாணயம் பற்றிய பிரதிபலிப்பு இது.

தேர்தலின் பிரதிநிதித்துவ தன்மை பற்றிய சந்தேகத்தையும் உண்டு பண்ணுகின்றது.

5. ஒரு மனிதனுக்கு ஒரு வாக்கு என்ற கொள்கையை எல்லா ஜனநாயகங்களும் ஒத்துக் கொண்டுள்ளன. நடைமுறையில் இதன் பொருள் என்னவெனில் ஒரு தொழிலாளியும் ஒரு பட்ட தாரிக்குச் சமமானவனுகப் பாவிக்கப் படுகின்றுன். ஐன்ஸ்டீன் போன்ற மேதைகளும் சமமானவர்கள் என்றே பாவிக்கப் படுகின்றனர்.

இப்படிப்பட்ட வெளிப்படையான குற்றங் குறைகள் இருந்தபோதிலும் ஜனநாயகம் வெற்றி பெற்றுள்ளது. ஏனெனில் நடைமுறையில் ஒவ்வொரு ஜனநாயகமும் பணக்காரர்கள், அல்லது படித்தவர்களின் அதிகாரவர்க்க ஆட்சியாகவே செயல் படுகின்றது. நல்லதொரு ஜனநாயகத்தில் வாக்காளர்கள் படிக்காதவர்களாகவும், அறியாமை நிறைந்தவர்களாகவும் இருந்த போதிலும், சாதாரணமாக நல்ல அறிவாளிகள் பார்லிமெண்ட் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். அவர்கள், மிக நல்ல மனிதர்களைத் தங்கள் தலைவர் களாகத் தேர்ந்தெடுக்கின்றனர். இந்தத் தலைவர்கள் அரசாங்கத்தை அமைக்கின்றனர். தன்னை மக்களின் ஊழியன் என்று சொல்லிக் கொள்வதில் வின்ஸெண்ட் சர்ச்சில் பெருமைப் பட்டார். காமன்ஸ் சபையிலுள்ள தனது அங்கத்தினர் பதவியை மிகவும் பெருமையான தாகப் பாவித்தார். இருந்தபோதிலும், 1909 அரசியலில் புகுந்த காலத்திலேயே காமன்ஸ் சபையின் அதிகார எல்லைகள் என்ன என்பதை நன்ருக உணர்ந்திருந்தார். "அடுத்தவர்களின் அபிப்பிராயங்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டிய

சந்தர்ப்பங்கள் அவ்வப்போது ஏற்படும்'' என்று ஜனநாயகத்திற்கு விளக்கம் கூறினர். இங்கிலாந்தைப் பாதுகாத்தவராக அவர் இருந்தார். ஏனெனில் பார்லிமெண்டைக் கலந்தாலோசிக்காமலேயே தீர்க்க திருஷ்டியோடு கூடிய தீர்மானங்களை எடுப்பதற்கு அவருக்குச் சுதந்திரமிருந்தது. உள்ளத்தை உலுக்கும் தன்மைவாய்ந்த பேச்சு வன்மையால் இங்கிலாந்திற்குச் சக்தி ஊட்டி வந்தார். இங்கிலாந்துக்குச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் வெற்றி கிடைத்ததும் அந்த வெற்றி வீரர் அதிகாரத்திளின்றும் நீக்கப்பட்டார். இதிலிருந்து இங்கிலாந்தின் ஜனநாயகத்தின் வன்மை தெளிவாகத் தெரிகின்றது. வேறு நாடுகளிலென்றுல் தன் வாழ்நாள் வரையிலும் அவர் பிரதமராக ஆக்கப்பட்டிருப்பார்.

குறைபாடுகள் இருந்த போதிலும் மேற்கத்திய மாதிரி ஜனநாயகம் வளர்ந்தோங்கிய போதிலும் ரஷ்யா மாதிரி ஜனநாயகம், அல்லது பொதுவுடமையை ஆதரிப்பவர்களும கோடிக் கணக்கில் உள்ளனர். அது புதியதோர் நம்பிக்கையாக, புதியதோர் மதமாக அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மனிதவர்க்கத்தின் புனர் வாழ்வுக்காக அது உள்ளது. புதிய நம்பிக்கையுடனும் இருக்கின்றனர். அவர்களுடன் சேராதவர்களுக்குச் சுதந்திரம் மறுக்கப்படுவது பற்றியும் அவர்கள் அக்கரை கொள்வதில்லை. நூற்றுக் கணக்கானவர்களோ, ஆயிரக்கணக்கானவர்களோ நாடு கடத்தப்பட்டாலும், கொல்லப்பட்டாலும் அவர்கள் கவலைப்படுவதில்லை. வாழ்க்கையின் எல்லாத் தட்டுகளிலும் உள்ள உழைப்பாளி மக்களுக்கான புனர்வாழ்வுக்காக அளிக்கப்பட வேண்டிய பரிசு என்று அதனை நினைக்கின்றனர்.

சுதந்திரத்தை மறுக்கின்றனர். பாதுகாப்பை உறுதிப் படுத்துகின்றனர். எனவே, அடிப் படையில் மேற்கத்திய நாடுகளின் ஜனநாயகத் திற்கும் ரஷ்ய ஜனநாயகத்திற்கும் இடையில் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது, சுதந்திரத் திற்கும் பாதுகாப்புக்கும் இடையில் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதாகும். இது கடினமானது தான். ஆனால், சுதந்திரம் எப்போதுமே மனிதனின் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, காலவரையில்லாத அது வெற்றி பெறும். அபி விருத்தி செய்வதற்கான சுதந்திரம், வாழ்வதற்கு உத்தரவாதம் ஆகியவற்றுக்கிடையில் எதைத் தேர்ந்தெடுப்பது என்றிருக்கிறது. இந்த ஜனநாயகங்கள் எப்படிப்பட்ட சமுதாயங்களைத் தருகின்றன என்று ஆராய்வது நல்லது. இது பின்வரும் உரைகளின் பொருளாக அமையும்.

# 4. சமுதாயமும் மாநிலமும்

### சமுதாயத் தத்துவம்

இன்றைய தலையாய நாகரிகம் ஐரோப்பிய நாகரிகம். ஐரோப்பிய நாகரிகம் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. எனவே, இன்றைய உலகம் தனி மனிதனின் உரிமைகள் பற்றி அதிக உணர்ச்சி விழிப்புடையதாக இருக்கிறது. ஆனால் எந்த ஒரு மனிதனும் தனித்து வாழ முடியாது. ஒவ்வொரு மனிதனும், சிறியதோ பெரியதோ ஏதாவது ஒரு சமுதாயத்திலோ, சமூகத்திலோ அங்கத்தினனாக இருக்கிறான். ஆகவே, ஒரு நபர் தன்னைத் தனித்த மனிதனாகச் சொல்லிக் கொள்வது காட்சிப் பிரமாண மற்றதாகும். அவன் ஒரு சமுதாயத்தில் பிறக்கிறான். அவனுக்குத் தேவையான பொருட்களை அந்தச் சமுதாயத்தில் இருந்து பெறுகிறான். அதன் பழக்க வழக்கங்களில் பழகிப் போனதினால், அவை நல்லதாக இருக்கவேண்டும் என்று எடுத்துக் கொள்கிறான். அந்தப் பழக்க வழக்கங்களில் எதைத் தவிர்க்க வேண்டியது என்று சொல்லுகின்றதோ அது அவனுக்கு உரிமையாக இருக்க முடியாது. இது நாகரிகம்

அடைந்த சமுதாயங்களுக்கும் பொருந்தும். இது தான் மானிட சனாதனத்தனத்திற்கு அடிப்படை. ஒவ்வொரு சமுதாயத்தினுடையவும் பிரதான அங்கம் குடும்பம். காலப்போக்கில் பெரிய சமூகத்தில் இணைந்து விடுகின்றது. இனக் குழு வாகவோ, அரசியல் சமூகமாகவோ இருக்கலாம். இந்திய, சீன நாகரிகம் போன்ற கிழக்கத்திய நாகரிகங்களில் குடும்பத்திற்கு நிலையான இடம் இருந்திருக்கிறது. துணிச்சல் வாய்ந்த, தனித் தன்மை கொண்ட மேற்கத்திய நாகரிகங்களில் இருப்பதைவிட குடும்பத்திற்கு முக்கிய இடம் இருந்தது. இந்து கூட்டுக் குடும்ப முறையும், ஜாதி முறையும் இந்த அடிப்படைக் குடும்பத்தின் விளைவுதான். இந்நிலை சமீபகாலத்தில் பொது வுடமை சீனத்தில் உருவாயிற்று. அதுவரை கன்பியூஸியஸின் சமூகத் தத்துவத்தில் குடும்பம் தான் கேந்திரமானது. இதைச் சுற்றித்தான் சீன நாகரிகம் சுழன்றது. ஐரோப்பாவிலும் கிரேக்கத்தின் நகர அரசுகள் தோன்றிய வெகு காலத்துக்குப் பின்னும்கூட இன அமைப்புக்கள் தொடர்ந்திருந்தன. பிற்காலத்தில் ஐரோப்பிய பண்பாட்டின் எல்லா அம்சங்களிலும் கிரேக்க நாகரிகத்தின் முத்திரை பதிக்கப்பட்டுள்ளது. உயர்ந்தமட்ட சமூக அமைப்பாக அரசு கருதப் படுகின்றது. எல்லாவிதமான சமூகச் செயல்களின் மீதும் ஆதிக்கம செலுத்துகின்றது. அரசின் முழு அதிகாரம் உலகம் முழுவதையும் வென்றுள்ளது. ஜனநாயகமானாலும் சரி, பொதுவுடமையானாலும் சரி அரசின் அதிகாரம் எல்லாவற்றையும் விட மேலானதாக இருக்கிறது.

மானிட சமூதாயத்தின் உன்னத கட்டம் நகர அரசுகள் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற

உயர்ந்த கிரேக்க ஞானிகள் இந்த லட்சியத்தில் நிலையாக நின்றனர். எகிப்து, பெர்சியா போன்ற வலிமை மிக்க அரசுகளும், பேரரசுகளும், இருப்பதை அவர்கள் அறியாதவர்கள் அல்ல என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். பெரிய நாட்டு அரசுகளை வெறுப்புடன் பார்த்தார்கள். குறிப்பிடத்தக்க அளவிலான மாறாத நிலையுடன் பார்த்தனர். இவர்களுக்குச் சுதந்திரம் என்றால் என்ன என்று தெரியாததால் காட்டு மிராண்டிகள் என்று தள்ளிவிட்டனர். ஆனால், அவர்களுடைய நகர அரசுகளுடைய நகர அரசு களில் உள்ளூற இருந்த நிலையற்ற தன்மை களைக் காணமுடியாத குருடர்களாகவும் இருந்தார் கள். ஏனெனில், கிரேக்கர்களைப் போன்று அரசாள் வதற்கென்று பிறந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் அடிமைகளாகவே இருப்பதற்கு லாயக்கானவர்கள் என்ற எண்ணம் காரணமாகவே அடிமைத்து வத்தை இயற்கையான அமைப்பு என்று கருதி னார்கள். இவர்கள் கிரேக்கர் அல்லாதவர்கள். மனித இனத்தின் வளர்ச்சிச் சரித்திரத்தில் அடிமைத்துவம் நியாயப்படுத்தப் படக்கூடிய ஒரு கட்டம் என்று எங்கல்ஸே ஒத்துக்கொள்ள வேண்டியிருந்தது. எகிப்திய, பாபிலோனிய, பெர்சியா, சீன நாகரிகம் போன்ற புராதன நாகரிகங்களின் பெரும் சாதனைகள் அத்தனையும் அடிமை உழைப்பின் விளைவுகளே. வாழ்க்கையில் அலுப்பைத் தருகின்ற உழைப்பு அடிமைகளிடம் விடப்பட்டது. இதன் காரணமாக சுதந்திர குடிமக்களுக்குப் போதிய ஓய்வு இருந்தது.எனவே சுதந்திரகுடிமக்கள் தம்மை அரசியல், கலை அல்லது தத்துவம் ஆகியவற்றிற்கு அர்ப்பணித்துக் கொண்டனர். இந்தக் காரணங் களினால்தான் அரசியல் ஜனநாயகம், கலை, இலக்

கியம், விஞ்ஞானம் தத்துவம் ஆகியவைகள் அடங்கிய கிரேக்க நாகரிகம் வளரமுடிந்தது. வெற்றி பெற முடிந்தது. கிரேக்கர்கள் அதிகரித்துக் கொண்டுவரும் ஜனத்தொகை பிரச்சினைக்குப் பக்கத்து நாடுகளை வெற்றி காண்பதன் மூலம் தீர்வு காணவில்லை. உபரி ஜனத்தொகையை புது நகரஅரசுகள் அமைக்க அனுப்பியதன் மூலமே தீர்வு கண்டனர். எனவே பேரரசு குடியேற்ற நாடுகளை அமைப்பது என்ற உருவத்தைப் பெற்றது. எனவே, மத்தியதரைக் கடற் பிராந்தியத்தில் கிரேக்க குடியேற்ற நகர அரசுகள் அங்கங்கு காட்சியளித்தன. அலெக்சாந்தர் கீழ் தான் கிரேக்கப் பேரரசு கீழ்த்திசையில் பரவலாயிற்று. ஆனால், அலெக்சாந்தர் அரிஸ்டாட்டலிடம் போதனை பெற்றவராக இருந்தபோதிலும் பிறவியில் ஒரு காட்டுமிராண்டியாகவே இருந்தார். கிரேக்க நாகரிகத்தைப் பரப்பும் ஒரு கருவியாக விதி அவரைத் தேர்ந்தெடுத்தது. கிரேக்கம் சுலபமாக ரோமானியர்களால் வெற்றி கொள்ளப்பட்டது. சரித்திரம் இவ்வாறு கூறுகின்றது. ‘இது ஒரு அதிர்ஷ்ட வசமான சம்பவம். ஆனால், அதே ரோமர்களை கிரேக்கப் பண்பாடு வெற்றி கண்டு விட்டது. எனவே, கிரேக்கப் பண்பாடு மேற்கு முகமாகப் பரவியது. மேற்கு ஐரோப்பா முழுவதையும் ஆட்கொண்டு விட்டது. கிரேக்கர்களைப் போல் அல்லாமல் ரோமர்கள் பிறவி பேரரசு வாதிகள். இவர்களின் சட்ட, ராணுவ மேதாவிலாசம் கிரேக்க நாகரிகத்திற்குப் புதிய உருவத்தைக் கொடுத்தது. கிரேக்க-ரோமானிய பண்பாட்டைப் பிறப்பித்தது. முடிவில் உலகத்தையே ஆட்கொண்டுள்ள மேற்கத்திய பண்பாட்டிற்கு இதுதான் அடிப்படையாக அமைந்தது.

ஒரு நகர அரசாகவே ரோமாபுரி ஆரம்பமானது. ஆனால் பரந்த பேரரசாகப் பரிணமித்தது. அவர்கள் ஈவு இரக்கமற்ற வெற்றி வீரர்கள். ஆனல், ஐரோப்பா முழுவதையும் நாகரிகப் படுத்தினதாக நியாயமாகவே அவர்கள் பெருமைப்பட்டுக் கொள்ள லாம். ரோமப் பேரரசு அதன் உச்ச நிலையில் கிறிஸ்தவ மதத்தின் பிறப்பையும் கண்டது. அந்த மதம்தான் இந்தப் பேரரசின் வலிமையைப் பின்னர் எதிர்த்தது. ரோமப் பேரரசு வலிவிழந்து வீழ்ந்த போது நிலவுடமை ஐரோப்பா உருவானது. பரிசுத்த ரோமப் பேரரசு எழுந்தது. இந்தப் பரிசுத்த ரோமா னியப் பேரரசு பரிசுத்தமானதாகவுமில்லை. ரோமப் பண்பாட்டை உடையதாகவும் இல்லை. ஒரு பேரர சாகவும் இல்லை. தவறுகளுக்கே அப்பாற்பட்ட ரோம் நகர போப்புகளின் லௌகீக—ஆத்மீக எதேச் சாதிகார அரசாக இருந்தது. இந்த இரண்டுக்கு மிடையில் சர்வாதிகாரம் என்ற பாரம்பரியம் வளரத் தொடங்கியது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல் போன்ற தேசீய அரசுகள் முன்னணிக்கு, வரும்வரையில் இது தொடர்ந்து இருந்தது.

மனிதனை ஒரு சமூகப் பிராணி என்று விவேகத் துடன் கிரேக்கர்கள் கருதினார்கள். மனித சமுதாயம் எப்படி உருவாயிற்று என்று அவர்கள் கவலைப்பட வில்லை. ஆனல், மறுமலர்ச்சிக்குப் பின்னால் உள்ள காலகட்டத்தில் இருந்த சிந்தனையாளர்கள், அரசர் கள், பேரரசர்கள் ஆகியவர்களின் எதேச்சாதிகாரத் தைக் கண்டு கொதிப்படைந்தார்கள். பழைய கிரேக்க, ரோம நாடுகளிலிருந்த சுதந்திரம் பற்றி நினைவு கொண்டார்கள், கவர்ச்சிக்கப்பட்டார்கள். 'மனித சமுதாயம் எப்படி ஆரம்பமானது ?' என்று கேட்கலானார்கள். 'லெவியாதன்' என்ற தன்னு

டைய புத்தகத்தில் ஹாப்ஸ் பதில் சொன்னர். ஆதி யில் சமுதாயம் என்பது கிடையாது. மனிதர்கள் இயற்கையோடியைந்த வாழ்க்கை நடத்தினர்கள். அங்கு சட்டமும் ஒழுங்கும் கிடையாது. ஒவ்வொரு மனிதனுடைய கையும் மற்றவனுக்கு விரோதமாக இருந்தது. இதன் விளைவு என்னவென்ருல், மனி தனது வாழ்வு அருவருப்பானதாகவும், மிருகத்தன மானதாகவும், குறுகியதாகவும் இருந்தது. தங்க ளுடைய நன்மையைக் கருதி ஒரு சமுதாய உடன் படிக்கைக்கு வருவது நல்லது என்று எண்ணினர் கள். ஒவ்வொருவரும் தங்களது உரிமையைவிட்டுக் கொடுத்தார்கள். தங்கள் பாதுகாப்பை நிச்சயப் படுத்த ஓர் அரசனுக்குக் கீழ்ப்படிய ஒத்துக்கொண் டார்கள். இப்படியாக சமுதாயம் பிறந்தது. அரசியல் சர்வாதிகாரத்தை ஹாப்ஸ் ஆதரித்தார். ஆனல், இங்கிலாந்து அரசர்களும், முடியரசு வாதிகளும் உரிமை கொண்டாடுவதுபோல தெய்வீக உரி மைக்கு விரோதமானது. இந்த உரிமை மக்கள் மனதிலேயே வேரூன்றி, மக்கள் ஆட்சிக்கு ஒருபடி யாக அமைந்தது. முதலாம் சார்லஸ் மன்னனைச் சிரச்சேதம் செய்ததற்குப் பிறகும், இரண்டாவது ஜேம்ஸ் மன்னனை நாடு கடத்தியதற்குப் பிறகும் தெய்வீக உரிமை என்ற சித்தாந்தம் இயற்கையான தோர் மரணத்தை அடைந்தது. இங்கிலீஸ் புரட்சி பார்லிமெண்ட் ஆட்சியைத் தொடங்கி வைத்தது. அது நியாயமானது என்று வாதாட ஒரு தத்துவ ஆசான் தேவைப்பட்டது. ‘சமூக அரசாங்கம்’ என்ற கட்டுரை மூலம் ஜான் லாக்ஸ் இந்தப் பணி யைப் பூர்த்தி செய்தார். அவர்கூட இயற்கையோ டியைந்த வாழ்க்கை முறை என்பதிலிருந்துதான் ஆரம்பிக்கிருர். ஹாப்ஸ் செய்ததுபோல் பயங்கர மானதாகச் சித்தரிக்கவில்லை. விவகாரத்துக்குள்ள

பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க யாரும் இல்லாத தால், அதை ஒரு வசதியற்ற நிலையாகவே கொள் கிறார். எனவே, இயற்கையோடியைந்த வாழ்க்கை நடத்திவந்த மக்கள் ஒன்றுகூடி ஒரு சமுதாய உடன்பாட்டுக்கு வந்தார்கள். நிபந்தனைகள் எல்லாம் ஹாப்ஸ் கூறியது போன்றவைகள்தான். ஒரே ஒரு வேறுபாடு மட்டும். அதாவது அரசன் மக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டானென்றால், வேறு ஒரு அரசனைத் தேர்ந்தெடுக்க அம்மக்களுக்கு உரிமை இருந்தது என்பதுதான் அது. இதனால் தான் சார்லஸ் மன்னனை சிரச்சேதம் செய்ய முடிந் தது. அவன் மகனை சிம்மாசனத்திலிருந்தும் விரட்ட முடிந்தது.

நாட்டின் அரசாங்கத்திற்குப் பொருந்தக் கூடிய ஜனநாயகமுறையை இங்கிலாந்து மீண்டும் கண்டுபிடித்தது. ஆனால், ஐரோப்பாக் கண்டமும், உலகத்தின் இதர பாகங்களும் சர்வாதிகாரத்துவத் தின் பிடியில்தான் இருந்தன. பதினான்காம் லூயி மன்னனது "நான்தான் நாடு" என்ற வார்த்தை வெறும் வெற்றுச் சவாலாகும். இந்தச் சவாலை ரூஸோ ஏற்றுக்கொண்டார். "மனிதன் சுதந்திர வானாகவே பிறக்கிறான். ஆனால் எங்கும் அவன் தளைகளால் பிணைக்கப்பட்டிருக்கிறான்" என்ற புரட்சிகரமான சொற்றொடரோடு தனது சமுதாய ஒப்பந்தம் என்ற நூலை ஆரம்பித்தார். ஹாப்ஸ், லாக்ஸ் போன்றவர்களைப் போலல்லாமல், சுதந்திரம், சமத்துவம் என்ற நிலைமையோடு இயற்கையோடியைந்த வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டினர். சொந்தத் தாயக உணர்ச்சி களோடு கூடியவனாகவே கண்ணியமான காட்டு மிராண்டி மனிதனைச் சித்தரித்தார். சுதந்திரம், சமத்துவம் என்ற அடிப்படையில் மனிதனால் ஒரு

சமுதாயத்தை அமைக்க முடியும். இப்படிப்பட்ட தோர் புதிய சமுதாய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் சர்வாதிகாரத்தின் முடிவை அவர் காண் கின்ருர். அவரது ஆரம்ப வாக்கியங்களைப் போன்று அவ்வளவு புரட்சிகரமானதாக இல்லை அவரது போதனைகள். ஆனால், ஒரு சிந்தனைக் கோர்வையை உண்டு பண்ணிற்று. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோஷத்தோடு வெடித்த பிரெஞ்சுப் புரட்சியில் முடிவடைந்தது.

சமுதாய ஒப்பந்தத்தின் முழுக் கருத்துக்கும் சரித்திர அடிப்படை கிடையாது. சிந்தனையாளர் களின் மூளையில் மட்டுமே இது உதித்தது. பின்னல் வந்த சிந்தனையாளர்கள் இதன் கற்பனைத் தோற்றத்தை அம்பலப்படுத்தவும், இது ஒரு தத்து வார்த்த கொள்கை என்பதைச் சுக்கு நூருக்கு வதற்கும் வெகு காலம் பிடிக்கவில்லை. ஆனல், வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம், சொத்து வைத்திருப்பதற்கான உரிமை என்ற மனிதவர்க்கம் போற்றிப் பாதுகாக்கும் மூன்று உரிமைகளையும் நிலைநாட்டப் பெரிதும் பயன்பட்டது. தத்து வார்த்த ரீதியாக முதல் இரண்டு உரிமைகளும் எதிர்க்கப்படவில்லை. ஆனல், நடைமுறையில் ஹிட்லர், முசோலனி, ஸ்டாலின் போன்ற சர்வாதி காரிகளால் அலட்சியப் படுத்தப்பட்டது. கடைசி உரிமை அடிப்படையானது. மேற்கத்திய ஜன நாயகங்களுக்கு அடிப்படையானது. ஆனல், பொதுவுடமையாளரால் இந்த உரிமை மறுக்கப் பட்டுள்ளது.

நவீன கால அரசியல் எண்ணம் மீண்டும் மனிதன் ஒரு சமுதயாப் பிராணி என்ற பழைய கிரேக்கக் கருத்தை நோக்கியே சென்றுள்ளது. எனவே, சமுதாயம் எப்படி, எவ்வாறு உண்டா

யிற்று என்ற பிரச்சினை எழவே இடமில்லை. டார்வின் 'உயிரினத் தோற்றம்' என்ற நூலில் மனிதனின் தோற்றம் பற்றியும், சமுதாயத்தின் தோற்றம் பற்றியும் விளக்கியுள்ளார். குடும்பத்தின் தோற்றம் தற்செயலானதாக இருந்த போதிலும் சமூக வாழ்வின் ஆரம்பத்தை அது குறிப்பிடுகின்றது. கால வெள்ளத்தில் குடும்பம் என்பது, குழு, இனம், குலம், ஜாதி என்ற பல்வேறு ஆரம்ப நிலை அபிவிருத்திகளைக் கடந்து வந்துள்ளது. விவசாயத்தைக் கண்டுபிடித்து ஒரு இடத்தில் மனிதன் நிரந்தரமாகத் தங்கி வாழ்க்கை நடத்தும் வரையில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் மனிதன் நாடோடியாகவே வாழ்ந்திருக்கவேண்டும். இவை எல்லாம் மனித இன வளர்ச்சி சம்மந்தப்பட்டவை. இனங்கள், குழுக்கள்; இவைகள் எப்படி அழைக்கப்பட்டபோதிலும், இவை இணைந்த பின்புதான் நகர அரசுகள் தோன்றலாயின. இதற்குப் பின்புதான் அரசியல் தோன்றிய கட்டத்துக்கு நாம் வருகிறோம்.

கிரேக்க நகர அரசுகள் பற்றி நாம் பார்த்து விட்டோம். அதன் முக்கிய அம்சங்களைத் தொகுத்துப் பார்ப்போம்.

1. ஆரம்பத்தில் முடியரசாக இருந்தன. ஆனால், முடியரசு சுலபமாக கொடுங்கோன்மையாக மாறிற்று, இதனால். பெரிக்களிஸ் என்பவன் தலைமையில் ஜனநாயகம் ஸ்தாபிதமாயிற்று. ஜனநாயகம் சுதந்திரமான குடிமக்களைக் கொண்டிருந்தாலும் பாமரர் ஆட்சியாக வீழ்ந்துவிட ஏதுவிருந்தது. நியாயவானான அரிஸ்டடஸ் விஷயத்தில் இது தெளிவாகின்றது. பிளேட்டோவும், அரிஸ்டாட்டலும் பாமரர் ஆட்சியின்பாலுள்ள தங்கள்

வெறுப்பை மறைக்கவில்லை. கொடுங்கோன்மை யற்ற முடியாட்சியை உன்னதமான ஆட்சிமுறை என்று கொண்டார்கள்.

2. வளர்ந்து வரும் மக்கள் தொகையின் நிர்பந்தத்தினுல் புதுப்புது குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த வேண்டியிருந்தது. ஆகவே புதிய நாடுகள் உருவாயின.

3. நகர அரசுகள் ராணுவ அரசுகளைப் போலல்லாமல் இயல்பாகவே பலவீனமானவை யாகவே இருந்தன. ஏதோ தற்காலிகமாக ஒத்திணைந்ததினுல் பெர்சியர்களைத் தோற்கடிக்க முடிந்தது. இருந்தாலும், மாஸிடோனியனுன பிலிப்பையும், அவனுடைய புகழ் மகன் அலெக்ஸாந்தரையும், அவர்களுக்குப்பின் ரோமானியர்களையும் எதிர்க்க முடியவில்லை. அவர்களது வலிமையின் முன் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

4. நகர அரசுகள் தத்துவார்த்த ரீதியாக மக்கள் தொகையைக் குறைந்த அளவிலேயே வைத்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. எனவே, பலவீனமான அங்கஹீனமான குழந்தைகளைக் கொன்று விடுவது வழக்கமாக இருந்தது. முக்கியமாக ஸ்பார்ட்டானியர்கள் இந்தப் பழக்கத்தைக் கைக் கொண்டிருந்தனர். சுய இன விழைச்சு (ஆண் ஆணைப்புணர்தல்) இயற்கைக்கு விரோதமானது என்று கருதப்படவில்லை. இன விருத்தியைக் கட்டுப்படுத்தும் முறையாகக் கையாளப்பட்டது.

ஒரு நகர அரசு என்ற முறையில் ரோமாபுரிக்கு ஒரு சிறப்பான வரலாறு இருந்தது. வீரமும், பேராசையும் கொண்டவர்கள் ரோமானியர்.

தங்கள் அண்டை அயலாரின் உரிமைகளைப் பற்றி அக்கரை கொள்ளவில்லை. ரோமாபுரியின் எல்லை களை விஸ்தரிக்கத் தொடங்கினுர்கள். முதலில் இத்தாலி முழுவதையும் இணைத்தார்கள். முடியரசு, அல்லது கொடுங்கோன்மையை ஒழித்தார்கள். பிறகு ரோம அரசியல் சட்டம் ஒரு ஜனநாயக அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்டது. தனி மனிதனின் அதிகாரத்திற்குப் பயந்து, இரு அதிகாரிகளுக்கு இடம் கொடுக்கப் பட்டது. ஒருவர் எடுக்கும் முடிவை ரத்துச் செய்யும் அதிகாரம் மற்றவருக்கு இருந்தது. தன்னலம் வளர்வதைத் தடுப்பதற்கு வேண்டி ஆண்டுக் கொருமுறை தேர்தல்கள் நடைபெற்றன. சட்டமியற்றும் அதிகாரம் இரு சபைகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. கோமிட்டா குரியேட்டா, கோமிட்டா, செந்தூரியேட்டா என்பவையாகும் அவை. அவற்றில் பாட்ரிஷியர்கள் (பிரபுக்கள்) என்பவர்களே இருந்தனர். நாளாவட்டத்தில் பிளெபியர்களின் (பொது மக்களின்) வற்புறுத்துதல் ஏற்பட்டது. அவர்களின் அரசியல் கோரிக்கைகளுக்கு இணங்க வேண்டிவந்தது. எனவே கன்ஸிலியம் பிளபிஸ் என்ற மூன்ருவது சபையும் உருவாயிற்று. பொதுமக்களின் நியாய பீடமும் உருவாக்கப்பட்டது. இவ்வளவு சபைகள், உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களைக் கொண்ட கலவை அமைப்பு செயல்பட்டது. அதிலும் எவ்வாறு வெற்றிகரமாகச் செயல்பட்டது என்பது சரித்திரத்திலேயே அதிசயிக்கத்தக்க ஒன்ருக இருக்கிறது. ரோமானியர்களின் குணநலத்தை வைத்துத்தான் இதை விளக்க முடியும். அவர்கள் கடினமானவர்கள்; வலிமையானவர்கள்; தீவிரமான தேசபக்தி கொண்டவர்கள். அத்துடன் சமரசம்

செய்துகொள்ளும் தனிக் குணமும் கொண்ட வர்கள், நெருக்கடி காலங்களில் சர்வாதி காரத்துவத்தைக் கைக் கொண்டார்கள். ஒன்று பட்டுத் திட்டமிட்டுச் செயல்பட உதவிகர மாக இருந்தது இது. ரோமாபுரி உயர் நிலையை எய்தியது. ரோம அரசு மத்தியதரைப் பிராந்தியத் தில் பேரரசாக உருவாயிற்று. ஆனல், செல்வமும், அதிகாரமும் ரோம குணநலத்தைக் கெடுக்க ஆரம்பித்தது. ராணுவ பலம் கொண்ட ஆசை பிடித்த பிராந்திய அதிகாரிகள் தங்கள் கையில் ஆதிக்கம் வரவேண்டும் என்று விரும்பினர்கள். சுல்லா, மாகியஸ் ஆகிய பிரதேசங்களுக்கிடையில் உள்நாட்டுப் போர்கள் நடைபெற்றன. சீசரும், பாம்பேயும் ரோமப் பேரரசுக்குச் சாவுமணியடித் தனர்! குடியரசைக் காக்கும் கடைசி மூர்க்கத்தன மான பிரயத்தனமாக, தனது நம்பிக்கைக்குரிய நண்பரான புருட்டஸினலேயே சீசர் கொல்லப் பட்டான். ஆனல், அக்காலத்திய உணர்ச்சி அதற்கு விரோதமாக இருந்தது. எனவே, அகஸ்டஸின் தலைமையில் அது ஒரு பேரரசாக உருவாக வேண்டியிருந்தது. புரட்சி பூரணமாகியது. அது ரோமானிய குணநலங்களுக்கு ஏற்றதாகவும், சட்டப்பூர்வமானதாகவும் இருந்தது. ஒருவரை மற்றவர் கட்டுப்படுத்துகின்ற அதிகாரிகளும் உள்ள அதிகப்படியான அதிகாரிகளைக் கொண்டு அந்தக் குடியரசு செயலாற்றி வந்தது. ஆனல், ஒரு மனிதனுக்குச் சர்வ அதிகாரமும் கொடுப் பதற்கு வேண்டி இந்த உத்தியோகஸ்தர்களை யெல்லாம் ஒரு மனிதனிடம் ஒப்படைக்க வேண்டியதாயிற்று. இந்த மாற்றம் பொதுவாக அமைதியாகவே நடைபெற்றது. தளபதியும், பிரதம தளகர்த்தனும் சக்கரவர்த்தியானன்.

நீரோவின் கொடுங்கோன்மையும், மெஸலினாவின் இழிவுநிலைகளும் ஏற்பட்ட போதிலும் ரோமப் பேரரசு சில நூற்றாண்டு காலம் வரையில் வளர்ந் தோங்கத்தான் செய்தது. நான் ஒரு "ரோமக் குடிமகன்" என்று சொல்லிக் கொள்வது இன்னும் ஒரு ரோமானியனுக்குப் பெருமை தரும் ஒன்றாகும். ரோமானிய குடிமைத்துவம் குறுகிய பொருள் கொண்டதல்ல. பிரம்மாண்டமாகப் பரவி நின்ற ரோமப் பேரரசிலுள்ள எல்லாக் குடிமக்களையும் கொண்டதாக இருந்தது. எந்த ஒரு அரசியல் ஆதிக்கத்தையும் கொணடதாக இராது மதிப்புத் தரக் கூடியதாக இருந்தது. தீர்க்க முடியாத அளவுக்குச் சீரழிவு ஏற்பட்டபோது அந்தப் பேரரசு வீழ்ந்தது. ரோமாபுரியின் மதத் தலைவன் என்ற முறையில் போப்பாண்டவரால் அது காப்பாற்றப் பட்டது. பேரரசின் பகுதிகள் நிலப்பிரபுத்துவ அரசுகளாகப் பரிணமித்தன. பிறகு காலப் போக்கில் தேசீய அரசுகளாக உருவாயின.

அமெரிக்காக் கண்டம் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, சாதகமான சூழ்நிலையில் இருந்த தேசங்கள் குடியேற்ற நாடுகளைக் கொண்ட பேரரசுகளாக வளர்ந்தோங்கின. கருணை கொண்ட விதி இந்தியாவை பிரிட்டனின் கீழ் கொண்டுவந்தது. பொருளாதார, அரசியல் சுரண்டல் தவிர்க்க முடியாதது. ஆனால், அதில் நன்மைகளும் இருந்தன. இந்தியா, சீனா, முஸ்லீம் ராஜ்யங்கள் ஆகிய தேசங்களின் சனாதன உறக்கநிலை மூர்க்கத் தனமாக ஆட்டி அசைக்கப்பட்டது. புது எண்ணங்கள், புது ஆர்வங்கள், புதிய தேசபக்தி ஆகியவை உருவாயின. சுற்றிலும் நிலப்பகுதியால் சூழப்பட்ட ஜெர்மனி குடியேற்ற நாடு போட்டி யில் பின்தங்கிப் போயிற்று. எனவே பொறாமை

கொண்டது. இரண்டு முறை யுத்த சக்திகளைக் கட்டவிழ்த்து விட்டது. மிகவும் மோசமாகத் தோல்வியடைந்தது. ஆனால், பிரிட்டிஷ் பேரரசின் அடித்தளத்தையே ஆட்டிப் பலவீனப் படுத்திற்று. பிடிக்கப்பட்ட நாடுகளில்—பலாத்கார ரீதியிலோ, அகிம்சா ரீதியிலோ ஆன புரட்சியை எளிதாக்கியது. தனது சக்திவாய்ந்த பேரரசின் தவிர்க்க முடியாத முடிவிற்குத் தலைவணங்கும் நல்ல குணம் பிரிட்டனுக்கு இருந்தது. பிரிட்டிஷ், ஜெர்மனியப் பேரரசுகளின் வீழ்ச்சி இரண்டு சக்திகளை உலகின் முன்னால் கொண்டு வந்தது. ஒன்று அமெரிக்கா, மற்றது சோவியத் யூனியன். இரண்டும் எதிரிடையான தத்துவார்த்தங்களைக் கொண்டவை.

மானிட வர்க்கத்தின் வரலாற்றின் பரந்த காட்சிப் புலனில், வெற்றிகளின் சோகங்களையும், களிப்பையும் விளக்குகின்ற சில சக்திகளின் செயல்களைப் பாராமல் இருக்க முடியாது. மனிதனின் குழந்தைப் பருவம் மிகவும் நீண்டதாக இருந்தது. எனவே பல காலம் ஒரு தாயினுடைய இடைவிடாத பராமரிப்பு தேவைப்பட்டது. அவள்தான் தாய். ஏனெனில் தந்தையைப் பற்றிச் சந்தேகம் ஏற்பட்ட போதிலும் தாய்மை பற்றிச் சந்தேகம் ஏற்பட முடியாது. மனிதவர்க்கத்தின் ஆரம்ப நிலையில் பிள்ளைப் பேறு என்பது தற்செயலாக ஏற்படுகின்ற நிகழ்ச்சியாகும். இதை யூகிப்பது அவ்வளவு கஷ்டமானதல்ல. ஒழுங்கற்ற ஆண் பெண் சேர்க்கை அக்காலத்தின் போக்காக இருந்திருக்கலாம். கருத்தரிப்பதற்கும், பிரசவத்திற்கும் இடையிலுள்ள நீண்ட இடைவெளி தகப்பன் யார் என்பதைத் தெரியாமலாக்கி விடுகின்றது. உண்மையில் இன்றும்கூட ஆண் பெண் உறவின்

தன்மையை அறியாத இனம் ஒன்று இருக்கிறது. உதாரணமாக பாப்புவாவிற்கு வடகிழக்கில் இருக்கின்ற டிரோப்ரியன் தீவுகளில் இருக்கின்ற மெலனேஷிய ஆதிவாசிகள் ஒரு ஆவி (பலோமா) மறு பிறவி எடுக்க ஆசை கொள்வதின் காரணமாகவே ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கிருள்...ஒரு தகப்பன் தேவையில்லே. டிரோப்ரியெண்டர்கள் தந்தை என்ற தன்மையில் நம்பிக்கை வைப்பதில்லே.'' ரிச்மாண்ட் பிரௌண் சீமாட்டியின் "அறியப்படாத பூர்வ குடிமக்கள், செல்லப்படாத கடல்கள்'' என்ற புத்தகம், பழங்குடி மக்களின் வாழ்க்கையின், நம்ப முடியாத உண்மைகளின் வசீகரம் மிக்க சான்ருகும். ஆதிகாலக் குடும்பங்கள் தாய்வழிச் சமுதாயமாக இருந்தது என்பதில் ஆச்சரியமில்லே. தகப்பனுக்கு இடமே இல்லே. ஒரு குழந்தையின் முதல் தேவைகள் வெப்பமும், பாதுகாப்பும். தாயின் அன்புக் கரங்களில் இவை இரண்டும் அமோகமாகக் கிடைக்கும். உலகத்தில்—அநேகமாக எல்லாப் பாகங்களிலும் பலதார மணக் குடும்பங்கள் இருப்பது அறியப்படாத ஒன்றல்ல. 1956ல் இருந்து மணச்சட்டம் வந்து ஒழிக்கப்படும் வரையில், இந்தியாவில் உள்ள மலபார் நாயர்கள் தாய் வழிச் சொத்துரிமை சமுதாய அமைப்புக் கொண்டவர்களாகவே இருந்தார்கள். இந்தச் சீர்திருத்தத்தை வரவேற்காத நாயர்களே நான் சந்தித்திருக்கிறேன். சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு படித்த நாயர் பேராசிரியர் ஒரு கணவனுக்கு ஏன் தன் மனேவியின் சொத்தின்மேல் உரிமை இருக்க வேண்டும் என்று கபடமற்ற தன்மையில் கேட்டார். தகப்பனின் பங்கு எப்போது தொடங்கிற்று என்பது சொல்ல முடியாத நிலேயில் இருக்கிறது. மனிதன் ஒரு

இடத்தில் நிலையாகத் தங்கத் தொடங்கி, தனக்கென ஒரு பெண்ணையோ, பல பெண்களையோ உரிமையாக்கிக் கொள்வதற்கு முன்பு இருந்திருக்க முடியாது. மிகவும் பழமையான நாகரிகங்களான எகிப்திய, சீன, இந்திய, பாபிலோனிய நாகரிகங்கள் உறுதிப்படுவதற்கு முன்பே தந்தை வழிக்கு குடும்ப அமைப்பு உறுதிப் பட்டிருக்க வேண்டும் என்பது சரித்திர ரீதியான ஒன்றாகும். தன்னை நாகரிகம் அடைந்த சமுதாயம் என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொரு இனமும் இந்த விதி முறையைப் பின்பற்றியுள்ளது. தனது குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பைத் தாயின் தோள்களினின்றும் அகற்றிவிட்ட பெருமை அதற்குண்டு. தகப்பனும் தனது பங்கை ஆற்றவேண்டும் என்பது சாதாரணமாக நியாயமானதுதான்.

பழங்குடி வாழ்க்கையின் ஒரு கூட்டத்தில் சொத்து முறையில் பொதுவுடமை காணப்பட்டது. ஏனெனில் தனிப்பட்ட முறையில் சொந்தம் பாராட்டத்தகாத அளவு, முக்கியப் பொருட்கள் மிகக் குறைவாகவே இருந்திருக்க வேண்டும். பழங்குடி மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தலைவர்களும், அங்கத்தினர்களோடு கூடிய பெரியவர்கள் குழுக்களும் இருந்தன. இந்தத் தன்மைகள் தான் பழங்குடி வாழ்க்கைக்குப்பின் ஏற்பட்ட நகர அரசுகளுக்கும், போர்க்குணம் படைத்த தலைவர்களை கொண்ட சின்னஞ்சிறு அரசுகளுக்கும், அடித்தளமாக அமைந்தது.

அரசு பற்றிய அரசியல் தத்துவம் பெரும்பாலும் ஐரோப்பிய மண்ணில்தான் விளைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. கிரேக்க—ரோமானிய நாகரிகம் காரணமாக விளைந்தது. அரசையும்

சமுதாயத்தையும் ஒன்ருகப் பார்ப்பதற்கான நிலைமையை ஏற்படுத்திற்று. ஏனெனில் சமூக வாழ்வின் எல்லா அம்சத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு அரசு வலிமையுள்ள தாயிற்று. சில நூற்ருண்டு காலம் வரையில், ஐரோப்பாவில் அரசின் அதிகாரத்தை மதம் கட்டுப் படுத்திக் கொண்டிருந்தது. முக்கியமான காரணம் என்னவெனில் மதபீடமே ஒரு அரசாக இருந்தது. போப்பின் தலைமையைச் சுற்றியிருந்த ஆத்மீக பிரமை அவருடைய லௌகீக ஆதிக்கத்திற்கு வலுவைத் தந்தது. ஆனுல், தேசிய அரசுகளின் வளர்ச்சியும், முக்கியமாக மதச் சீர்த்திருத்தமும் போப்பாண்டவரின் லௌகீக ஆதிகத்தின் வீழ்ச்சிக்கு வழிகோலியது. கடந்த நூற்ருண்டின் எழுபதுகளில் வாட்டிகன் நாடு (போப்பாண்டவரின் அரசு) சில சதுர மைல்களுக்குள் அடங்கிப் போயிற்று. மேற்கத்திய நாடுகளில் அரசு எல்லா வற்றிற்கும் மேலாதிக்கும் வகிக்கிறது. அதன் அனுமதியின் பேரில்தான் மற்றவை எல்லாம் இருக் கின்றன.

மேற்கில் எது உண்மையாக இருக்கின்றதோ உலகத்தின் இதர பாகங்களுக்கும் அது அப்படியே பொருந்தும் என்பது சரியல்ல. சீனு, இந்தியா, இன்னும் மத்தியதரை கடற்பகுதி இஸ்லாமிய நாடுகள் பற்றிய ஒரு சுருக்கமான விமர்சனம் சரியானதாக இருக்கும். கீழை நாட்டு மன்னர் களுடையவும், பேரரசர்களுடையவும் காட்டு மிராண்டித்தனமான எதேச்சாதிகாரம் பற்றி மேற்கு நாட்டுப் பண்டிதர்கள் எழுதியுள்ளார்கள். இருந்தாலும் இந்த எதேச்சாதிகாரத்தைக் கட்டுப் படுத்தியிருந்த சக்திகளைப் பற்றியும் பாராமுகமாக இருந்துவிட முடியாது. கடந்த இருபதாண்டு

களில் பொதுவுடமைக் கட்சி ஆதிக்கத்துக்கு வரும் வரையில் கன்பியூஸியஸின் சமூகத் தத்துவமே சீனத்தின் ஆதிக்கத்தில் இருந்தது. பலதார மணம் நடைமுறையில் இருந்தபோதிலும், குடும்பத்தை உயர்ந்ததாகக் கருதியது. எல்லாத் தூய்மைகளும் குடும்பத்தைச் சுற்றியே கட்டப்பட்டன. பேரரசன் தான் அதன் தலைவன். வெளிநாட்டு ஆக்கிரமிப்பி னின்றும், உள்நாட்டு நாசசக்திகளினின்றும் நாட்டைக் காக்கும் பொறுப்புள்ளவனுக இருந்தான். இத்துறைகளில் மிகவும் வன்மையுடன் ஆட்சி புரிந்தான். ஆனுல், கன்பியூஸியஸ் தத்துவத்தின் கோட்பாடுகளால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சீன மக்களின் சாதாரண வாழ்க்கையில் தலையிட முனைந்ததில்லை. உண்மையில் அரச குடும்பமும் இந்தக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டதல்ல. ஆள்பவனுக்கும் ஆளப்படுபவனுக்கும் இடையி லான ஒரு உடன்பாட்டின் பிணைப்பாக இது இருந்தது.

இஸ்லாமிய நாடுகளில் பரிசுத்த குர்ஆனின் உபதேசங்கள்தான் அரசனின் எதேச்சாதிகாரத் திற்குப் பின்னுல் நின்று ஆட்சி புரிந்தன. நிர்வாக விஷயத்தில் குறிப்பாக யுத்தகாலத்திலும் சமாதான காலத்திலும் அரசர்கள் எதேச்சாதிகாரிகளாய் இருந்தனர். இஸ்லாமிய நாட்டின் தலைவர்கள் என்ற முறையில் எல்லாவிதமான வெளிப்படை யான லெளகீக காரியங்களுக்கும் ஒரு மத சம்மந்த மான சாயம் பூசமுடியும். இந்த இருபதாம் நூற்றுண்டில்கூட பாகிஸ்தான் அவ்வாறு செய் துள்ளது. ஆனுல், அரசின் அடிப்படை இஸ்லாம் தான்.

அரசு என்பது பற்றிய மேற்கத்திய கருத் தோட்டத்துக்கு முற்றிலும நேர் எதிர்மறையான

ஒன்றை இந்தியா காட்டுகின்றது. எந்த ஒரு நாட்டையும்விட அதிகமாக அதன் சமூக அமைப்பு மக்கள்மீது ஒரு பிடிப்புக் கொண்டிருந்தது. அவர்கள் இந்துக்களாகவோ, முஸ்லீம்களாகவோ, ஐரோப்பியர்களாகவோ இருக்கலாம். ஜாதியும் கூட்டுக் குடும்பமும், பழைய புராதன அமைப்புக்கள், தன்னுட்சியுள்ள கிராம நிர்வாகம் ஆகியவை அலை அலையாக அந்நிய படையெடுப்புக்கள் ஏற்பட்டபோதும் இந்துப் பண்பாட்டை நிலைபெற்று நிற்கக் கூடியதாக்கின. ஆழ்ந்த கருத்தோடு மாத்யூ அர்னுல்டு கூறியுள்ளார்.

"சூறைமுன் குறுகிக் குனிந்தது கிழக்கு
பொறையோடும், அலட்சியத் தோடும்
எண்ணரும் சேனையைக் கடக்க விட்டது
திரும்பவும் சிந்தனையில் ஆழ்ந்தது"

என்று பாடியுள்ளார்.

பணிவுமிக்க விவசாயிகளுக்குப் பொருந்துவது போலவே யோகிகளுக்கும் இது பொருந்தும். வரி வசூலிப்பதைத் தவிர மற்றபடி மத்தியில் இருக்கும் அரசன் கிராமவாசிகளின் வாழ்க்கையைப் பற்றி அக்கரையே கொண்டதில்லை. விரோதிகளிடமிருந்தும் பாதுகாப்பு அளிப்பது என்பது மட்டுமே அவன் ஏற்றுக்கொண்ட பொறுப்பாகும். மற்றவை எல்லாம் கிராமப் பஞ்சாயத்தின் வேலைகள். அவை ஜாதி, கூட்டுக் குடும்பம் என்ற அடிப்படையில் ஆட்சி செலுத்தின. இந்து அமைப்பு முறையில் ஜாதிப் பாகுபாடு ஒப்புயர்வற்றது. இந்த வார்த்தையே அந்நிய மூலம் கொண்டது. காஸ்டா என்பது போர்த்துக்கீஸிய பதம். அதன் பொருள் ஜாதி அல்லது இனம் என்பதாகும். லத்தீன் மொழியில் காஸ்டுவா என்றால் தூய்மையானது என்று

பொருள்படும். இதற்குச் சரியான இந்தியப் பதம் என்னவென்ருல் ஜாதி அல்லது வருணம். ஜாதி களின் ஆரம்பம் பற்றி அடிக்கடி விவாதிக்கப்பட் டிருக்கிறது. அது ஒரு பயனற்ற ஆராய்ச்சி. அத னின்றும் தெரிந்துகொள்ள வேண்டிய பொருளா தார ஆரம்பம், நூற்ருண்டுகளின் காலப் போக்கில் ஏற்பட்ட சரித்திர சம்பவங்களால் முற்றிலும் மறைக்கப்பட்டுப் போயின. வேதங்கள் மூன்று விதமான ஜாதிகளைப் பற்றித்தான் கூறுகின்றது. பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள். இது சாதாரண பொருளாதார பாகுபாடாகும். ஒவ் வொரு சமுதாயத்திலும் காணக்கூடிய நடைமுறை யின் அடிப்படையில் அமைந்தது. இந்தியாவில் உள்ள இந்து ஆரியர்களுடன் நெருங்கிய கலாச் சார உறவு கொண்டிருந்த பண்டைய இரானியர் இடத்தில்கூட இந்தப் பாகுபாடு இருந்தது. அதர் வணர்கள் (பிராமணர்கள்) ரதேஸ்டர்கள் (க்ஷத்திரி யர்கள்) வஸ்டிரியோஷர்கள் (வைசியர்கள்) என்ற பாகுபாடு இரானில் இருந்தது. கடைசி அமைப்பு விவசாய மக்கள், தொழிலாளர்கள் உட்பட பல தரப்பட்ட மக்களைக் கொண்டிருந்தது. புராதன இரானின் அவெஸ்தா என்ற கிரந்தம் ஒரே ஒரு இடத்தில் மட்டும் நான்காம் வர்க்கம் பற்றிக் கூறுகின்றது. அவர்கள் உழைப்பாளிகள். டாக்டர் கில்பர்ட் ஸ்லேட்டரும், ஸ்டான்லிரைஸும் ஜாதிமுறை திராவிடர்களுடையது என்று கொள்ளு கின்றனர். வேதங்கள் தரும் சான்றுகளை வைத்துப் பார்த்தால் இது மிகவும் வலிந்து கொள்ளப்பட்ட முடிவு என்பது புலனுகும். ஆரியர்கள்மாட்டு திரா விடர்களின் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படு வதற்கு வெகு காலத்துக்கு முன்பே இருந்தவை இந்த வேதங்கள். மூல மூன்று வருணங்களுடன்

நான்காவது வருணமும் இணைக்கப்பட்டபோது திராவிடச் செல்வாக்கும் எதிர்மறையாக வலியுறுத்தப்பட்டது. இது சூத்திரர்களின் ஜாதி. ஆரம்பத்தில் இனப் பாகுபாடாக இருந்தது. வருணம் என்ற பதத்தின் பொருள் நிறம் என்பதிலிருந்தே இது தெளிவாகத் தெரிகின்றது. ஆரியர்கள் வெள்ளை நிறத்தவர்களாக இருந்தார்கள். இந்தியாவின் ஆதி குடிமக்களான சூத்திரர்களும், மற்றவர்களும் கறுப்பு நிறத்தவர்களாக இருந்தார்கள். சமூகவியல் சக்திகளின் கட்டாயத்தின் காரணமாக வெற்றி கொள்ளப்பட்டவர்கள் வென்றவர்களின் வேலையாட்களானவர்கள். ஆண் பெண் உறவு நிறத் தடைகளை அறியாது. ஆனால், இனப் பெருமை வெள்ளை நிறத்தவர்களுக்கும், கறுப்பு நிறத்தவர்களுக்குமிடையில் ஒரு பேதத்தை உண்டு பண்ணியிருந்தது. கறுப்பானவர்களுக்கு ஒரு தாழ்ந்த அந்தஸ்து கொடுக்கப்பட்டது. அவர்கள் விவசாயக் கூலிகளாகவும், கைவினைஞர்களுமானார்கள். வியாபாரிகளையும், வர்த்தகர்களையும் கொண்ட வைசியர்கள் அவர்களைவிட உயர்ந்த ஜாதி என்றானார்கள். தர்மசாஸ்திரங்கள் காலத்தில் கூட கலப்புத் திருமணங்கள் அறியப்படாத ஒன்றல்ல. ஏனெனில் மனுதர்மத்தில்கூட தெளிவான குறிப்புகள் காணப்படுகின்றன. மனைவிமார்களும் இந்து சமூக அமைப்புக்குள் இருந்தாக வேண்டியுள்ளபோதிலும் ஒரு பிராமணன் பிராமண மனைவியோடு ஒரு க்ஷத்திரிய மனைவியையும், வைசிய மனைவியையும், சூத்திர மனைவியையும் கொண்டிருந்ததைக் குறிப்பிடுகின்றது.

ஜாதி முறையில் மிகவும் கேடு விளைக்கும் கிளை - தீண்டப்படாதவர்கள் என்ற ஜாதியான பஞ்சமர்கள் என்ற ஜாதி. வெற்றி பெற்ற தாஸ்யூக்கள்,

ஆரிய வாழ்க்கை முறையை ஒத்துக்கொள்ளாத வர்கள், ஆரியர்களுடன் எந்த விதமான சமூக உறவும் வைத்துக் கொள்ளாதவர்கள் இவர்கள். அவர்கள் உண்மையிலேயே தீண்டப் படாதவர்கள் ஆனார்கள். மலபாரில் இருந்த தைப் போன்று நெருங்கக்கூடத் தகாதவர்களா னார்கள். ஏனெனில் அவர்கள் தோட்டி வேலை செய் தார்கள். இறந்த மிருகங்களின் தோல்களைப் பதப் படுத்தினார்கள் என்ற காரணத்தினால்தான் தீண்டப் படாதவர்கள் ஆனார்கள் என்று சொல்லிக்கொள்ள லாம். தீண்டாமையில், இவர்கள் பொதுச் சாலைகளை யும், குடிதண்ணீர் கிணறுகளையும் உபயோகிக்கும் உரிமையையும் இழந்தார்கள். அவர்கள் அந்தக் கிராமத்து மக்கள்தான். என்றாலும், கிராமத்தின் எல்லைக்கு அப்பால்தான் வசிக்க வேண்டிருந் தது. இயற்கையாக கலப்பு மணமும், சமபந்தி உணவும் முற்றிலும் தடுக்கப்பட்டது. எனவே, பிரிட்டீஷ் நிர்வாகத்தின் காலத்தில், மகாத்மா காந்தி போன்ற முற்போக்கான இந்தியர்களால் தீண்டாமை இந்து மதத்தின்மீது உள்ள ஒரு கறை என்று எண்ணப்பட்டது. சுதந்திரத்திற்குப் பிறகு இப்பழமை எண்ணங்களினின்றும் மீட்கப் பட்டார்கள். இருந்தாலும் பழைய எண்ணங்கள் மிகவும் ஆழமானவை. ஜாதி இந்துக்களின் உள் உணர்வில் அது அவ்வளவு ஆழமாக வேரூன்றி யிருப்பதால் கிராமங்களில் இன்னும் இந்நிலை நிலவு கின்றது. நகரங்களில், சிற்றுண்டி உணவு விடுதி களிலும், டிராம்களிலும், பஸ்களிலும், ரெயில்களி லும் இத்தீண்டாமையின் கூர் மழுங்கிப் போயிருக் கிறது. அவர்களை, 'ஹரிஜனங்கள்' என்று அழைப் பதன் மூலம் இத்தீமையை ஒழித்துவிடலாம் என்று காந்திஜி நினைத்தார். அரசாங்கம் அவர்களை ஷெட்

சூல்ட் (தாழ்த்தப்பட்ட வகுப்பினர்) ஜாதி யினர் என்று அழைக்கின்றது. புதுடில்லியில் உள்ள மத்திய அரசிலும், ஒவ்வொரு மாநிலத்திலு முள்ள அரசுகளிலும் ஹரிஜனங்கள் அமைச்சர் களாக இருந்தபோதிலும் இந்தப் பெயர் மாற்றம் இத் தீமையை பெருமளவில் பாதித்துவிடவில்லை. அவர்களில் ஒருவர் இந்திய தேசீயக் காங்கிரஸின் தலைவராகக்கூட உயர்ந்தார். பெருமதிப்புப் பெற் றிருந்த டாக்டர் அம்பேத்கார் தன்னைக் கணவனாக வரித்துக்கொள்ள ஒரு பிராமணப் பெண்மணி யைக் கண்டுபிடித்தார். ஆனால், இந்த விதி விலக்குகள் அதன் கோரத்தன்மையைத்தான் மெய்ப்பிக்கின்றன. சட்டத்தின் வலிமையினால் கோயில்கள் எல்லாம் பலவந்தமாகத் திறந்துவிடப் பட்டன. ஆனால், வைதீகர்களுக்கு அவைகள் கோயில்களாக இல்லாமல் போய்விட்டன. இந்தச் சீர்திருத்தம் அதன் குறிக்கோளை அடையத் தவறியது. சாலைகளிலும், கிணறுகளிலும், உள்ள அவர்களின் சட்டப்பூர்வமான உரிமைகளை வைதீகப் பகுதிகள் இன்னும் பலவந்தமான முறை யில் தடுக்கின்றன. காந்திஜியின் போதனைக் கேற்ப அரசு தன்னால் ஆனதை எல்லாம் செய்திருக் கிறது. ஆனால், மனப்பூர்வமாகவும், நியாய உணர் வுடனும் கீழ்ப்படியும் போதுதான் சட்டங்கள் பலன தருகின்றன. இந்த நிலை எவ்வளவு காலத் திற்கு நீடிக்கும்? சரித்திரம்தான் இந்தக் கேள்விக் குப் பதில் சொல்ல வேண்டும்.

கலப்பு மணம் சம்பந்தப்பட்ட மட்டில், முஸ்லீம் களின் வெற்றி ஒரு வேளை காரணமாக இருந் திருக்கலாம். ஒரு ஜாதிக்குள்ளான திருமணத்தை இறுக்கமடையச் செய்வதற்கு இது காரணமாக இருந்திருக்கலாம். ருதுவாவதற்கு முன்பே பெண்

களை மணம் செய்து கொடுப்பதை மனு ஒருவேளை ஆதரிக்கலாம். ஆனால், மகாபாரதமும் இராமாயணமும் காட்டுவது போல் பெண்கள் பருவமெய்திய பின் திருமணம் செய்து கொடுக்கப் படுவதற்கும் எந்தவிதமான சட்டப்பூர்வமான தடையும் கிடையாது. அந்நிய நாட்டுப் போர்வீரர்கள் இங்கு இருந்தார்கள். பெண்கள் கடத்தப்படுவதற்கான அபாயமும் இருந்தது. எனவே, பெண்களை எவ்வளவு முன்னதாக முடியுமோ அவ்வளவு முன்னதாகத் திருமணம் செய்து கொடுத்துவிட—சில சமயம் அவர்கள் பிறப்பதற்கு முன்னமேயே திருமணம் செய்யும் முன்னேற்பாடுகளை இந்துக்கள் செய்திருந்தனர். ஏனெனில் முஸ்லீம்களிடையே மனைவிகள் ஒருவித மரியாதைக்கும்,புனிதத்தன்மைக்கும் உரியவர்களாக இருந்தார்கள். முன்னெச்சரிக்கையாகத் தொடங்கப்பட்ட இப்பழக்கம் ஒரு மத சம்பிரதாய நிலைபெற்றது. பால்ய விவாகத்தின் தீமைகளில் கொண்டுவிட்டது. விதவா விவாகமும், கன்னி கழியா விதவைகள் விவாகமும் தடை செய்யப்பட்டது. இந்தக் குழந்தைப்பருவ மணங்கள் தீமைகள், சீர்திருத்தம் தேவைப்படுகின்ற தீமைகளின் பட்டியலில் சேர்ந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அநேக சீர்திருத்தத் தலைவர்கள் தோன்றினார்கள். ராஜாராம் மோஹன்ராயிலிருந்து மகாத்மா காந்தி ஈருக, ரானடே, சந்திரவாக்கர், கிஸ்காப் சந்திர சென், வித்யாசாகர் போன்ற சமூக சீர்திருத்தவாதிகள் தோன்றினர். எந்த ஒரு இந்தியனும், இந்தியப் பெண்மணியும் தான் தேர்ந்தெடுத்த நபரைத் திருமணம் செய்துகொள்ள முழுச் சுதந்திரம் தரும் சீர்திருத்தம் நாட்டிற்குச் சுதந்திரம் வந்தபின் ஏற்பட்டுள்ளது. சுதந்திரம் வருவதற்கு முந்திய காலகட்டத்தில் இருந்தது

போன்று விதவா மறுமணத்தைப் பிரகடனப் படுத்தவேண்டிய நிலை இப்போது இல்லை. இருந்தாலும் ஒரு ஜாதிக்குள்ளேயே மணம் முடித்துக் கொள்வது இன்னும் இருக்கிறது. சட்டவிரோதமாக்கப் பட்டபோது பால்ய மணங்கள், முக்கியமாக கிராமங்களில் இன்னும் சர்வசாதாரணமாக இருக்கின்றன. கல்வியறிவு விஸ்தரிப்பும், அரசியல் சட்டத்தில் ஏற்றுக்கொண்ட ஜனநாயகக் கொள்கைகளும் இந்தத் தீமைகளை ஒழிக்க வழிகோலும். இவை ஒரு காலத்தில் சமுதாய சீர்திருத்தங்களை செல்வாக்கற்றவையாகவும் சமூக சீர்திருத்தவாதிகளைப் புனிதர்களாகவும் ஆக்கியுள்ளன.

இந்தியாவில் வளர்ந்து வந்த அந்நியர்களின் ஆதிக்கம் காரணமாக இந்து சமூகம் தற்காப்புக்காக வேண்டி மென்மேலும் வைதீகத் தன்மை வாய்ந்ததாயிற்று. ஜாதி விதிகளைச் சிறிதளவு மீறினாலும் அதை மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்கும் நிலையிலும் இருந்தது. நெறிகெட்ட தன்மைகூட அனுமதிக்கப்பட்டது. ஆனால், பகிரங்கமாக ஜாதி விதிகளை மீறுவது அனுமதிக்கப்படவில்லை. அப்படி மீறியவர்களுக்கு ஜாதிவிலக்கம் போன்ற கொடிய தண்டனைகள் கொடுக்கப்பட்டன. இவ்வாறு ஜாதிவிலக்கம் செய்யப்பட்டவர்கள் தங்களுக்கென்று ஒரு உப-ஜாதியை உண்டுபண்ண வேண்டியதாயிற்று. எனவே, இந்த நான்கு வருணங்களும் எண்ணற்ற உப-ஜாதிகளாய் முடிவடைந்தன. ஒரு தொழிலையோ, தனித்திறனையோ குறிப்பிட பல உள்ஜாதிகள் தோன்றின. உதாரணமாக பூல் மாலிஸ் ஜாதி (பூந்தோட்டக்காரர்கள்) இவர்கள் மாலைக்கான நூல் தயார் செய்பவர்களிலிருந்து

பிரிந்து தனித்த உப-ஜாதியாக வேண்டியிருந்தது. இவ்வாறு நகைப்புக்கிடமாகும் வரையில் இந்தப் பிரிவினை சென்றது. கொத்திக் குதறப்பட்ட இறைச்சித் துண்டைப்போல் பிரிந்தோம், உப-பிரிவுகளாகப் பிரிந்தோம் நாம். வாழ்வதற்குத் தகுதியானவர்களாக அல்ல. விழுங்கப்படத் தகுதியானவர்களாக. "பிரிந்த நிலையில் உள்ள நம் சமூகத்தால், நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் தீமைகளைத் தடுக்க முடியாமல் போயிற்று" என்று மேதை தாகூர் தனக்கே உரிய ஒப்பற்ற முறையில் இத்தீமைகளை வெட்ட வெளிச்சமாக எடுத்துக் காட்டினர். விவசாய மக்களுக்கும், கைவினைஞர்களுக்கும் உயர் மரியாதை தருகின்ற, சீனுவின் கன்பியூஸியஸ் ஜனநாயகத்துடன் இதை ஒப்பிட்டுப் பார்க்கின்றார். மறுபடியும் தாகூர் சொன்னதைப் பார்ப்போம். "நாம் நம்மையே மாய்த்துக்கொள்ளும் ஒரு இனம். ஆச்சரியப்படத்தக்க சாமர்த்தியத்துடன், நமக்குத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. மீறினுல் தண்டனை கிடைக்கும் என்று பயமுறுத்தப்பட்டுள்ளது. இந்த இடைவெளிகளை புராதன காலத்தவை என்ற காரணத்தால், அவை சீர்படுத்தக் கூடாதவை, புனிதமானவை என்று நினைக்கிறோம். இந்த வெடிப்புக்களை நாம் நீண்ட நாட்களாக அப்படியே விட்டுவைத்திருக்கிறோம்."

ஜாதி முறையின் குறுகிய நோக்கங்களை எதிர்த்துப் போராடும் ஞானிகளை ஒவ்வொரு நூற்றுண்டும் தோன்றச் செய்துள்ளது. இதை இந்து மதத்தின் சார்பாகச் சொல்லத்தான் வேண்டும். ஜாதிமுறை பற்றிய ஒரு நீதி விளக்கத்தை கிருஷ்ணபகவான் பகவத் கீதையில் தந்துள்ளார். இது மதிப்புக்குறிய ஒரு விளக்கம்.

குணங்களை (பண்புகள்) ஒட்டியே நான்கு ஜாதிகளையும் உருவாக்கியுள்ளதாக அவர் கூறுகின்றார். இவை சத்வ குணம், ராஜஸ குணம், தாமஸ குணம் என ஆகும். ஒவ்வொரு மானிடனிடத்திலும் இம் மூன்று குணங்களும் பல்வேறு விதத்தில் காணப் படுகின்றன. சத்வ குணம் (உண்மை அல்லது நேர்மை) அதிகமாக இருப்பவர்கள் பிராமணர்கள். ராஜஸ குணம் (செயல்திறன்) அதிகமாக இருப்பவர்கள் க்ஷத்திரியர்கள். தாமஸ குணம் (இருண்மை அல்லது அறியாமை) அதிகமாக இருப்பவர்கள் சூத்திரர்கள். இது நெறிமுறை பாகு பாடு. பிறப்பினால் பிராமணனாக இருப்பவன் உண் மையில் ஒரு சூத்திரனாக இருக்கலாம். பிறப்பினால் சூத்திரனாக இருப்பவன் நெறிமுறைப்படி பிராமணனாகவும் இருக்கலாம் என்பது இதினின்றும் புலனாகின்றது. ஆனால், ஜாதி பற்றிய சரித்திரத்தில் இந்த விளக்கம் வெறும் உன்னதமான தத்துவமாக மட்டும் இருக்கின்றது. ஏனெனில் நடைமுறையில் பாரம்பரியம்தான் கணக்கில் கொள்ளப் படுகின்றது. ஒரு பிராமணன் எவ்வளவுதான் கெட்ட நடத்தை உள்ளவனாக இருந்தபோதும் ஒரு பிராமணனாகவே இருக்கிறான். வணக்கத்திற்குரிய உன்னத மனிதனாகவே கருதப்படுகிறான். ஒரு சூத்திரன் எவ்வளவுதான் பரிசுத்தவானாக இருந்த போதிலும் சூத்திரனாகவே இருக்கிறான். கீழ்ஜாதிக் காரனாகவே கருதப்படுகிறான். கிருஷ்ண பகவானுடைய போதனைகளின்படி பார்த்தால், ஒரு சண்டாளன்கூட (தீண்டப் படாதவன்) கிருஷ்ணனைச் சரணடைந்தால் காப்பாற்றப்படுவான். ஆனால், இந்தியாவின் ஜாதி முறையில் ஒரு ஜாதியினின்றும் வேறு ஒரு ஜாதிக்கு உயர்வது என்பதற்குச் சாத்தியமே இல்லை. மறு பிறவியில் வேண்டுமானால் ஏற்படலாம்.

மத்திய காலத்தில் இருந்த சித்தர்கள் ஜாதிக் கட்டுப்பாட்டையும் மீறி உயர்ந்தார்கள். தற்காலிக மானதோர் பரபரப்பு இருந்தது. வெகு சீக்கிரம் அது தணிந்து விட்டது. கபீர் பன்திஸ் காட்டும் சோகச் சரித்திரம் போல் அதுவும் ஒரு உப-ஜாதி யாய்ப் போய் முடிந்தது.

நமது அரசியல் சட்டம் ஜாதியற்ற, வர்க்க பேதமற்ற சமுதாயத்திற்கு வழி கோலுகின்றது. ஆனால், ஜாதிக் கட்டுப்பாட்டைப் பெரிதும் பாதித்து விடவில்லை. எந்த ஒரு தனிப்பட்ட இந்துவும் தண்டனை பயமோ, அல்லது சமூக விலக்கு பயமோ இன்றி ஜாதி விதிகளை மீற மட்டும் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜாதிமுறை படிப்படியாக மறைந்து போவதற்குச் சட்டம் பெரிதும் வழிகோலியுள்ளது. ஆனால், சமூக சீர்திருத்தச் சட்டங்கள் பாமர மக்களின் உள்ளுணர்வை எவ்வளவு தூரம் பாதிக்கின்றன என்பதைப் பொறுத்துத்தானிருக்கின்றது அதன் வெற்றி. எனவே, ஜாதிப் பார்வையில் ஏதேச் சாதிகாரத் தன்மை வாய்ந்ததாகவும், மிகவும் வைதீக மதப்பற்றுடையதாகவும், ஜனநாயகத் துக்கு விரோதமானதாகவும் இருந்து வருகின்றது. நமது அரசியல் சட்டம் மதச்சார்பற்ற அரசையும், தீண்டாமைக்கு எதிரான தன்மையையும் சமூக சமத்துவத்தையும், லட்சியமாகக் கொண்டுள்ளது. ஆனால், ஜனநாயக முறையிலான வாக்கெடுப்பு முறை ஜாதிமுறைக்கு ஒரு புத்தியிருட்டியுள்ளது. நமது ஜனநாயகம் இன்னும் முதிர்ச்சியுறாத நிலைமை யில் இருக்கின்றது. அரசியல் கட்சிகள் இன்னும் வேரூன்ற வேண்டியுள்ளது. எனவே, படிப்பு வாசனையற்ற பெரும்பான்மையான நமது வாக் காளர்கள், ஜாதி, மதம், இனம் என்ற அடிப்படை

யில் வாக்களிப்பதில் ஒரு நம்பிக்கை தரும் வழி காட்டுதலைக் காண்கின்றனர். இந்திய வாழ்க்கை யில் இது ஒரு புதிராக இருக்கின்றது. பரம்பரை பரம்பரையாக வந்த இக்குணங்கள் எவ்வளவு காலம்தான் ஆட்சி செலுத்தும் என்பதைக் காலம் தான் காட்டவேண்டும்.

முன்பு குறிப்பிட்டபடி ஜாதியின் உண்மை யான ஆரம்பம் செயல்களின் பொருளாதார பாகு பாட்டில் காணப்படுகின்றது. "ஜாதி என்பது ஆச்சரியமானதோர் கண்டுபிடிப்பு என நான் நம்பு கிறேன். சோஷலிஸத்தின் ஒரு பகுதி அராஜகத்தி னின்றும், தொழில் போட்டி வாழ்க்கை தீயமுறை களினின்றும் இந்து சமூகத்தைப் பாதுகாத்துள் ளது. ஆரம்பத்தில் தானே இயங்கும் எளிய சட்ட மாக இருந்தது. காணக் கிடக்கும் தொழிற்சங்கங் களில் வலிமை மிக்க அமைப்பாகவும் இருக் கின்றது" என்று இந்திய ஜாதி முறைக்கு மெரிடித் டௌன் செண்ட் என்ற அந்நியர் புகழ்மாலை சூட்டி யுள்ளார். பரம்பரைத் திறமை நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக வழிவழியாக வந்துள்ளது.

இந்தியாவில் உள்ள பெரும்பான்மையினரான விவசாயிகள், தொழில்வினைஞர்கள் ஆகியவர்களை உட்படுத்தியுள்ளது ஜாதி. இதுபற்றி இந்திய தத்துவ ஆராய்ச்சியோ, சமூக சிந்தனையோ சரியான மதிப்பீடு செய்துள்ளதா என்பது இன்னும் தீர்மானிக்கப்படாத பிரச்சினையாகவே இருக்கின்றது. ஜாதிமுறையின் எதேச்சாதிகாரக் குணம் எப்போதுமே சிந்தனைக்கும், தத்துவ சிந்தனைக்கும் முதலிடம் கொடுத்துள்ளது. உப நிஷத்துக்களின் பாரம்பரியம் இன்னும் ஆதிக் கத்தில் இருக்கின்றது. இயற்கையாகவே பிராம ணர்கள் மிகவும் மதிக்கப்படுகிறார்கள். வேதங்க

ளுடையவும், ஜாதிக் கொடுமையினுடையவும் வைதீகத்தனத்தை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த புத்தர், மகாவீரர் போன்ற க்ஷத்திரியர்கள் தங்கள் கடமையைச் செய்யவும் செய்தார்கள். தங்களின் செல்வச் செருக்குக் காரணமாக வைசியர்கள் உயர் நிலை எய்தினர். ஆனுல், அடிமட்டத்தில் இருந்த சூத்திரர்கள் நிலத்தில் பாடுபடுபவர்களாக இருந் தார்கள். இந்துக் கோவில்களிலும், புத்தக் குகைக் கோவில்களிலும் உள்ள கலைச்செல்வத்தை உரு வாக்கிய கலைஞர்கள் தோன்றினுர்கள். உணவு உற்பத்தி செய்த எளிய விவசாயிகள், சமுதாயத் துக்குத் தேவைப்பட்ட தினசரித் தேவை களைக் கஷ்டப்பட்டு உழைத்துக் கொடுத்த கைவினைஞர்கள் ஆகியவர்கள் இவர்கள் மத்தியில் இருந்தனர். இவர்களில் விபச்சாரிகளும் இருந்தனர். ஏனெனில் அவர்களும் தொழிலாளர் குழுவாக அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். இது ஒரு நல்ல ஜனநாயகமாக இருந்திருக்கலாம். ஆனுல், மிகவும் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும் ஜாதியை இழிவாகக் கருதிற்று. ஜாதித்து வத்தின் உயர்குல அடித்தளத்தைத் தகர்க்க காந்திஜி தீர்க்கமாக முயற்சி செய்தார். எல்லா ஜாதிகளையும் சமமாகவே பாவித்தார். ஜாதிகள் பார்க்கப்பட வேண்டிய முறையில் பார்க்கப்பட் டால் அவர் நிலை சரியானதே. ஆனுல், நமது உயர் நோக்கம் சரித்திரத்தை அழித்துவிட முடியாது. முந்தய நூற்ருண்டுகளில் இருப்பது போலவே இன்றும் இருக்கின்றது. எவ்வாறு என்ருல், ஜாதி என்பது பிராமணர்களை உச்சியிலும் சூத்திரர்களை அடித்தளத்திலும் வைத்திருக்கும் அமைப்பாகும். மிகவும் மோசமான நடத்தைக்குப் பேர்போன பிராமண வக்கீல் ஒருவர் ஒரு சில ஆண்டுகளுக்கு

முன்பு என்னிடம், "நாங்கள் பிராமணர்கள், உயர்ந்த ஜாதிக்காரர்கள். இது உங்களுக்குத் தெரியுமா?" என்று தற்பெருமையுடன் பேசினர். அது எனக்கு மிகவும் வேடிக்கையாகப் பட்டது. இப்போது எனக்கு அது ஞாபகத்திற்கு வருகிறது. பெருமைப்படக்கூடிய உத்தம பிராமணர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இது போன்று எல்லா ஜாதியிலும் உத்தமர்கள் இருக்கின்றனர். ஆனல், அவர்களெல்லாம் உத்தம பிராமணர்களுக்குச் சமமாக மதிக்கப்படுவதில்லை. காந்திஜி ஒரு மாபெரும் வைசியர். இந்தியா அதன் நீண்ட சரித்திரத்தில் பிறப்பித்திருக்கும் எந்த ஒரு பிராமணனுக்கும் குறையாத உத்தம பிராமணனுக இருந்தார் அவர். எந்த ஒரு சூத்திரனும் பெருமைப் படக்கூடிய அளவிலான நெசவாளியாக இருந்தார். எந்த ஒரு பஞ்சமனும் பெருமைப் படக்கூடிய அளவிலான தோட்டியாகவும் இருந்தார். இத் தொழில்களை யெல்லாம் இழிவாகவும் கருதவில்லை. இவ்வளவு இருந்தும் இந்தியா உருவாக்கிய எந்த ஒரு பிராமணனையும்விட உயர்ந்த பிராமணனுக இருப்பதாக அவர் உரிமை கொண்டாட முடியும். முல்க்ராஜ் ஆனந்த் ஒரு நவீனத்தில் "நான் பிறரைச் சுத்தமாக வைத்திருப்பதால் நான் அசுத்தவானுகக் கருதப்படுகின்றேன்" என்ற ஒரு தீண்டப்படாத வனின் சோகக் முழுறலை சித்தரித்துள்ளார். இந்த சோகக் குமுறலை பெருவாரியான இந்தியர்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர். இதை மகாத்மா புரிந்து கொண்டார். 'எக்ஸலன்ஸ்' என்ற புத்தகத்தில் டபுள்யூ. கார்டினர் கூறியுள்ள கருத்துக்களை ஒவ்வொரு இந்தியனும் தீர்க்கமாய் மனதில் கொள்வானுயின் இந்தியாவுக்கு நன்மையைத் தரும்.

"ஒரு திறமையான குழாய் வேலைக்காரன் தகுதியற்ற தத்துவாசிரியனைவிட மிகவும் பாராட்டப்படக் கூடியவன். குழாய் வேலை தாழ்ந்த தொழில் என்று கருதி அதன் நிபுணத்துவத்தை இகழ்ந்தாலோ, தத்துவம் உயர்ந்த செயல் என்று கருதி மட்டமான சித்தாந்தத்திற்கு இடம் கொடுத்தாலோ —அப்படிப்பட்ட சமுதாயத்தில் திறமையாகக் குழாயைச் செப்பனிடுபவனோ, உயர்ந்த தத்துவ ஞானியோ இருக்க முடியாது. அதன் குழாய்களோ, தத்துவார்த்தங்களோ நீரைத் தேக்க முடியாது."

வேதகால ஆரம்பத்திலோ, அல்லது தர்ம சாஸ்திர காலத்திலோ சில நன்மையான அம்சங் களைக் கொண்டதாக ஜாதி முறை இருந்திருக்க லாம். அது நடைமுறையில் இருந்ததை நியாயப் படுத்தும் முறையில் இவை இருந்திருக்கலாம். ஆனால், பிற்காலத்தில் ஏற்பட்ட இறுக்கம் சமபந்தி போஜனத்தை எதிர்த்தது. கலப்பு மணத்திற்கு எதிராக இருந்தது. கடல் கடந்து செல்வதையும் தடை செய்தது. இதனால் வாழ்க்கைப் பந்தயத்தில் இந்தியாவைப் பின்னடையச் செய்து விட்டது. இனக்கலப்பிற்குத் தடையாக நின்று தேசீய வளர்ச்சியைத்தாமதப் படுத்திற்று. பொருளாதாரத் தேக்கத்திற்கு வழிகோலியது. எல்லா இந்து வல்லாத சமூகத்தையும் ஜாதி உணர்ச்சி கொள்ளச் செய்தது. உதாரணமாக பார்சிகள், முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த கோஜர்கள், பேயர்கள், கட்சு மோமன்கள், தங்களுக்கென்றே தனி விடுதிகளை அமைத்துக்கொண்ட பிரிட்டீஷ்காரர்கள் ஆகிய வர்கள். தென்னிந்தியாவில், கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டவர்கள்கூட பிராமண கிருஸ்த

வர்கள், சூத்திர கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்கின்றனர்.

நியாயப்படுத்தப்படக் கூடிய பொருளாதார அம்சத்திற்கு அப்பாலும், ஜாதி முறை இந்தியா விற்கு மாபெரும் சேவை செய்துள்ளது. எவ்வளவு தான் திரிபான தன்மை கொண்டதாக இருந்த போதிலும் இந்து சமூகத்தின் அமைப்பைப் பாது காத்து வந்திருக்கிறது. இஸ்லாம் மதத்தின் சக்தி வாய்ந்த தாக்குதலையும், கிறிஸ்தவ மதத்தின் சாதுரிய அமைப்பையும் எதிர்த்துச் சமாளித்திருக் கிறது. இப்போது இந்தியா சுதந்திரம் பெற்றுள்ளது. சுதந்திரமாக இருக்கிறது. ஒரே தேசம் என்ற அளவில் புது வாழ்வு தொடங்க தேசீயம் என்ற புது இணைப்புக்கான காலம் நெருங்கியுள்ளது.

சீர்திருத்தத்தை உண்டுபண்ணும் எல்லா முயற்சிகளையும் ஜாதி தடுத்திருக்கிறது. தேசீயத் தின் அழைப்பு, அது சமாளிக்க வேண்டிய பெரும் சவாலாக இருக்கின்றது. பழங்காலத்தில் புத்தன் முதல் ராஜாராம் மோஹன்ராய், காந்திஜி ஈருக உள்ள இந்தியாவின் மாபெரும் தவப் புதல்வர் களின் அழைப்புக்களை எல்லாம் எதிர்த்து நின்றிருக் கின்றது. இப்போதும் இந்த தேசீய மென்னும் சவாலின் மேலும் ஜாதித்துவம் வெற்றி பெற்று விடுமோ என்ற ஒரு சந்தேகத்தை தேர்தல்களில் ஏற்படும் ஜாதி, இனவாரி வாக்கெடுப்பு உண்டு பண்ணுகின்றது. ஒருவர் நம்பிக்கையுடன்தான் இருக்க முடியும். நம்பிக்கை இல்லாவிட்டால் வாழ்வு எப்படியாகும்?

## 5. ஐரோப்பிய இந்தியச் சரித்திரங்களின் வேறுபாடுகள்

புராதன கிரேக்க ரோம் காலத்திலிருந்து ஐரோப்பாவின் சரித்திரத்தை நாம் பார்த்தோம். இச் சரித்திரம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பலதரப்பட்ட தேசங்களிலும் பலதரப்பட்ட உருவங்களில் உள்ள அரசுகளின் சரித்திரமாகவே இருந்தது என்பதை நாம் பார்த்தோம். இந்தியா வின் சரித்திரத்தைப் பார்த்தால் பொதுவாக மக்கள் வாழ்வில் அரசு அவ்வளவு தூரம் முக்கியமற்றதாக இருந்ததைக் காட்டுகின்றது. ஜாதி இந்தியாவின் பலம் வாய்ந்த அமைப்பாக இருந்திருக்கிறது. தொடர்ச்சியாக ஏற்பட்ட படையெடுப்பாளர்கள் முன் இந்தியர்கள் தலை வணங்கினர். தங்கள் ஜாதியின் நான்கு மதில்களுக்குள்ளிருந்து தங்கள் வாழ்க்கையைத் தொடர்வதற்கு வேண்டியே அவ் விதம் செய்திருக்கின்றனர். இந்த அம்சம் பற்றி நாம் ஏற்கனவே பார்த்துவிட்டோம். இந்து சமூகத்தை நிலைநாட்டுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய வேறு ஒரு அமைப்பும் இருந்தது. அதுதான்

இந்துக் கூட்டுக் குடும்பம். இந்து சமூக புத்தி சாலித்தனத்தின் வெளிப்படையான சின்னம்என்று இதைநான் எப்போதுமே கருதி வந்திருக்கிறேன். ஜாதியோடு கூட நின்று அரசின் எதேச்சாதி காரத்தைச் சமாளித்திருக்கின்றது. முஸ்லீம்களோ அல்லது பிரிட்டீஷ்காரர்களோ அல்லது இந்தச் சமூக அமைப்பைத் திருத்தத் தைரியம் கொள்ள வில்லை. ஆனல், சுதந்திர இந்தியா புதிய தேசீயப் பார்வையுடன் திருமணம், தத்தெடுத்தல், வாரிசு ஆகியவை சம்பந்தமாய்ச் சட்டமியற்றத் தைரியம் கொண்டது. பண்டித ஜவஹர்லால் நேருவின் முழு ஆதரவுடன் இது சம்மந்தமான நுண்ணிய விதிகளை வகுக்கும் மேதாவிலாசத்தைக் கொண் டிருந்தார் டாக்டர் அம்பேத்கார். நேரு ஆங்கிலக் கல்வியறிவுடன், மார்க்ஸிய பொருளாதாரத்தையும் நன்கறிந்திருந்தார். பொதுமக்களிடம் பெரும் செல் வாக்குப் பெற்றிருந்தார். மனதில் எந்த விதமான கபடமும் கிடையாது. அவர் ஒரு வார்த்தை சொன்னல் போதும், அவர் அவர்களை எங்கே இட்டுச் செல்கிருர் என்பதைக்கூடப் பொருட் படுத்தாமல் அவரை பின்பற்ற மக்கள் தயாராக இருந்தார்கள். நம் அரசியல் சட்டத்தின் சூசனை உண்மையிலேயே அதற்கு விரோதமாக இருந்த போதும் ஜாதிமுறை நேரடியாத் தாக்கப்படவில்லை. எந்த ஒரு நாடும்—எவ்வளவுதான் பூரணத்துவ மான அதிகாரம் கொண்டிருந்தாலும், ஒரு மனி தனைத் தன் ஜாதியை விட்டு வெளியே திருமணம் செய்துகொள்ள கட்டாயப்படுத்த முடியாது. தீண்டப்படாதவனுக இருந்தாலும் சரிதான் தீண்டப் படாதவன் நுழைந்து விட்டதனல் அசுத்தமாகி விட்டது என்று எண்ணுகின்ற ஒருவனை எந்த ஒரு கோவிலிலும் தெய்வ வழிபாடு செய்ய எந்த ஒரு

அரசும் கட்டாயப்படுத்த முடியாது. சமூக வசைப் பேச்சோ, பகிஷ்காரமோ இல்லாத முறையில் ஜாதி முறையின் எல்லா விதிகளேயும் மீறுவதற்கு மக்களே அனுமதிக்க மட்டும்தான் முடியும். இந்து கூட்டுக் குடும்பத்தைப் பொறுத்தமட்டில் அது வேறு விதமாக இருந்தது. அதன் இப்போதைய உருக்குலேந்த நிலேயைப் புரிந்துகொள்ள வேண்டுமாஞல் இந்துக் கூட்டுக் குடும்பம் எதற்காக ஏற்பட்டது என்பதை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

மேற்கத்திய நாடுகளிலும், இஸ்லாமிய நாடுகளிலும் உள்ள சட்டங்களில் குடும்பம் என்பது கணவன், மனேவி, குழந்தைகள் ஆகியவைகளேக் கொண்டதாகும். இஸ்லாமிய சட்டத்தில் இருப்பது போல் பெற்ரேர் போன்ற தன்னேச் சார்ந்திருப்பவர்களின் நலன்களும் பாதுகாக்கப்படலாம். ஆனுல், சொத்துரிமை ஆணின் மேலோ பெண்ணின் மேலோதான் இருக்கின்றது. உடமையாளரின் மரணத்துக்குப் பின்தான் பிள்ளேகளுடையவோ, மனேவியினுடையவோ, கணவனுடையதாகவோ சொத்து உரிமை ஆரம்பமாகின்றது. கிறிஸ்துவ நாடுகளில், ஓரளவு இஸ்லாமிய தேசங்களில் இருப்பதுபோல் இந்த உரிமையும் உடமையாளரின் உயில் எழுதிவைக்கும் உரிமைக்கு உட்பட்டதாகும்.

இந்துக் கூட்டுக் குடும்பம் மூன்று தலேமுறைகளே உட்படுத்துகின்றது. எல்லா ஆண் அங்கத்தினரும் இதில் முக்கிய பங்காளிகள். இவர்கள் கூட்டு மரபு உரிமையாளர் (Coparceners) என்று அழைக்கப்படுகின்றனர். ஒரு ஆண் மகவு பிறந்த உடனேயே மற்றவர்களுடன் சமமான

பங்காளியாகி விடுகிறுன். தாயின் வயிற்றில் இருக்கும் ஆண்மகவுக்கும் இந்த உரிமையுண்டு. வயதில் மூத்த ஆண் அங்கத்தினர் குடும்பத்தின் தலைவர். அவர் ஏதேச்சாதிகாரி. ஆனால், குடும்பத்துக்கு நல்லது செய்யவேண்டிய ஏதேச்சாதிகாரி. குடும்பத்தில் இருக்கும் பெண் அங்கத்தினர்களுக்குக் குடும்பச் சொத்தில் உரிமை கிடையாது. ஆனால், பராமரிக்கப்பட வேண்டிய உரிமைகள் அவர்களுக்குண்டு. அவர்களின் திருமணச் செலவெல்லாம் குடும்பச் சொத்திலிருந்து தான் கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மகளுக்கும் ரொக்கமாகவோ, நகைகளாகவோ சொத்தாகவோ பூதானம் கொடுக்கப்பட வேண்டும். அவளுக்கு அச் சொத்தில் முழுமையான உரிமையுண்டு. கணவன் கூட அந்த உரிமையில் தலையிட முடியாது. இது சித்தாந்தம். ஆனால், நடைமுறையில் ஒரு நல்ல இந்து மனைவி கஷ்டகாலங்களில் தன் கணவனின் உதவிக்கு வருவதற்குத் தயங்கமாட்டாள். சில சந்தர்ப்பங்களில் அவள் பூதானத்தை முழுமையாகவோ, அல்லது ஒரு பகுதியையோ விட்டுக் கொடுக்கும்படி பலவந்தப் படுத்தலாம். இயற்கையாகவே குடும்பத்தின் அந்தஸ்திற்கும், செல்வத்திற்கும் தக்கவாறு பூதானத்தின் அளவும் மாறும். ஒரு பெண் திருமணம் செய்யப்பட்டு விட்டாள் என்ருல் தந்தை வழிச் சொத்தில் அவளுக்கு உரிமை கிடையாது. ஏனெனில் அவள் வேறு ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவளாகி விடுகிருள். இவை எல்லாம் சுதந்தரம் வந்ததற்குப் பின் சட்டங்கள் மூலம் அடியோடு மாற்றப்பட்டு விட்டன.

இந்துக் கூட்டுக் குடும்பம் ஆரம்பத்தில் உருவானபோது சில திட்டவட்டமான நலன்களைக் கொண்டிருந்தது.

1. சொத்து தேவையற்ற துண்டு துக்காணி களாகப் பிரிக்கப்படுவதை இது தடுத்தது. குடும்பச் சொத்தை முழுமையான ஒரு தொகுதியாகக் காப் பாற்ற வழிகோலியது.

2. சங்கடமான காலங்களில் பாதுகாப் பளித்தது.

3. ஒரே குடும்பத்தில் திறமையையும், கல்வி யையும் ஒன்று சேர்த்துப் பாதுகாத்தது.

4. ஒரு அங்கவீனமான குழந்தை பாதுகாக் கப்பட்டது. இவ்வாறு சமூக இன்ஸூயூரன்ஸின் ஒரு சாயலை அது கொண்டிருந்தது.

மறுபக்கத்தில் பொதுவாகப் பெண்களைக் கடு மையாகப் பாதித்தது. முக்கியமாக ஒரு தகப்ப னுக்கு ஒரு மகளோ, மகள்களோ இருந்தார்கள் என்றால், அவனுக்குப் பிறந்த பெண் பிள்ளை களுக்குக் கிடைக்காது. ஆனால், பரம்பரைச் சொத்து உடன் பிறந்தவரின் பிள்ளைகளுக்கோ, தந்தையுடன் பிறந்தோர்களின் பிள்ளைகளுக்கோ போய்விடும். இன்றைய நிலைமையோ எதிர் எல்லைக் குச் சென்றுவிட்டது. உயில் எழுதும் உரிமை எல்லா இந்துக்களுக்கும கொடுக்கப்பட்டிருக் கிறது. பெண் பிள்ளைகளும் இதனால் நன்மை அடைபவர்களாக இருக்காலம். ஒரு இந்து உயில் எழுதி வைக்காமலே இறந்து விட்டாலும் பெண்ணின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்கு பெறுவதற்கான பெண்ணின் உரிமை அங்கீககரிக்கப்பட்டிருப்ப தால் கூட்டுக் குடும்ப முறை பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறது. சொத்தைப் பாகம் செய்யும்படி அவள் கோர முடியாது. ஆனால், பூர்வீக வீட்டில்

குடியிருக்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இது ஒரு முக்கியமான விஷயமாகும். ஏனெனில் வேறு ஒரு குடும்பத்தைச் சேர்ந்த கணவன் தனது மனைவியின் குடும்பத்தில் வந்திருக்க உரிமை கொடுக்கப்பட்டால் குடும்பச் சொத்தின் பழைய தன்மையே பாதிக்கப்படும். தன் மூதாதையர்களுக்கு வேண்டிய மதச்சடங்குகளைச் செய்வதே மகனுடைய பிறப்புரிமை. சுவீகாரத்தின் மதப் பூர்வமான அடிப்படை இதுதான். இருந்தாலும் சுவீகாரச்சட்டம் ஒரு பெண்ணையும் தத்தெடுத்துக் கொள்வதை அனுமதிக்கின்றது.

இந்துக் கூட்டுக்குடும்பம், புராதன காலத்தில் உள்ள நிலையில் இருந்தபோது குறைபாடுகள் உடையதாகவும் இருந்திருக்கலாம். ஆனால், மொத்தமாகப் பார்த்தால் நியாயப்பூர்வமாகத் திட்டமிடப் பட்டிருந்தது. வலிமையான குடும்ப உணர்வை விருத்தி செய்தது. ஜாதி உணர்வைப் போலவே ஒரு வலிமையான உணர்ச்சியை உண்டுபண்ணி யிருந்தது. குடும்பச் சொத்தில் பெண்ணுக்குப் பங்கில்லை. இருந்தபோதிலும், கல்யாண காலத்தில் ஸ்ரீதனமோ, வரதட்சிணையோ கொடுக்கப்பட்டது. இதன் மூலம் அவள் தாராளமாக நடத்தப்பட்டாள். நெருக்கடி ஏற்படும் காலங்களில் சகோதரர்கள் தங்கள் சகோதரிகளின் உதவிக்கு வரத் தயங்கிய தில்லை. ஆனால் பிரிட்டிஷ்காரர்களுடன் வந்த மேற்கத்திய தனித்தன்மை எனும் உணர்ச்சி இந்தப் பழக்கத்தை காலத்துக்கு ஒவ்வாத ஒரு பழக்கமாக்கி விட்டது. பெண்கள் குழந்தைகளாக இருக்கும்போதே, அவர்கள் ஒன்றும் அறியாதவர்களாக இருக்கும்போதே திருமணம் செய்துகொடுக்கப்பட்டது. அது நன்கு பயன் பட்டது. ஆனால், இன்று பெண்கள் கல்வியறிவு பெற்றுத்

தங்கள் உரிமைகளை நன்கு அறிந்திருக்கின்றனர். தங்களுடைய கணவர்களுடையவோ, மாமியார் களுடையவோ மனப்போக்குகளை அப்படியே எடுத் துக் கொள்ளும் மனப்பாங்கில் அவர்கள் இல்லை. முன்பு இருந்ததைவிட குடும்பச் சச்சரவுகள் அதிக மாகிப்போய்விட்டன. குடும்ப உணர்ச்சி நசித்துப் போய்விட்டது. பழைய குடும்ப முறையில் செயல் படுவது முடியாததாக இல்லாவிட்டாலும் கஷ்ட மாகிப் போய்விட்டது. இந்துப் பெண்களின் அந்தஸ்துப் பற்றியும், உரிமைகள் பற்றியும் ஆராய்ந்து அறிக்கை வெளியிட மைசூர் அர சாங்கம் சந்திரசேகரஐயர் கமிட்டியை நியமித்தது. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டது. கூட்டுக் குடும்பத்தின் அழிவு ஆரம்பமாயிற்று. 'இது தடுக்கப்படவும் முடியாத, வருத்தப்படவும் வேண்டி வராத ஒரு நிகழ்ச்சி' என்று அந்தக் கமிட்டி முடிவிற்கு வந்தது.

ஆகவே, இந்து நாகரிகத்தைப் பொறுத்த மட்டில் அரசாங்கத்தின் பங்கு ஜாதி, கூட்டுக் குடும்பம் என்பவற்றால் பெரிதும் கட்டுப்படுத்தப் பட்டிருந்தது என்பதை நாம் பார்க்கின்றோம். பிரிட்டன், நாட்டைப் பிடித்ததோடு, ஆங்கிலக் கல்வியும் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சுதந் திரம், சுயாட்சி, ஜனநாயகம் என்ற எண்ணங்களும் தோன்றலாயின. 1947ம் ஆண்டில் பிரிட்டிஷார் வெளியேறினர். இந்தியா சுதந்திரமடைந்தது. ஒரு ஜனநாயக அரசியல் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தியாவின் நீண்ட சரித் திரத்தில் என்றுமே இருந்திராத அளவு மிகவும் பலம் வாய்ந்ததாகிவிட்டது அரசு. இந்திய சொற் பொழிவுகளில், இந்திய அரசியல் சட்டம் எவ்வாறு பிரிட்டிஷ் அமெரிக்க அரசியல் சட்டங்களின்

மாதிரியில் அமைந்துள்ளது என்றும், சோஷலிஸம் என்ற முறையில் பொதுவுடமை எண்ணங்களும் இடம் பெற்றுள்ளன என்பதையும் பார்த்தோம்.

காந்திஜி இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்தார். ஆனால், இன்றைய இந்தியா பண்டித ஜவஹர்லால் நேருவின் உருவாக்கமாகும். எல்லா இந்தியத் தலைவர்களையும்விட அதிக அளவு ஐரோப்பியனாகவே அவர் இருந்தார். இந்து வைதீகத் தன்மையினின்றும் விடுபட்டவராக இருந்தார். எனவே, இந்தியாவை மேற்கத்திய மாதிரியில் உரு வாக்குவதில் யாதொரு கஷ்டமும் ஏற்படவில்லை. அதே நேரத்தில் இந்தியாவின் பாரம்பரிய உணர்ச்சி இல்லாதவராகவும் இருக்கவில்லை. இது அவரின் 'இந்தியாவைக் கண்டேன்' (Discouery of india) என்ற புத்தகத்திலும், பிரசித்தபெற்ற மரண அறிக் கையிலும் இது தெளிவாகப் புலனாகின்றது. "பழங் காலப் பாரம்பரியத்தையும் பழக்க வழக்கங்களையும் நான் உதறித் தள்ளிவிட்டபோதும், இந்தி யாவைக் கட்டுப்படுத்தி, வளரவொட்டாமல் தடுத்து மக்களைப் பிளவுபடுத்தியுள்ள சகல தளைகளின்றும் இந்தியா விடுதலை பெறவேண்டும் என்று விரும்பு கின்றேன். இந்தத் தளை பெரும்பான்மையான மக்களை அடக்கி வைத்துள்ளது. உடம்பினுடைய வும், உள்ளத்தினுடையவும் சுதந்திரமான வளர்ச்சி யைத் தடைப் படுத்தியுள்ளது. இவைகளை எல்லாம் விரும்பியபோதும், பழமையினின்றும் முழுமையாகத் துண்டித்துக்கொள்ள நான் பிரியப் படவில்லை. நம்முடையதாக இருந்திருக்கின்ற, இருக்கின்ற அந்தப் பெரும் பாரம்பரியத்தைப் பற்றி நான் பெருமை கொள்கிறேன். சரித்திர உதய காலம முதல், இந்தியாவின் அநாதி காலம் முதல் இன்று வரையுள்ள அந்த அறுபடாத சங்கிலித்

தொடரில் நானும் ஒருவன் என்று எல்லோரையும் போன்று நானும் உணருகின்றேன். அந்தச் சங்கிலித் தொடரை நான் அறுக்க மாட்டேன். ஏனெனில் அதைப் பொக்கிஷமாகப் பாதுகாக்கின்றேன். அதிலிருந்து உத்வேகம் பெறுகின்றேன். எனவே, எனது இந்த எண்ணத்தின் சாட்சியமாக, இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்திற்கான கடைசி வணக்கமாக நான் இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன். அதாவது, என்னுடைய அஸ்தியில் ஒரு கைப்பிடியளவு அலகாபாத்திற்கு அருகாமையில் கங்கை நதியில் எறியப்பட வேண்டும். இந்தியக் கரையைத் தழுவிக்கொண்டிருக்கும் சமுத்திரத்திற்கு கொண்டுபோய்ச் சேரும்படியாக எறியப்படவேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த விஞ்ஞான, ஜெட்விமான யுகத்தில் இந்தியா இயங்காமல் நிலையாக நிற்பது முடியாத காரியம். அசைந்தோடும் வாழ்க்கை இயக்கத்தில் நேரு இந்தியாவைக் கொண்டுபோய் விட்டு விட்டார். இந்தியாவிற்கு வழி காட்டுகின்றோம் என்பதுபற்றி அவருக்கு தெளிவாகத் தெரியாது. இன்றைய உலகம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு லட்சியங்கள் அடிப்படையில் பிளவுண்டு கிடக்கின்றது. அவை சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகம்; பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்ட பொதுவுடமை. எதிர்காலத்தில் இந்தியா எங்கு நிற்கும் என்பதுதான் பிரச்சினை.

# 6. பொதுவுடமை சமுதாயம்

பதினெட்டாம் நூற்றுண்டு வரையில் ஐரோப்பாவின் பொருளாதார வாழ்க்கை உலகத்தின் இதர பாகங்களில் இருப்பது போன்று முக்கியமாக விவசாயமாகவே இருந்தது. அந்த நூற்றுண்டின் இறுதியில் தொழில் புரட்சி ஏற்பட்டது. அது, மானிட வர்க்கத்தின் சரித்திரத்தில் புதிய சமுதாயத்தின் ஆரம்பத்தைக் காட்டியது. யந்திர யுகத்தைப் புகுத்தியது. தொழில்துறையில் அமோகமான வளர்ச்சிக்கு வழிகோலியது. இந்த விஷயத்தில் இங்கிலாந்து முன்னேடி. ஒரு புது வர்க்கத்தை உருவாக்கிற்று. புது தொழிற்சாலைகளைக் கட்டி அவற்றில் தேவையான யந்திர சாதனங்களை வாங்கி வைப்பதற்குத் தேவையான மூலதனத்தைப் போடும் முதலாளிவர்க்கத்தால் லண்டன் நகரம் ஒரு தொழில் நகரமாக வளர்ந்தது. மான்செஸ்டர், பர்மிங்ஹாம், ஷெப்பீல்ட் போன்ற புதுத்தொழில் நகரங்கள் தோன்றின. வேலை வாய்ப்புக்கள் கிராம மக்களை நகரத்தின்பால் ஈர்த்தன. இந்நகரங்களில் தொழிலாளர்களைக் குவியச் செய்தன. சூழ்நிலை மிகவும் புதிதாக இருந்தது.

எனவே ஆர அமர ஆலோசனை செய்து தொழிலை அபிவிருத்தி செய்வதற்குக் கூடச் சமயம் கிடைக்கவில்லை. அதை அதன் போக்கில் விடுவதுதான் அன்றைய முறையாகப் போயிற்று. முதலாளிகள் செல்வத்தைக் குவிப்பதி லேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். இப்படிச் செய்வதற்கு ஒரு வழி உழைப்பின் ஊதி யத்தைக் குறைவானதாக வைத்திருப்பது தவிர்க்க முடியாதபடி உழைப்பு சுரண்டப்பட்டது. சிக்கார்டோ என்பவரை முதன்மையாகக் கொண்டு எழுந்த பொருளாதாரம் உழைப்பை, தேவை, விநியோகம் என்ற முறையிலேயே பார்த்தது. மனிதத்துவப்பண்பு அம்சம் பார்க்கப்படவில்லை. ரிச்சர்ட் ஓவன் என்ற அறிவாளியான முதலாளி தன் தொழிற்சாலையை மனிதத்துவப்பண்புடன் நடத்த முயற்சித்தார். ஆனால் பச்சையான போட்டி மனப்பான்மை கொண்ட உலகில் அவர் நஷ்ட மடைய வேண்டியிருந்தது. அவர் திட்டம் கற்பனா சோஷலிஸம் என்று எளளி நகையாடப்பட்டது; ஒழிக்கப்பட்டது. ஆனால், தொழிலாளி முதலாளி உறவு பிரச்சினை தீர்க்கப்படாமல் அப்படியே இருந் தது. நிலைமை மோசமாகிக்கொண்டே போனது. தொழில் முறைப்படுத்தப்படவில்லை. முதலாளி களின் பண பலத்தினால்கூட அரசாங்கத்தின் ஆதரவு இருந்தும்கூட தொழிலை முறைப்படுத்த முடியவில்லை. எப்படியும் காலவரையில் தொழில் முறைப்படுத்தபட வேண்டியதாயிற்று. தொழிற் சங்க இயக்கம் வேலை நிறுத்தங்களில் கொண்டு போய் விட்டது. அவற்றை நசுக்கிவிட முயற்சிகள் கைக்கொள்ளப்பட்டன. ஆனால் முடிவாக அவர்கள் வென்றனர். முதலாளிகளுக்கும், தொழிலாளி களுக்கும் இடையில் தகராறு ஏற்படுவது இங்கி

லாந்தின் தொழில் வாழ்வில் சாதாரண விஷயமா யிற்று. மற்ற இடங்களிலும் இதே போன்ற நிலைமைதான் நிலவியது.

இங்கிலீஷ்காரர்கள் சுபாவமாகவே சட்டத்திற் குட்பட்டவர்கள். அவர்கள் தங்கள் வழியிலேயே இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டார்கள். அதைப் பற்றிப் பின்னர் பேசுவோம். ஆனால் ஐரோப்பாக் கண்டத்தில் தொழில் இயக்கம் குறிப்பிடத்தக்க அளவிலான புரட்சிகரமான போக்கை எய்தியது. அது கார்ல் மார்க்ஸின் மூலதனம் என்ற புத்தகத் தில் முடிவுற்றது. அவர் தொழிலாளியல்ல. அவர் உன்னதமான நுண்ணறிவு படைத்த தத்துவஞானி. வேகமான புரட்சிக்காரர். தனது தாய்நாடான ஜெர்மனியைவிட்டுவெளியேறவேண்டி வந்தது. லண்டன் மாநகரில் உபசரிக்கப்பட்டார். பிரிட்டிஷ் பொருட்காட்சிசாலையில் உள்ள நூல் நிலையம் நல்ல வாய்ப்பை அவருக்களித்தது. இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக்கொண் டார். அவர் ஏழையாக இருந்தார். ஆனால், ஏங்கல்ஸ் என்ற பணக்காரருடன் இணைந்து பணி யாற்றும் பேறு அவருக்குக் கிட்டியது. மார்க்ஸ் தன்னுடைய சோஷலிஸத்தை விஞ்ஞானப் பூர்வ மானது என்றார். தொழிலாளர் பிரச்சினைக்கு அவர் கண்ட தீர்வு தீரமான முடிவு. முதலாளி வர்க்கத்தை அறவே ஒழிப்பதாகும். லாக் என்பவர் தன்னையறியாமலேயே தனக்கு ஆதரவு அளிப்பவரைக் கண்டார். லாக், தொழில்தான் மதிப் பீட்டை உற்பத்தி செய்வது என்று கொண்டார். அப்படியானால், உழைப்பின் மதிப்பீடு முழுவதும் தொழிலாளிக்குத்தான் சேரவேண்டும். முதலாளிகள் இதுவரை எடுத்துக்கொண்ட லாபம் 'திருட்டாகும்.' பொருளாதாரத்தை இவ்வாறு வியாக்கியானிப்பது, பொருட்களை உற்பத்தி செய்யும் எல்லாச் சக்தி

களுக்கும் சரியான நியாயம் வழங்கியதாகாது. கச்சாப் பொருட்கள் விவசாயிகளாலும், நிலப்பிரபுக் களாலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மூல தனம் முதலாளிகளால் போடப்படுகின்றது. கண் காணிக்கும் திறன் தொழிலை ஆரம்பிக்கின்றவர் களிடமிருந்து வருகின்றது. உழைப்பு நிச்சயமாக மிகவும் முக்கியமான அம்சம்தான். உழைப்பாளர் களுக்கு லாபத்தில் அவர்களுக்குரிய நியாயமான பங்கு கொடுக்கப்பட வேண்டும். ஆனால், லாபத் தின்மீது உரிமையுள்ளவர்கள் அந்த ஒரு சாரார் மட்டும்தான் என்று உரிமை கொண்டாட முடி யாது. முதலாளிகளை ஒழித்துவிடலாம். ஆனால் மூலதனத்தை ஒழித்துவிட முடியாது. முதலாளி கள் இல்லையென்றால் அது அரசாங்கத்தினிட மிருந்துதான் வரமுடியும்.

முதலாளிகளை ஒழிக்கும் இந்த நடவடிக்கை கடுமையான வர்க்கப் போராட்டத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. அவர்கள் சொத்தைப் பறிமுதல் செய்வதையும் இது உட்கொண்டுள்ளது. தொழி லாளிவர்க்க சர்வாதிகாரத்தினால் மட்டுமே இது சாத்தியமாகும். இது முதலாளிகள் மட்டுமல்லாமல், நில உடமையாளர்கள்—சிறிய நிலச்சுவான்களா னாலும் சரி, பெரிய நிலச்சுவான்களானாலும் சரி, உழைப்பாளர்களை உழைப்பில் ஈடுபடுத்து கின்றவர்கள் அனைவருமே ஒழிக்கப் படுவதில்தான் இது முடியும். மார்க்ஸ் சுதந்திரம் என்ற லட்சியத் துக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒரு தற்காலிக மான தோற்றமாகவே கருதுகின்றார். அரசு மறைந்து போகும் என்பதைத் தன்னம்பிக்கை யுடன் கூறினார். மார்க்ஸின் விஞ்ஞான சோஷ லிஸத்தின் அடிப்படையே மிக ஆழ்ந்த பகைமை

யில் வளர்க்கப்பட்டதாகும். மாக்ஸிம் கார்க்கி இந்தப் பகைமையில் ஊறித் திளைத்திருந்தார். ஏனெனில் அவர் இவ்வாறு எழுதுகின்றார். "பாட்டாளி வர்க்க மனிதாபிமானத்திற்கு, குட்டி பூர்ஷுவா வர்க்கத்தின் ஆதிக்கத்தின் மீதும், முதலாளி வர்க்க ஆதிக்கத்தின் மீதும், அவர்களின் பணியாட்களாக இருப்பவர்கள் மீதும், அவர்களின் தொங்கு சதைகளாக இருப்பவர்கள் மீதும், உழைப்பாள வர்க்கத்தின் துரோகிகள் மீதும், பாஸீஸக் கையாட்கள் மீதும்—துன்பத்தைத்தரும் எல்லாக் காரணங்கள் மீதும், கோடானு கோடி மக்களின் துன்ப துயரங்கள் மீதும், தங்கள் வாழ்க்கையை நிர்மானித்துக் கொண்டவர்கள் மீதும் தீராத பகைமை தேவைப் படுகின்றது." இங்கிலாந்தில் உள்ள தொழிலாளர் தலைவர்கள், தங்களுடைய மென்மையான தன்மையினாலும், மித வாதம் காரணமாகவும், வைதீக மார்க்ஸிய வாதி களிடம் ஒரு வெறுப்பை உண்டு பண்ணினர். "தூக்குக் கயிற்றில் தொங்குபவனே அக்கயிறு தாங்குகிறது" என்பதுபோல் லெனின் ஹெண்டர் ஸனை ஆதரிக்க விரும்பினார். "(பொதுவுடமை யாளர்களல்லாதவர்களே) அவர்களின் குரல் வளையைப் பிடிப்பதற்கு முன்பு, பூர்வாங்கமாக அவர்களின் கையைப் பிடிப்பேன்" என்று டி. ஏ. ஜாக்ஸன் போன்ற பொதுவுடமையாளர்கள் கூறத் தயங்கவில்லை. இதுதான் பொதுவுடமை யாளரின் தனித்தயுத்தமனப் போக்கு. எஞ்சியுள்ள பொதுவுடமையாளருக்கு உலகத்தில் பாதுகாப்பு உண்டுபண்ணுவதற்கு வேண்டி லட்சக்கணக் கானவர்கள் அவர்கள் கைகளில் மாண்டிருக் கின்றனர். துன்பத்தில் உழலுகின்ற மக்களை உயர்த்துவதே லட்சியமாகக் கொண்டுள்ள ஒரு

இயக்கம் மானிட வர்க்கத்தின்மீது மனம் ஒப்பி இழைத்த துன்பங்கள் பற்றி அக்கறை கொள்ளாம லிருக்கின்றது; விசித்திரமான புதிராக இருக் கின்றது.

இங்கிலாந்து போன்று தொழில் துறையில் முன்னேறிய நாடுகளில் தொழிற் சச்சரவுகள் நிறைந்திருக்கும் என்ருர். இப்படிப்பட்ட தேசங் களில் சோஷலிஸப் புரட்சி வெடிக்கும் என்று நியாயமாகவே எதிர்பார்க்க முடியும் என்பதில் நம்பிக்கை வைத்திருந்தார். ஆனுல், இங்கிலாந்தில் நீண்ட நாட்கள் தங்கியிருந்த போதும் ஆங்கில மக்களின் மனப்போக்கை அறியவில்லே. இன்று வரை பொதுவுடமைக் கொள்கைக்கு எதிரான அரணுக இருந்து வந்திருக்கின்றது. நாடுகடத்தப் பட்ட, அறிவாற்றல் மிக்க ரஷ்யர்கள் மார்க்ஸை ஒரு தீர்க்கத்தரிசி என்று ஒப்புக்கொண்டார்கள். மற்ற எல்லா இடங்களேயும்விட ரஷ்யாவில் பொது வுடமையைப் புகுத்தும் ஒரு கருவியாக லெனினே விதி தேர்ந்தெடுத்தது. ரஷ்யா தொழிற்துறையின் விளிம்பில் இருந்தது. மேலும், முக்கியமாக ஒரு விவசாய நாடாகவும், மதநம்பிக்கைகொண்ட நாடா கவும் இருந்தது. ரஷ்யாவின் அரசியல் நிலேமைகள் புரட்சி வெடிப்பதற்குத் தயாரான நிலேமையில் இருந்தன. ஜார் மன்னன் ஏற்கனவே நீக்கப்பட்டு விட்டான். ஒரு பலவீனமான அரசாங்கம் பதவி யில் இருந்தது. ஜெர்மானியர்கள் கள்ளத்தனமாக லெனினே ரஷ்யாவுக்குள் கடத்தி விட்டார்கள். போல்ஷிவிக்குகளின் தலேவரான அவர் ஒரு மானிட எரிமலேயைப் போன்று அதிகாரத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டார். உலகத்தில் முதல் பொதுவுடமை அரசை நிறுவினுர்.

தனது எதிரிகளிடம் லெனின் ஈவு இரக்கமற்றவராக இருந்தார். ஆனால், அவர் ஒரு உயர்ந்தரக ராஜ தந்திரி. அவரால் வசீகரிக்கப்பட்ட மக்கள் அவர் மேல் பிரியம் கொள்ளும் அளவுக்கு மனிதாபிமானம் அவரிடம் இருந்தது. மதம் மக்களுக்கு அபினி என்று ஏற்கனவே மார்க்ஸ் கண்டித்திருந்தார். மதத்தை லெனின் தன் பேனா முனையின் ஒரு வீச்சால் ஒழித்துக் கட்டினார். தேசீய மயமாக்கக் கூடிய அளவுக்கு அங்கு அதிகப்படியான தொழிற்சாலைகள் கிடையாது. ஆனால், எல்லா நிலங்களையும் தேசீயமயமாக்கி நிலச்சுவான்தார் முறையை ஒழிப்பது சுலபமாக இருந்தது. தங்கள் நிலத்தின்பால் பிரியம் கொண்டிருந்த விவசாயிகள் பொதுவுடமைப் பொருளாதாரத்தில் அக்கறை காட்டவில்லை. உற்பத்தியைப் பெருக்காமல் இருப்பதை விரும்பினர். இது கடும்பஞ்சத்தை ஏற்படுத்தியது. தற்காலிகமாக லெனின் வளைந்து கொடுக்க வேண்டியதாயிற்று. உற்பத்தியைப் பறிமுதல் செய்வதற்குப் பதில் விலை கொடுத்து வாங்க ஒப்புக் கொண்டார். உள்நாட்டு யுத்தத்தில் வெற்றி பெற டிராட்ஸ்கியின் இராணுவத்திறமை உதவிற்று. சோவியத் குடியரசு நிலைத்து நின்றது. சரித்திரத்தையும் உருவாக்கிற்று. 1924ல் லெனின் இறந்த காலத்தில் ரஷ்யா ஒரு பெரும் வல்லரசாகப் பரிணமித்து விட்டது. அரசு அழிந்து போகும் என்ற மார்க்ஸின் கனவு சோவியத் ரஷ்யாவின் அனுபவத்தால் பொய்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. அரசு அழிவதற்குப் பதிலாக தன்னைத்தானே பலப்படுத்திக் கொண்டது. மிகவும் பலம் வாய்ந்ததாகி விட்டது. எந்த ஒரு அரசும் விருப்பம் கொள்ள முடியாத அளவுக்குக் கொடுமையானதாகவும் ஆயிற்று. லெனின் இடத்தைப் பிடிப்பதில்

ஸ்டாலின் வெற்றி பெற்ருர். அவருக்கு முந்திய தலைவருக்கும், பிந்திய தலைவருக்கும் இருந்த மனிதாபிமானம் இல்லாதவராக இருந்தார். கொடுமையானவர் என்று ருசுப்பித்தார். ஜார் ஆட்சியின் மாதிரியில் அரசாங்க யந்திரத்தை அமைத்தார். அடிக்கடி நடத்தப்பட்ட களையெடுப் பின் மூலம் எதிரிகளாக வரக்கூடியவர்கள் என்று கருதப்பட்டவர்கள் ஒழிக்கப் பட்டார்கள். ரஷ்யாவை முழுவதும் தொழில் மயமாக்குவதில் அவர் வெற்றிபெற்ருர். எனவே நகர ஜனத்தொகை 1926ல 26,000,000 ஆக இருந்தது. 1956ல், 87,000,000 ஆக உயர்ந்தது. பொதுவுடமை யாளர்கள் அல்லாதவர்கள் பல லட்சக்கணக்கில் கொல்லப்பட்டார்கள்; நாடு கடத்தப்பட்டார்கள்; சிறையில் அடைக்கப்பட்டார்கள். பொதுவுடமைக் கட்சி தன் அங்கத்தினர் தொகையைப் பெரிய அளவுக்குப் பெருக்கிக் கொண்டது. பொது வுடமைக் கட்சியினர் எண்ணிக்கை 1928ல் 1,700,000 ஆகவும், 1957ல் 33,000,000 ஆகவும், 1964ல் 44,700,000 ஆகவும் வளர்ந்தது. அரை நூற்றுண்டு காலத்தில் பிரம்மிக்கத்தக்க ஆச்சரிய கரமான பலன்களை அடைந்துள்ளது. கல்லாமை அறவே துடைத்தெறியப்பட்டது. விஞ்ஞான, ஆராய்ச்சி கிரகங்களையே வெற்றி கொள்ளத்தக்க அளவுக்கு உச்ச நிலையை எட்டியுள்ளது. அதன் சுகாதாரப் பணி எந்த நாட்டுக்கும் குறைந்ததல்ல. தொழில்துறையில் பிரிட்டனையும் மிஞ்சிவிட்டது. அமெரிக்காவையும் மிஞ்சிவிட நாட்டம் கொண் டுள்ளது.

பொதுவுடமை அதன் லட்சியங்களில் நூற்றுக்கு நூறு ஜாரிஸ்ட் ரஷ்யாவுக்கு எதிரான புரட்சியாகும். ஆனுல், ஜாரிஸ்ட் ரஷ்யாவின்

அடக்குமுறை சூழ்நிலையின் வாசனை இன்னும் இருக்கத்தான் செய்கிறது. அதன் வெளிநாட்டுக் கொள்கை பழைய ரஷ்யாவின் நினைவுச் சின்னமாகத்தானிருக்கின்றது. அதன் உளவு முறை பழைய ரஷ்யாவுக்கே கற்றுக் கொடுக்கும். பழைய ரஷ்யா ஒவ்வொரு அம்சத்திலும் போலீஸ் நடவடிக்கையின் தாயகமாக இருந்திருக்கின்றது. பிள்ளைகள் பெற்றோரையும், சகோதரர்கள் ஒருவரை ஒருவர் வேவு பார்ப்பதும் எல்லாவற்றையும் தலை கீழாக்கிவிட்டது. பிறப்பால் ரஷ்யனாகவும், குடியேற்றத்தால் அமெரிக்கனாகவும் இருந்த மாரிஸ் ஹிந்துஸ், மானிடப் பண்பு வேருடன் களையப் பட்டதாக மட்டுமே சோவியத் ரஷ்யாவைக் குறிப் பிட்டார்.

சுதந்திரத்தைப் பற்றி வலியுறுத்திப் பேசுவது முதலாளித்துவ சமுதாய அமைப்பின் தன்மையாகும். ஏனெனில் பட்டினியால் வாடும் வயிற்றிற்குச் சுதந்திரத்தைப் பற்றி தெரியாது என்று ரஷ்யப் பொதுவுடமையாளர்கள் உரிமை கொண்டாடுகின்றனர். எனவே அவர்கள் சமத்துவத்தை வற்புறுத்தினார்கள். வெற்றியின் ஆர்வத்தில் தொழிற்சாலையில் உழைப்பவர்கள் மத்தியில் பூரண சமத்துவம் பிரகடனப் படுத்தப்பட்டது. அங்கு மேற்பார்வையாளர்கள் கிடையாது. எல்லோருக்கும் சமமான ஊதியம் கொடுக்கப்பட்டது. ஆனால், வேலை திறம்பட நடக்க வேண்டுமானால் மேற்பார்வையாளர்கள் நிச்சயம் தேவை. இதைக் கண்டுகொள்ள வெகுகாலம் பிடிக்கவில்லை. அவர்களுக்கு அதிகமாக ஊதியம் கொடுக்க வேண்டி வந்தது. திறமை வாய்ந்த தொழிலாளர்களுக்கும், போதிய திறமை பெறாத தொழிலாளர்களுக்கு மிடையில் யாதொரு பாகுபாடும் காட்டப்பட

வில்லை. இதனால் போதிய திறமை பெருத தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் கிடைப்பதில் முடிவுற்றது. எனவே, பயிற்சி பெற்ற தொழிலாளருக்கு மேலும் அதிக ஊதியம் கொடுக்க வேண்டியதாயிற்று. உற்பத்தி நலனைக் கருதி சமத்துவத்தை கைவிட வேண்டியதாயிற்று. ரஷ்ய சமுதாயத்தில் ஒரு சில பகுதியினருக்கு உயர்ந்த ஊதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. பொதுவுடமை சமுதாயத்தில் முரண்பாடாக இருக்கிறது இது. உதாரணமாக, நிர்வாக யந்திரத்தைக் கண்காணிக்கும் அதிகாரிகள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், பத்திரிகாசிரியர்கள் போன்றவர்கள். இந்த நிலை அதிகப்படியாக ஊதியம் பெறுபவர்களுக்கும், குறைந்தபடி ஊதியம் பெறுபவர்களுக்குமிடையில் பெரும் வித்தியாசத்தை உண்டு பண்ணியுள்ளது. முதலாளித்துவ நாடுகள் என்று அழைக்கப்படும் பிரிட்டன் அமெரிக்கா போன்ற நாடுகளில் இருப்பதைவிட அதிகப்படியான வித்தியாசம் ஏற்பட்டிருக்கின்றது. ஒரே ஒரு மாறுபாடு என்னவெனில் எவ்வளவுதான் அதிகமாக ஊதியம் கிடைத்தபோதும் ரஷ்யாவில்தான் அது செலவு செய்யப்படவேண்டும். முதலாளித்துவ நாடுகளில் இருப்பதுபோல் தனியார் நிறுவனங்கள் அங்கு இல்லை. எனவே மூலதனத்தைப் பெருக்க அங்கு வாய்ப்பில்லை. மக்களின் சேமிப்பு அரசாங்கக் கடன் பத்திரத்தில்தான் முதலீடு செய்யமுடியும். குறைவான வட்டிதான் கொடுக்கப்படும். ரஷ்யா தொழிலாளருக்குக் கொடுக்கப்படும் ஊதியம், முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தைவிட குறைவாகவே இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவில், மதத்திற்கெதிராக நடத்தப்பட்ட பொதுவுடமை அறப்போர் ஒரு சுவாரஸ்யமான சரித்திரம். லெனின் தனது பேனுவின் ஒரு வீச்சினுல் மதத்தை ஒழித்தார். எல்லாக் கல்வி நிலையங்களிலும் மதபோதனை தடை செய்யப்பட்டது. கோவில்கள் மூடப்பட்டன. மதபோதகர்கள் கடுமையான நடவடிக்கைகள், அல்லது ஏளனம் செய்கின்ற நவின நடவடிக்கைகளாலோ மடக்கப்பட்டார்கள். பல நூற்றுண்டு காலமாக ஆழ்ந்த மதப்பற்றுக் கொண்டிருந்த ஒரு நாட்டில் அதிவிரைவில் மதம் ஒழிக்கப்பட்டது ஒரு ஆச்சரியமான விஷயமாகத் தோன்றியது. எதிர்காலத்தில் அது மீண்டும் தலைதூக்கும் சாத்தியப்பாடுகளுடன் தலைமறைவாய் இருக்கக்கூடிய நிலையை உண்டுபண்ணுவதில்தான் லெனின் வெற்றி பெற்ருர். லெனினும் தோஸ்தோ வஸ்கியும் முழுக்க முழுக்க ரஷ்யர்களாகவே இருந்தார்கள். தோஸ்தோ வஸ்கி எல்லா துன்ப துயரங்களையும் கடுமையாக வெறுத்தார். இவைகளுக்கெல்லாம் ஜார் ரஷ்யா ஆதரவாக நின்றது. தோஸ்தோ வஸ்கி இவற்றுக்கெல்லாம் எதிரியாய் இருந்தார். இதன் நியாயமான பலன் என்னவெனில் அவர் சைபீரியாவில் சிறை வைக்கப்பட்டார். இருந்தாலும் இது அவரது தீர்க்கமான நம்பிக்கையைப் பாதித்துவிடவில்லை. அன்றைய கோரநிலையைப் படம் பிடித்துக் காட்டும் அவரின் மேதாவிலாசத்தையும் ஒரு புது ரஷ்யாவும், புது ரஷ்ய மனிதன் பண்பு தோன்றப் போவதாக அவர் கண்ட கனவையும், அது பாதித்து விடமுடியவில்லை. அவரை ஏன் போல்ஷிவிக்குகள் ரஷ்யாவின் தூதன் என்றும், தீர்க்கதரிசி என்றும் பாராட்டினர் என்பதை இது விளக்கமாகக் காட்டுகின்றது. போல்ஷிவிக்குகளின் மத விரோத

போதனைகளை ஏற்றுக் கொண்டிருப்பாரா என்பது கேள்விக்குரிய விஷயம். லெனின்கூட அறிந்திராத அளவு, ரஷ்யாவை அவர் நன்கு அறிந்திருந்தார். அவருடைய பிரசித்திபெற்ற நவீனம் காமசோவ் சகோதரர்கள் என்பது. இது ஒரு நவீனத்தைவிட உயர்ந்ததாக இருந்தது. ரஷ்ய ஆத்மாவின் ஆராய்ச்சியாக இருந்தது. அனாதி காலம்வரை இருக்கும் மதத்திற்கு தோஸ்தாவஸ்கியைவிடச் சிறந்த போதகர் கிடைத்திருக்க முடியாது.

"ரஷ்ய மக்கள் முழுக்க முழுக்க வைதீகத்திலும் அந்த எண்ணத்திலும்தான் வாழ்கிறார்கள் வைதீகத்திற்கு வெளியே அவர்களுக்கு ஒன்றும் கிடையாது. அவர்களுக்கு எதுவும் கிடையாது. எதுவும் அவர்களுக்குத் தேவையும் இல்லை. ஏனெனில் வைதீகம்தான் அவர்களுக்கு எல்லாம்; கோவில்தான் அந்த அமைப்பின் சிகரம். அதுவும் ஊழிக் காலம்வரை...... ...வைதிகத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் ரஷ்ய மக்களைப் புரிந்துகொள்ளமாட்டார்கள். அதுமட்டுமன்று, அவர்களால் ரஷ்ய மக்களை நேசிக்கவும் முடியாது. முடியுமானால் ரஷ்யாவில்தான் பார்க்க விரும்புகின்ற ஒருவகை கற்பனை பண்ணப்பட்ட மக்களைத்தான் நேசிக்கலாம். மறுபுறத்தில் அப்படிப்பட்ட மனிதனை தங்களைச் சார்ந்தவன் என்று அங்கீகரிக்கமாட்டார்கள். நான் நேசிப்பதை நீ நேசிக்காவிட்டால், நான் நம்புவதை நீ நம்பாவிட்டால், நாம் கௌரவிப்பதை நீயும் கௌரவிக்காவிட்டால் நீ என்னுடைய சகோதரனல்ல...அவர்கள் எப்படியிருக்கிறார்களோ அதற்கு மாறாக அவர்களைப் பார்க்க நினைக்கும் ஒரு மனிதன் சாமர்த்தியசாலியாகவும் பேச்சாளனாகவும் இருந்தான்;

அவன் செய்யும் போதனைகளுக்காக அவனுக்கு நன்றி செலுத்தக்கூடச் செய்வார்கள், அவன் ஊட்டிய அறிவுக்கு வேண்டி நன்றி செலுத்தவும் செய்வார்கள். அவனது புத்திமதிகளில் பெரும்பான்மையானதைப் பின்பற்றக் கூடச் செய்வார்கள். ஏனெனில் அவர்கள் பெருந் தன்மையுள்ளவர்கள், பகுத்துப் பார்க்கவும் முடியும். இருந்தாலும் தங்களுக்குச் சமமானவன் என்று அவனை மதிக்கவேமாட்டார்கள். தங்கள் கரத்தையோ, உள்ளத்தையோ அவனுக்குக் கொடுக்கமாட்டார்கள்'' என்று அவருடைய பேனுதான் எழுதியது.

ரெனே புலப் மில்லர் என்பவர் ஜெர்மன் சரித்திராசிரியர் மட்டுமன்று; ஜீவிய சரித்திராசிரியரும்கூட. ரஷ்யப் புரட்சி நடைபெற்று பத்தாண்டுகளுக்குள் "போல்ஷிவஸத்தின் மனமும் காட்சியும்'' என்ற ஒரு நூலை எழுதியுள்ளார். அதில் வரும் வாக்கியத்தை நினைவு கூறுவது உசிதமாகும். "போல்ஷிவிக்குகளின் இந்த வெற்றி பெருத கல்வி முறை ஒரு நாளைக்கு அவர்களைத் திருப்பித் தாக்கத்தான் போகிறது. ஏனெனில் லோகாயுதவாதத்தில் பயிற்சி பெற்ற இளம் தலைமுறை பிற்காலத்தில் மிகவும் பிற்போக்கான, வைதீகத்தின் ஆதரவாளர்களைப் பிறப்பிக்கும்'' என்று அவர் கூறியது உண்மையிலேயே தீர்க்கத் தரிசனத்தோடு சொல்லப்பட்டவையாகும்.

ஜாரினுடையவும், அவருடைய குடும்பத்தினருடையவும் தலைகளைக் கொய்தெறிவது சுலபமாக இருந்தது. வெகு நூற்றுண்டு காலமாக உருவாக்கப்பட்ட வாழ்க்கை முறையை அடியோடு மாற்றிவிடுவ தென்பது அவ்வளவு சுலபமான

தல்ல. மக்களின் உள்ளங்களில் மத நம்பிக்கை தளைத்து நின்றது. இது தவிர்க்க முடியாததாக இருந்தது. இது இருபது ஆண்டுகளுக்குப் பின்பு வெளியாயிற்று. அதுவும், ஹிட்லரின் சேனைகள் ரஷ்யாமீது படையெடுத்தபோது, அவர்கள் போல்ஷிவிக்குகளோ இல்லையோ, எல்லா ரஷ்யர் களிடத்திலும் உள்ள தேசபக்தி கிலறிவிடப் பட்டது. இச்சேனைகள் வெளியேற்றப்பட்டன. இதற்குப்பின் மதநம்பிக்கை கொண்ட மக்கள் வெளிப்படையாக ஆண்டவனுக்கு நன்றி செலுத்தப் பிரியப்பட்டனர். ஸ்டாலின் ஒரு நெருக் கடியான நிலையில் இருந்திருக்க வேண்டும். ஏனென்னில் இந்த வேண்டுகோளை அவர் ஏற்றுக் கொண்டார் என்ருல் புதுப் பொதுவுடமை வாழ்க்கை வழிமுறையின் அடிப்படைக் கொள்கை களைத் தகர்ப்பதாகும். மறுத்தார் என்ருல், நன்றி கெட்டவர் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக வேண்டிவரும். இருபது வருடங்களுக்கு மேலாக அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தும்கூட மதகுருக் களும், அவர்களின் சபையோர்களும் காட்டின தீரச் செயலுக்குக் கொடுக்கும் மோசமான கைமாருகும். இரும்பு மனம் படைத்தவராக இருந்தபோதும் ஸ்டாலின் இணங்கினுர். அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்த மனிதாபிமானம் வெளியாயிற்று. வெற்றிகரமாக உள்ளத்தில் அடக்கிவைக்கப் பட்டிருந்த இந்த மனிதப் பண்பும், மதஉணர்வும் வெளிப்பட்டது. இதற்குப் பின்பு மதத்தைப் பகிரங்கமாக அடக்குவது முடியாமல் போயிற்று. ரஷ்யாவில் மதத்திற்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குருஷ்சேவும் பெருமைப் பட்டுக்கொள்ள முடிந்தது.

உண்மையான இலக்கியம் வாழ்க்கையின் வெளியீடாகும். பாஸ்டர் நாக் எழுதிய பிரசித்தி பெற்ற நவீனத்தில் இது அபரிமிதமாகக் காணக் கிடக்கின்றது. போல்ஷ்விக் கட்சியின் ஆரம்ப காலத்தைப் பற்றி விளக்கம் தர முயற்சிக்கிறது. மதத்தைத் துன்புறுத்தி போல்ஷிவிக்குகள் எப்படி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர் என்பதைச் சித்தரிக்கும்போது, அக்காலத்தில் ரஷ்யாவின் மத பின்னனி பற்றிச் சித்தரிக் கின்றது. ரஷ்யாவில் அது பிரசுரிக்க முடியாமல் போனது ஆச்சரியமானதல்ல. ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலி ஆகிய அந்நிய மொழிகளின் போர்வையில்தான் உலகம் அதைத் தெரிந்து கொள்ள நேர்ந்தது. அது ஒரு உன்னதப் படைப் பென்று உடனே புகழ்ந்து வரவேற்கப்பட்டது. அது அதற்குரிய நோபல் பரிசு முத்திரையையும் பெற்றது. நோபல் பரிசை வாங்கிக் கொள்வதற்கு அவர் அனுமதிக்கப்படவில்லை யெனினும், உயி ரோடு இருக்க அனுமதிக்கப்பட்டது. ரஷ்யாவின் சகிப்புத் தன்மைக்கு இது ஒரு சான்ருகும்.

சமீப காலங்களில் மதஉணர்வு ரஷ்ய மக்களிட மும், ரஷ்ய ராணுவத்தினரிடமும் ஏற்பட்டுள்ளது. பொதுவுடமை வைதீகத் தன்மையின் பார்வையில், இது எவ்வளவு ஆபத்தானது என்பதை ரஷ்யப் பத்திரிகைகள் எடுத்துக்காட்டத் தயங்கவில்லை. முக்கியமான விஷயம் என்னவெனில், வைதீக பொதுவுடமை மதவிரோதக் கொள்கைக்கு எதிராக வளர்ந்து வரும் எதிர்ப்புத்தான். கோம்ஸ்ஸோ மோல்ஸ்கயா பிராஷ்தா பத்திரிகையில் வெளியான நீண்ட கட்டுரையை 'டைம்ஸ்' பத்திரிகையில் எழுதிய ஒருவர் எடுத்துக் காட்டுகிருர். ரஷ்யாவில் கோவில்களை மூடியதானது, மதத்தின்

பாலுள்ள ஆர்வத்தைத்தான் அதிகரித்துள்ளது, மக்களிடம் எதிர்ப்புணர்ச்சியைத் தூண்டியுள்ளது என்று அதில் வாதிக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டுரையில் "அப்பட்டமான எதிர்மறை நாஸ்திக முறை" பற்றி வருத்தம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாலிய பொதுவுடமைக் கட்சியின் தலைவர் சிக்னேர் பல்மேரா தோக்ளியாட்டி பொதுவுடமைக் கட்சியின் மதவிரோதக் கொள்கைகளை பகிரங்கமாக எதிர்த்துள்ளார். மதத்தின் நலன் கருதி இல்லாவிட்டாலும், பொதுவுடமையின் நன்மை கருதியே இந்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். மனிதாபிமானத்தை வலியுறுத்துகின்றது பொதுவுடமை. இதனால், அது ஒரு மதமாகவே பரிணமித்திருக்கின்றது. லெனினின் பூத உடல் அழியாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது. அதைச் சுற்றிலும் அதற்கே உரித்தான ஒருவித சடங்கும் உருவாகியுள்ளது. இது மட்டுமன்று. "பழைய உலகை நாம் புது உலகமாக மாற்றிக் கொண்டிருக்கின்றோம். பழைய சமூக முறைகளுக்குப் பதிலாகப் புதிய சமூக முறைகளை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அப்படியானால், இந்த சகாப்தத்தில் பழைய சடங்குகளுக்குப் பதில் புதிய சடங்குகளை ஏன் நாம் ஏற்படுத்தக் கூடாது" என்று கேட்கின்ற பொதுவுடமையாளர்களும் இருக்கின்றனர்.

ரஷ்யாவின் புதிய கல்விமுறை பிள்ளைகளைப் பெற்றோருக்கு விரோதமாகக் கிளப்பி விட்டிருக்கிறது. இளம் தலைமுறையினருக்குக் கல்வி போதிக்கும் முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட நிலையில் மதம் இயற்கையாகவே இறந்துபடும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கக் கூடும். கல்லாமையின் மீது வெற்றி காணப்பட்டுவிட்டது. போல்ஷி

விக்கு அரசாங்கத்தின் அழியாத தன்மை வாய்ந்த வெற்றியாகும் இது. ஆனால், ரஷ்யாவில் பொது வாக இருக்கும் கலவி முறை சுதந்திர பிரஜைகளை உற்பத்தி செய்வதற்காக அல்ல. தங்கள் சொந்த ஆர்வத்தை மற்றவர்களுக்கு ஊட்டக்கூடிய ஆர்வம் மிகுந்த பொதுவுடமையாளர்களையே உற்பத்தி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டது. எனவே, இந்த விஷயத்தில் களங்கமுடையது. லெனின் குழந்தைகளிடத்தில் உண்மையிலேயே அன்பு கொண்டவர். இதில் எந்தவிதமான அரசிய லும் கிடையாது. அவர்களின் தாயார்களுக்கு வேண்டித்தான் குழந்தைகளுக்குத் தான் முத்தம் கொடுப்பதாக இரண்டாம் சார்லஸ் மன்னன் சொன்னான். ஆனால், லெனின் உள்ளம் தன்னிச்சை யாகவே அவர்கள்பால் சென்றது. அவர்கள் பனிக் கட்டிகளால் தன்னை அடித்து விளையாடுவதை அவர் அனுமதித்தார். இதெல்லாம் தனக்கு நல்லது என்று அவர் எண்ணினார்.

தனி நபர் வழிபாடற்ற அரசாங்கத்தினால் ரஷ்யக் குழந்தைகள் நல்ல முறையிலேயே பராமரிக் கப்பட்டனர். அவர்களுக்கு நல்ல பள்ளிக்கூடங் கள் இருந்தன. அவர்களின் விளையாட்டுகளுக் காக 15,000,000 ரூபிள்கள் செலவிடப்படுகின்றன. ஆர்டெக் போன்ற அழகு மிக்க இடங்களில் விடு முறை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இளம் தலைமுறையினருக்கான மாஸ்கோ மாளிகை இருக் கின்றது. சுவாரஸ்யமான, உபயோககரமான முறையில் தங்கள் ஓய்வு நேரங்களைச் செலவு செய்ய எண்ணும் 7 வயது முதல் 18 வயது வரை யுள்ள பிள்ளைகளுக்காக இது நிறுவப்பட்டுள்ளது. அதில் விளையாட்டு அரங்கம் இருக்கிறது. செடிகள் வளர்க்கும் ஆய்வுக்கூடம், நீச்சல் குளம், கூட்டம்

நடத்தும் சதுக்கம் எல்லாம் இருக்கின்றன. அது ஒரு அகில உலக நட்புறவுச் சங்கமாகச் செயல்படுகின்றது. நண்பர்கள் எல்லாக் கண்டங்களிலும் பரவியிருக்கின்றனர். வெளி நாடுகளில இருந்து நண்பர்கள் அனுப்பிய வெகுமதிப் பொருட்களின் கண்காட்சியும் இருக்கின்றது. வெப்ப மண்டலத்தில் உள்ள செடிகள் குளிர் காலத்திலும்கூட வளர்க்கப் படுகின்றன. இந்தி உட்பட உள்ள மொழிகள் கற்கப்படுகின்றன. வான் இயல், விமான இயல் போன்ற பொறியியல் பிரிவுகள் பெரிதும் விரும்பப்படுகின்றன. ஏனெனில் ஒரு சராசரி ரஷ்யன் வான இயல் எண்ணம் கொண்டவனாக இருக்கிறான். விண்வெளியை வெற்றி கொள்ள விரும்புகிறான். குழந்தைகளுக்கென தனியாகப் பத்திரிகைகளும், இதழ்களும் இருக்கின்றன. குழந்தைகளுக்கான பிரசுராலயங்கள் இருக்கின்றன. அவர்களின் நலனுக்கென அபரிமிதமான அளவு புத்தகங்கள் பிரசுரிக்கப்படுகின்றன.

ரஷ்யாவில் குழந்தைகளுக்கான கல்வித்துறையில் இவை எல்லாம் பெருமை தரக்கூடிய அம்சங்கள். இருந்தாலும் இவை கடுமையான கட்டுப்பாட்டுக்குள்ளாகியுள்ளன. குழந்தைகளின் உள்ளங்களில் சோவியத் தத்துவார்த்தம் புகுத்தப்படுகின்றன. அவர்கள் பெரியவர்களானதும் முழுமையான பொதுவுடமையாளர்களாக ஆகியிருப்பார்கள் என்பதை எதிர்பார்க்கலாம். 1917ம் ஆண்டு கால சட்டத்திலும், அதற்குப் பின்னும் உள்ள பெரியவர்களை அவர்கள் எண்ணங்களில் இருந்து சுலபத்தில் மாற்றிவிட முடியாது என்று வைத்துக்கொண்ட போதும், அந்தக் கால கட்டத்தில் குழந்தைகளாக இருந்தவர்கள் இப்போது பெரியவர்களாகியுள்ளனர். அவர்கள் நூற்றுக்கு

நூறு பொதுவுடமைக் கருத்துக் கொண்டவர்களாகவே இருக்கவேண்டும். பெரும்பான்மையானவர்கள் அப்படிப்பட்டவர்களாகத்தான் இருக்க வேண்டும். ஆனுல், மதம் மறுபிறவி எடுத்திருப்பதைப் பார்த்தால் ரஷ்யாவில்கூட மதமானது மனித உள்ளத்தில் ஆழப்பதிந்துள்ளது. வைதீக மார்க்ஸீய-லெனினிஸியத்தையும் வெற்றி கண்டுள் என்பதைக் காட்டுகின்றது. நடை முறைக்கு ஏற்றவாறு செயலாற்றக்கூடிய வகையில் பொதுவுடமைக் கொள்கைமாறுதல் செய்யப்படாத எந்தத் துறையும் கிடையாது. உண்மையில் வாழ்க்கையில் எல்லாத் துறையிலும் இப்படித்தான் செய்யப்பட்டுள்ளது.

அதே போன்றுதான் பொருளாதாரத்துறையும். ஆரம்ப கால போல்ஷிவிக்குகளுக்கு லாபம் என்ற வார்த்தையே நாராசமாகப் பட்டது. இன்று லாபத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பது "சோவியத் பொருளாதாரத்தின் துரித வளர்ச்சிக்கு இன்றியமையாதது" என்று சுப்ரீம் சோவியத்தில், சோவியத் ,பிரதமர் கோஸிஜின் சொல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. "அவர்கள் திறமைக்கேற்ப என்பதிலிருந்து அவர்கள் தேவைக்கேற்ப" என்ற பழைய கொள்கை தனது பழைய வரட்டுவாத நிலையை இழந்தது. தன்னைத்தானே தியாகம் செய்துகொள்ளும் முனிபுங்க வகை மனிதனை ஒரு இரவில் மாற்றிவிட முடியாது. மனிதர்கள் இனியும் தங்கள் சொந்த நலனுக்காகவே உழைக்க விரும்புகின்றனர். மனித இயற்கைக்கு விரோதமான எந்தப் புரட்சியும் தோல்வியிலும், ஏமாற்றத்திலும் தான் முடிவடைந்திருக்கின்றன.

கல்வியின் முன்னேற்றம் காரணமாகப் படித்தோர் எண்ணிக்கை பிரம்மாண்டமான

அளவுக்கு உயர்ந்திருக்க வேண்டும். பத்திரிகை களின் வாசகர் தொகை 18,300 மில்லியன் பிரதிகள். (மத்தியிலும், குடியரசுகளிலும், ஸ்தலப்பகுதிகளிலு உள்ள தொகை). தினசரி, வார இதழ்கள் ஆகிய வற்றின் தொகை 84 மில்லியன் பிரதிகளுக்கு அதிகம். உலகத்தில் அச்சடிக்கப்படும் பத்திரிகை களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்று இது. சஞ்சிகைகளின் வருடாந்தர விநியோகம் 1000 மில்லியன் பிரதிகள். பொதுவுடமைத் தத்துவத்தை மக்களுக்குப் போதிப்பதில் பத்திரிக்கைகள் பெரும் பங்காற்றுகின்றன. பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் இல்லை. மார்க்ஸின் போதனைகளுக்கே விரோத மானதாகும்.

"தணிக்கை செய்யப்பட்ட பத்திரிகையும், மோசமான பத்திரிகையும் மோசமாகவே இருக் கின்றன. நல்ல வருவாயைத் தந்தாலும்கூட மோசமாகத் தானிருக்கின்றன. ஒரு சுதந்திர மான பத்திரிகை மோசமான வருவாயைக் கொடுத்த போதும்கூட நல்லதாகவே இருக கின்றது. ஒரு அலி நல்ல குரல் கொண்டவனுக இருந்தபோதும் பூரணத்துவம் பெருத மனிதனே. கொடும் விலங்குகளைப் பிறப்பித்த போதும்கூட இயற்கை நல்லதாகவே இருந் திருக்கிறது. தணிக்கைக்குளளான பத்திரிகை யின் குணவிசேஷம் என்னவெனில் அதன்மீது பன்னீர் தெளிக்கப்பட்டிருந்தபோதும், சுதந் திரம் இல்லாத தளர்ந்த கேலிச் சித்திரமாக, நாகரிகம் அடைந்த பயங்கரப் பிராணியாக, பயங்கரமானதாக இருக்கின்றது. அரசாங்கம் தன் சொந்தக் குரலைத்தான் அதில் கேட் கின்றது. மக்களும் அதே கற்பனையை நம்ப வேண்டும் என்று கோருகின்றது."

ரோஸா லக்ஸம்பர்க், போலந்து நாட்டின் பொதுவுடமைக் கட்சியின் வீராங்கனை. உலகப் பொதுவுடமை இயக்கத்தில் கௌரவிக்கப்பட்டவர். அவரும் பத்திரிகை சுதந்திரம் பற்றிக் கூறியுள்ளார்.

"அரசாங்கத்தை ஆதரிக்கின்றவர்களுக்கு மட்டும், ஒரு கட்சி அங்கத்தினர்களுக்கு மட்டும் என்று கொடுக்கப்படும் சுதந்திரம்—அவர்கள் எவ்வளவுதான் அதிகமான எண்ணிக்கை கொண்டவர்களாக இருந்த போதும்... அது உண்மையான சுதந்திரம் அல்ல. வேறுவிதமாகச் சிந்தனை பண்ணுபவர்களுக்கும் சுதந்திரம் இருந்தால்தான் உண்மையான சுதந்திரமாகும். 'நீதி' என்ற வெறி கொண்ட எண்ணத்தினால் அல்ல. ஆனால், அரசியல் சுதந்திரத்தில் அறிவு கட்டக்கூடிய முழுமையாக, சுத்தப்படுத்தக்கூடிய எல்லாமே இந்த முக்கியமான குணும்சத்தைப் பொறுத்துத்தானிருக்கின்றது. சுதந்திரம் ஒரு விசேஷமான சலுகையாகும்போது அதன்சக்தி மறைந்து போய் விடுகின்றது."

தன் எதிரிகள் ரஷ்யர்களாக இருந்தாலும், மற்றவர்களாக இருந்தாலும், அந்த எதிரிகளை எதிர்த்துப் போராடி போல்ஷிவஸத்தைக் காப்பாற்றிய ராணுவமேதை ட்ராட்ஸ்கி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், கட்சியின் சர்வாதிகாரமாக மாறி, பின்னர் மத்திய கமிட்டியின் சர்வாதிகாரமாகி, கடைசியில் தனி மனிதனின் சர்வாதிகாரமாக மாறும் அபாயத்தை முன்னமேயே கண்டார். அடிக்கடி ஏற்படும் களையெடுப்புக்களின் மூலம் ஸ்டாலின் எல்லா அதிகாரத்தையும்

எடுத்துக் கொண்டதன்மூலம் இது தெளிவாக ருசுவாயிற்று. இந்தக் களையெடுப்புக்கு முதலில் ட்ராட்ஸ்கியே பலியானுர்.

எல்லா ரஷ்யப் பத்திரிகைகளும் நடைமுறை யில் அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. எனவே, அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு விரோதமான எதுவும் பிரசுரிக்கப்படுவதில்லை. எஜமானின் குரலின் பரிதாப உதாரணமாக இவை இருக்கின்றன. ஸ்டாலின் உயிரோடு இருந்த காலத்தில் அவருக்கு விரோதமாக ஒரு வார்த்தை எழுத முடியாது. ஆனுல், குருஷ்சேவ் ஸ்டாலினை இழிவு படுத்தத் தொடங்கியபோது பத்திரிகை களும் அதைப் பின்பற்றின. குருஷ்சேவ் சில ஆண்டுகளுக்குச் செயலாற்றினுர். பத்திரிகை களின் தலைப்புக்களை ஆக்கிரமித்துக் கொண்டார். ஆனுல், அவர் விழுந்ததும் அவரைப்பற்றி மௌனம் நிலவுகின்றது. ரஷ்யப் பத்திரிகைகள் சுதந்திரத்தின் கேலிச்சித்திரங்களாக இருக் கின்றன. இவ்வாறு பூலோக கீர்த்தி மறைகின்றது.

இரும்புத்திரை என்ற சொற்றொடர், ரஷ்யா எப்படி இருக்கின்றது, பர்தாவுக்குப் பின்னுல் எப்படி இருக்க விரும்புகின்றது, தனது கைப் பாவையான பத்திரிகைகள் மூலம் எவ்வாறு தன்னை வெளிப்படுத்திக்கொள்ள விரும்புகின்றது என் பதை விளக்கும் கருத்தமைந்த சொற்றொடராக இருக்கிறது. ரஷ்யாவில் உண்மையில் என்ன நடக் கிறது என்பது நமக்குத் தெரியாவிட்டாலும், மாபெரும் காரியங்களைச் செய்து முடிக்கப்பட்டுள் ளது. இந்தத் துறையில் ரஷ்யா புகழ் வாய்ந்ததாக இருக்கின்றது. இதை மறுக்கவும் முடியாது. சில சமயங்களில் இது வைதீக மார்க்ஸிய கொள்கைக்கு முரண்பட்டதாகக்கூட இருக்கலாம். ஜார் மன்னர்

கள் காலத்தில் புகழ் பெற்றிருந்தது போல் இன்றும் ரஷ்யா புகழ் வாய்ந்ததாக இருக்கின்றது. பலாத்காரமாகத் தூக்கியெறிந்த அரசின் அடிச் சுவட்டை பொதுவுடமை ரஷ்யா பின்பற்றிவருவது விந்தையான ஒன்ருக இருக்கிறது. வேவு பார்க்கும் முறையோடு கூடிய போலீஸ் இலாகா முன்னைப் போன்றே இயங்கி வருகின்றது. ரஷ்ய ராணுவம், கடற்படை, ஆகியவற்றின் வலிமை சொல்லப் போனுல் முன்னைவிட அதிகரித்துள்ளது. அந்நிய நாட்டுக் கொள்கையைப் பொறுத்தமட்டில் பழைய உற்சாகம் இன்றும் இருக்கின்றது. கருங்கடலிலும், காஸ்பியன் கடலிலும் ஆதிக்கம் இன்றும் செலுத் தப்பட்டு வருகிறது. ரஷ்ய பாலே நடனத்தின் மின்னும் ஆடம்பரம் இன்னும் காப்பாற்றப்படு கின்றது. டால்ஸ்டாய், தோஸ்தோவஸ்கி, கோகல் போன்ற பழைய ரஷ்ய இலக்கிய மேதைகள் இன்னும் பாராட்டிப் போற்றப்படுகின்றனர். சொல்லப்போனுல் உலகத்தின் எந்தப் பாகத்தையும் விட ரஷ்யாவில்தான் ஷேக்ஸ்பியர் நூல்கள் அதிக மாகப் படிக்கப்படுகின்றன. அரசாங்கம் சர்வ வல்லமை யுடனிருக்கின்றது. சொல்லப்போனுல் சுதந்திரமாகவும் இருக்கின்றது. ராணுவ பலத் துடன் இருந்தபோதும், கனரகத் தொழிலில் உன்னத நிலையில் இருந்தும் ரஷ்யா சுதந்திரமாக இருக்கின்றதா ?

எவ்வளவு குறுகியதாக இருந்தபோதும், வேறு ஒரு பொதுவுடமை நாடான சீனுவைப் பார்க்க வேண்டிய காலம் வந்துவிட்டது. ரஷ்யா உப-கிரக மாக ஆரம்பித்தது. ரஷ்யாவுக்குச் சவாலாக இருக் கின்றது. சமாதானத்தை விரும்பும் உலகுக்கு குழப்பம் தரும் பிரச்சினைகளை ஏற்படுத்து கின்றது. மா-சே-துங் சீனுவின் லெனின், காரல்

மார்க்ஸிடமிருந்து ஆதர்சம் பெறுகிருர். உலகத்தை வெற்றி கொள்ளும் கனவு கண்ட ஆரம்பகால ரஷ்ய போல்ஸிவிஸ காலகட்டத்தில் இருக்கின்ருர். ரஷ்யா தெளிவடைந்துவிட்டது. ஒவ்வொரு சுதந்திர நாட்டிலும் பொதுவுடமைக் கேந்திரங்களே அமைக்கும் முயற்சியைக் கைவிடாமல் இருந்த போதும் சமாதான சகவாழ்வை ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கின்றது. சீஞ போர்க்குணம் கொண்டது. நீதிநெறி உறுத்தல்கள் தடை செய்ய வில்லே. தனது அபரிமிதமான மனித சக்தியை உணர்ந்திருக்கின்றது. தனது கோடானு கோடி மக்களில் ஒரு பகுதியினர் பொதுவுடமை அமைப்பில் வாழ்வதற்கு மறுபகுதியை இழப்ப தற்கும் தயாராக இருக்கின்றது. கிரேக்க சர்ச்சு களே ரஷ்யா செய்தது போன்று சீஞ கன்பியூஸியஸ் மதத்திற்கும் செய்ய விரும்புகிறது. ஆசியா முழுவதும் ஆதிக்கம் கொள்ள விரும்பு கிறது. மேற்கத்திய ஏகாதிபத்திய காலனி யாதிக்கப் பேராசையைப் பற்றி ஆசிய மக்களிடம் ஏற்பட்டுள்ளச் சந்தேகத்தைத் தனக்குச் சாதகமா கப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்குவதில்லே. இவ் வாறு ஆசியாக் கண்டம் முழுவதும் வெற்றிகொாண ஆசை கொள்ளுகின்றது. பொதுவுடமை ரஷ்யா செய்த அதே தவறுகளே இந்த நாடும் செய்கின்றது. கனரக யந்திரத் தொழிலே அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் விவசாயம் புறக் கணிக்கப்பட்டது. எனவே, சீஞவில் உணவுப் பிரச்சினே பெரும் பிரச்சினேயாயிற்று. உயர்தர உழைப்பாளிக்கு 30 பவுண்டு தானியம்தான் கிடைக்கின்றது. இதர தொழிலாளருக்கு தலா 15 பவுண்டு உணவு தானியம்தான் கிடைக் கின்றது. 1961ம் ஆண்டு முழுவதும் ஷாங்காய்

நகரத்தில் உள்ளவர்களுக்கு நான்கோ அல்லது ஐந்தோ தடவைதான் மாமிசம் கிடைத்தது. மாவோவினுடைய 'பெரிய அறுவடைத் திட்டம்' பெரும் அளவுக்குப் பிரச்சாரம் செய்யப் பட்டது. ஆனால், தோல்வியில் முடிவுற்றது."ஓ கொம்யூனே. என் பல்துலக்கும பிரஷைத்தவிர எல்லாம் உன்னுடையதே" என்ற பாட்டின் அடிகளை எடுத்துக் கூறும்படியாகத் தோல்வியுற்றது.

ஒரு பெருந்தன்மை வேகத்தில் "நூறு பூக்கள் மலரட்டும், நூறுவித எண்ணங்கள் தோன்றட்டும்" என்று மாவே பிரகடனப்படுத்தினர். ஆனால், ஆறுவார காலத்திற்குள் கடுமையான எதிர்ப்பும், விமர்சனங்களும் தோன்றின. எனவே, தன் பிரகடனத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார். மக்கள் தலைவன் தான் நினைத்ததை எழுதும் கடுதாசிகளாக இருக்கின்றனர் என்ற பழைய போக்குக்கு மாறிக் கொண்டார். கொம்யூன்களின் வெற்றியில் அவர் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால், ரஷ்யாவைப் போன்றே விவசாய மக்களின் லாப நோக்கத்திற்குப் பணிய வேண்டியதாயிற்று. அவர்கள் சொந்த நிலப்பகுதிகள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். மக்கள் கீழ்ப்படிய இஷ்டப்படும் வரையில்தான் சக்திக்கு மதிப்பு. ஒரு புழுவும் திருப்பித் தாக்கும் காலம் உண்டு. எனவே சக்தி வாய்ந்த அரசும் அதற்குப் பணிய வேண்டித் தான் வரும்.

சமரசங்கள் செய்து கொண்டபோதும், பொதுவாக பொதுவுடமைத் தத்துவம் நல்ல பலனைத்தான் கொடுத்திருக்கிறது. அது பலமாக வேரூன்றிக் கொண்டது. இரண்டாம் உலக யுத்தத்திற்குப்

பிறகு ரஷ்யா உலகில் இரண்டாவது பெரும் வல்லரசாக உருவாயிற்று. அமெரிக்காவுடன் போரிடக் கூடிய அளவுக்கு வலிமை பெற்றுள்ளது. பொதுவுடமை தனக்கே உரித்தான வசீகரத்தன்மையைக் கொண்டிருக்கிறது. அது முழுமையாக மனிதாபிமானம் கொண்டதாக இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஏனெனில் தன் எதிரிகளை ஒழிப்பதில் ஈவு இறக்கம் அற்றதாக இருந்திருக்கிறது. ஆனால் அதன் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுபவர்களுக்கு சமுத்துவமும், பாதுகாப்பும் கொண்ட புதியதோர் உலகை அளிப்பதாக உறுதி நல்குகிறது. ஐன்ஸ்டின் புத்திக் கூர்மையுடன் சொன்னதுபோல் பட்டினியால் வாடும் மக்களை அது ஆகர்ஷிக்கும். பொதுவாகப் பின்னடைந்த இரு நாடுகளில் பிரம்மாண்டமான அளவுக்கு வெற்றி பெற்றுள்ளது. சார்பு நாடுகளை ஏற்படுத்துவதிலும் வெற்றி கண்டுள்ளது. ரஷ்யா தொழில் மயமாகிவிட்டது. சீனுவும் அவ்வாறு செய்வதற்கு முயன்று கொண்டிருக்கிறது. ஆனால், விவசாயத் துறையில் இவை இன்னும் வெற்றி பெறவில்லை. பொதுவுடமை நாடல்லாத நாடுகளிலிருந்து உணவு தானியத்தை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. உலகில் இன்று செழிப்பாக இருக்கின்ற தேசங்கள் பொதுவுடமை நாடல்லாத நாடுகள், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஆசியாவில் ஜப்பான் போன்ற நாடுகளாகும் அவை. தொழில் துறையில் முன்னேறியுள்ள நாடுகள் பொதுவுடமையைக் கண்டு பயப்படவில்லை. இதைப் பொறுத்தமட்டில் மார்க்ஸின் தத்துவம் தவருகவே இருக்கிறது. ஏன்? இக்கேள்விக்கும் பதில் சொல்ல நாம் முயலுவோம்.

# 7. இன்றைய மேற்கத்திய சமுதாயம்

காரல் மார்க்ஸ் இருந்த காலத்திலும், அவர் இறந்த பின்பும் இங்கிலாந்திலோ, அமெரிக்காவிலோ, அவர் கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் கிடைக்கவில்லை. ஆனால், அவர் மக்களைச் சிந்திக்கவைத்தார். 19ம் நூற்றாண்டில் இங்கிலாந்து அதிருப்தியால் கொந்திளித்துக் கொண்டிருந்தது. முதலாளிகள் 'போட்டிச் சுதந்திரம்' என்ற பொருளாதாரக் கொள்கைக்குப் பின்னால் மறைந்து கொண்டார்கள். பார்லிமெண்டில் அவர்களுக்குப் பலம் வாய்ந்த ஆதரவாளர்கள் இருந்தார்கள். இருந்தபோதும், அரசாங்கக் கொள்கையில் ஏதோ தவறு இருக்கின்றது என்று உணர்ந்து பிரிட்டிஷ் பொருளாதாரத்தில் ஏழ்மை நிலையில் இருக்கும் தொழிலாளருக்கு நன்மை செய்யவேண்டும் என்ற உணர்வு கொண்ட ஞானமும், மனிதாபிமானமும் உள்ள இங்கிலீஷ்காரர்களும் இருந்தார்கள். கருத்துக்களை கிரகித்துக் கொள்வதில் இங்கிலீஷ்காரர்கள் மந்தகதியிலுள்ளவர்களாக இருக்கலாம். அவற்றை செயல்படுத்துவதிலும் மந்தமானவர்களாக இருக்கலாம். ஆனால், பிரச்சினைகளுக்குத்

தீர்வு காண்பதில் அவர்களுக்கென்றே ஒரு வழி யுண்டு. தன்னுடைய பரம்பரைக் காலத்திலேயே ரிச்சர்டு ஒவன் தன் கொள்கையில் படுமோசமாகத் தோல்வி கண்டார். ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டுகளில் சோஷலிஸத்தில் ஆர்வம் காட்டிய ஜார்ஜ் பெர்னாட்ஷா, எச். ஜி. வெல்ஸ், சிட்னி, பாட்ரிஸ்வெப், கிரஹாம் வாலஸ் போன்ற அறிவுக் கூர்மை படைத்தவர்களின் கூட்டத்தை இங்கிலாந்து கண்டது. குறிப்பிடத்தக்க விதத்தில் ஃபேபியன் சங்கத்தை(Fabian society) நிறுவினார்கள். அதற்கேற்ற நடைமுறையையும் வகுத்தார்கள். தொழிலாளர் நலத்துக்காகப் பாடுபட்டார்கள். தொழிலாளர்களின் வாக்குகளின் சக்தியின் உதவியோடு தொழிலாளர்களுக்கு நன்மைதரும் எல்லா நடவடிக்கைகளையும் ஆதரித்தார்கள். தொழிற் கட்சியை நிறுவினார்கள். கெயிர் ஹார்டி பார்லிமெண்ட் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் தங்கள் முதல் வெற்றியைப் பெற்றார்கள். உயர்தர வகுப்பாரைக் கொண்டிருந்த காமன்ஸ் சபையில் விழுந்தமுதல் அடி இது தான். பிரபுக்கள் சபையைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. நீண்ட சட்டையும், பட்டுத்தொப்பியும் அணிவதை விட்டுவிட்டு தொழிலாளியின் உடையில் பார்லிமெண்டுக்குள் நுழைவதை கெயிர்ஹார்டி வற்புறுத்தினர். இது ஆங்கிலப் புரட்சியின் தன்மையைக் கொண்டதாக இருந்தது. இதற்கிடையில் லிபரல் கட்சிக்குள்ளும் சோஷலிஸ எண்ணங்கள் உருப்பெறலாயின. சக்திவாய்ந்த நபரான லாயிட் ஜார்ஜ் தனது சோஷலிஸ வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றினர். அத்திட்டப்படி உயர்வான வருமானவரியும், மரண வரியும் போடப்பட்டது. செல்வந்தர்களிடமிருந்து

பறித்து ஏழைகளுக்குச் செலவிட வேண்டும் என்ற லட்சியத்தைக் கொண்டதாக இருந்தது. தொழிற் கட்சி மிகவும் விரைவாக வளர்ந்தது. எனவே, 1924ம் ஆண்டு அதன் தலைவர் ராம்சே மாக்டனல்ட் இங்கிலாந்தின் முதல் தொழிற் கட்சிப் பிரதமராக வர முடிந்தது. சோஷலிஸமும், இங்கிலாந்தும் நியாயமாகவே பெருமைப்படக்கூடிய ஒரு வெற்றி கரமான செயல் இது. இன்று இங்கிலாந்து முதல் தரமான நலஉரிமை அரசாங்கமாக இருக்கிறது. பொதுவுடமை கொடுப்பதாக உறுதி நல்கும் எல்லா நலன்களும் இங்குள்ள தொழிலாளர்கள் அனுபவிக்கின்றனர். கூலி மிக உயர்வு. லீவர் பிரதர்ஸாரின் போர்ட் சன்லைட் முதலா ளித்துவ கேந்திரங்கள் ரஷ்யாவில் காணப்படும் எந்த நிலையிலும் போட்டி போடத்தக்கவையாக இருக்கின்றன. வெற்றியின் ரகசியத்தை முத லாளிகள் தெரிந்து கொண்டுவிட்டனர். தொழிலா ளருக்கு மேலும் நல்ல கூலி கொடுக்க வேண்டும். இதனால் அவர்கள் நன்றாகச் சாப்பிடுவார்கள். சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச வேலை நேரத்தோடு ஓய்வை அனுபவிப்பார்கள். நூல் நிலையம், வாசக சாலை, நாடக மேடைகள், நீச்சல் குளங்கள் போன்ற சௌகரியங்களையும் அனுப விப்பார்கள். வேலையில்லாதவர்களுக்கென இன் ஸூரன்ஸ் திட்டம் இருக்கின்றது. இவ்வாறு வேலையில்லாமலிருப்பவர்களுக்குத் தர்மம் கொடுக் கும். இத்திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பது பற்றி சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஜாக் கூப்பர் என்ற நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி 1957 மே மாதம் முதல் வேலையில்லாமல் இருந்தார். அரசாங்க வேலையற்றோர் திட்டப்படி அவருக்கு வாரத்திற்கு

32.50 பவுன்களும், பாலும் கொடுக்கப்பட்டது. அவர் வேலைக்குச் சென்றிருந்தால் வாரத்திற்கு 26.60 பவுன்கள்தான் பெற்றிருப்பார். இலவசமாகப் பாலும் கிடைத்திருக்காது. அவர் ஒரு வேலையைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று தேசீய உதவி போர்டாரால் வற்புறுத்தப்பட்டார். "நான் ஏன் வேலைக்குப் போகவேண்டும்? போனால் என் குடும்பம் கஷ்டப்படும். என் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் நான் ஆற்றவேண்டிய கடமை இருக்கிறது" என அவர் பதிலுரைத்தார். கூலி குறைவாகவும், தாங்கள் இஷ்டப்பட்ட தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளச் சுதந்திரம் இல்லாதது மான பொதுவுடமை அமைப்பைப் பற்றி இங்கிலீஸ் தொழிலாளர்கள் பாராமுகமாக இருப்பதில் ஆச்சரியப் படுவதற்கில்லை. அங்கு தனக்குத்தானே சிந்தித்துக் கொள்ளும் உரிமையைக்கூட அவன் இழந்துவிடுவான். மனம் உடைந்த சீனுக்காரர் ஹுஷி, "தனி நபர் மௌனமாக இருப்பதற்கான உரிமைகூட மறுக்கப்படுகிறது" என்று படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டனைவிட வெகு காலம் பழைய முதலாளித்துவ பாரம்பரியத்தை நீடித்தது. ஆனால், காலம் தொழிலாளர் பக்கத்தில் இருந்தது. புரோகாம் பிரபு "படிப்பு மக்களைத் தலைமை தாங்குவதைச் சுலபமாக்குகிறது. ஆனால், ஊக்குவிப்பது சிரமம்; அவர்களை ஆட்சி புரிவது சுலபம்; ஆனால் அடிமைப் படுத்துவது முடியாத காரியம்" என்று வெகு காலத்திற்கு முன்னமேயே கூறினார். பிராங்களின் ரூஸ்வெல்ட் காலத்தின் அறிகுறிகளைக் கண்டார். திருப்தி கொண்ட தொழிலாளர்களை ஏற்படுத்துவதற்கான 'புதிய ஒப்பந்தம்' என்ற திட்டத்திற்காக முழு மூச்சுடன் வேலை செய்தார்.

ஊதியத்தை அதிகப்படுத்துவதன் மூலம் தனது தொழிலாளர்களிடமிருந்து எவ்வாறு அதிக வேலை வாங்க முடியும் என்பதை உணர்ந்திருந்த ஹென்றி போர்டு போன்ற முதலாளிகளின் ஒத்துழைப்பும் அவருக்கிருந்தது. இன்று உலகத்திலேயே அதிகம் ஊதியம் பெறுபவன் அமெரிக்கத் தொழிலாளி தான். 1964ம் ஆண்டு சாதாரண ஆலைத் தொழிலாளி 100 டாலர்கள் அல்லது வாரத்துக்கு 475 ரூபாய் ஊதியமாகப் பெறுகிறான் என்று ஒரு அமெரிக்கப் பத்திரிகை அறிவித்தது. 1948ல் ஒரு தொழிலாளிக்குக் கொடுக்கப்பட்டதைவிட இரு மடங்காகும். விலைவாசிகள் ஏறியிருந்த போதும் 1948ல் கொடுக்கப்பட்ட ஊதியத்தைவிட 1964ல் கொடுக்கப்பட்ட ஊதியம் 50 சதவீதம் அதிகம் என்றும் குறிப்பிடப்பட்டது. 'ஜனநாயகத்திற்குச் சவால்' என்ற புத்தகத்தில் அமெரிக்கத் தொழிலாளிவர்க்கத்தின் பங்கு 1919ல்71சதவீதம் என்றும் 1953ல் 80.1 சதவீதம் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார் ஜான் ஸ்ட்ராச்சே. 'செல்வம் மிகுந்த சமுதாயம்' என்ற புத்தகத்தில் பிரபல ஆசிரியரான பேராசிரியர் கால்பிரெய்த் 1928 உயர்மட்ட வருமானப் பகுதியினர் 19சதவீதம் ஊதியம் பெற்றனர். 1946ல் இது 8சதவீதமாகக் குறைந்தது. 1941க்கும் 19.0க்கும் இடையில் ஐந்தாவது மட்ட வருமானப் பகுதியின் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் 42சதவீதம் ஊதியத்தில் உயர்வு பெற்றனர். இதே பகுதியில் உள்ள இரண்டாவது பிரிவினர் 37சதவீதம் ஊதிய உயர்வு பெற்றனர். என்று சுட்டிக் காட்டியுள்ளார். இப் புள்ளிவிவரங்கள் உண்மையைப் புலப்படுத்துகின்றன. பொதுவுடமையாளர் முதலாளிகளைத் திட்டுவது எவ்வளவு தூரம் உண்மைக்குப் புறம்பானது என்பதையும் புலப்படுத்துகின்றது.

முதலாளித்துவ நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகளில் தொழிலாளர்கள் முதலாளிகள் பின்னுல் ஒன்றுபட்டு நிற்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஏனெனில் பொதுவுடமை நாடுகளில் வேலை செய்யும் சம்பள உழைப்பாளர்கள் கனவுகூடக் காணமுடியாத அளவு சௌகரியங்களும் நன்மைகளும் இவர்களுக்கும் கிடைக்கின்றது. இன்றைய முதலாளித்துவம் பத்தொன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் இருந்ததைவிட முற்றிலும் மாறுபட்ட ஒன்ருகும். இதை பொதுவுடமையாளர்கள் இன்னும் தெரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். முதலாளித்துவ நாடுகளில்கூட தொழிலாளிவர்க்கம் சுரண்டப்படும் பகுதியாக இருக்கவில்லை. தங்கள் உரிமைகளை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர். தாங்கள் நியாயமாகக் கையாளக்கூடிய சகல முறைகளையும் கொண்டு போராடத் தயாராக இருக்கின்றனர். தங்களின் முதலாளிகளின் சொத்தைப் பறிமுதல் செய்ய நிச்சயம் அவர்கள் விரும்பவில்லை. ஏனெனில், சகல சுதந்திரங்களுக்கும் அப்பாற்பட்டு நின்று, வேலை நிறுத்தங்களையும், நியாயமான புகார்களையும்கூட அனுமதிக்காத ஏதேச்சாதிகார அரசின் கொடுங்கோன்மையினுல்தான் அந்த இடத்தை நிரப்ப முடியும் என்று அவர்கள் அறிந்திருக்கிருர்கள்.

இன்று, அமெரிக்கா உலகத்திலேயே மிகவும் செல்வம் கொழிக்கும் நாடாக இருக்கிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மனிதன் கண்ட கனவை, கனவைவிட மேலான தோர் வாழ்க்கைத் தரத்தை அவர்கள் பெற்றுள்ளனர். யந்திரங்கள் வீட்டு வேலையின் கடினத் தன்மையைக் குறைத்துள்ளன. சுருசுருப்பான மனைவிமார்கள் ஏதாவது

ஒரு தொழிற்சாலையிலோ, அலுவலகத்திலோ வேலை செய்வதற்கான வாய்ப்பை உண்டுபண்ணியுள்ளன. நாடகங்களையோ, திரைப்படங்களைப் பார்ப்பதற்கான ஓய்வு கிடைக்கின்றது. உயர்ந்த ரக சங்கீதத்தைக் கேட்டு ரசிப்பதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது. நீண்ட தூரம் உல்லாசப் பயணம் செல்லவும் வசதியுண்டு. ஏனெனில் அமெரிக்காவில் மூன்று பேருக்கு ஒரு கார் இருக்கின்றது.

இந்தச் செழிப்பிற்குப் பின்னால் ஒரு வகையான வாழ்க்கை முறை அமைந்திருக்கின்றது. ஒரு வகையான வாழ்க்கைத் தத்துவமும் இருக்கின்றது. சுதந்திரம் என்ற கருத்தைச் சுற்றிச் சுழல்கின்றது அது. பிரிட்டன் சுதந்திரக் கொடியை உயர்த்திப் பிடித்துள்ளது. முதலாவது சாரலஸ் மன்னனைச் சிரச்சேதம் செய்யவும், இரண்டாவது ஜேம்ஸ் மன்னனை இங்கிலாந்தின் அரியாசனத்திலின்று விரட்டவும் அது தயங்கவில்லை. இவ்வாறு ஆங்கிலப் புரட்சி வெற்றி பெற்றது. சுதந்திரத்தின் பெயரால் பிரதிநிதித்துவ ஜனநாயகம் பிறந்தது. இந்த உதாரணம் நிச்சயம் பின் பற்றப்படுவதாக இருந்தது. அமெரிக்காவின் ஐக்கிய நாடுகள் என்ற பேரில், அமெரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் காலனி நாடுகள் தங்கள் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்த ஒரு நூற்றாண்டு காலம் முடித்தது. இன்று அந்த நாடுகள் ஜனநாயகத்தின் அரசர்களாகத் திகழ்கின்றன. அந்த நாட்டின் ஜனாதிபதிகளின் வரிசையில் என்றும் அழியாக் கீர்த்தி பெற்றவர்கள் இருந்தார்கள். வாஷிங்டன், ஜெபர்ஸன், ஜாக்ஸன், லிங்கன், உட்ரோ வில்ஸன், ரூஸ்வெல்ட், கென்னடி போன்றவர்கள். அவர்கள் எல்லோரும் சுதந்திரத்திற்காக நின்றவர்கள். இவர்களில் ஒரு வேளை லிங்கன் ஜனநாயகத்தின் தத்துவாசிரியராக

அதிகம் காட்சியளிக்கிருர். கடந்த நூறு ஆண்டு காலமாக உலகத்தில், அவர் வாழ்க்கை ஒரு உள் ளுணர்வு ஊட்டுவதாக இருந்திருக்கின்றது. முறை யாகப் பள்ளிக்குச் சென்று கல்வி கற்க வசதியற்ற வராக இருந்தபோதும் தன்னுடைய திறமையினுல் ஆங்கில மொழியில் பெரும் பண்டிதராஞர். லிங்கனைப்போல் அடிக்கடி, விரிவாக எடுத்தாளப் பட்ட ராஜதந்திரிகள் மிகச் சிலர்தான். சுதந்திரத் தின்மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கு, இதோ ஒன்றிரண்டு உதாரணங்கள்.

“ஒவ்வொரு மனிதனும் அவனுக்கென்று பிரத்தியேகமாக இருப்பவைமீது விருப்பம்போல் எதுவும் செய்யலாம்” இதுதான் ஜனநாயக சுதந்திரத்தின் அடிப்படை. “பாதி அடிமைத்தனம், பாதி சுதந்திரம்” என்ற நிலையில் அரசு நீடித்து நிலைத்திருக்க முடியாது. ஜனநாயகத்தைப் பாது காப்பது, ஜனநாயகத்துக்கு ஒவ்வாத அடிமைத்து வத்தை ஒழிப்பது என்ற இரு நோக்கங்களைக் கொண்டது. இதுதான் உள்நாட்டுச் சண்டைக் கான அடித்தளமாக இருந்தது.

“நான் எவ்வாறு ஒரு அடிமையாக இருக்க விரும்ப வில்லையோ அதேபோன்றுதான் ஒரு எஜமானனுகவும் இருக்க மாட்டேன்.”

“தேவைப்பட்டவனுக்குக் கொடு” என்பது தருமம் பற்றிய கிறிஸ்துவ விதி. ஆனுல் தேவைப் பட்டவனிடமிருந்து எல்லாவற்றையும் எடுத்துக் கொள் என்பது அடிமைத்துவத்தின் விதி.”

“ஓநாய்கள் ஆட்டுக்குட்டிகளை விழுங்குவது தங்களது பேராசைகொண்ட வாய்க்கு ருசியாய் இருக்கும் என்பதற்காக அல்ல. ஆட்டிக்குட்டி

களுக்கு நல்லது என்பதற்காகவே அவ்வாறு விழுங்குகின்றன.'' அவரது நகைச்சுவைக்கும். பரிகாசப் பேச்சுக்கும் ஒரு சிறந்த உதாரணமாகும் இது. தளபதி கிராண்ட் அதிகமாகக் குடிக்கிறுர் என்று அவரிடம் புகார் செய்யப்பட்டபோது, "அது என்ன ரகம் என்று என்னிடம் கூறுங்கள். மற்ற தளபதிகளுக்கும் அந்த ரகத்தைக் கொடுக்கலாம்'' என்று அவர் சொன்ன பதில் முந்திய பதிலைப் போன்றிருக்கின்றது.

"உண்மை வலிமையுடையது என்பதில் நம்பிக்கை வைப்போம்.''

அவருடைய கெட்டிஸ்பர்க் பேச்சு மிகவும் சுருக்கமானது. வாக்கு வன்மையின் சிறந்த ஒரு பகுதி. எந்த மொழியிலும் உள்ளதைவிட சிறந்தது. அந்தப் பேச்சு முழுவதும் வாஷிங்டனில் உள்ள லிங்கன் நினைவுச் சின்னத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. நான் பார்த்த நினைவுச் சின்னங்களில் எல்லாம் மிகச் சிறந்த நினைவுச் சின்னம் அது. "மக்களின் ஆட்சி, மக்களால், மக்களுக்கான ஆட்சி'' என்று ஜனநாயகத்துக்கு அவர் கொடுத்த விளக்கம் ஒரு சரித்திரமாகிவிட்டது. ஜனநாயகம் பற்றிய ரத்தினச் சுருக்கமானவிளக்கம் அது. மலைப் பிரசங்கத்தின் உணர்வு காணக் கிடக்கின்றது. அரசியல் உலகில் ஒரு முதுரையாகப் பரிணமித்திருக்கின்றது.

•

உலகத்தில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற லட்சிய உணர்வில் 'நேச நாடுகளின் கூட்டு' என்பதை உட்ரோ வில்சனின் நாட்டினர் நிராகரித்துவிட்டனர். அதனுல், முதல் உலக யுத்த வீரனுன அவர் மனம் உடைந்து, ஏமாற்றமடைந்தவராக இறந்திருக்கலாம். ஆனுல், அவ

ருடைய செயல் இரண்டாம் உலகயுத்த வீரனுண பிராங்களின் ரூஸ்வெல்டுக்கு உணர்ச்சியூட்டுடுவ தாக இருந்தது. ஐக்கிய நாடுகளின் சபையின் ஆரம்பகர்த்தாவான அவர் நான்கு சுதந்திரங்கள் பற்றிய செய்தியை உலகுக்களித்தார்.

பேசுவதற்கும் எண்ணங்களை வெளியிடுவதற் குமான சுதந்திரம்.

உலகத்தில் எந்தப் பகுதியிலானுலும் சரி தனது வழியில் தெய்வ வழிபாடு செய்யும் சுதந்திரம்.

தேவைகளின்றும் சுதந்திரம், பயத்தினின்றும் சுதந்திரம்.

என்பவையாகும். அவர் தன் லட்சியத்தில் வெற்றிபெற்றபோது இறக்கும் நிலையில் இருந் தார். மாறுபட்ட அரசியல் கொள்கைகள் இருந்த போதிலும் ரஷ்யாவும், அமெரிக்காவும் ஒருங்கே நின்று உலகத்தைச் சுந்திரத்திற்கு இட்டுச் செல்ல முடியும் என்று அவர் நம்பினுர். அது கைகூடாத ஒரு நம்பிக்கையாகவே இருந்தது. இதை இரு நாடு களும் ஒரு சில ஆண்டுகளுக்குள் பலத்த போட்டியில் மாட்டிக் கொள்ளும் என்று அவர் அறியவில்லை. அரசியலில் ஏற்படும் மாற்றங்களில் இது ஒரு தற்காலிக மாற்றமாக ருசுப்பிக்கப்பட லாம். சீனு ஒரு பொதுவுடமை நாடாக உதயமா யிற்று. பொதுவுடமைக்கு இது ஒரு உந்துதலைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டிருக்கலாம். ஆனுல், சீனுவின் எல்லையற்ற ஆசையும், காட்டு மிராண்டித்தனமும் ரஷ்யாவை எதிரியாக்கி விட்டது. முன்பு எதிர்பார்த்திருக்க முடியாத அளவுக்கு அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்றை யொன்று நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன.

கடவுள் நம்பிக்கை தனக்கில்லை என்று ரஷ்யா பிரகடனப் படுத்துகின்றது. அதே சமயம் அமெரிக்கா "கடவுளின்மீது நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம்" என்பதை மூலவாசகமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதிகளில் சமீபத்தில் பிரசித்தி பெற்றவர் ஜான் பிட்ஜ்ஜெரால்ட் கென்னடி. ஒன்றுக்கு மேற்பட்ட பல வழிகளில் அவர் வரலாற்றை ஏற்படுத்தியுள்ளார். அமெரிக்க ஜனாதிபதிகளிலேயே மிகவும் குறைந்த வயதுடையவர். இந்தப் பதவியை அலங்கரித்த முதல் கத்தோலிக்க கிறிஸ்துவர். ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்பே நீக்ரோ மக்களை அடிமைத்தனத்தினின்றும் ஆபிரகாம் லிங்கன் விடுவித்திருந்தும் பலவித குறைபாடுகளால் பெரிதும் சிரமப்பட்டனர்.

அமெரிக்காவிடம் குறைகாண விழைவோர் களும், விமர்சனம் செய்வோர்களும் இதை அமெரிக்காவின் ஏதேச்சாதிகாரத்திற்கும், அமெரிக்கமாய் மாலத்திற்கும் ஒரு உதாரணமாகச் சுட்டிக் காட்டு வார்கள். தன் நாட்டை உண்மையான ஜனநாயகச் சின்னமாகக் காட்டும் பொறுப்பை கென்னடி ஏற்றுக் கொண்டார். அதிர்ஷ்டவசமாக சுப்ரீம் கோர்ட் நீதி மன்றத்தின் நீதிபதியாக வாரன் இருந்தார். தொடர்ச்சியாகத் தீர்ப்புக்கள் அவரால் வழங்கப் பட்டன. வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் நீக்ரோக்கள் சமமாக நடத்தப்படவேண்டும் என்ற உரிமை நிலைநிறுத்தப்பட்டது. அத்தீர்ப்புக்களில் ஆபிரகாம் லிங்கனைப் போன்றே கென்னடியும் கொலைகாரனின் குண்டுகளுக்கு இரையாகி மாண்டார். ஆனால், சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் நிலைநாட்டுபவையாக இருந்தது அது. அவர் பெரும் பணியால் லிங்கனைப்போன்று இவரும் சரித்திர

புருஷராகிவிட்டார். செல்வமும், அதிகாரமும் இருந்தபோதிலும் அமெரிக்காவுக்கும் தீர்வு காணப் படவேண்டிய பிரச்சினைகள் பல இருந்தன. இந்த இரு (வட., தென்) அமெரிக்க) நாடுகளையும் ஆட்சி செய்வது கடினம் என்று அவரே பண்டித நேரு விடம் துக்கத்துடன் ஒத்துக்கொள்ள வேண்டி வந்தது.

முதலில் குடியேறியவர்களில் ஒரு பகுதியினர் வைதீக மத ஆச்சாரங்களைக் கொண்டவர்களாக இருந்தார்கள். இது புதிய காலனி நாடுகளில் உயர் தரமான தார்மீக லட்சியங்களின் முத்திரையைப் பதித்தது. இந்த முத்திரை பத்தொன்பதாம் நூற் றுண்டுவரை இருந்தது. ஆனால், செல்வமானது இன்று அதனோடு தீமைகளையும் கொண்டு வந்தது. இரு உலக யுத்தங்களும் அமெரிக்காவை அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றில், கீர்த்தியின் உச்ச நிலைக்குக் கொண்டுபோய் விட்டன. ஆனால், அமெரிக்க சமூகத்தின் தார்மீகத்தன்மையை இது பாதிக்காமலில்லை. அமெரிக்கப் போர்வீரர்கள் லட்சக்கணக்கில் ஐரோப்பாவில் யுத்த முனைக்குச் சென்றபோது உழைப்பாளிகள் என்ற நிலையில் உள்ள அவர்கள் இடத்தைப் பெண்கள் ஏற்க வேண்டியதாயிற்று. இது உற்பத்தி அளவை நிலை நிறுத்த உதவிற்று. பெண்கள் தங்களது பொருளா தார சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்ளவும் உதவிற்று. ஆனால், கற்பு நிலையும், தாம்பத்திய உறவும் அர்த்த மிழக்கக்கூடிய நிலையை உருவாக்கி விட்டது. வீரர்களாக விடுமுறையில் வீடு திரும்பிய போர்வீரர்கள் காமப்பசி கொண்டவர்களாக இருந் தார்கள். நாட்டுக்கு அவர்கள் செய்த தியாகத்துக் காக அவர்கள் கோரிக்கைகள் இஷ்டப்பூர்வமாய் நிறைவேற்றப்பட்டது. யுத்த காலத்தில் ஏற்பட்ட

பழக்கம் சமாதானம் ஏற்பட்ட பின்பும் நீக்க முடியாததாக ஆகிவிட்டது. தங்களுக்குப் புதிதாகக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள பெண்கள் தயங்கவில்லை. உடையின் அளவு குறைந்தது. இது புதுமாதிரியாயிற்று. பாவாடையின் அளவு குறைந்தது. குறுகிக் குறுகி. கவுன்களில் கைப்பகுதியே இல்லாமல் போயிற்று, மயக்கும் அழகு வாய்ந்த குமரிகளின் தோற்றம் யாரையும் மயக்கக்கூடியதாயிற்று. நன்னடத்தை பெரும் மாற்றத்துக்குள்ளாயிற்று. இது ஒரு புதிய ஆராய்ச்சியின் அவசியத்தை ஏற்படுத்தியது. அமெரிக்க ஆண்-பெண்உறவு பற்றிய 'இன்ஸி' யின் அறிக்கையைக் கண்டு ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனெனில் எங்கும் வெளிப்படையாகத் தெரிந்த ஒன்றைத்தானே அவர் ஊர்ஜிதப் படுத்தியுள்ளார். இது பற்றி மேலும் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அமெரிக்க உளவியல் ஆராய்ச்சி உதவி ஸ்தாபனம் இந்த ஆராய்ச்சியை நடத்திற்று. அமெரிக்கக் குடும்பத்தலைவிகளின் உடல் உறவு பற்றிய ஆராய்ச்சியில் இது தெரிய வருகின்றது. இந்த ஆராய்ச்சி ஆயிரம் பேர்களின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. இப் புத்தகம் அட்டை போடப்பட்ட புத்தகமாகக் கிடைக்கும். அதிர்ச்சி தரும் விவரங்கள் அடங்கி யுள்ளன. ஒரு சில புள்ளிவிவரங்களே நன் னெறியில் ஏற்பட்டுள்ள அதீத மாற்றங்களை எடுத்துக் காட்டுபவையாக இருக்கின்றன. ஓரிரண்டு வருடங்களுக்கு முன் தங்கள் கணவர்களைத் தவிர வேறு யாராவது முத்தமிட முயற்சித்தால் அதிர்ச்சி தாங்காமல் கண்ணீர் வடிப்பார்கள். இப் போதோ அப் பெண்கள் மணநெறிக் கப்பாற்பட்ட, செய்யக்கூடாத செயல்களில் மிக்க ஆவலுடன்

ஈடுபடுகின்றனர். பல குடும்பப் பெண்கள் 1918 ஆண்டு கள்ளத்தனமாகப் பிறந்த பிள்ளைகளின் எண்ணிக்கை 1916ம் ஆண்டில் பிறந்த குழந்தைகளைவிட பத்து மடங்கு உயர்ந்துள்ளது. 1890ல் அமெரிக்காவில் 18 திருமணங்களுக்கு ஒரு விவாகரத்து என்று நிலைமை இருந்தது. 1920ல் 7.5 திருமணங்களுக்கு ஒரு விவாகரத்து என்ருயிற்று. 1930ல் ஐந்து திருமணங்களுக்கு ஒரு விவாகரத்து என்று விகிதாச்சாரம் உயர்ந்தது. 1957 ஒவ்வொரு 3.5 திருமணத்துக்கும் முழு விவாகரத்து என்ருயிற்று. திருமணப் பொறுப்பில் வருந்தக்கூடிய அளவுக்கான சீரழிவு ஏற்பட்டுள்ளதை இது காட்டுகின்றது.

அமெரிக்காவில் உள்ள இந்த நிலை பிரிட்டனுக்கும், இதர ஐரோப்பிய நாடுகளுக்கும் பொருந்தும். அநேகமாக அமெரிக்காதான் உச்ச நிலையில் நிற்கும்.

வயது வந்த வாலிபர்களின் பிரச்சினையால் அமெரிக்கா உண்மையிலேயே தாக்குண்டு கிடக்கிறது. வயது வந்த வாலிபர்களின் தேவைகள் எல்லாம் பெரும் அளவுக்குப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இருந்தாலும் இந்த நிலைமை ஆச்சரியத்தைக் கொடுப்பதாக இருக்கின்றது. குடும்பப் பொறுப்பு சீரழிந்துவிட்ட நிலையோடு இதையும் இணைத்துப் பார்ப்பது கடினமான தொன்றல்ல. யுத்த-முற்காலத்தில் இருந்த பெற்ருேரின் அன்பான அரவணைப்பு குழந்தைகளுக்குக் கிடைக்கவில்லை. இளம் பாலகர்களுக்கு, மானிடப் பண்பில் ஏற்பட்ட இந்த இழப்பை சம்பாதிக்கும் ஒரு மனைவியின் கூடுதலான வருவாயினுல் ஈடு செய்துவிட முடியாது. தாய்மார்கள் விருந்து வைபவங்களுக்கும் திரைப்படங்களுக்கும், நாடகங்

களுக்கும் செல்லுகையில், குழந்தைகளைப் பராம ரிக்கும் செவிலியர் முறை ஒரு நிறுவனமாகவே வளர்ந்து விட்டது. விபச்சார முறையை ஒழித்து விடவேண்டும் என்று சீர்திருத்தவாதிகள் பெரிதும் முயலுகின்றனர். இதே நேரத்தில் விபச்சாரம் மிகவும் நாசூக்கான, ஆனால் வெட்கம்கெட்ட வகை களில் அதிகரித்துவிட்டது. விபச்சாரமானாலும், குடிப்பழக்கமானாலும், சூதாட்டமானாலும், இது போன்ற சமூகத் தீமைகளை ஒழிக்கச் சட்ட மியற்றி னால் அது மிகக் குறைந்த பலனையே தருகிறது என்பதைச் சரித்திரம் தெளிவாகக் காட்டுகின்றது. விபச்சாரம் உண்மையில் அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டதாக ரஷ்யா உரிமை கொண்டாடுகிறது. இது உண்மை என்று நம்புவதற்குக் காரணங்கள் உள. ஏனெனில் சோம்பேறிகளான செல்வந்தர் வர்க்கம் அடியோடு துடைத்தெறியப்பட்டு விட்டது. தங்கள் செல்வத்தை விரயமாக்கக் கூடிய அளவுக்கான செல்வந்தர்கள் அங்கும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால், அவர்கள் மிக்க ஆர்வத்துடனும், மனச்சுத்தியுடனும், விஞ்ஞானத்துறையிலும், கலாச்சாரத் துறை யிலும் ஈடுபடுகின்றனர். தரக்குறைவான காரியங் களில் ஈடுபட முடியாது. எல்லா ரஷ்யர்களும் மகான்கள் என்று நம்பிவிட முடியாது. மானிட பலவீனங்களினின்றும் தப்பிவிட முடியாதுதான். ஆனால், நியூயார்க்கிலோ, லண்டனிலோ, பாரிஸிலோ, பெர்லினிலோ, டோக்கியோவிலோ இருப்பதுபோல் மாஸ்கோவிலோ, லெனின் கிராடிலோ பாவகாரியங்கள் இவ்வளவு பெருமை யுடன் வெளிப்படுவதில்லை.

எல்லா முதலாளித்துவ நாடுகளில் இருப்பது போன்று அமெரிக்காவில் உள்ள வேறு ஒரு பல

வீனம் வேலையில்லாதிருப்போரின் எண்ணிக்கை. தலைகிறங்கிப் போகும் அளவுக்குப் பிரம்மாண்டமாய் அதிகரித்துள்ளது. 1965ல் லோக் சபை செயற்குழு ஒரு குறிப்பு தயார் செய்தது. உழைப்புச் சக்தியில் 5.6 சதவீதம் வேலையில்லாமல் இருக்கின்றது என்று அந்தக் குறிப்புக் கூறுகின்றது. உலகத்திலேயே செல்வம் கொழிக்கும் ஒரு நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. தற்செயலாகச் செல்லும் ஒரு யாத்ரீகன் இதன் அறிகுறியைக் காண்பது கடினம். விலகி சேரிப் பகுதிகளில் நுழைந்து பார்த்தால்தான் இந்த உண்மை தெரியவரும். நாம் பழக்கப்பட்டுள்ள சேரிகளுடன் அவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால், அச்சேரிகள் கூட இவற்றைவிடச் சற்று செழிப்பானவையாகப் படும். வறுமை நிலைமைக்குத் தக்கவாறு அமையக் கூடிய ஒன்று. நான்கு பேர் கொண்டது ஒரு குடும்பம். அதன் வருட வருமானம் 3,000 டாலருக்குக் குறைவானால் அது ஏழைக் குடும்பம் என்று அதிகாரப்பூர்வமாய் பிரகடனம் படுத்தப் பட்டுள்ளது. 1963ம் ஆண்டு, இந்தக் குடும்பங்களின் எண்ணிக்கை, 9, 300,000 என்றும், இதில் உட்படுகின்ற தனிநபர் எண்ணிக்கை 35,000,000 என்றும் அதிகாரப்பூர்வமாகச் சொல்லப்பட்டது. இவற்றில் 54,00,000 குடும்பங்களுக்கு வருட வருமானம் 2,000 டாலருக்கும் குறைவு. ஒரு நடுத்தரக் குடும்பத்தின் வருட வருமானம் 5,956 டாலராகும். இப்படியிருந்தும் நியூயார்க் நகரத்தில் மட்டும் 430,000 ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் உதவி மானியம் பெற்று வாழ்க்கை நடத்துகின்றனர் என்று சொல்லப்படுகின்றது. அமெரிக்கா முழுவதும் சுமார் 8,000,000 மக்கள்

உதவி மானியம் பெறுகின்றனர். அப்படியானல் ஒரு மாதத்துக்கு மட்டும் 400,000,000 டாலர்கள் உதவி மானியமாகக் கொடுக்கப்படுகின்றது. உண்மையில் மன வருத்தத்தைத் தரும் புள்ளி விவரம் இது. ஆனல், இந்த வறுமை நிலைமையை ஒழித்துவிட வேண்டும் என்று அமெரிக்க அரசு பெரிதும் முயன்று வருகின்றது என்பது சிறிது மனச்சாந்தியளிக்கின்றது. ஜனதிபதி கென்னடி சரியான நேரத்தில் இந்தப் போராட்டத்தைத் தொடங்கினர். ஜனதிபதி ஜான்சன் இதைத் தொடர்ந்து செயலாற்றுகின்றார். வறுமைக் கெதிரான இப்போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் 1.5 மில்லியன் டாலர்கள் ஒதுக்கப்படலாம். ஒரு தொழிலாளியின் உயர்ந்தபட்ச ஊதியம் ஆண்டுக்கு 3,278 டாலர்கள். குறைந்தபட்ச ஊதியம் ஆண்டுக்கு 1,504 டாலர்கள். ஒருவேளை உலகத்திலேயே இதுதான் உயர்ந்தபட்ச ஊதியமாக இருக்கலாம்.

உற்பத்தி சாதனங்கள் முழுவதையும் அரசாங்கமே வைத்துக் கொள்கின்றது என்பது பொதுவுடமைக் கொள்கை. எனவே, ஒவ்வொருவருக்கும் வேலை கொடுத்தாக வேண்டும். ஆகவே, வேலையில்லாப் பிரச்சினை எழவே இடமில்லை. ஆனல், ஊதியம் குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைவாக இருக்கின்றது. நகரங்களில் 300 ரூபிள்கள். கிராமப்புறங்களில் 270 டாலர்கள். எனவே உத்தரவாதமிருக்கின்றது. இதுதான் பொதுவுடமைப் பொருளாதாரத்தின் துருப்புச் சீட்டு. அவனவன் தேவைக் கேற்றபடி கொடுக்கப் படுகின்றது. ஆனல், தனக்கு எந்த வேலை கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்ல அவனுக்கு உரிமை இல்லை. அவன் கீழ்ப்படிய

வேண்டும். அந்தப் பரந்த யந்திர சாதனத்தில் வேலை செய்யவேண்டும். அங்கே வரையரைக் குட்பட்டு, அதன் நிர்வாகத்தில் பங்குபெற வாக்குரிமை பெற்றிருக்கிறான். ஆனால் பச்சையான உண்மை என்னவெனில் அவன் சுதந்திரமாக இல்லை. அவன் வேலை செய்ய மறுக்கலாம். அது அவனது சுதந்திரம். ஆனால், உணவு பெறும் உரிமையை அவன் இழக்கவேண்டும். ஆகவே, அவனுக்கு ஒரே ஒரு சுதந்திரம் மட்டும் உண்டு. பட்டினி கிடக்கும் உரிமை.

வேலையில்லாத் திண்டாட்டம் என்ற இந்த ஒரு அம்சத்தைத் தவிர மற்ற எல்லா அம்சங்களிலும் அமெரிக்கா முன்னணியில் நிற்கின்றது. அமெரிக்காவுக்குச் சமமாக ரஷ்யாவும் முன்னேறியிருக்கலாம்; இலக்கியத்துறையில் அமெரிக்கா மிகவும் முன்னேறியுள்ளது. எழுத்தாளர்கள் உலகின் எந்தப் பிரச்சினை பற்றியும் எழுதலாம். ரஷ்ய எழுத்தாளர்கள் பொதுவுடமையின் புகழ் பாட வேண்டும் என்று மட்டும் எதிர்பார்க்கப்படுகின்றனர். அதிகாரத்தில் இருப்பவர்களின் போக்கை ஆதரிக்காததினால், பாஸ்டர் நாக் போன்ற மேதைகள்கூட அங்கீகரிக்கப்படா நிலையில் இருக்கின்றனர். இது சங்கீதம், ஓவியம் என்பவற்றிற்கு மட்டுமல்ல. பொதுவாகக் கலைத் துறைக்கே இது பொருந்தும். ஆனால், உலகின் சிறந்த இலக்கியப் படைப்புக்களைப் படித்து தடை செய்யப்படவில்லை என்பதை ரஷ்யர்கள் சார்பில் சொல்லித்தானாக வேண்டும். சேக்ஷ்பியரானாலும் சரி, எல்லா இங்கிலீஸ் இலக்கியமானாலும் சரி, இந்தியா, சீனா போன்ற தூர தேசங்களின் இலக்கியமானாலும் சரி. 'ரஷ்யாவுக்கு ஒரு பயணம்' என்ற தன்னுடைய வாஞெலிப்

பேச்சில் பௌடன் பிரபு "பிரிட்டனில் நூற்றுக்கு ஐந்து வாலிபர்கள்தான் பல்கலைக் கழகத்துக்குப் போகின்றனர். ரஷ்யாவில் நூற்றுக்குச் சுமார் 30 பேர்கள் செல்லுகின்றனர். அமெரிக்காவில் சுமார் 35 முதல் 40 பேர் பல்கலைக் கழகத்துக்குப் செல்லுகின்றனர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இன்று உலகம் இரண்டு எதிரிடையான முகாம்களாகப் பிரிந்திருக்கின்றது. ரஷ்யா, சீனு, தென் கிழக்கு ஆசியா, கிழக்கு ஐரோப்பா ஆகியவை உட்பட்ட பொதுவுடமை நாடுகள். அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, மேற்கு ஜெர்மனி, ஜப்பான் இவை உட்பட்ட ஜனநாயக, அல்லது சுதந்திர நாடுகள். உலகத்தில் இதர பகுதிகள் எந்தப் பகுதியில் சேர்வது என்று குழப்பமடைந்த நிலையில் இருக்கின்றன. இந்தப் பிரிவில் இந்தியாவும், அபிவிருத்தியடைந்து வரும் ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளும் உட்படும். தேர்ந்தெடுப்பது கடினமாக இருக்கின்றது. ஏனெனில் ஒவ்வொரு பகுதிக்கும் அதற்குச் சாதகமான அம்சங்கள் இருக்கின்றன. கடைசியாக சுதந்திரமா, பாதுகாப்பா என்ற பிரச்சினைகளில்தான் கொண்டு விடுகின்றது. தற்காலிக ஜனநாயகங்கள் பெரும் அளவுக்குத் தொழில் மயமாக உள்ளன. சுதந்திரத்திற்காக நிற்கின்றன. ஆனுல், முழுமையான வேலை வாய்ப்புக்கு உத்திரவாதம் கொடுப்பதில் தோல்வி கண்டுவிட்டன. பொதுவுடமை நாடுகள் சுதந்திரத்தை முக்கியமாகக் கருதுவதில்லை. ஏனெனில் சாதாரண மனிதன் சுதந்திரத்தை விடத் தனக்கு உணவு கிடைப்பதைத் தான் முக்கியமாகக் கருதுகின்ருன் என்பதை உணர்ந்திருக்கின்றன. எனவே, இந்தத் தேர்வு அவ்வளவு எளிமையானதல்ல. ஏனெனில், மனித

வர்க்கம் எல்லாவிதமான கட்டுப்பாடுகளையும் எதிர்த்துப் போராடி சுதந்திரமாகவும், வீரப் போக்குடனும் இருக்க விரும்புகின்றது. மனித வர்க்கத்தின் சரித்திரம் இதைத்தான் புலப்படுத்து கின்றது. ஆகவே, துன்பம் நேரினும், உயிர் இழக்க நேரிட்டாலும் முன்னேற்றத்திற்கான புதுப்பாதை வகுத்தவர்களை வீரர்கள் என்று மெச்சுகின்றோம். முழுமையான பாதுகாப்பு, இந்து ஜாதி முறையைப் போன்ற தொகுதி தொகுதியான அடுக்குகளைக் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்கலாம். முதலாளித்துவம் என்ற சமூக அமைப்பை எதிர்த்துத் தன்னையே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியிருப்பதால் பொதுவுடமை இன்று உயிரோடு இருக்கலாம். லட்சியத்தை அடைவதில் வெற்றி பெற்று விட்டால், வளர்ச்சியுறாத சமூக அமைப்புக்குள் வீழ்ந்துவிடலாம். அவர்களுடைய வாழ்க்கையைப் பிறப்பு முதல் இறப்புவரை திட்டமிடும் முழு அதிகாரம் கொண்ட அரசாங்கத்தைத் தலைமையாகக் கொண்டதாக இருக்கும் அந்த அமைப்பு.

எனவே, இவற்றில் எதையும் தேர்ந்தெடுப்பதென்பது மிகவும் கடினமான காரியம்தான். பாதுகாப்பு மிகமிக இன்றியமையாதது. அதற்காக நம் சுதந்திரத்தின் பெரும் பகுதியை மனம் ஒப்பி விட்டுக் கொடுக்கின்றோம். இருந்தாலும், சுதந்திரமும் மிகவும் முக்கியமானது. உண்மையில் வாழ்க்கையின் உயிர் மூச்சே அதுதான். அதுதான் முன்னேற்றத்திற்கான உந்து சக்தி. அது தெய்வீகமனநிறைவு என்பதோடு ஒன்றியிருக்கின்றது. இவை இரண்டையும் சமஅளவில் நாம் அடைய முடியாது என்பதை சரித்திரம் தெளிவு படுத்துகின்றது. நடுத்தரமான சுதந்திரமும், போதுமான அளவு பாதுகாப்பும் பெறுவது

என்பது சாத்தியமானது. பொதுவுடமை சுதந்திரத்தைப் பற்றிப் பேசுகின்றது. இது காட்சிப் பிரமாண மற்ற முறையில்தான் பலாத்காரத்தின் அடிப்படையில் அமைந்தது. ஒவ்வொரு பசிக்கும் மானிடனுக்கும் உணவு தர வாக்குறுதி நல்குகின்றது. உணவு கொடுக்கவும் செய்கின்றது. ஆனால், ஒவ்வொரு மனிதனும் அரசாங்கத்தின் ஒவ்வொரு சட்டத்திற்கும் கீழ்ப் படிய வேண்டும். அவன் எங்கே வேலை செய்ய வேண்டும், என்ன வேலை செய்யவேண்டும், மேலும் அவனுக்கு எவ்வளவு கொடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றிக் கேள்வி கேட்கப்படாது. எப்படிப்பட்ட வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் கேட்கக் கூடாது. மறுபக்கத்தில் சுதந்திர ஜனநாயகங்களால் வேலை சம்மந்தமாக முழு உத்தரவாதம் நல்க முடியவில்லை. ஆனால், இந்த நிரந்தரமற்ற நிலையை, வேலையில் லாமல் இருக்கும் நாட்களில் கொடுக்கப்படும் மான்யத்தின் மூலம் ஈடுகட்ட விரும்புகின்றன. இரு அமைக்கப்புக்களிலும் சுகாதார முறையும், கல்வி முறையும் ஓரளவு நல்ல முறையிலேயே தான் இருக்கின்றன. அமெரிக்காவில் எல்லாமே மிகக் கொடிய அளவுக்கு விலை உயர்வாக இருக்கலாம். அநேக விஷயங்கள் ரஷ்யாவில் இலவசமாகவும் கிடைக்கலாம். ஆனால், அமெரிக்காவில் வருமானம் மிகவும் அதிகமாக இருக்கின்றது. எனவே, மக்கள் தங்கள் தேவைகளுக்கு அதிகப்படியான விலை கொடுத்து வாங்கக்கூடிய நிலையில் இருக் கின்றனர். அதே நேரத்தில் அதிகமான விலை கொடுத்து வாங்கமுடியாதவர்களின் தேவைகளும் புறக்கணிக்கப் படுவதில்லை. "நியாயமான சமுதாயத்தை அமைப்பது" என்பது பற்றி

செஸ்டர் பௌல்ஸ் டில்லிப் பல்கலைக் கழகத்தில் ஒரு சொற்பொழிவாற்றினர். தனியார் நிர்வாகத்தில் ஏற்படும் அக்கிரமங்களை மூடி மறைக்கவில்லை. இந்தியா போன்ற வளரும் நாடுகளில் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றியும் உணர்ந்திருந்தார். "வளர்ந்து வரும் தேசங்களின் முன்னுல் உள்ள கடமை என்னவெனில் தனிப்பட்டோர் நிறுவனங்களில் ஏற்படும் மிகைபாடுகளைக் கண்டஞ்சாமல் தனியார் நிறுவனங்களைப் புறக்கணிக்காமல் இருப்பதுதான். பொறுப்புள்ள தனியார் முயற்சிகளைப் புறக்கணிக்காமல், இந்த மிகைபாடுகள் எழவொண்ணுமல் தடுப்பதற்கான வழிவகைகளைக் காண்பதுதான்" என்று மிக தைரித்துடன் சென்னுர். அவர் ஒரு நியாயமான சமுதாய அமைப்பைப் பற்றிப் பேசுகின்ருர். ரஷ்யத் துண்டுப் பிரசுரமொன்று புதிய சமுதாயம் பற்றிப் பேசுகின்றது. பொதுவுடமை உண்மையில் புதுமையானது. மானிட இயல்பை திடீரென்று மாற்றிவிட முடியுமானுல், இது வெற்றி பெறலாம். மனிதர்கள் உழைக்கின்றனர். ஆனுல், அதில் இருந்து தங்களுக்கு என்ன கிடைக்கும் என்று பார்க்காமல் இருக்க மாட்டார்கள். ஒரே நாளில் மனித சமுதாயத்தை நேசிப்பவர்களாகவும் ஆகிவிட முடியாது. ஜார் ரஷ்யாவைப் போன்று இன்றைய ரஷ்யாவும் தேசீய உணர்வு கொண்டதாகவும், ஏகாதிபத்திய உணர்வு கொண்டதாகவும் இருக்கின்றது. பொதுவுடமை சீனு நாடுகளை காய்கறிகளைப் போன்று, ஆடுகளைப் போன்றும் விழுங்கிவிடுகின்றது. இவ்வாறு தன் மனிதபிமானத்தைக் காட்டுகின்றது. எந்த ஒரு அரசாலும் மனித சுபாவத்தை மாற்றிவிட முடியாது. ஆனுல், சமுதாயத்தை எந்த எல்லை வரையில் மாற்றமுடியும் என்று மனித இயற்கை அரசுகளுக்கு வழிகாட்ட முடியும்.

## 8. இந்தியாவிற்கு எந்த வழி

**1947ல்** இந்தியா ஒரு சுதந்திர நாடாக வெளிப்பட்டதும், உலக அரசியலில் புதியதோர் சக்தி தோன்றியது. ஆசியாவினுலும் சரி, ஆப்பிரிக்காவினுலும் சரி, எல்லா நாடுகளிலும் சுதந்திரத்தைத் துரிதப்படுத்திற்று. உலகமே கண்டிராத மாபெரும் பேரரசை உடைத்தது. பிரிட்டீஷ் அரசாங்க முறையையே பின்பற்றுவதற்கான சுதந்திரம் இந்தியாவுக்கு இருந்தது. அதேபோன்று ரஷ்யாவின் அடிச்சுவட்டையும் பின்பற்றச் சுதந்திரம் இருந்தது. இரு முகாமினரும் தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ள முயற்சி செய்ததில் ஆச்சரியமில்லை. ஜான் ஸ்ட்ரேச்சி, சிந்தனையைக் கிளறும் வகையில் எழுதிய மாபெரும் எழுச்சி என்ற கட்டுரையில் "இன்றைக்கு உலகில், இந்தியா ஒரு முடிவு கூறும் தேசமாக இருக்கின்றது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சிறு மாறுபட்ட தத்துவார்த்தங்களில் தேர்ந்தெடுப்பது என்பது பற்றிப் பேசுவதற்கு முன்னுல் இந்தியாவுக்கு முன் உள்ள மூன்ருவது வழியைப் பற்றிச் சிறிது யோசனை செய்வோம்.

இந்த இரண்டு மேற்கத்திய வழிகளுடன் யாதொரு சம்பந்தமுமில்லாத வழிதான் காந்தீய வழி. காந்திஜி சுதந்திரப் பிரியராக இருந்தார். மேற்கத்திய பிரம் மாண்டமான, சக்தி வாய்ந்த அரசுகளுக்கு முற்றி லும் எதிரிடையானவராக இருந்தார். தொழிற் புரட்சியின் பிறப்புக்களாக வளர்ந்த மாபெரும் நகரங்களும் அவரைக் கவரவில்லை. அவருடைய முக்கியக் கவனம் இந்தியாவின் கிராமங்கள்பால் இருந்தது. புராதன இந்தியாவின் தன்னிறைவு பெற்ற, சுயாட்சிகொண்ட கிராமங்களின் பழமை யில் பற்றுக்கொண்டு, அவற்றின் சீரமைப்பை அவர் விரும்பினுர். "கிராம சுயராஜ்யம் என்பது முழுமையான குடியரசாக இருக்கும். இதுவே என் எண்ணம். தன் ஜீவாதாரத் தேவைகளுக்கு அயலா ரிடமிருந்து முற்றிலும் விடுபட்டு சுதந்திரமாக இருக்கும். அதே சமயத்தில் ஒன்றை ஒன்று சார்ந்த தாகவும் இருக்கும். இப்படிப்பட்டதோர் பரிபூரண குடியரசாக இருக்கும். எனவே, ஒவ்வொரு கிராமத் தினுடையவும் முதல் அக்கறை தனக்குத் தேவை யான உணவு தானியங்களை உற்பத்தி செய்து கொள்வது; தனது உடைக்குத் தேவையான பருத் தியை உற்பத்தி செய்துகொள்வது; அதன் ஆடு மாடுகளுக்கான தீவனம் சேமிக்கப்பட வேண்டும். குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் வேண்டிய பொழுதுபோக்கு நிலையங்களும், விளையாட்டு அரங்குகளும் இருத்தல் வேண்டும். இதற்கு மேற் கொண்டு நிலம் இருக்குமானுல், கஞ்சா, புகையிலை, அபினி போன்றவை அல்லாத பணம் தரும் பொருட் களை விளைவிக்க வேண்டும்" என்பதாகும். இது முழுக்க முழுக்க புராதன பொருளாதாரமாகும். பிரிட்டிஷாருக்கு எதிராக நடைபெற்ற அரசியல் போராட்டத்தில் அவருடன் பங்குபெற்ற அவரது

வாரீசுகளும், மற்ற சகாக்களும் தங்கள் பாதையில் சென்றூர்கள். மேற்கத்திய மாதிரியில் பெரிய வலிமை மிக்க இந்தியாவை நிர்மாணிக்க ஆசை கொண்டார்கள் என்றுல் ஆச்சரியப்படுவதற் கில்லை. மிகவும் புத்திக் கூர்மையுள்ள அரசியல் வாதியாக மகாத்மா காந்தி இருந்தார். ஆனல், அவரது சகாக்கள் யந்திர சாதனங்களுடன் கூடிய சிக்கலான தொழில் அமைப்பும் உயிருள்ள அரசியல் சூழ்நிலையையும் கொண்ட இருபதாம் நூற்றுண்டின் தேவைகளை நன்கு உணர்ந்திருந் தனர். பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை விட்டு வெளியேறினுல், அந்த இடத்தைப் பிடித்துக் கொள்வதற்குப் பலர் தயாராக இருக் கின்றனர் என்பதை நன்கு அறிந்திருந்தனர். எனவே, இந்தியா நிற்பந்தமாக காந்தீய தத்துவார்த்தத்தை விட்டுவிட வேண்டியதாயிற்று. வின்ஸெண்ட் சர்ச்சிலின் சரித்திரம் காட்டுவது போல், வெற்றி ஏற்பட்ட காலத்தில் உதறி யெறியப்பட்ட முதல் தலைவன் இவரல்ல. இவர் மிக்வும் நேசித்த சில கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. உதாரணமாக மதுவிலக்குக் கொள்கை. இந்தியாவின் பொருளாதாரத்துக்கும், நீதிப் பண்புக்கும் நன்மை பயக்காத ஒன்று இது. நாட்டைப் பற்றிய அவரது அளவு கடந்த வலி யுறுத்தல், பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிராக சர்ச்சைக் குறிய சிறப்பைப் பெற்றிருந்தது. ஆனல், அது இந்தியாவில் அதிகரித்து வரும் கோடிக்கணக்கான இந்தியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடும் என்று எதிர்பார்ப்பது கடினம். யந்திரங்கள் தொழில் அமைதியின்மையைக் கொண்டு வந்திருக் கலாம். சலிப்புத் தரும் வேலைப் பளுவைப் புகுத்தி யிருக்கலாம். ஆனல், நாகரிக வளர்ச்சியைத் தடை

செய்வது முடியாத காரியம். மேற்கத்திய ரீதியில் அபிவிருத்தியடையும் இந்தியாவின் உரிமையை அது உதறியெறிந்து விடவேண்டும் என்று எதிர் பார்ப்பது சரியல்ல. தொழில் மயமாவதற்கு எதிராக காந்திஜி சொன்னதெல்லாம் உண்மையில் மனப்பூர்வமானவையாக இருக்குமானுல், பண்டித ஜவஹர்லால் நேருவைத் தனது வாரீசாக நிமிமித்ததை விடப் பெறும் தவறு எதையும் செய்திருக்க மாட்டார். நேரு மேற்கத்திய பொருளாதாரக் கொள்கையும், மேற்கத்திய நோக்கும் கொண்ட மேற்கு நாட்டின் உருவாக்கம் என்பது அவருக்குத் தெரிந்திருக்கும்.

ஜனநாயகம், பொதுவுடமை என்ற முரண்பட்ட இரண்டு தத்துவார்த்தங்களில் உடனடியாக எதைத் தேர்ந்தெடுப்பது என்பது நேருவுக்கு முடியாமல் இருந்தது. ஹாரோ, கேம்பிரிட்ஜ் ஆகிய பல்கலைக் கழகங்களில் பயிற்றுவிக்கப் பட்டிருந்ததால் மேற்கத்திய ஜனநாயக எண்ணத்தில் திழைத்திருந்தார். ஒரு ஆங்கிலேயனைப் போலவே அவர் மிகவும் சுதந்திர ஆர்வம் கொண்டவராக இருந்தார். அதிர்ஷ்டவசமாகவோ, துரதிர்ஷ்டவசமாகவோ, கார்ல் மார்க்ஸை அவர் படித்திருந்தார். அவரில் புதியதோர் உத்வேகத்தைக் கண்டார். ரஷ்யாவுக்குப் போய்விட்டு வந்ததற்குப் பிறகு பொதுவுடமைப் பொருளாதாரத்தால் மிகவும் கவரப்பட்டிருந்தார். ஐந்தாண்டுத் திட்டங்களால் ஈர்க்கப் பட்டிருந்தார். இதன் விளைவு என்னவெனில் பொருளாதாரத் துறையில் கலப்புப் பொருளாதார முறையை ஆதரித்தார். இதில் கனரகத் தொழில் அரசாங்க உடமையாக இருக்கவேண்டும். அரசியலில் நடுநிலைமைக்

கொள்கையே சிறந்தது என்று கொண்டார். அவர் கொள்கைகளின் பலாபலன்கள் பற்றி ஆராய்வதானுல் வெகு நேரம் பிடிக்கும். ஜான் ஸ்டிரேச்சே இந்தியாவின் வெற்றிகளைக் கண்டு பூரிப்படைகின்ருர். இந்தியாவுக்கும், சீனுவுக்கும் இடையிலான போட்டியை ஆமைக்கும், முயலுக்கும் இடையில் ஏற்பட்ட போட்டிக்கு ஒப்பிடுகின்ருர். கடைசியில் ஆமையே வெற்றி பெறும் என்று எண்ணுகின்ருர். இந்தியா தனது சமுதாய முன்னேற்றத் திட்டங்களில் வெற்றி பெறும் என்று எண்ணுகின்ருர். ஆனுல், சுதந்திரம் ஏற்பட்டதற்குப் பிறகு, வளர்ச்சி பற்றி, இந்தியாவை எடை போடுவதில் இந்தியர்கள் மத்தியிலேயே மாறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.

சோஷலிஸ திட்டமும், தனியார் துறையும் இணைந்திருக்கின்றன. ஆனுல், தனியார் துறை ஆபத்தான சூழ்நிலையிலேதான் இருக்கின்றது. முதலாளிகள், திறமையற்றவர்கள்; நாணயமற்றவர்கள்; எப்போதுமே லாப நோக்குக் கொண்டவர்கள்; ஏழ்மையில் வாடும் இந்திய மக்களுக்கு எதிராக இருக்கின்றனர் என்று இந்திய முதலாளிகள் பற்றி ஒரு அபிப்பிராயம் உலவுகின்றது. முதலாளிகள் காங்கிரஸ் கட்சி நிதிக்கு நிறையப் பணம் கொடுக்கின்றனர். எனவே, அவர்கள் உண்மையில் செழிப்படைய அனுமதிக்கப் படுகின்றனர். இதன் காரணமாகப் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகின்றனர். ஏழைகள் மென்மேலும் ஏழைகளாக்கப் படுகின்றனர் என்று இந்தியப் பொதுவுடமைக் கட்சியினர் குறை கூறுகின்றனர். பொதுத்துறையானது எதிர்பார்த்த அளவுக்கு லாபத்தைத் தரவில்லை என்பது இந்தியாவில் ஒரு துக்ககரமான அனுபவமாகும். பொதுத்துறையில்

கிடைக்கும் லாபத்தை, தனியார் துறையில் கிடைக்கும் லாபத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மிகவும் குறைவானதாகவே இருக்கின்றது. பொதுத்துறையில் ஆடம்பரச் செலவு அதிகம். அது பொது மக்கள் பணமாக இருப்பதால் சிக்கனமாகச் செலவு செய்வதற்கோ, திறமையுடன் செயலாற்றுவதற்கோ ஆன நடவடிக்கைகள் எடுப்பதில் அக்கறை காட்டப்படுவதில்லை. சில விதிவிலக்குகள் இருக்கலாம். திட்டமிடுதல் இந்தியாவுக்குச் சுலபமானதாக இருக்கவில்லை. இதற்கான போதிய அனுபவமும் கிடையாது. புள்ளி விவரங்களே கிடையாது. அப்படி எங்காவது புள்ளி விவரமாக தயாரிக்கப் பட்டிருந்தால் சரியான புள்ளி விவரமாக இருக்காது. தவருன தகவல் தருவதாக இருக்கும். பலன் என்னவெனில் மிகவும் ஆடம்பரமாகப் போடப் பட்ட இலக்குகளை எட்டுவதில்லை. மேல் மட்டத்தில் ஊழல் மலிந்து விட்டதாக ஓய்வில்லா முறையீடுகள், இந்தப் பிரச்சினை பற்றி ஆராய்வதற்கென ஒரு குழுவை நியமிக்க அரசு நிற்பந்திக்கப்பட்டது. உள்நாட்டு அமைச்சரும், இரண்டு ஆண்டுகளில் ஊழலை ஒழிக்கவில்லையெனில் தான் ராஜினுமாச் செய்து விடுவதாக வாக்குறுதி கொடுத்தார்.

திட்டம் காரணமாகவும், பெரும் அளவுக்குத் தொழில்மயமாக்கப் பட்டதாலும் அமெரிக்காவிடமிருந்தும், பிரிட்டனிடமிருந்தும், இரு முகாம்களிலும் உள்ள இதர சின்னஞ்சிறு நாடுகளிலிலிருந்தெல்லாம் பெருவாரியாகக் கடன் வாங்க வேண்டி வந்தது. ஆனுல், அந்நிய ஆட்சியின் மிக மோசமான காலகட்டத்தில் இருந்ததைவிட அதிகமான வரிப் பளு ஏற்பட்டுள்ளது. பிரிட்டீஷ் ஆட்சிக் காலத்தில் இருந்த சிறு நிர்வாகக் குழுக்கள், இன்றைய பெரிய மந்திராலயங்களைவிட எவ்வள

வோ நல்லவையாகவும், அதிகத் திறமையானவை யாகவும் இருந்தன. அதிகப்படியான அதிகாரிகள், குறைந்தபட்ச வேலையும் பலனும் என்ற பார்க்கின் ஸன் விதி செயல்படத் தொடங்கியுள்ளது. இந்தியா ஆர்வம் மிகுதியால் பொதுவுடமைப் பொருளாதாரத் திட்டத்தை அமுல் படுத்தியது. சீனவும் ரஷ்யாவும் செய்த அதே தவறைச் செய் துள்ளது. கனரகத் தொழிலுக்கு அது முக்கியத் துவம் கொடுத்தது. விவசாயம் புறக்கணிக்கப் பட்டது. பெரும் அளவுக்கு விவசாய நாடான இந்தியா அதிக விலை கொடுத்து உணவு தானியங் களை வாங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. நமது மாணவர்கள், நம் நாட்டை நாம் கனவு காண முடியாத அளவுக்கான உயர் நிலைக்கு இட்டுச் செல்லும் வருங்கால பிரஜைகள் என்று நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஒத்துழையாமை இயக்க காலத்திலிருந்து வந்த மாணவர்கள் மத்தி யில் இருக்கும் கட்டுப்பாடின்மை நமது பல்கலைக் கழகங்களில் மனக்கலக்கம் தரும் ஒரு அம்சமாக இருக்கின்றது. வாழ்க்கைச் செலவு வெகு விரை வாக உயர்ந்துகொண்டே போகின்றது. தனி நபர் வருமானம் வளராமல் குறுகியதாகவே இருக் கின்றது. உண்மையில் சந்தோஷப்படக் கூடிய தாக இல்லை. டாக்டர்களும், விஞ்ஞானிகளும் இந்தியாவை விட்டு வெளியேறி அந்நிய நாடுகளில் முக்கியமாக அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் குடி யேறுகின்றனர். இதிலிருந்து இந்தியாவில் திறமை யானவர்கள் நிரம்ப இருக்கின்றனர் என்பது ருசு வாகின்றது. பிரிட்டீஷ்காரர்கள் காலத்தில் வெளி நாட்டுக்குச் சென்ற பணமே, போதுமான கேட்டை விளைவித்து விட்டது. திறமையான அறிவாளி களும் நாட்டைவிட்டு வெளியேறுவது இன்னும்

மோசமானதாக இருக்கின்றது. இந்தியா சம்மந்தப்பட்ட விஷயங்களில், இந்தியாவுக்கு வெளியே இருக்கும் இந்தியர்கள் ஒருவித வெறுப்புணர்ச்சியை வளர்த்துக்கொண்டு விட்டார்கள். இந்த ரகத்தின் மோசமான உதாரணம் "இருட்டின் ஒரு பகுதி" என்ற நெய்ப்பாலின் புத்தகத்தில் காணக் கிடக்கின்றது. இது எல்லோருக்கும் பொருந்தாது என்று நினைக்கின்றேன். இவர் ஒரு மேற்கிந்தியக் கதாசிரியர். இவருடைய பாட்டனுர், இந்தியாவினின்றும் போய் ட்ரினிடாட் எனுமிடத்தில் குடியேறியவர். தேசபக்தி காரணமாகவோ, ஆர்வம் காரணமாகவோ இந்தியாவுக்கு வந்தார். மனச் சோர்வுடையவராக தான் பிறந்த ஊருக்கே திரும்பிப் போய்விட்டார். அவருடைய அபிப்பிராயங்கள் இந்தியாவைப் போற்றக் கூடியனவாக இல்லை. ஒரு தலைமுறைக்கு முன் எழுதப்பட்ட காதரின் மேயோவின் 'இந்தியத் தாய்' என்ற புத்தகத்தில் உள்ளதுபோல் சில உண்மைகள் இருக்குமேயாஞல், உன்னைவிட நான் ப்ரிசுத்தவான் என்று உலகத்தின் முன்னுல நம்மை நாமே தட்டிக் கொடுத்துக்கொள்ளும் சுயதிருப்திப் போக்கினின்றும் உசுப்பி நம் நிலையை உயர்த்திக்கொள்ள உதவும்.

நெய்ப்பால் இந்தியாவை 'ஒரு பரந்த கக்கூசுக்கு' ஒப்பிடுகிருர். இந்தியனை எண்ணங்களுக்கும் செயலுக்கும் யாதொரு தொடர்புமில்லாத பைத்தியக்காரனுக வருணிக்கின்ருர். ஏனெனில், தான் வேலைக்குச் சேருமுன்பு "ஒரு நல்ல காலத்தை நிர்ணயிக்க தன் ஜோஸியரை நாடும்" ஒரு விஞ்ஞானியாக இருக்கின்ருன். ஜாதிமுறை இறக்கமற்ற தன்மையை உண்டுபண்ணுகின்றது. திறமையின்மையை ஏற்படுத்து

கின்றது. படுமோசமாக நாட்டைத் துண்டுப்படுத்தியுள்ளது. பிரிவினை பலவீனத்தையும், அந்த பலவீனம் அந்நிய ஆதிக்கத்தையும் ஏற்படுத்தியது." இது இந்தியாவை உலகத்திலேயே மிகப் பெரிய குப்பமாக்கிவிட்டது. "நேற்று கேலிக்கிடமான வகையில் இருந்தவன் ஒரு மொகலாயன். நாளை யாரோ! யார் அறிவார். ஒரு அமெரிக்கனுகவோ, ரஷ்யனுகவோ இருக்கலாம்."

இந்தியாவில் எந்த நல்ல தன்மையையும் பார்க்க முடியாத ஒரு சில இந்தியர்களும் இந்தியாவில் இருக்கின்றனர். அவர்களுக்குச் சிறிதளவு தேசப் பற்றும், தங்களால் இயன்ற அளவு இந்தியாவுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற உணர்வும் இருப்பதால் அவ்வளவு தூரம் கேடு விளைவிக்கும் நிலையில் அவர்கள் இல்லை. ஆனால், புராதன மகத்துவத்தில் தங்களையும் மறந்து, அதைப் பற்றியே சரளமாகக் குரல் எடுத்துப் பேசுகின்றவர்கள் இதைவிடப் பெரும் அளவுக்கு இருக்கின்றனர். கடந்த நூற்றுண்டின் இறுதியில் இந்தியாவுக்கு வந்திருந்த ஒரு அந்நியன், "ஒரு இந்தியனைத் தொட்டால் போதும் ஹெர்பட் ஸ்பென்ஸரின் பதினேழு தொகுதிகளையும் வாந்தியெடுப்பான்" என்று கூறியுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இது மிகைப்படக் கூறியதாகத் தெரியலாம். ஆனால், "ஒரு படித்த இந்துவைத் தொட்டால் போதும். டன் கணக்கில் உபநிஷத்துக்களையும் கீதையையும் வாந்தியெடுப்பான்" என்று சொல்லுவது சரியாக இருக்கும். இந்தியாவில் துக்ககரமான விஷயம் என்னவெனில் நம்மவர்கள் எதைப்பற்றி உபதேசம் செய்கின்றனரோ அதன்படி நடப்பதில்லை. நாம் நமது தேசீய பாரம்பரிய உணர்வில் நம்மையே இழந்து விடுகிறோம். உலகப் பண்

பாடும், உலக நோக்கும் நமக்கும் அறிவிக்கும் செய்தியை இழந்து விடுகின்றோம். அதைப்பற்றி அர்னுல்ட் டாயின்பீ வெகு வன்மையாக எடுத்துக் கூறுகின்றார்.

"நமது வருங்கால சந்ததியினர் நம்மைப் போன்ற மேற்கத்தியர்களாக இருக்க மாட்டார்கள். அவர்கள் கன்பியூஸியஸ், லாவோட்ஸி, மற்றும் பிளாட்டோ, பிளோட்டினல் ஆகியவர்களின் வாரீசுகளாக இருப்பார்கள். கௌதம புத்தர், டியூட்டர் ஏசாயா, ஏசுநாதர் ஆகியவர்களின் வாரீசுகளாகவும், ஜுராஸ்டாஸ், முகமது நபி, எலிஜா, எலிஸா, பீட்டர், பால் ஆகியவர்களின் வாரீசுகளாகவும் இருப்பார்கள். சங்கராச்சாரியார், இராமானுஜர் ஆகியவர்களின் வாரீசுகளாகவும், கிளெமெண்ட், ஆரிஜன், மற்றும் இபினி, கல்லாடம், போஸெட் ஆகியவர்களின் வாரீசுகள்ாகவும், காந்தி, லெனின், சன்யாட்சன் ஆகியவர்களின் வாரீசாக மட்டுமின்றி கிராம்வெல், ஜார்ஜ் வாஷிங்டன், மாஜினி ஆகியவர்களின் வாரீசுகளாகவும் இருப்பார்கள்."

விஞ்ஞானத்தின் வெற்றியைக் கண்டு நாம் குருடர்களாகி விட்டோம். ஆத்மீகத்துறையில் நாம் நம்பிக்கை இழந்து விட்டோம். இதுதான் இந்தியாவில் நம்மை எதிர்நோக்கியுள்ள மாபெரும் அபாயம். நமது அரசியல் சட்டத்தின் மதச் சார்பற்ற கொள்கை பற்றி நாம் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். எந்த மதத்திற்கும் அரசின் உதவி கிடையாது. எல்லா மதங்களையும் அனுமதிப்பது என்று நாம் விளக்கம் கொடுக்கிறோம். ஆனல், மதச் சார்பற்ற தன்மை மதத்தை நம்பாமலிருப்பது

என்ற பொதுவுடமை அவநம்பிக்கையை வளர்க்கின்றது. எல்லாவிதத் தீமைகளுக்கும் உறைவிடம் இதுதான். 'செக்குலர்' என்ற ஆங்கிலப் பதத்தின் அகராதிப் பொருள் என்னவெனில், "உலகம் சம்மந்தமானது, அல்லது பொருள் சம்ந்தமானது, மதம் சம்மந்தப்படாதது, பரிசுத்தம் அல்லது ஆத்மா, அல்லது மதம் சம்மந்தப்படாதது" என்பதாகும். இதுதான் அவ்வார்த்தையின் அகராதிப் பொருள். அதே தெளிவாக இருக்கின்றது. நமது அரசியல் சட்டத்தை வகுத்தவர்கள் சுவிட்ஸர் என்பவரால் ஆகர்ஷிக்கப் பட்டிருந்தால் மேலும் நன்மையுடைத்தாய் இருந்திருக்கும் ஏனெனில், கார்ல் மார்க்ஸையும், லெனினையுமவிட இந்தியாவின் ஆத்மாவுக்கு ஒத்தவராக அவர் இருக்கின்றார். எந்த ஒரு தலைமுறையும், எந்த ஒரு தேசமும் கண்டிராத மிகப் பெரிய மனிதர் அவர். நமது தலைமுறை பலவித வெற்றிகளைப் பெற்று பெருமை கொண்டிருக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலானதாகத் தேவைப்படும் ஒன்றை நம்பவில்லை. அதுதான் மனிதனின் ஆத்மீக முன்னேற்றம்" என்று கூறும் ஞானம் அவருக்கிருந்தது.

சுதந்திரம் பெற்ற பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின்பும் இந்தியா பிரசவ வேதனை கட்டத்திலேதான் இருக்கிறது. ஒரு புது இந்தியாவை, பிரம்மாண்டமான புகழ் பெற்ற இந்தியாவை நிர்மாணிக்கும் பணியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். ஆனால், தனது பண்பாட்டின் ஆத்மீக அடிப்படையில் உண்மையாக நின்றால்தான் நிரந்தரமாக நிலைத்து நிற்க முடியும். புகழ் பெற முடியும். நாம் நமது ஆத்மீக பாரம்பரியம் பற்றிப் பெருமை கொள்ள வேண்டும். அது பெரும் மதங்களுக்கு உறைவிடமாக இருந்தது. நமது தலைமுறையில்

திபெத்திலிருந்தும் வந்த தலைலாமாவுக்குப் புகலிடம் நல்கியது போல், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாரசீகத்தினின்றும் வந்த ஸொராஸ்டரருக்குப் புகலிடம் நல்கியது என்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும். நமது வேதங்களிலிருந்து சரளமாக மேற்கோள்கள் எடுத்துக் காட்டுவது நல்லது. ஆனால், நாம் மேற்கோள்கள் காட்டுவதை விட அதன்படி நடப்பது மிகவும் நல்லது. ஏனெனில் இதில்தான் நமது நேர்மை, இந்தியாவின் மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கை ஆகியவற்றின் ஆதாரம் அடங்கியுள்ளது.

# DEMOCRACY AND SOCIETY

BY

Prof. A. R. WADIA, M. P.

இது ஜனநாயக யுகம். என்றைக்கு சமுதாயமாகக் கூடி வாழத் தொடங்கினர்களோ அன்றே ஜனநாயகத்தின் வித்து ஊன்றப்பட்டு விட்டதெனலாம். அன்று முதல் இன்றுவரை ஜனநாயக—சமுதாய வளர்ச்சிப் பாதையிலே ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள்—விளைவுகள் எண்ணத் தொலையாதன. இவற்றின் வளர்ச்சி வரலாறே சுவை நிறைநத ஒன்ருகும்.

ஆதிகால ரோமக் குடியரசின் அடிப்படைப் பண்புகளையும் பார்லிமெண்டரி ஜனநாயகத்தின் தாயகமாக விளங்கும் ஆங்கில நாட்டின் நடைமுறை மக்களாட்சிப் பண்புகளையும், குடியாட்சிக் கொள்கையை போற்றிப் பாதுகாக்கும் அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் குடியாட்சிக் கொள்கையின் எல்லா அம்சங்களையும், ரஷியப் பொதுவுடமை ஜனநாயகத்தின் தன்மைகளையும், சமுதாய அமைப்பின் தோற்ற வரலாறு—வளர்ச்சி—இன்றைய நிலை ஆகியவற்றை வரலாற்று அடிப்படையில் ஆராய்ந்து குடியாட்சிக் கோட்பாட்டிலும் சமுதாய அமைப்பு முறைகளிலும் காணும் குறை நிறைகளை நடுநிலைக் கண்ணோடு திறம்பட விமர்சிக்கிருர் ஆசிரியர்.

இந்நூலாசிரியர்.........

தத்துவ, அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் பெரும் புகழ்பெற்று விளங்கும் பேராசிரியர் ஏ. ஆர். வாடியா பம்பாய், கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றவர். கல்வித்துறை நெறியாளராக மைசூர், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பணியாற்றி நீண்ட கால அனுபவம் பெற்றவர். அனைத்திந்திய கல்விக் கூட்டுறவுக் கழகம், —தத்துவக் கழகம் ஆகியவற்றின் தலைவராக விளங்குபவர். பாராளுமன்ற உறுப்பினரான இவர் தத்துவம் பற்றியும் சமூகவியல் குறித்தும் நூல்கள் பல எழுதியுள்ளார். இவரது சேவையைப் பாராட்டி மைசூர் மன்னர் 'ராஜசேவக்தா' என்ற பட்டத்தையும், ஜனதிபதி 'பத்மபூஷன்' என்ற விருதையும் அளித்துக் கௌரவித்துள்ளனர்.

கலைவாணி புத்தகாலயம், சென்னை-17.